வெளியீடு 26-3-99 Issued 26-3-99

1082/99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மே 26, 1998 - தொகுதி 57 - எண் 1

Tuesday the 26th May, 1998—Volume 57 - No. 1

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

ive Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

V2\1,31'N98
N98.57.1.
2.9.3.99.

| | பக்கங்கள் |
|---|---|
| 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--தொடர்ச்சி | |
| (ஆ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் நுழையும் இயக்கூர்திகள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1998 | 90-91 |
| (இ) தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 | 91-92 |
| 6. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1988-89, அளித்தல்-- | |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 92-94 |
| 7. அறிவிப்பு-- | |
| மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1988-89, விவாதமின்றி ஆய்வு செய்து நிறைவேற்றல் | 94 |
| 8. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 95-199 |
| (ஆ) கோரிக்கை எண் 42 - பல்வகை | 95-199 |
| (இ) கோரிக்கை எண் 60 - பல்வகை மூலதனச் செலவு | 95-199 |
| (ஈ) கோரிக்கை எண் 61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 95-199 |
| (உ) கோரிக்கை எண் 7 - மாநிலச் சட்டமன்றம் | |
| (ஊ) கோரிக்கை எண் 8 - தேர்தல்கள் | 95-155,157-199 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 95,98,100,102, 104,109,112-113,114,161, 172-187 |


219399.




| | பக்கங்கள் |
|---|---|
| 8. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| திரு. சி. ஞானசேகரன் | 113-122, 175-176 |
| திரு. மா. இராமச்சந்திரன் | 122-127 |
| *திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 128-133 |
| *திரு. லா. சந்தானம் | 133-136 |
| திரு. ஆர்.ஆர். சேகரன் | 136-140 |
| திரு. வ. அன்பழகன் | 141-144 |
| திரு. ஜி.கே. மணி | 144-150 |
| திரு. இரா. தாமரைக்கனி | 150-155 |
| திரு. ம. அப்துல் லத்திப் | 157-164 |
| திரு. சி.டி. தண்டபாணி | 165-168 |
| திரு. டி. அமரமூர்த்தி | 168-171 |
| 9. பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை-- | |
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு பிரதிநிதித்துவம் தமிழ்நாடு அரசுப் பணிகளில் உள்ள நிலைமையை ஆராய்ந்து கீழ்மட்டத்தில் அப் பணிகளுக்கு நேரடி நியமனம் செய்வது குறித்து ஆராய குழு அமைத்தல் பற்றி மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 156-157 |
| 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 200-201 |


D
Y211,31 N98
N98.57.1

53-119—1a

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. கல்வி அமைச்சர் | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு-வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும்-மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா. நா. நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிமை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல், மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :
வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.*

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச்சட்டம்.*

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
*கால்நடைப் பராமரிப்பு.*

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம். அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—JUSTICE SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration. Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education..** **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | |
|---|---|
| 6. Minister for Agriculture | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. Minister for Public Works | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. Minister for Transport | .. **The Hon. Dr. K. Ponmudi :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. Minister for Highways | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 10. Minister for Tamil Official Language, Tamil Culture, Hindu Religious and Charitable Endowments | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. Minister for Food, Public Distribution System and Co-operation | .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. Minister for Milk | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | |
|---|---|
| 13. Minister for Labour | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. Minister for Law | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits. |
| 15. Minister for Handlooms | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control. |
| 16. Minister for Backward Classes | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. Minister for Forest and Printing | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press. |
| 18. Minister for Housing | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. Minister for Rural Industries and Registration | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. Minister for Information and Publicity | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act. |

| | |
|---|---|
| **21. Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**
மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

**பேரவைத் துணைத் தலைவர்**
மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

திரு. ரா. சேதுநாதன்
திரு. கு. மனோகரன்
திரு. வ. வேலுசாமி
திரு. சி. ஞானசேகரன்
திரு. நா. பெரியசாமி
திரு. முகம்மது கோதர் மைதீன்

**செயலாளர்**
திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன்,<br>பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன்,<br>டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன்,<br>எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள்,<br>எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்பு நேர்முக<br>உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |

17. திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்
18. திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்
19. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
20. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
21. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
22. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
24. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
25. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
26. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
27. திரு. ஊ. கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
28. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
29. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
30. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
31. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்
32. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்
33. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
34. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
35. திருமதி கே. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
36. திரு. நா. நடராஜன், பி.ஏ. .. தலைமை நிருபர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. இராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. லி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகராஜா, திரு. என்.ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
13. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. பவானிசாகர்
18. ஆண்டி அம்பலம், திரு. எம். .. நத்தம்
19. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
20. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
25. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
26. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
28. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
29. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
30. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
31. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
32. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
33. இராமச்சந்திரன், திரு. ஒ.ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
42. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



44. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
47. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
52. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
56. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
57. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
58. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
60. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
61. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
62. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
63. கோபால், திரு. பா. .. மேட்டூர்
64. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
65. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
66. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராயநகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
133. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 203. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 204. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 205. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 206. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 207. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 208. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 212. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 225. வேணு, திரு. கி. | .. | கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 12, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 மே 26, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு."

அறநெறி தவறாமலும், குற்றமேதும் இழைக்காமலும், வீரத்துடனும், மானத்துடனும் ஆட்சி நடத்துபவர்களே சிறந்தவர்களாவார்கள்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 601, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**601—**

**மருத்துவமனையில் படுக்கை வசதிகளை விரிவுபடுத்துதல்**

***7933—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதிக்குட்பட்ட வைத்தீஸ்வரன்கோவில் அரசு மருத்துவமனையிலுள்ள படுக்கை வசதிகளை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதிக்குட்பட்ட வைத்தீஸ்வரன்கோவில் அரசு மருத்துவமனையில் தற்போது பழுதடைந்துள்ள பழைய 12 படுக்கைகள் கொண்ட கட்டடத்தை இடித்து விட்டு அங்கே 1998-99 பகுதி-2 திட்டத்தில் புதிதாக 24 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்டுவதற்கு மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந்துரை ஏற்கப்பட்டு, 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் இத்திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, இந்த ஆண்டுக்குள் இம்மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டு படுக்கை வசதி விரிவுபடுத்தப்படும்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீர்காழித் தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு 1998-99 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாக 12 படுக்கைகள் கொண்ட பழுதடைந்த கட்டடத்தை நீக்கி, 24 படுக்கைகளாக விரிவுபடுத்தி கட்டிக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, அந்த மருத்துவமனைக்குப் பின்புறத்திலே, தெற்குப் பக்கத்திலே மருத்துவமனைக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதிலே ஆக்கிரமிப்புகள் உள்ளதாகத் தெரிகிறது. எனவே, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, கையகப்படுத்தப்பட்ட அந்த நிலத்தைப் பாதுகாக்கின்ற வகையிலே சுற்றுச் சுவர் எழுப்பிக் கொடுப்பார்களா? அதோடு மட்டுமல்லாமல், இந்த ஆண்டில் கட்டிக் கொடுக்கப்படுகிற 24 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்ட எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனைக்குப் பின்னாலே உள்ள நிலத்தை யாரோ ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதையெல்லாம் அகற்றிவிட்டு Compound wall போடப்படுமா என்று





கேட்டிருக்கிறார்கள். இந்த மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில் நிதி வசதி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிப் பங்கீட்டு நிதியிலிருந்து ஒதுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒரு கடிதம் கொடுப்பாரேயானால், அந்த Compound wall கட்டுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்து, இந்த ஆண்டு இதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று கேட்டார்கள். இந்த 24 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுவதற்கு ஏறக்குறைய 10 இலட்சம் ரூபாய் நிதியை இந்த அரசு ஒதுக்கி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலிருந்து நிதி ஒதுக்கக் கேட்டு மாவட்ட ஆட்சியருக்குச் சட்டமன்ற உறுப்பினர் ஒரு கடிதம் எழுதி, அந்த Compound Wall கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். அரசு விதித்து இருக்கிற விதிமுறைகளின்படி சுற்றுச் சுவர் - Compound Wall கட்டுவதற்கு அதிலே அனுமதிக்கப்படவில்லை. ஆகவே, நாங்கள் மாவட்ட ஆட்சியரைக் கேட்கும்போது சுற்றுச் சுவர் - Compound Wall கட்டுவதற்குப் பணம் கொடுக்கக் கூடாது என்று கூறி இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, சுற்றுச் சுவர் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலிருந்து பணத்தை அனுமதிக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள், எந்தெந்தப் பணிகள் அரசாங்கத்தில் செய்ய இயலவில்லை, முடியவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு, தங்களுக்குக் கொடுத்து இருக்கிற தொகையின்மூலம் அதைச் செய்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டால், அதற்கான விதிமுறைகள் முரண்பாடாக இருந்தால்கூட, அதைத் திருத்தி அனுமதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட கோரிக்கைகள், எது எது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விருப்பம் தெரிவிக்க வேண்டுகிறேன்.

[1998 மே 26

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 602, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**602—**

**பொது மருத்துவமனைகளில் பணியாளர்களை நியமனம் செய்தல்**

***8658—திரு. ப. ரங்கநாதன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை, பெரியார் நகர், அண்ணா நகர், புறநகர் பொது மருத்துவமனைகளில் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னை பெரியார் நகர் புறநகர் பொது மருத்துவமனை போதுமான பணியாளர்களுடன் இயங்கி வருவதால் மேலும் பணியாளர்களை நியமனம் செய்ய அரசிடம் எந்தச் செயற்குறிப்புமில்லை. அண்ணாநகர் புறநகர் மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற 5 மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். தற்போது 24 மணி நேரமும் இயங்குகிற மகப்பேறு பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, உள் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு, பிரசவங்கள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

முற்பகல் 9-35

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை பெரியார் நகர் மற்றும் அண்ணா நகர் புறநகர் மருத்துவமனைகளை ஆரம்பித்ததன் நோக்கம், சென்னையின் மையப் பகுதிகளில் உள்ள பொது மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,



1998 மே 26]

இராயப்பேட்டை மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளுக்குப் புறநகர்ப் பகுதியில் உள்ள பொதுமக்கள் வருவதற்குச் சிரமம் ஏற்படுகிறது என்று கருதித்தான், ஏறத்தாழ 6, 7 கோடி ரூபாய் செலவிலே பெரியார் நகரிலும், அதே சமதொகையில் அண்ணா நகர் புறநகரிலும் இரண்டு மருத்துவமனைகளை ஆரம்பித்தார்கள். ஆனால் பெரியார் நகர் பகுதியில் இருக்கின்ற அந்தப் புறநகர் மருத்துவமனை இப்போது நலிவுற்ற நிலையில் இருக்கிறது. காரணம், அங்கே சவக்கிடங்கு இருந்தும் இதுநாள் வரையிலும் அந்தச் சவக்கிடங்கைப் பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அங்கே மருத்துவர்கள் வருவதில்லை. பணியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள். சலவை இயந்திரங்களும் பழுதடைந்த நிலையில் உள்ளன. ஆகவே 24 மணி நேரமும் இயங்குகின்ற வகையில் ஒரு தனிப்பிரிவை அந்த மருத்துவமனையிலும், அதேபோன்று ஒரு தனிப்பிரிவை அண்ணா நகர் புறநகர் மருத்துவமனையிலும் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள் கடந்த நான்கைந்து மாதங்களாகவே பெரியார் நகர் மருத்துவமனையைப் போய்ப் பார்வையிட வேண்டுமென்று என்னை அழைத்தார்கள். நானும் வருவதாகச் சொல்லியிருந்தேன். நேரம் கிடைக்கவில்லை. இருந்தாலும் அவருடைய கோரிக்கையை ஏற்று, மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளரையும், மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களையும் அழைத்து அங்கே போய்ப் பார்க்கும்படி கேட்டுக்கொண்டேன். 21-5-1998 அன்று மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளரும், மருத்துவக் கல்வி இயக்குநரும் பெரியார் நகர் மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டார்கள். பார்த்துவிட்டு வந்து, அங்கே 55 உள் நோயாளிகளும், நாளொன்றுக்கு சுமார் 1,000 புற நோயாளிகளும் சிகிச்சை பெறுவதாகத் தெரிவித்தார்கள். என்வே, ஏழைகள் வாழக்கூடிய அந்தப் பகுதியில் அம்மருத்துவமனையை மிகச் சிறந்த முறையிலே நிர்வகிக்க வேண்டும் என்றும், அங்கே போதுமான மருத்துவர்களை நியமித்து 24 மணி நேரமும் அந்தப் பகுதி மக்களுக்கு மருத்துவ வசதி கிடைக்க வேண்டுமென்றும் இலாக்கா கருதுகின்ற காரணத்தால், இந்த ஆண்டு அதற்கான நிதி உதவியைச் செய்து, வேலைகள் தொடங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் மருத்துவ அமைச்சுப் பணியாளர்கள் அறப்போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்காக அவர்களின் இரண்டு நாட்கள் சம்பளத்தைப் பிடித்தம் செய்து உத்தரவிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரிய மனது வைத்து அந்த உத்தரவை இரத்து செய்து உத்தரவு பிறப்பித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையிலும், தமிழகத்திலும் பொது மருத்துவமனைகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் விதவைகளை சப்-ஸ்டாப்களாக எடுத்து, அப்படிப்பட்டவர்கள் பல்லாண்டு காலமாக பல்லாயிரக்கணக்கில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு மாதத்திலே 8 நாட்கள், 10 நாட்கள்தான் பணி கிடைக்கிறது. மிகவும் ஏழை எளிய மக்கள் அவர்கள். அவர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்கவில்லை. ஆகவே, அவர்களைப் பணி நிரந்தரப்படுத்தவோ அல்லது அவ்வப்போது காலியாகிற பிற பணியிடங்களில் அவர்களை நியமித்து அவர்கள் பணியை நிரந்தரம் செய்யவோ அரசு முன்வருமா, கருணை உள்ளத்தோடு நமது அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசுக்குக் கருணை உள்ளம் உண்டு. ஆனால் காசுதான் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 24 மணி நேரமும் சேவை என்பது மிகப் பாராட்டத்தக்க ஓர் அம்சம். பொதுவாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கத்தக்க வகையிலே கொண்டு வந்தது உண்மையிலேயே வரவேற்கத்தக்க, மிகச் சிறந்த திட்டமாகும். ஆனால்



எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இப்போது பல்வேறு மருத்துவர்களின் பணியிடங்கள் காலியாக இருப்பதால், போதுமான மருத்துவர்கள் இல்லை. அந்தப் பணியிடங்களைத் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம்தான் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று இருப்பதால் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்பதை நான் உணர்ந்திருக்கின்றேன். இருந்தாலும்கூட, முன்பு அவசரத் தேவைக்காக 10(ஏ) (1) என்ற முறையில் தற்காலிகமாகப் பூர்த்தி செய்யப்பட்டதைப்போல, இப்போதும் அந்தக் காலிப் பணியிடங்களைப் பூர்த்தி செய்தால், மருத்துவ சேவை மக்களுக்குக் கிடைக்கும். அதைச் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 24 மணி நேர மருத்துவமனைகளில் மருத்துவர்கள் குறைந்தது 4 பேர்களாவது பணியாற்ற வேண்டுமென்று ஆணை பிறப்பித்து அங்கே மருத்துவர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். சில இடங்களிலே சில மருத்துவர்கள் போய் வேலை செய்வதற்கு யோசிக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களிலே புதிதாக மருத்துவர்களைப் போடுவதற்கு இப்போது அரசாங்கத்தாலே இயலவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல 10(ஏ) (1) அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்வதற்கு அரசுக்கு இப்போது அதிகாரம் இல்லை. எனவேதான் தேர்வாணையம் மூலம் மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கிறது. இந்த ஆண்டும் தேர்வாணையத்திடம் எவ்வளவு டாக்டர்கள் தமிழக அரசுக்குத் தேவை என்று தெரிவித்து இருக்கின்றோம். விரைவிலே அவர்கள் தேர்வு செய்து கொடுப்பார்களேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற தானிப்பாடி அரசு மருத்துவமனையில் கடந்த காலத்தில் தினந்தோறும், 90, 100 பேர்கள்தான் வெளி நோயாளிகள் வந்து கொண்டிருந்தார்கள். இப்போது கிராமப்புறங்களிலே பணியாற்றிக்கொண்டிருந்த தனியார்

[1998 மே 26

டாக்டர்கள், மருந்தகங்களை மூடிவிட்டுச் சென்று விட்டதால் தினந்தோறும் 400, 500 வெளி நோயாளிகள் அரசு மருத்துவமனைக்கு வந்து கொண்டிருக்கின்றார்கள். போதுமான டாக்டர்கள் இல்லாமல், ஒரே டாக்டர் இருப்பதால், அவரும் 2, 3 மணி நேரம் மட்டுமே பணியாற்றுவதால் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகிறார்கள். உடனடியாக அவர்களுக்குப் போதுமான டாக்டர்கள் நியமனம் செய்வதற்கும், 20 படுக்கை அறைக்களைக் கொண்ட அரசு மருத்துவமனைகளில் உள் நோயாளிகளை அனுமதிப்பதில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, உள் நோயாளிகளை அனுமதிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களிலேதான் உள் நோயாளிகள் இப்போது அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள்; மற்ற ஆரம்ப சுகாதார நிலையங்களிலே உள் நோயாளிகள் அனுமதிக்கப்படுவதில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தை அரசு பரிசீலனை செய்து, அங்கே இணை இயக்குநர் மற்றும் துணை இயக்குநர்களை அனுப்பி நிலைமைகள் எப்படியிருக்கின்றன என்று கண்டு ஆராய்ந்து தேவைப்பட்டால் அந்த வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினர் தோட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வளாகத்திலுள்ள மருத்துவமனையில் போதிய பணியாளர்கள் இல்லாமல், சட்டமன்றம் கூடும்போதுகூட எம்.எல்.ஏ.க்கள் வைத்தியம் பார்ப்பதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்றது. ஆகவே அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு ஆவன செய்யுமா? அதுமட்டும் அல்லாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கருணை இருக்கிறது, நிதி இல்லை என்று சொல்கிறார்கள். கருணை உள்ள இடத்திலேதான் நிதி இருக்கும். நம்முடைய முதலமைச்சர் பெயரே கருணாநிதி என்று இருக்கிறது, கருணை நிதி என்று இருக்கிறது. அதனால், நீங்கள் நிதி வழங்கி அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு, அரசினர் தோட்டத்திலுள்ள பணியிடங்களானாலும் சரி, தமிழ்நாடு



1998 மே 26]

மட்டத்திலுள்ள பணியிடங்களானாலும் சரி, பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் இங்கே எடுத்துச்சொன்ன அந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும். நிதியைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே இந்த அரசு வரவு-செலவுத் திட்டத்தை இந்த அவையிலே வைத்து, அதற்குப் பிறகு மத்திய அரசு, அரசு ஊழியர்களுக்கு உயர்த்திக் கொடுத்த சம்பள விகிதத்தையும் அமல்படுத்தவேண்டிய ஒரு கட்டாயம் இந்த அரசுக்கு ஏற்பட்ட காரணத்தினாலேயும், ஒவ்வொரு மானியத்தின்போதும் அந்தந்தத் துறை அமைச்சர்கள் பல்வேறு கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்களிடத்திலே வைத்து, ஒவ்வொரு இலாகாவிலேயும் 10 கோடி, 15 கோடி ரூபாய் கூடுதலாகப் பெற்று இந்த அவையிலே அறிவிக்கப்படுகின்ற காரணத்தினாலேயும், உண்மையிலேயே இந்த ஆண்டுக்குத் தேவையான நிதி இந்த அரசாங்கத்திடம் இல்லை. இருந்தாலும், எதிர்காலத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவாலும் ஆற்றலாலும் மேலும் இந்த அரசாங்கத்தினுடைய வருவாயைப் பெருக்குவதற்குத் திட்டமிட்டு அடுத்த ஆண்டு முதல் இந்த வசதிகள் அதிகமாகச் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கியிலுள்ள refrigerator பழுதடைந்துள்ளதால் கடந்த 6 மாதங்களாக இரத்தத்தைச் சேமித்து வைக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, அந்த refrigerator-ஐ உடனடியாகப் பழுது நீக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்காசி தலைமை அரசு மருத்துவமனையில் refrigerator மட்டும் அல்ல, பொதுவாக

[1998 மே 26

எல்லாவற்றையுமே மாற்றி அமைக்க வேண்டிய ஒரு கட்டாயம் அங்கே இருக்கிறது. படுக்கைகள் வசதி கூட மிகவும் குறைவாக இருக்கின்றது; படுக்கைகளுடைய எண்ணிக்கையை உயர்த்தி மேலும் புதிதாக சில டாக்டர்களை நியமித்து அந்த மருத்துவமனைக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து தர அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக் கேள்வி கேட்டிருந்த திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 21 ஆம் தேதி அதிகாரிகள் சென்று வந்ததாக ஒரு தகவலைச் சொல்லி இருக்கிறார்கள். அதிகாரிகள் கொடுத்து இருக்கின்ற தகவல் ஒரு தவறான தகவல். ஏனென்றால் அந்த மருத்துவமனைக்கு மிக அருகிலேதான் என்னுடைய இல்லமும் இருக்கிறது. அந்த மருத்துவமனையில் பணியாளர்கள் வருவதே கிடையாது. நான் பல நேரம் மருத்துவக் கல்வி இயக்குநருக்கும், பொது மருத்துவமனைத் தலைவருக்கும் எடுத்துச் சொல்லியும் இதுநாள்வரையில் அந்த மருத்துவமனையைப் பார்ப்பதற்கு அவர்கள் வந்ததே கிடையாது. ஏனென்றால் அந்த மருத்துவமனையை இப்போது கட்ட வேண்டும் என்றால் முடியாத ஒரு சூழ்நிலை; காரணம் நிதி இல்லை என்று கூறுகிறார்கள். இப்படி இருக்கின்றபோது இருக்கின்ற மருத்துவமனையைச் செம்மைப்படுத்தி முறையாக அந்த மருத்துவமனை இயங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் எனக்குக் கொடுத்த தகவலைத்தான் இங்கே தெரிவித்தேன். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கருத்து வேறுபாடு இருக்கிறது. இருந்தாலும் அவர் மகிழ்ச்சியடையக்கூடிய வகையில், நானே அவரோடு சென்று நேரிலே அந்த மருத்துவமனையைச் சுற்றிப் பார்த்து, அவர் எதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ அதைச்செய்து கொடுக்க இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மே 26]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 603, திரு. எஸ்.எஸ். மணிநாடார், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**603—**

**சாத்தான்குளம் தொகுதி கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்குதல்**

***6236—திரு. எஸ்.எஸ். மணிநாடார்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியில் வறட்சி நிலவுவதால் போர்க்கால அடிப்படையில் அங்குள்ள கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி, சாத்தான்குளம் தொகுதியில் வறட்சி நிலவுவதால், போர்க்கால அடிப்படையில் அங்குள்ள கிராமங்களுக்கு பல்வேறு திட்டங்களின் மூலம் அரசு நிதி ஒதுக்கீடு செய்து குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ்.எஸ். மணிநாடார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு அமைந்த மூன்று மாத கால அளவில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தென்னகத்திலே வந்து வறண்ட பகுதிகளைப் பார்த்தபோது, குறிப்பாக, என்னுடைய சாத்தான்குளம் தொகுதியைப் பார்த்து, 308 கிராமங்களையும் நேரடியாகப் பார்த்து, அங்கே மக்கள் தண்ணீருக்கு எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை அறிந்து, உடனடியாக தமிழக முதல்வர் அவர்களிடத்திலே ஆலோசனை செய்து, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுத்ததற்காக அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தொகுதி மக்களின் சார்பாகச் சொல்லிக்கொள்கிறேன். இப்போது தொகுதியிலே எட்டு ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து பொன்னங்குறிச்சி ஆற்றிலே தண்ணீர் எடுத்திருக்கிறார்கள்; நல்ல, தாராளமாக தண்ணீர் இருக்கிறது. ஆனால்

அங்கே பணிகள் மந்த நிலையில் நடந்து கொண்டிருக்கின்றன. மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தி, வேகமாக ஓர் ஆண்டுக் காலத்தில் தண்ணீர் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதியில்........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்' என்று சொல்லுங்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் அவரே குறிப்பிட்டு விட்டார். நான் சொல்வதற்கு அதிகமாக ஒன்றும் வேலை வைக்கவில்லை. இந்தத் திட்டம் என்பது ஏறத்தாழ 308 வழியோர கிராமங்களை உள்ளடக்கியது. எனவே என்னதான் கஷ்டப்பட்டு தொடர்ச்சியாக பணியாற்றினாலும்கூட, அதற்குக் கொஞ்சம் அவகாசம் தேவைப்படுகிறது. இல்லாவிட்டால் அவசரப் பணியாக ஆகி, வழக்கம்போல் உருப்படாமல் போய்விடும். ஆகையினால் சற்று அவசரப்படாமல், இந்தப் பணிகள் மந்த நிலையில் இருந்தாலும், நான் அதைச் சுறுசுறுப்பாக்குவதிலே ஒன்றும் தவறு இல்லை. அதைப் பற்றி ஏறத்தாழ வாரத்திற்கு ஒருமுறை எனக்குத் தகவல் வந்து கொண்டிருக்கிறது. எல்லாக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் பற்றி வாரத்திற்கு ஒருமுறை நான் கேட்டு அறிந்து கொண்டிருக்கிறேன். இன்னும் எவ்வளவு விரைவுபடுத்த என்னால் முடியுமோ அவ்வளவு விரைவுபடுத்துகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் வறட்சிக் காலம் என்கின்ற காரணத்தால், சென்னை மாநகரத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து, சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தில் கூட்டத்தை ஏற்பாடு செய்து வறட்சி வருகின்ற சூழ்நிலையில் எப்படி குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என்று கருத்துக்களையெல்லாம் கேட்டு அறிந்தார். நாங்களும் ஒவ்வொரு பகுதியிலும், பெருநகர் பகுதி, மையப் பகுதி என்று எடுத்துச் சொல்லி, குடிநீர்த் தொட்டிகளை உடனடியாக





அமைக்க வேண்டுமென்று சொன்னோம். அதன்படி எல்லோருக்கும் தேவையான குடிநீர்த் தொட்டிகளை அமைப்பதாக அவர் வாக்குறுதி அளித்தும், இதுநாள்வரையில் அந்தத் தொட்டிகளை அமைக்க ஏற்பாடு செய்யவில்லை. ஆனால் இன்று காலையில்கூட, சென்னை பிரிக்ளின் சாலையில், அதாவது செங்கல் சூளை சாலையில் போக்குவரத்திற்கு இடைஞ்சலாகச் சாலை மறியலை நடத்தினார்கள். ஆகவே, அதிகாரிகளைக் கேட்கின்றபோது, குடிநீர்த் தொட்டிகள் இன்னும் வரவில்லை என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் இன்றைக்கே அல்லது இந்த வாரத்திலேயே குடிநீர்த் தொட்டிகளை அமைக்க ஏற்பாடு செய்து, சென்னை நகரினுடைய குடிநீர்த் தேவையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. இருந்தாலும்கூட, சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதைப்போல, அனைத்து உறுப்பினர்களும், தங்கள் பகுதிக்கு எவ்வளவு தண்ணீர்த் தொட்டிகள் தேவை என்கிற விவரத்தைத் தரவேண்டும். ஒருசிலரைத் தவிர, பலர் இன்னும் தரவில்லை. அப்படியே இருந்தாலும்கூட, யார் யார் கொடுத்திருக்கிறார்களோ அவர்களுக்கு உரிய தொட்டிகளை வழங்கிடவேண்டும் என்று நேரிலே நான் தெரிவித்திருக்கிறேன். இன்றைக்கு மாலையில்கூட இதைப்பற்றிப் பேசுவதாக இருக்கிறேன். அவர் குறிப்பிட்டபடி, யார் யார் எவ்வளவு தொட்டிகள் தேவை என்று கேட்டிருக்கிறார்களோ, அதுதேவை என்றால், அதை நேரடியாகப் பார்வையிட்டு, அவர்களுக்கு வேண்டிய குடிநீர்த் தொட்டிகளை வழங்கவும், குடிநீரை அதிலே நிரப்பவும் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணிநாடார்.

**திரு. எஸ்.எஸ். மணிநாடார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள நாசரேத்திற்கு அருகேயுள்ள ஆழ்வார் திருநகரிக்கு, தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இப்போது அந்த 'போர்' தூர்ந்துவிட்டது. ஏறத்தாழ 20 ஆயிரம் மக்கள் தண்ணீருக்காகத் தினந்தோறும் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *நீங்கள் சாத்தான்குளத்தைப் பற்றி மூலக் கேள்வி கேட்டுவிட்டு, இப்போது நாசரேத்திற்குப் போனால் எப்படி?*

**திரு. எஸ்.எஸ். மணிநாடார்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தான்குளம் தொகுதியில்தான் அதுவும் இருக்கிறது. ஆகவே, நாசரேத்திற்குப் பக்கத்திலிருக்கிற பொன்னங்குறிச்சி ஆற்றிலிருந்து 'போர்' போட்டுத் தண்ணீர் எடுத்து நாசரேத்திற்குத் தருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி வேறு ஒன்று போட்டுவிட்டு, 50 கிலோ மீட்டருக்கு அப்பாலே உறுப்பினர் போகிறாரே, இது நியாயமா? எனவே, எப்படி இருந்தாலும், 10 லிட்டருக்குக் குறைவாகக் குடிநீர் வழங்குகிற பகுதிகளைத் தேர்வுசெய்து, நிறைவுசெய்து, 40 லிட்டர் கொடுக்கவேண்டும் என்ற முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டு இருக்கிறது என்பது அவருக்குத் தெரியும். அந்த அடிப்படையில் இந்தப் பணிகள் கவனிக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எத்தனை கிலோ மீட்டர் தூரமாக இருந்தாலும், குடிநீர் வழங்குகின்ற ஒரு மாபெரும் பொறுப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, தமிழகம் முழுமையும் குடிநீரை வழங்குகின்ற பணியில் சிறப்பாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம் இதுபோன்ற பணிகளைச் செய்துகொண்டிருக்கிறபோது, சென்ற வாரம் ஒரு பிணமே அந்தக் குழாயிலே மிதந்து வந்து, கை தனியாக, கால் தனியாக எல்லாம் போய், பிறகு கீழ்ப்பாக்கம் நீரேற்றும் நிலையத்திலே தேங்கிக் கிடந்த நிலையை நாம் பார்த்தோம். இப்படிப் பொறுப்பற்ற முறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள், இந்தப் பிணத்தைக்கூட கண்டுபிடிக்காமல் நீரை சப்ளை செய்திருக்கிறார்கள். அவர்கள்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? அப்படித்தான் வரும், அது சகஜம் என்று ஒரு பொறியாளர் பதில் அளித்திருக்கிறார்; அறிக்கை கொடுத்து இருக்கிறார். அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.*





**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் யாருக்கும் தெரியாமல் கொலைக்காரர்கள் செய்கிற படுபாதகமான செயல். தெரிந்து யாரும் இதை அனுமதிப்பதில்லை. ஆனாலும் இப்படி யாருக்கும் தெரியாமல் எங்கேயோ ஓர் இடத்திலே இது நடந்திருக்கக்கூடும். அங்கேயிருக்கிற கட்டுமானப் பணிகளைக் கவனித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், இதற்கும் தொடர்பில்லை. இருந்தாலும் இதைப்பற்றி விசாரிக்கும்படியான நடவடிக்கையை மேற்கொள்ள நான் இப்போது ஆணை பிறப்பிக்கலாம் என்று இருக்கிறேன். நேற்றையதினம் கூட இதைப்பற்றித் தெரிவித்திருக்கிறேன். நாளையிலேயிருந்து, இதுபோன்ற நடவடிக்கைகளை எப்படிச் செய்யலாம் என்பதை ஆராய்ந்து, இந்த வாரியத்திற்குத் தகவலைத் தெரிவிக்கலாம் என்று காத்திருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வேனிற்காலத்தில், அதுவும் முதுவேனிற்காலத்தில் நதிக்கரைகளில் இருக்கிற ஊர்களில் தண்ணீர்ப் பற்றாக்குறை அதிகமாக இல்லை. ஆனால் மலைப்பகுதிகளில் இருக்கின்ற கிராமங்கள் அனைத்திலும் இன்றைக்குத் தண்ணீருக்காக மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் அவர்கள் தண்ணீரைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக என்னுடைய தொகுதியிலே 5 கிலோ மீட்டர், 7 கிலோ மீட்டர் தூரம் அவர்கள் நடக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே, குறைந்தபட்சம் ஆழ்துளைக் கிணறுகளைப் போடுவதற்கு அரசு சிறப்பு உத்தரவு தருமா அல்லது அனுமதி அளிக்குமா? இதுவரையிலே இந்தப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு அரசு அனுமதித்திருக்கிற சிறப்புத் திட்டங்கள் என்ன? அவை எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றன?*

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன். சாதாரணமாக உட்கிராமங்கள், பஞ்சாயத்துக்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் என்று பாகுபடுத்தி ஒவ்வொன்றுக்கும் ஒரு திட்டத்தை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சருடைய அறிவிப்பின்படி*

[1998 மே 26

அவருடைய இலட்சியத்தின்படி இந்த ஆட்சி 1996இல் துவங்கி 5 ஆண்டு காலத்திற்குள்ளாக 10 லிட்டருக்குக் குறைவாக இருக்கிற கிராமப்புறப் பகுதிகளில் 40 லிட்டர் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய அளவிற்கு திட்டம் நிறைவேற்ற வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பல ஆயிரக்கணக்கான கிராமங்கள் மேற்கொள்ளப்பட்டு திட்ட நடவடிக்கைகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. அதைத் சட்டமன்றத்தில் 27 ஆம் தேதி நான் அறிவித்திருக்கிறேன். அதைச் தாண்டி இந்த ஆண்டிற்குள் இதை முடிக்கலாம் என்று திட்டத்தை எடுத்திருக்கின்றோம். ஆனால் அதில் சில கடன்கள், நிதியாதாரங்கள் இவைகளையொட்டி சற்றுக் காலதாமதம் ஆகலாமோ என்றுகூட நான் கருதுகிறேன். இருப்பினும் எந்தக் கிராமங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருக்கிறோம் என்பதை விளக்கி அவர் தற்சமயம் எழுதிக் கொடுப்பாரேயானால் நாளையதினம், அதைப் பரிசீலிக்கச் சொல்லி அதிகாரிகளுக்கு அனுப்பலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 604, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**604—**

**பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றுதல்**

***10630—திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரவக்குறிச்சி தொகுதி, பள்ளப்பட்டி, அரவக்குறிச்சி பேரூராட்சிகளை, நகராட்சிகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



1998 மே 26]

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதியிலே பள்ளப்பட்டி மற்றும் அரவக்குறிச்சி தேர்வுநிலை பேரூராட்சிகளாக இயங்கி வருகின்றன. அங்கே 30,000 ஜனத்தொகைக்கு மேல் இருக்கிற காரணத்தால் அதை டவுன் பஞ்சாயத்திலிருந்து நகராட்சியாக மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகப் பரிந்துரை செய்யப்பட்டதாக அறிகிறேன். ஆகவே அவ்வாறு அதை நகராட்சியாக மாற்றுவதற்குரிய குறிப்புகள் ஏதாவது இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரியாமல் மாண்புமிகு உறுப்பினருக்கு அந்தக் குறிப்பு எப்படி வந்தது என்றே எனக்குத் தெரியவில்லை. அந்தக் குறிப்பை எந்த அதிகாரியும் அனுப்பவும் இயலாது. காரணம் என்னவென்றால் அதற்குத் தகுதியின்மை இருக்கிறது. அவர் இப்போது சொன்ன மக்கட்தொகை கணக்கு ஒரு தவறான கணக்காக இருந்தாலும்கூட, அந்தக் கணக்கின் அடிப்படையில் நகராட்சியாகவும் இருக்கமுடியாது. ஆகையினால் இந்தத் திட்டம் தற்சமயம் எதுவும் இல்லை. ஓரளவிற்குப் புதிதாகக்கூட மக்கட்தொகை எண்ணிக்கையை அதிகரிக்க இருக்கிறோம். சட்டம் வர இருக்கிறது. அதைப்போலவே வருவாயும் 10 இலட்சம் ரூபாய்க்கு மேலே இருந்தால்தான் நகராட்சியாக அனுமதிக்கலாம் என்ற நிலையும் வர இருக்கிறது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் தற்போது மக்கட்தொகை எண்ணிக்கை அதற்குரியவாறு அதிகரிக்காமலும், வருவாய் பெருகாமலும் நிச்சயமாக நகராட்சியாக அனுமதிக்க இயலாது, முடியாது.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்வுநிலை பேரூராட்சியிலே பணிபுரிகின்ற பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையிலே என்.எம்.ஆர். திட்டத்தின்கீழ் வேலை செய்து வருகின்றார்கள். சாதாரணமாக துப்புரவுப் பணியாளர்கள்கூட 8 பேர் இன்னும் அங்கே நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்படாமல் பள்ளப்பட்டி பேரூராட்சியிலே இருக்கின்றார்கள், அரவக்குறிச்சி பேரூராட்சியிலும் இந்த நிலை

இருக்கிறது. அதேபோன்று அங்கு பணிபுரியக்கூடிய அரசு அலுவலர்கள் என்.எம்.ஆர். அடிப்படையிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். எனது பகுதியில் இருக்கின்ற அந்தப் பேரூராட்சிகளிலே இப்போது தினக்கூலி அடிப்படையிலேகூட கல்யாணம், விசேஷம் போன்ற பணிகளுக்காக, சுத்தம் செய்வதற்காக ஆட்களை வைத்துக்கொள்ளலாம் என்று அழைத்தால்கூட அந்த வேலைக்கு ஆட்கள் வராத நிலைமை இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் இப்போது அதுபோன்ற பணிகளைச் செய்யும் என்.எம்.ஆர். திட்டத்தின்கீழ் தினக்கூலி அடிப்படையில் வேலை செய்கின்றவர்கள், எங்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்ட மன்றத்திலே நான் உள்ளாட்சி, மானியக் கோரிக்கையின்போது பேசியிருக்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி—எத்தனையோ சலுகைகளை வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கியிருக்கின்ற காரணத்தால், இவர்களையும் இந்த எல்.எம்.ஆர். திட்டத்தின்கீழ் பணிபுரிபவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. அதற்கான தகவலும் தயார் நிலையில் இல்லை. எனவே தனிக் கேள்வி போட்டால், அதற்கான விவரங்கள் அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 605, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**605—**

**பவானிசாகர் தொகுதியிலுள்ள கிராமங்களுக்குப் பேருந்து வசதி**

***1825—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதியில் அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி அளிக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதியிலே மிகவும் வறட்சி நிலவுகிறது. பொதுவாக நம்பியூரிலிருந்து போகிறவர்கள் திருப்பூருக்கு வேலைக்குச் செல்வதற்காக பஸ் வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். வெள்ளாளபாளையம், மலைப்பாளையம் ஆகிய பகுதிகளிலிருந்து பஸ்கள் இருந்தால் அவர்கள் வேலைக்குப் போவதற்கு வசதியாக இருக்கும். மேலும் நம்பியூர், புளியம்பட்டிக்கு அருகிலுள்ள மேம்பாண்டபாளையம், பட்டிமணியாறு உயர்நிலைப் பள்ளிக்கு மாணவர்கள் 3 கிலோமீட்டர் தூரம் நடந்துதான் மெயின் ரோட்டிலிருந்து போக வேண்டியிருக்கிறது. அதேபோல, நம்பியூர், புளியம்பட்டி, மேம்பாண்டபாளையம், குட்டகம், வகுத்துகரணம்புதூர், மாறம்பாளையம் ஆகிய பகுதிகளிலே பஸ் போடவில்லை என்றால் 6 கிலோமீட்டர் நடந்துவந்து பஸ் ஏற வேண்டும். நம்பியூர் - அவினாசி, குட்டகம் வழிப்பாதையில் செம்மம்பாளையம் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கும் மெயின் ரோடிலிருந்து 3 கிலோ மீட்டர் நடந்து போக வேண்டும். ஆகையால், இப்படி பள்ளிக்கூடங்கள் இருக்கின்ற பகுதிகளுக்கு உடனடியாக பஸ் வசதி அமைத்துக் கொடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆயிரம் மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு பஸ் வசதி அளிக்க அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டு இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ஈரோடு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக புதிய பேருந்துகள், புதிய வழித்தடத்துடன் 36 பேருந்துகள் இயக்கப்பட்டன.

அவற்றிலே 16 புதிய வழித்தடங்கள் மாண்புமிகு உறுப்பினருடைய பவானிசாகர் தொகுதியில் மட்டுமே இயக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற பேருந்து செல்லாத இடங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளுக்கு மினி பேருந்துகளை இயக்குவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. 6 கிலோ மீட்டர், 7 கிலோ மீட்டர் இருக்கிறபோது, அந்தப் பகுதிகளிலே தனியார் மினி பேருந்துகளை இயக்க / முன்வருவார்கள் என்று சொன்னால், அதற்கு அரசு அனுமதி வழங்கவும் தயாராக இருக்கின்றது. அதற்கு வழியில்லை என்று சொன்னால், சாலை வசதிகள் இருக்குமானால் போக்குவரத்துக் கழகங்களின் மூலமாகப் பேருந்துகளை இயக்குவதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையில் புதிய பேருந்துகளை வழங்குவது குறித்துக் கூறப்பட்டிருந்தது. அதில் அரசு பேருந்துகளைத் தவிர தனியார் பேருந்துகளே எதுவும் இல்லாத நீலகிரி மாவட்டத்திற்குக் கடந்த ஆண்டைப்போல தனிக்கவனம் செலுத்தி, இந்த ஆண்டும் குறைந்தது 150 பேருந்துகளையாவது விடவேண்டுமென்ற கோரிக்கை வைத்திருந்தோம். அது உரிய முறையில் மிக அவசரமாகக் கவனிக்கப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 3,600 புதிய பேருந்துகளைக் கொடுத்தார்கள். அதிலே 100-க்கும் மேற்பட்ட பேருந்துகள் அந்தப் பகுதியிலே விடப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டும், அதேபோல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 3,600 புதிய பேருந்துகளை வாங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அதிலே, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் எத்தனை பேருந்துகள் வழங்க வேண்டுமென்று அரசு முடிவு செய்து, அந்தந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கும் அதுகுறித்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஊட்டி போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் அங்கே சுமார் 50 பேருந்துகளாவது இயக்குவதற்கு, புதிய வழித்தடங்களை விடுவதற்கு



அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கனிவுடன் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எம். ரங்கநாதன்.

**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திற்கு 50 பேருந்துகள் விடப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இப்போது இருக்கின்ற சூழ்நிலையிலே 50 பஸ்கள் போதாது. காரணம் நீலகிரியிலே ஒரு குறிப்பிட்ட சீதோஷ்ண நிலை காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் தினசரி அந்த பார்டருக்கு வந்துகொண்டும், போய்க்கொண்டும் இருக்கிறார்கள். கோவை, மேட்டுப்பாளையம் பஸ் நிலையத்தைச் சென்றடைந்தால் குன்னூர், கோத்தகிரி, கூடலூருக்குப் போகின்றவர்கள்தான் பெரிய, நீண்ட க்யூவாக இருக்கின்ற காரணத்தினால், அதிலும் குறிப்பாகச் சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரிக்கின்றபோது குன்னூருக்கு ஓட்டை உடைசல் பஸ்களையெல்லாம் கொடுத்து, எங்களை ஒப்பேற்றிவிட்டார்கள். அதனால், அந்த பாரதியார் பேருந்துகள் இன்னும் அங்கே நின்று தள்ளாடிக் கொண்டிருக்கிறது. நிகழ்காலத்தில் நம்முடைய ஆட்சி வந்த பின்னால்தான் 100-க்கு மேலான பஸ்களைக் கொடுத்து ஓரளவுக்குச் சீர்செய்திருக்கிறார்கள். ஆகையால், இந்த 50 பஸ்கள் போதாது; கூடுதலான பஸ்களை விட்டு, அந்த மாவட்ட மக்களுக்குத் தொண்டாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே அதிக நட்டத்திலே இயங்கிக்கொண்டு இருக்கிற போக்குவரத்துக் கழகம் மலையிலே இருக்கிற அந்தப் போக்குவரத்துக் கழகம்தான். மாண்புமிகு உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்கத்தான் சென்ற ஆண்டே அரசு உதவியோடு பேருந்துகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டும் வழங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கின்றது. படிப்படியாக நிதிநிலைக்கு ஏற்ப அனைத்துப் பேருந்துகளையும் மாற்றுகிற முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும்.

[1998 மே 26

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 606, திரு. இ.ஏ.பி. சிவாஜி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**606—**

### தரைப் பாலம் கட்டுதல்

***7712—திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், பேரம்பாக்கம் கூவம் ஆற்றில் தரைப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவாஜி அவர்கள் கேட்டுள்ள இந்தப் பாலம் தண்டலம்–பேரம்பாக்கம் சாலையில் 23/3 கிலோ மீட்டரில் உள்ள பழுதடைந்த பாலமாகும். இந்தத் தரைமட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக அமைக்கும் பணி ரூ.233.96 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின்–நபார்டு வங்கியின்–கடன் உதவியுடன் 49 பாலங்கள் அமைக்கும் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இதற்கான அரசாணை 12-1-1998 நாளிட்ட நெடுஞ்சாலைத் துறையின் நிலை எண் 15இல் வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் மேற்கூறிய பாலங்களை அமைப்பதற்கு முன்பகுதி ஒப்பந்தப்புள்ளிகள்—Pre-qualification—கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது. இதன் பிறகு Financial Bid Offer—ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

முற்பகல் 10-05

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கமான கூற்றுக்கு மிக்க நன்றி. அதேபோல பேரம்பாக்கம்–தண்டலம் நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. 1996 இல் பொதுத் தேர்தலின்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த நேரத்தில் அந்தப் பாதையில் பயணம் செய்ததால் அவருடைய உடல்நிலை மிகவும் நலியும் சூழ்நிலை ஏற்பட்டது. அந்த நெடுஞ்சாலையை மீண்டும் புதுப்பித்து அதை அகலப்படுத்துகின்ற ஒரு நிலையை அரசு விரைந்து செயல்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.



1998 மே 26]

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தண்டலம்-பேரம்பாக்கம் சாலை மிக முக்கியமான மாவட்டச் சாலை ஆகும். இப்போது இந்தப் பாலம் கட்டுவதற்கு 234 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதிலே சாலைப் பணி அடங்கவில்லை. இருந்தாலும் இந்தச் சாலையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோள் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். ஏற்கெனவே 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு இந்தச் சாலை செப்பனிடப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள பகுதியைச் செப்பனிடுவதற்கு அல்லது அகலப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 607, திரு. சி.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**607—**

### தேசிய நெடுஞ்சாலையை இருவழிச் சாலையாக்குதல்

***10034—திரு. சி.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் முதல் திண்டுக்கல் வரை, வேடசந்தூர் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையை இருவழிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயற்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வினாவில் கூறப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 7 ஏற்கெனவே இருவழிச் சாலையாக உள்ளது.

[1998 மே 26

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீரை இணைக்கின்ற இந்தத் தேசிய நெடுஞ்சாலையில் 24 மணி நேரமும் பஸ்கள், லாரிகள் போன்ற வாகனங்கள் போய்க் கொண்டிருக்கின்றன. அதனால் விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு எப்போது திட்டம் வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் கேட்டிருக்கிற இந்தத் தேசிய நெடுஞ்சாலை எண் 7 மிக முக்கியமான சாலையாகும். அது இப்போது 2 வழிச் சாலையாக ஆக்கப்படுமா என்றுதான் கேட்டிருந்தார். அது ஏற்கெனவே இருவழிச் சாலையாகத் தான் அமைந்திருக்கிறது. ஒருவேளை 4 வழிப் பாதையாக அமைக்க முடியுமா என்று அவர் எண்ணத்திலே தோன்றி இருக்குமோ என்னவோ எனக்குத் தெரியாது. மத்திய அரசினுடைய தற்போதைய கொள்கையின்படி நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் பயணிகள் வாகன அலகுக்கு (Passenger Car Unit) மேற்பட்ட போக்குவரத்து உள்ள சாலைகள் மட்டுமே தனியார் நிதியைக் கொண்டு 4 வழித் தடமாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்டுள்ள இந்தச் சாலையில் தற்போது இந்த அளவுக்குப் போக்குவரத்து இல்லை. வரும் காலத்தில் போக்குவரத்தின் தேவைக்கு ஏற்ப மேற்கண்ட சாலையை 4 வழித் தடமாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எனவே தற்போது இந்தச் சாலையை 4 வழிப் பாதையாக மாற்ற கருத்துரு எதுவும் இல்லை. 2 வழிப் பாதையாகவே இருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில முக்கியமான சாலைகளைப் பராமரிப்பிற்காக தனியார் வசம் ஒப்படைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாக அரசு வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. அந்தத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு எத்தனைச் சாலைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*



1998 மே 26]

*கேட்ட கேள்விக்கு நாளை மானியக் கோரிக்கை வரும்போது பதில் தரப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *வினா எண் 608, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.*

**608—**

**தமிழக வரலாற்றைப் பாதுகாத்தல்**

***8464—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

*மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழக வரலாற்றை முழுமையாக எழுதி வெளியிடவும், இயற்கைச் சீற்றத்தால் அழியா வண்ணம், காலப் பெட்டகமாகப் பாதுகாக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

*தமிழ்நாட்டு வரலாற்றை முழுமையாக எழுதி, 'தமிழ்நாடு வரலாறு' என்னும் பெயரில் வெளியிட ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை இயற்கைச் சீற்றத்தால் அழியாமல் காலப் பெட்டகமாக்கும் திட்டம் ஏதும் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

*முற்பகல்* 10-10

**திரு. ப. ரங்கநாதன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றைக் குறிக்கும் வகையில், சேரர், சோழர், பாண்டியர், வீரபாண்டிய கட்டபொம்மன், பல்லவ அரசர்கள், மன்னர் திருமலை நாயக்கர் மற்றும் வெள்ளையர்களை எதிர்த்துப் போராடிய, வெள்ளையர் ஆதிக்கத்தை இந்திய மண்ணிலும், தமிழகத்திலும்*

[1998 மே 26

எதிர்த்துப் போராடிய சின்னமருது, பெரியமருது, இன்னும் பல்வேறு தலைவர்களெல்லாம் மறைந்து விட்டார்கள். அவர்களையெல்லாம் குறிக்கின்ற வகையில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அவர்களெல்லாம் தலைவர்கள் அல்ல; மாமன்னர்கள்.*

**திரு. ப. ரங்கநாதன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர்களும், மாமன்னர்களும், இருவரையும் சேர்த்துச் சொல்கிறேன். இவர்களைப்பற்றி வருங்காலத்தில் வருங்கால சமுதாய சந்ததியினர் தெரிந்துகொள்ளுகின்ற வகையில் நம்முடைய தமிழகத்தினுடைய வரலாற்றைப் படைக்கின்ற வகையில், பூம்புகார், மகாபலிபுரம் இன்னும் கன்னியாகுமரி போன்ற கடலோரப் பகுதிகளில் இருக்கின்ற அழியாச் சின்னங்களெல்லாம் அழிந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், இவற்றையெல்லாம் நல்லமுறையில் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வினா வரலாறு தொடர்புடையது. முற்பகுதி நியாயமான கேள்வி. பிற்பகுதி, நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பது தொடர்பானது. அவர் குறிப்பிட்டுள்ளதுபோல, 1971 ஆவது ஆண்டில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய காலத்தில்தான் முதன் முதலாகத் தமிழ்நாட்டு வரலாற்றை முழுமையாகத் தொகுத்து வெளியிட வேண்டுமென்ற திட்டம் தீட்டப்பட்டு, அதற்காக மிகப் பெருமைக்குரிய முன்னாள் துணை வேந்தர், தமிழறிஞர் மு. வரதராசனார் அவர்களுடைய தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அதற்குப் பிறகு சில நூல்கள் வெளிவந்தாலும் அவை முழுமையாக இடைக்காலத்தில் வெளிவரவில்லை. இந்த முறை இத்துறை தனியாகப் பிரிக்கப்பட்ட பிறகு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு இந்த இரண்டாண்டுகளில் மட்டும் மூன்று வரலாற்று நூல்களை வெளியிட்டிருக்கிறோம். எனவே, அந்த அளவில் ஏராளமான செய்திகளைத் திரட்டி, கல்வெட்டுச் சான்றுகள், வேறு வகையான வரலாற்று மூலங்களையெல்லாம் திரட்டி, வரலாற்று நூல்கள் விரைவாக எழுதப்படுகின்றன. அப்படி எழுதப்படுகிற காலகட்டத்தில் நீங்கள் குறிப்பிடுகிற அத்தனைபேருடைய சிறப்புகளும் அவற்றில் இடம் பெறுகின்றன; இடம்பெறும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*



1998 மே 26]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்.*

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிடப் பேரியக்கத்தினுடைய நாட்குறிப்பாகவும், தமிழின மக்களின் வாழ்வியல் வரலாற்றுக் களஞ்சியமாகவும் விளங்குகின்ற நம்முடைய ஒப்பற்ற முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பவள விழாவைத் தமிழ்கூறும் நல்லுலகமே கொண்டாட இருக்கின்ற இந்த நல்ல வேளையில் தலைவர் கலைஞரின் 75 ஆவது வயது வரை உள்ளிட்ட அந்த வாழ்க்கை வரலாற்றை ஐந்து பகுதிகளாக அல்லது ஐந்து காண்டங்களாக ஐந்து பெரும் தமிழ்க் கவிஞர்களை வைத்து எழுதச் சொல்லி, ஒரு மிகப் பெரிய காவியத்தைப் பவள விழா நிறைவு நாளன்று - அடுத்த ஜூன் 3 ஆம் நாள் அரசே வெளியிட தமிழ் ஆட்சிமொழி, பண்பாட்டுத் துறை அந்த நல்ல முயற்சியை மேற்கொள்ளுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து மிகவும் சிறப்பானது. அதுவும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எத்தனை துறையில் புகுந்தாலும் அத்தனையிலும் தன் முத்திரையை பதிக்கக் கூடியவர் என்பதை தமிழுலகார் மட்டுமல்ல; உலகம் எங்கும் நன்றாக அறிந்திருக்கிறார்கள். அந்த வகையில் அவருடைய வரலாற்றை அரசின் சார்பில் வெளியிடுவதற்கான அமைப்புகள் எந்த அளவுக்குச் சிறப்பாகச் செய்யப்பட முடியுமோ அதை இந்த அரசு சிந்தித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. கே. சுப்பராயன்.*

**திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றைப் படைப்பவர்கள் தனி நபர்கள் அல்ல; மக்கள் தான். எப்படி ஒரு கட்டடத்தினுடைய அஸ்திவாரம் மண்ணுக்குள் மறைக்கப்பட்டு விடுகிறதோ அதைப்போல வரலாற்றைப் படைக்கிற மக்கள் மறைக்கப்பட்டு விடுகிறார்கள். எனவே, தமிழகத்தின் வரலாற்றை எழுதுகிறபோது-வரலாறு என்பது ஒரு அறிவியல் பூர்வமான ஒரு விஷயம்–அறிவியல்பூர்வமாக அணுகினால்தான் உண்மையில் வரலாற்றைப் படைக்க முடியும்; எழுத முடியும். எனவே,*

தமிழ்நாட்டின் வரலாற்றை - எழுதப்பட்டுள்ள வரலாற்றைப் பரிசீலிப்பதற்கும், ஆய்வு செய்வதற்கும், சமூகவியல், சரித்திரவியல் கல்வெட்டத்தோடு கூடிய வரலாற்று அறிஞர்களின் குழுவை அமைத்து, வரலாறு முறைப்படி எழுதப்பட்டிருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது குழுவிலே இருக்கிற அத்தனை பேரும் ஏற்கெனவே வரலாற்றுத் துறையில், சமூகவியல் துறையில், இன்னும் சொல்லப்போனால் கல்வெட்டு ஆய்வியல் துறை அனைத்திலும் தேர்ச்சி பெற்றவர்கள். அவர்களைக் கொண்டுதான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஏற்கெனவே யார் யார் கட்டுரைகள் எழுதுகிறார்களோ அந்தக் கட்டுரைகள் வெளியிலிருந்து வெவ்வேறு வகையான வரலாற்று அறிஞர்கள் மூலமாகத் தொகுக்கப்படுகின்றன. தொகுக்கப்பட்டுவருகின்ற கட்டுரைகள் இந்தக் குழுவினரால் ஆராய்ச்சி செய்யப்படுகின்றன. அதற்குப் பிறகு இன்னும் இரண்டு வல்லுநர்களுக்கு அனுப்பப்பட்டு அவை சரிபார்க்கப்பட்ட பின்புதான் இந்த வரலாற்று நூல்கள் வெளியிடப்படுகின்றன. எனவே, இப்போது வருகின்ற வரலாற்றுக் குறிப்புகளில் ஏராளமான செய்திகள் வெளிவருகின்றன. என் கையிலேயே, பக்கத்திலே, தற்போது வெளியிடப்படுவதற்குள்ள, அணிந்துரைக்காக வந்த ஒரு வரலாற்று நூல் இருக்கிறது. சோழப் பெருவேந்தர் காலத்தினுடைய இரண்டாவது பகுதி அது. முதல் பகுதி ஏற்கெனவே வெளிவந்திருக்கிறது. இது இரண்டாவது பகுதி, கிட்டத்தட்ட 750 பக்கங்கள். எனவே, அந்த அளவிற்கு ஆழ்ந்த ஆய்வுகளோடு இது வெளியிடப்படுகிறது. எந்தக் குறைபாடும் இல்லாமல் கவனித்துக் கொள்ளப்படும்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பொதுவாக தமிழர்களிடம் இனம், மொழி உணர்வானது மங்கிக்கொண்டு வருகின்ற ஒரு சூழ்நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக





இளைஞர்களிடம் அத்தகைய உணர்வுகள் மங்கி வருவது எதிர்காலத்தையே ஒரு பெரிய கேள்விக்குறியாகவும், கவலைக்குரியதாகவும் ஆக்கியிருக்கிறது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், தமிழினத்திற்குப் பாடுபட்டவர்களுடைய வரலாறுகள் முறையாக இளைஞர்களுக்குப் போதிக்கப்படாமல் இருப்பதுதான். ஆகவே, இன்றைக்குத் தமிழ் இன உணர்வுக்கு மெருகூட்டிய அல்லது வளர்ப்பதிலே மிக்க பங்காற்றியுள்ள திராவிட இயக்கங்களுடைய வரலாறுகள் இந்த வரலாற்றுப் பெட்டகத்திலே, தமிழக வரலாற்றை எழுதுகின்ற அந்தப் பகுதியிலே, சிறப்பான பகுதியாகக் கருதி வெளியிடப்படுமா? இதுவரையிலே இந்த முழுமையான வரலாறானது எத்தனை நூல்கள் வெளிவந்துள்ளன? இந்தப் பணி முழுவதும் எப்போது முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே இரண்டு வினாக்கள் அடங்கியிருக்கின்றன. ஒன்று தமிழகத்தினுடைய எழுச்சிக்கும் மொழி உணர்வுக்கும் அடித்தளமாக இருந்த திராவிட இயக்கங்களுடைய வரலாறு இதில் இணைக்கப்படுமா என்று கேட்டார்கள். வரலாற்றை எழுதுகின்றபோது, 7 ஆவது பகுதியாக 'விடுதலை பெற்றபின் அமையும் காலம்' என்ற தனித் தலைப்பு இடம் பெற்றிருக்கிறது. இதில் அவர்கள் குறிப்பிடுகின்ற சமூகவியல், அரசியல் தொடர்பான இன, மொழி தொடர்பான வரலாறு அனைத்தும் இடம்பெறும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இரண்டாவது கேள்வி, இதுவரைக்கும் எத்தனை தொகுப்புகள் வந்திருக்கின்றன என்று கேட்டார். 1971-லிருந்து 1995 வரை 24 ஆண்டுகளில் 4 தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. ஒன்று, தொல் பழங்காலம்--Pre-Historic Period, இரண்டாவது சங்க காலத்தின் அரசியல் வரலாறு, மூன்றாவது சங்க காலத்தின் வாழ்வியல் வரலாறு, நான்காவது பல்லவர் பாண்டியர் காலத்தின் முதல் பகுதி. இந்த நான்கும் இந்த 24 ஆண்டு காலத்தில் வெளிவந்திருக்கின்றன. இப்போது, நம்முடைய அரசு, இந்தத் துறை பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு மூன்று தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன, இந்த இரண்டு ஆண்டுகளில். அதிலே, பல்லவர், பாண்டியர் காலத்தினுடைய இரண்டாவது தொகுதி வெளிவந்திருக்கிறது. சோழப் பெருவேந்தர்

காலத்திலுடைய முதல் பகுதியும், இப்போது சோழப் பெருவேந்தர் காலத்திலுடைய இரண்டாவது பகுதியும் வெளிவந்துள்ளன. எனவே, வெகு விரைவில் வெளியிட வேண்டியிருப்பது விசயநகர வேந்தர் காலமும் பெருவேந்து அமையா காலமும் — அதாவது சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள் இருந்த காலம் - வெள்ளையர் ஆட்சிக் காலமும், விடுதலை பெற்றபின் அமையும் காலங்களும் ஆகும். எனவே, இந்த ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் அனைத்துத் தொகுதிகளையும் முடித்து வெளியிட்டுவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 609, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**609—**

## சுவாமிமலை கோவிலில் விடுதி கட்டுதல்

***9387—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

*மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பாபநாசம் தொகுதி, சுவாமிமலை கோயிலில் யாத்திரிகர்கள் தங்குவதற்கு விடுதி கட்ட அரசு முன்வருமா?*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலில், ஏற்கெனவே 18 அறைகள் உள்ள பக்தர்கள் தங்கும் விடுதி உள்ளது.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாபநாசம் தொகுதியிலுள்ள சுவாமிநாத சுவாமி ஆலயம் அறுபடை வீடுகளில் ஒன்று. அங்கு தினந்தோறும் இறைவனை தரிசிக்க ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். அவர்கள் தங்கி செல்வதற்கு குறைந்த அளவு அறைகள் இருப்பதால், அங்கு யாத்திரிகர்கள் தங்கி செல்ல கூடுதல் அறைகள் உள்ள புதிய விடுதி





கட்டி, பயணிகள் பயன்பெற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கருத்தின்படி, அங்கேயிருக்கின்ற 18 அறைகளுமே மிகக் குறைந்த வாடகைக்குத்தான் விடப்படுகின்றன. ஒரு அறைக்கு 25, 30, 40 ரூபாய் என்ற அளவிலேதான் இருக்கிறது. அதிலே, சிறப்பான அறைகள்கூட 100 ரூபாய் அளவுக்குத்தான் விடப்படுகின்றன. குடந்தை பக்கத்திலே இருப்பதால், பெரும்பாலோர் அங்கே தங்கித்தான் சுவாமிமலைக்கு வந்து போகிறார்கள் என்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்லாமல், இந்த 18 அறைகளில் எப்போதாவது, சுவாமிமலையில் திருமணம் நடந்தால் அந்தத் திருமண மண்டபங்களுக்கு வருகிறவர்களும் மற்றும் திருமணங்களுக்கு வருபவர்கள் மட்டும்தான் குறிப்பாகத் தங்கிச் செல்கிறார்கள். அப்போதுதான் அறை முன்பதிவு செய்யப்படுகிறது என்பது இங்கேயுள்ள புள்ளிவிவரங்களிலிருந்து தெரிகிறது. எனவே, இந்த 18 அறைகள் நாள்தோறும் நிரப்பப்படுகின்றனவா என்பதைத் தெளிவுபட அறிந்த பிறகுதான் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்படும்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பதியில் உள்ளதுபோல் நினைத்தாலே முக்தி தருகின்ற திருவண்ணாமலையிலும், காஞ்சிபுரத்திலும் நன்கொடைகள் தருகின்ற தனியார்கள் மூலம் தங்கும் விடுதி கட்டி அவர்கள் தங்குவதற்கு முன்னுரிமை தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முறை மானியக் கோரிக்கையின்போதே 50 பெரிய கோயில்களில் இதுபோன்ற விடுதிகள் கட்டித் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து நினைவில் கொள்ளப்படும்.

[1998 மே 26

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறப்புமிக்க சில ஆலயங்களில் தங்கும் விடுதி இல்லை என்பதை இந்த அரசுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அதேபோல், என்னுடைய குத்தாலம் தொகுதியிலே இருக்கிற திருமணஞ்சேரி கோயில் திருமணம் ஆகாதவர்கள் சென்றால் திருமணம் ஆகும் என்கிற ஒரு ஐதீகம் உள்ள ஒரு திருக்கோயில். அங்கே தங்குவதற்கு ஒரு இடம்கூட கிடையாது. அரசு விடுதி கட்ட முன்வராவிட்டாலும்கூட தனியார்களே அரசுக்குச் சொந்தமான அல்லது இந்தத் துறைக்குச் சொந்தமான இடத்திலே தங்கும் விடுதி கட்டி, வாடகைக்குவிட பலர் முன்வருகிறார்கள். அதற்கு அரசு அனுமதி அளிக்குமா என அறிய விரும்புகிறேன்*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே விடுதி கட்டிக் கொடுப்பது திருமணம் ஆனவர்கள் தங்குவதற்கு வசதியாகத்தான். எனவே திருமணம் ஆவதற்கு முன்னாலேயே போய் அங்கே தங்குவது அவ்வளவு சரியாக இருக்குமா என்பதை அவர் சிந்திக்க வேண்டும். இருந்தாலும், திருமணஞ்சேரி என்று அந்தப் பெயர் இருக்கிற காரணத்தாலே மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தைச் சிந்திப்பதில் தவறில்லை. ஆனாலும், அவருக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புவது, அந்தக் கோயிலுக்கு என்ன வருமானம் என்பதையும் பார்க்க வேண்டும். சில கோயில்களுக்கு நிறைய பக்தர்கள் வருகிறார்கள். ஆனால், வருமானத்தைப் பார்த்தால் 2,000 ரூபாய், 1,000 ரூபாய் என்று இருக்கிறது. எனவே, அதையெல்லாம் வைத்துப் பெரிய அளவிலே திருமண மண்டபங்கள், அறைகள் எல்லாம் கட்ட முடியாது. எனவே, இருக்கின்ற வருவாயைப் பொறுத்தும், அதற்குத் தனியார்கள் முன்வந்தால்கூட, இப்போது இருக்கிற சட்டத்தினுடைய 34 ஆவது விதி, நம்முடைய கோயில் நிலத்திலே ஒன்றைக் கட்டினால்கூட, கட்டுபவர்கள் முழுமையாக, நன்கொடையாக அதைக் கோயிலுக்குத் தந்துவிட வேண்டும் என்று இருக்கிறது. எனவே, அதில் திருத்தங்கள் செய்தால்தான் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியும். அதுபற்றியும் சிந்திப்போம்.*



1998 மே 26]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற கோயில்களிலேயே ஸ்தபதிகள் அதிகமாக இருக்கின்ற இடம் சுவாமிமலை. நிறைய கோயில்களுக்குச் சிலைகளை அங்கேதான் அவர்கள் செய்கிறார்கள். சிலைகளை வாங்குவதற்காக நிறைய பேர் சுவாமிமலைக்கு வருகிறார்கள். வருகின்றவர்கள் தங்குவதற்குக்கூட இடமில்லை என்ற ஒரு அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இந்தத் துறையே அவர்கள் தங்குவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யுமா? அதோடு, இந்த சுவாமிமலை என்பதை நக்கீரன், அவருடைய திருமுருகாற்றுப்படையில் திருவேரகம் என்று குறிப்பிடுகிறார். ஆறுபடைகளையும், ஆறுபடை வீடுகளிலே ஐந்து படைகளை, நக்கீரன் பெயரிலே, அவருடைய சொல்லிலே குறிப்பிட்டுவிட்டு, இதைமட்டும் திருவேரகம் என்று குறிப்பிட்டதை நாம் மறந்துவிட்டு, சுவாமிமலை என்று சொல்கிறோமே, அதை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? நிறையச் சிலைகள் செய்யப்பட்டு அவை தேக்க நிலையிலே இருக்கின்றன என்று நேற்றுகூட பத்திரிகையிலே படம் போட்டு செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். எனவே, இதுகுறித்து அரசாங்கமே, இந்தத் துறையே முயற்சி எடுத்துக்கொண்டு அவைகளை உரிய முறையிலே உரியவர்களிடம் சேர்ப்பிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து வரவேற்கத் தகுந்தது. ஏற்கெனவே அந்தப் பகுதியில், இந்தத் துறையில் வல்லுநர்கள், சிற்பங்களை வடிக்கக்கூடியவர்கள், உலோகச் சிற்பங்களை உருவாக்கித் தரக்கூடியவர்கள், உலோகத் திருமேனிகளை உலகம் எங்கும் வழங்கக்கூடியவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. அதை அடிப்படையாக வைத்துத்தான் தமிழ் வளர்ச்சித் துறை, எப்படி சென்னையிலே ஒரு கலைத் தொழில் கல்லூரியை நடத்திக்கொண்டு இருக்கிறதோ, அதேபோல் குடந்தையிலேயும் ஒரு கலைத் தொழில் கல்லூரியை நடத்திக் கொண்டிருக்கிறது. எனவே, இதுபோன்ற உலோகச் சிலைகளை வடிப்பதற்கும், ஓவியங்களை வரைவதற்கும், வேறு கலைகளில் ஈடுபாடு*

கொள்பவர்களுக்குமாக ஏற்கெனவே நம்முடைய அரசின் சார்பில் ஒரு கலைத் தொழில் கல்லூரி நடைபெற்று வருகிறது. அதுபோக, அந்த வட்டாரத்திலே இருக்கின்ற ஏராளமான பெருமக்கள் அதையொரு பெரிய தொழிலாக எடுத்துக்கொண்டு, ஏராளமான உலோகத் திருமேனிகளைச் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். அண்மையில் வந்த செய்தியின்படி, கோலாலம்பூரில் இருக்கின்ற மாரியம்மன் கோயிலுக்குத் தேவையான உலோகத் திருமேனிகள் அத்தனையும் குடந்தையிலிருந்துதான் சென்றிருக்கின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதேநேரத்தில் வந்து தங்கிச் செல்பவர்களுக்கு எந்த இடர்பாடும் இல்லை. ஏற்கெனவே கோயில் சார்பில் 18 அறைகள் இருக்கின்றன. அதுபோக, பக்கத்தில் 8 கி.மீ. தொலைவில் தான் குடந்தை இருக்கின்றது என்ற காரணத்தால் இதில் ஏதும் இடர்பாடுகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்த விடுதியில் அன்றாடம் வந்து தங்குகிறார்கள், மாதந்தோறும் தங்குகிறார்கள் என்ற நிலைமை தெளிவுபடத் தெரியுமானால், கண்டிப்பாக இதுகுறித்துப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும்.

*முற்பகல் 10-25*

திருமுருகாற்றுப்படை என்பது ஓர் அருமையான சொல். நினைவூட்டியதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'ஏர்' என்றால் 'அழகு'. 'ஏரார் இளங்கிளியே' என்ற தொடரையும் நீங்கள் அறிவீர்கள். திரு ஏர் அகம் என்பது 'திருவேரகம்' என்று பெயர் பெற்றது. அது நக்கீரர் காலத்தில் சூட்டப்பட்ட பெயர். அதேபோல திருச்செந்தூருக்கு திருச்சீரலைவாய் என்ற பெயரும், பழனிக்கு திருவாவினங்குடி என்ற பெயரும் நக்கீரர் காலத்தில் சூட்டப்பட்ட நல்ல தமிழ்ப் பெயர்களாக இருந்தன. இப்பொழுது அது சுவாமிமலையாக இருக்கின்றது. எனவே, ஊர்ப் பெயர் மாற்றங்களுக்கான முயற்சிகளை மேற்கொள்ளும்போது இதுகுறித்துச் சிந்தித்து, கண்டிப்பாக 'திருவேரகம்' என்ற பெயர் நிலைநாட்டப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடநாடுகளிலிருந்து விஷ்ணு பக்தர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலுக்கு அதிக அளவில் வருகிறார்கள். அவர்கள்





தங்குவதற்கு இடங்கள் கிடையாது. கோயிலுக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, பிரசித்தி பெற்ற 50 இடங்களில் யாத்திரிகர்கள் தங்கும் விடுதி கட்டப்படும் என்று சொன்னார்கள். அதில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் உள்ள அந்த இடத்தில் யாத்திரிகர்கள் தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா? அந்தப் பட்டியலில் இந்தப் பெயர் இருக்கின்றதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அறிவித்தபடி ஆண்டாள் திருக்கோயில் இதில் கண்டிப்பாக இடம் பெறும். அதற்குக் காரணம், நம்முடைய தமிழக அரசு சின்னமே திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோபுரம்தான் என்பதை அனைவரும் அறிவீர்கள். எனவே அதற்கு முதலிடம் அளிக்கப்படும். விரைவில் பார்வையிட்டு தக்க இடத்தில் அது அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 610, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**610—**

**பால்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை**

***10660—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூரில் பால் உற்பத்தி அதிகமாகவுள்ளதால் பால்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 174 பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் நாளொன்றுக்குச் சராசரியாக 80,000 லிட்டர் பால் கொள்முதல் செய்கின்றன. பெரம்பலூர் பகுதியில் பெறப்படும் பாலில் சுமார் 16,000 (நாளொன்றுக்கு) உள்ளூர் விற்பனை போக, மீதமுள்ள 64,000 லிட்டர் பாலை (நாளொன்றுக்கு) ஒன்றியத்திற்கு வழங்கி

[1998 மே 26

வருகின்றன. பால்துகள் தொழிற்சாலை அமைக்க நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. மேலும் அதனை அமைக்க ரூ.1.5 கோடி செலவு ஏற்படும். போதிய பால் உற்பத்தி மற்றும் நிதி ஆதாரம் இல்லாததால் பெரம்பலூரில் பால்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பு இல்லை.

**டாக்டர் மு. தேவராஜன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி, கரூர், பெரம்பலூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் பெரம்பலூரில்தான் பால் உற்பத்தி அதிகமாக இருக்கின்றது. எதிர்காலத்தில் இந்த உற்பத்தி இன்னும் கூடுதலாக இருக்கும். பெரம்பலூரில் இந்தத் தொழிற்சாலை அமைவதற்கு பக்கத்திலுள்ள கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களை இணைத்து, பெரம்பலூரில் எதிர்காலத்தில் இந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 96,000 லிட்டர் பால் உற்பத்தி ஆகின்றது. அதாவது 16,000 லிட்டர் பால் உற்பத்தி இப்பொழுது உயர்ந்துள்ளது. மேலும் ஒரு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி அதிகமாக ஏற்பட்டு, உபரி பால் இருப்பதைக் கணக்கில் கொண்டும், நிதி ஆதாரத்தைப் பார்த்தும் இதை ஆரம்பிப்பதற்கு அரசு பரிசீலிக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 611, திரு. டி. *சுதர்சனம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*

**611—**

**நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டுதல்**

***10105—திரு. டி. சுதர்சனம்:**

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூவிருந்தவல்லி உரிமையியல் நீதிமன்ற வளாகத்தில் இயங்குகின்ற சார்பு நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றங்களுக்கு ஒருங்கிணைந்த புதுக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



1998 மே 26]

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. டி. சுதர்சனம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லி குற்றவியல் நீதிமன்றம் சுமார் 125 ஆண்டுகளுக்கு முன்னாலே தொடங்கப்பட்டு, 100 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட கட்டடம். 100 ஆண்டுகள் ஆன பிறகு, இப்பொழுது அந்தக் கட்டடம் மழைக் காலங்களில் மழைநீர் உள்ளே விழக்கூடிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. மழைக் காலங்களில் அங்கிருக்கின்ற வழக்கறிஞர்களெல்லாம், அங்கிருக்கின்ற கோப்புகளைப் பாதுகாப்பதற்கு பக்கத்திலே உள்ள தார்பாயை வாடகைக்குக் கொண்டு வந்து அதை மூடி வைக்க வேண்டிய நிலை இருக்கிறது. 125 ஆண்டுகளாக இருக்கின்ற அந்த நீதிமன்றம், தார்பாயை வைத்து மூடி. அந்த ரெக்கார்டுகளைப் பாதுகாக்கின்ற நிலையை மனத்தில் கொண்டு, 10 ஆண்டுகளுக்கு முன்னாலே 1 கோடி ரூபாய் செலவிலே இதற்காக ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்று முடிவெடுத்து, அந்தக் கோப்பும் உயர் நீதிமன்றத்திலே இருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால் அருள்கூர்ந்து, இந்த ஆண்டிலேயே, அந்தப் பழுதடைந்த, மழைக்காலத்திலே ஒழுகுகின்ற, அந்த நீதிமன்றக் கட்டடத்திற்குப் பாதுகாப்பு அளிக்க, புதியக் கட்டடம் கட்டுவதற்குத் தமிழக அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லியில் இருக்கின்ற மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், இரண்டு குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் ஆகிய அத்தனையும் சொந்தமான கட்டடத்திலே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கட்டடம்*

மிகவும் பழுதடைந்துள்ளதாகவும், பழமையானது என்றும் சொன்னார்கள். பழுதுபார்ப்பதில் இந்த அரசு கவனம் செலுத்தி நிச்சயமாக விரைவிலே அதைப் பழுதுபார்க்கும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே தமிழகத்திலே இருக்கின்ற நீதிமன்றங்களில் 81 நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனவே அவைகளுக்கெல்லாம் முன்னுரிமை கொடுக்க வேண்டியிருக்கிறது. எனினும், பழுதுபார்க்கும் பணியை அரசு துரிதப்படுத்தும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இந்தச் சட்டப்பேரவையிலே என்னுடைய தொகுதியில், பள்ளிப்பட்டில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும் என்ற உறுதிமொழி அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டது. அந்த உறுதிமொழியைக் கேட்டு மக்களெல்லாம் மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு வரை, இந்த நாள் வரை அங்குச் சார்பு நீதிமன்றம் திறக்கப்படவில்லை. அது எப்போது திறக்கப்படும்; அதற்கு அரசு என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னோடித் திட்டத்தின்கீழ் உள்ள பயன்படுத்தப்படாத நீதிமன்றங்களை முறையான நீதிமன்றத்தின்கீழ் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தோடு கடந்த ஆண்டு அந்த உறுதிமொழி வழங்கப்பட்டது. ஆனால் உயர் நீதிமன்றம் இந்தச் சட்டமன்றத்தில் அளிக்கப்பெற்ற உறுதிமொழியை வேண்டுமானால் அரசே செயல்படுத்திக் கொள்ளலாம். ஆனால் முன்னோடித் திட்டத்தின்கீழ் உள்ள நீதிமன்றங்களை நாங்கள் திரும்பப் பெற முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்ததன் காரணமாக, கொடுத்த வாக்குறுதியை அரசால் நிறைவேற்ற முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் இந்த ஆண்டு 15 புதிய நீதிமன்றங்களுக்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. அடுத்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நீதிமன்றம் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 612, டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**612—**

### ஒட்டப்பிடாரத்தில் நீதிமன்றம் தொடங்குதல்

***15300—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஒட்டப்பிடாரத்தில் நீதிமன்றம் ஒன்று தொடங்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஒட்டப்பிடாரத்தில் நீதிமன்றம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம், வரலாற்று நாயகன், சுதந்திரப் போராட்ட தியாகி, வ.உ. சிதம்பரம் பிள்ளை பிறந்த மண். கட்டபொம்மன் போராடிய மண். 90 ஆண்டு காலத்திற்கு முன்பு வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்மீது சுமத்தப்பட்ட வழக்கு 1907-லேயிருந்து 1911 வரை நடைபெற்ற சிறப்புமிக்க பகுதி ஒட்டப்பிடாரம். அந்தப் பகுதியிலே நீதிமன்றம் இல்லை என்பது ஒரு பெரும் குறையாக இருக்கிறது. மேலும் ஒட்டப்பிடாரம் ஒரு தொகுதி மட்டுமல்ல, ஒரு தாலுகாவினுடைய தலைமையிடமாகவும் இருக்கிறது. நீதித்துறை பரவலாக்கப்பட வேண்டுமென்பது இந்தக் காலகட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டு இருக்கின்றது. இந்த வேளையில் ஒட்டப்பிடாரத்தில் நீதிமன்றம் ஒன்றை உருவாக்குவதற்கு அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் 16 நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஒட்டப்பிடாரத்திலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர்

தாரத்திலுள்ள தூத்துக்குடியில் மட்டும் 7 நீதிமன்றங்கள் இருக்கின்றன. வட்டத்தின் தலைநகரில் நீதிமன்றம் அமையவேண்டும் என்பது அரசினுடைய கொள்கை. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமானது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் ஓட்டப்பிடாரத்தில் நீதிமன்றம் அமைப்பது தொடர்பாக இதுவரை உயர் நீதிமன்றத்திலிருந்து எந்த புரபோசலும் வரவில்லை. அந்த புரபோசலைப் பெற்றபிறகு மாண்புமிகு முதல்வரவர்களுடைய ஒப்புதல் பெற்று, ஓட்டப்பிடாரத்தில் நீதிமன்றம் அமைப்பது குறித்து இந்த அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும் என்று மாண்புமிகு உறுப்பினருக்கு உறுதியளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 613, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**613—**

### விசைத்தறிக் காப்பீட்டுத் திட்டம்

***10894—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைத்தறி தொழிலாளர்களுக்காக "விசைத்தறிக் காப்பீட்டுத் திட்டம்" செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதில் உறுப்பினர்களாகவுள்ள விசைத்தறித் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விசைத்தறித் தொழிலாளர்களுக்கு விசைத்தறிக் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துவது அரசின் பரிசீலனையில் உள்ளது.





முற்பகல் 10-35

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசைத்தறித் தொழிலாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம், தற்போது கூட்டுறவுத் துறையிலுள்ள விசைத்தறித் தொழிலாளர்களுக்கு, மட்டும் அமல்படுத்தப்படுவதாக அரசு அறிவித்துள்ளது. தனியார் துறையிலே விசைத்தறித் தொழிலிலே ஈடுபட்டு, நெசவு நெய்கின்ற தொழிலாளர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு, அரசுப் பங்களிப்பு இல்லை என்றாலும், உரிமையாளர்களும் தொழிலாளர்களும் சேர்ந்து பங்களிக்கக்கூடிய பாதுகாப்புத் திட்டமொன்றை, காப்பீட்டுத் திட்டமொன்றை உருவாக்க துறை முன்வருமா, அதற்காக அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசைத்தறித் தொழிலாளர்கள் தமிழகத்திலே ஏறத்தாழ 2½ இலட்சம் பேர் இருக்கிறார்கள். ஆனால், இவர்கள் ஒரு கட்டமைப்பிற்குள்ளோ, ஒரு வரம்பிற்குள்ளோ, எந்த விதத்திலும் நமக்கு ஒத்துவரக்கூடிய சூழ்நிலையிலே இல்லாத நிலை இருக்கிறது. அரசைப் பொறுத்தவரையில், 76 விசைத்தறித் தொழிலாளர் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றிலே 56 சங்கங்கள்தான் செயல்படுகின்றன. இதிலே 28 சங்கங்களிலேயுள்ள 205 பேர்தான் இதற்கான தொகையைப் பெறுவதற்குரிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். அதையும் அரசு உத்தரவிற்கு பின்பு, மைய அரசினுடைய அனுமதி விதிமுறைகளுக்குத் தேவை என்ற காரணத்தினால், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 30,200/-, மத்திய மாநில அரசினுடைய ரூ. 60,400/- ஆகியவை கோவை மத்திய வங்கியிலே வைக்கப்பட்டு, இதற்கு வேண்டிய விதிமுறைகளுக்கான ஒப்புதல் பெற, மைய அரசுக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 614, திரு. டி. மணி, மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

[1998 மே 26

614—

### தணிக்கைச் சாவடி அமைத்தல்

***12702—திரு. டி. மணி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, களியல் கிராமம் ஆறுகாணியில் வன இலாகாவில் தணிக்கைச் சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், ஆறுகாணியில் தணிக்கைச் சாவடி அமைக்கப் பொருத்தமான இடம் இல்லாமையால், வேறு இடம் தேர்வு செய்து தணிக்கைச் சாவடி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆறுகாணி என்ற இடம் கேரளாவினுடைய எல்லையிலே அமைந்துள்ள பகுதியாகும். இந்தத் தணிக்கைச் சாவடிக்கு வேறு இடம் தேர்வு செய்கின்றபோது, இது ஒரு சாலை, இந்தச் சாலையைவிட்டு இன்னொரு இடத்திற்குச் செல்கின்றபோது, எந்த அடிப்படையில் நம்முடைய வனங்களைப் பாதுகாக்க வேண்டுமோ அதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். ஆகவே, அதற்கு அருகில், அந்தச் சாலையின் ஓரத்தில், தேவையான இடத்தை நில ஆர்ஜிதம் செய்து, இந்தச் சோதனைச் சாவடி கட்டப்பட வேண்டும். அதேபோல, களியலில் இருக்கின்ற சாவடியில் வாகனம் இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஒரு ஜீப்கூட இல்லாத நிலை இருக்கிறது. அங்கிருந்து 12 மைல் போக வேண்டும். போக முடியாத நிலை இருக்கிறது. அந்த அடிப்படையிலே ஒரு ஜீப்பையும் அந்தப் பகுதிக்கு வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனத் துறை தேர்வு செய்த இடம் 3



1998 மே 26]

மீட்டர் பள்ளமாக, ஓடையின் கரையில் உள்ளதால் சோதனைச்சாவடி அமைக்க ஏதுவாக இல்லையென்றும், மாற்று இடம் தேர்வு செய்யுமாறும் பொதுப் பணித் துறையால் மாவட்ட வன அலுவலருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மாற்று இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டதும், மேற்படி இடத்தில் உடனடியாக அதேபகுதியில் சோதனைச்சாவடி கட்டிக் கொடுக்கப்படும். இதற்கு ரூ. 1.60 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வாகனம் வேண்டுமென்று சொன்னார்கள். அது நிதிவசதியின் அடிப்படையில் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 615, திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

615—

### தொழில் முனைவோருக்குக் கடனுதவி

***11135—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, இலுப்பூரில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோருக்குக் கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோர், பொது மேலாளர், புதுக்கோட்டை மாவட்ட தொழில் மையத்திடம் கடன் வழங்குமாறு விண்ணப்பித்தால், அவர் அத்தொழிலின் நிலைத்தன்மையைப் (viability) பொறுத்து, வங்கிகளுக்குப் பரிந்துரை செய்வார்.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செயற்கை வைரம் பட்டை தீட்டும்

[1998 மே 26

இந்தத் தொழிலில் திருச்சி, திண்டுக்கல், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில்தான் அதிகம்பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, புதுக்கோட்டை மாவட்டத்தில், தொழிலில் மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள அன்னவாசல் ஒன்றியத்தில் இலுப்பூரிலும், அதைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களிலும் சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, கருணைகூர்ந்து, அப்படிப்பட்ட தொழிலாளர் குடும்பங்களுக்கு ஒரு நிரந்தரப் பாதுகாப்புத் தருகிற வகையிலே அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 1989-90 ஆம் ஆண்டிலே, செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுள் பெரும்பாலானவர்கள், பல்லாயிரக் கணக்கானவர்கள் மகளிர் என்ற காரணத்தினால், அந்தத் தொழிலில் இருக்கின்ற குறைபாடுகளை நீக்கும் வகையில், திருச்சியிலே, 'ஜெம் பார்க்' என்ற ஒன்றை ஆரம்பித்து, அது மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. ஆனால், இடைக் காலததிலே, கடந்த ஐந்தாண்டு காலத்திலே அந்தத் தொழில் நலிவடைந்து விட்டது. மீண்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர், முன்னாள் மத்திய தொழிலமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, ஜெய்ப்பூரிலே இதுபோன்ற செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிற்சாலை இந்தியாவிலே சிறப்பாகச் செயல்படுவதையும், ஏற்றுமதி போன்ற பல்வேறு முன்னேற்றங்களையும் கருத்திலே கொண்டு, இங்கே இருக்கின்ற திட்டக் குழு உறுப்பினர் திரு. சிதம்பரம் அவர்களுடைய தலைமையிலே, அவர்களுடைய ஆலோசனையின்படி, ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவினுடைய பரிந்துரையும் இந்த அரசால் பெறப்பட்டு, அதன்படி இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுடைய குறைபாடுகளைப் போக்குவதற்கும், கடன் பெறுவதற்கும், அவர்கள் கொள்முதல் செய்வதற்கும், ஆக எல்லா வகைகளிலும் ஒரு பெரிய வளாகம், மூன்றடுக்கு வளாகம், திருச்சியிலே வெகு விரைவிலே அமைக்கப்படவிருக்கிறது என்பதை நான் தெரிவித்து, இந்தக் குறைபாடுகள் நீக்கப்பட்டு, தமிழ்நாட்டில், சிறந்த முறையிலே இந்தத் தொழில் தொடர்ந்து நடைபெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துவருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மே 26]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 616, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**616—**

## முத்திரைத்தாள் விலையை நிர்ணயித்தல்

***14358—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்திரைத்தாள்களை நிர்ணயித்த விலையைவிட அதிக விலைக்கு விற்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்வாறான விற்பனையாளர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கூடுதல் விலைக்கு முத்திரைத்தாள்களை விற்கும் முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரிமம் பெற்று முத்திரைத்தாள்களை விற்பனை செய்துவரும் விற்பனையாளர்கள், சில சமயங்களில் குறிப்பிடப்பட்ட விலையைவிட அதிக விலைக்கு விற்று வருகிறார்கள். அவர்களைக் கண்டறிவதற்குத் துறையின் சார்பாக, கண்காணிப்புப் படை

அமைப்பதற்கு அரசு முயலுமா என்பதையும், அவ்வாறு தவறு செய்யும் சமூக விரோதிகளுடைய உரிமத்தைப் பறிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, ஏற்கனவே கிட்டத்தட்ட 1997-98 ஆம் ஆண்டிலே, 845 திடீர் சோதனைகள் நடத்தப்பட்டு, அதிலே 9 நபர்கள், கூடுதல் விலைக்கு விற்பனை செய்தது கண்டு பிடிக்கப்பட்டது. நிரந்தரமாக, 2 நபர்களுக்குரிய உரிமம் இரத்து செய்யப்பட்டது. 7 நபர்களுடைய உரிமம், தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண்கள் 617, 618 ஆகியவை மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

வினா எண் 619, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**619—**

### வீராணம் ஏரியில் சுற்றுலா விடுதி

***5091— திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரியில் தூர் எடுத்து, அம்மண்ணைக் கொண்டு ஏரியின் மத்தியில், சுற்றுலா விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,





(அ) வீராணம் ஏரியில் தூர் எடுத்து, அம்மண்ணைக் கொண்டு ஏரியின் மத்தியில், சுற்றுலா விடுதி அமைக்கும் திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பராந்தகச் சோழன் காலத்திற்குப் பிறகு, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில்தான், நமது பொதுப் பணித் துறையால், வீராணம் ஏரி தூர் வாரப்பட்டு, அந்த ஏரியில் வருடம் முழுவதும் தண்ணீர் இருக்கக்கூடிய நிலையிலே இன்றைக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. அதன் பகுதியான, சிதம்பரம், காட்டுமன்னார்குடி, லால்பட்டு, சேத்தியாத்தோப்பு, புவனகிரி மற்றும் மிகப்பெரிய நகரான நெய்வேலி ஆகிய பகுதிகளில் எல்லாம் பொழுதுபோக்கிற்கு என்று எந்தவிதமான வழிவகையும் இல்லாத காரணத்தினால், சுற்றுலாத் துறையின் மூலமாக இங்கு படகுக் குழாம் அமைத்தாவது, பொது மக்களுக்குப் பொழுதுபோக்கிற்கு வசதி செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீராணம் ஏரியிலிருந்து எடுக்கின்ற மண்ணை, கரையிலே போட்டு, கரையை அகலமாக்கலாம் என்ற ஒரு எண்ணம் பொதுப் பணித் துறையிலே இருக்கிறது. அதன் பக்கத்திலே இன்னும் கொஞ்சம் இடம் இருக்கிற காரணத்தினால், நெடுஞ்சாலைத் துறையினர் அதற்குச் சாலை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, இப்போது இருப்பதைவிட, பல மடங்கு அகலமாகும். அப்போது சாலையோரப் பூங்காக்கள் அமைப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. கொள்ளிடத்திலே இருந்து வடவாறுக்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு வடவாறை இப்போது நாம் பழுதுபார்த்துக் கொண்டிருக்கிறோம்; ஆழப்படுத்துகிறோம். அவ்வாறு அந்த ஏரியை ஆழப்படுத்தி, ஏரியினுடைய கரையை உயர்த்துகிறோம். அப்போது கொள்ளளவும் அதிகமாகும். அப்போது படகு விடலாம். படகு விடுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அழைக்கப்படுவார்கள்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 620, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

[1998 மே 26

620—

## முதுநிலை நூற்பாளர்களுக்குத் தினக்கூலி உயர்த்துதல்

***10895—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் உள்ள ஊரக நூற்பாலைகளில் பணிபுரியும் முதுநிலை நூற்பாளர்களுக்கு, சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.20/-ஐ மறுபரிசீலனை செய்து உயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

முதுநிலை நூற்பாளர்களுடைய தினக்கூலியை உயர்த்துவது தற்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் உள்ள ஊரக நூற்பாலைகளில் பணிபுரிகின்ற முதுநிலை நூற்பாளர்கள் ஏறக்குறைய 10 ஆண்டுகளாக தினக்கூலியாக 20 ரூபாய் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக 28.4.1997 அன்று இந்தச் சட்டமன்றத்தில் கொடுக்கப்பட்ட கவன ஈர்ப்புக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்தபோது முதுநிலை நூற்பாளர்கள் கணக்கெடுக்கப்பட்டு அடுத்த ஆண்டு அவர்களுக்கு கூலியை உயர்த்திக் கொடுப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என்று இந்த அவையிலே உறுதிமொழி, கூறினார்கள். ஆகவே நீண்ட நாட்களாக பல ஆண்டுகளாக தினக்கூலி அடிப்படையிலே வேலை பார்க்கும் முதுநிலை நூற்பாளர்களுடைய கூலியை உயர்த்தித் தருவது பற்றி அரசு இந்த ஆண்டே பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1998 மே 26]

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாரியத்தில் முதுநிலை நூற்பாளர்கள் 128 பேர் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு முதற்கட்டமாக 10 ரூபாயும், இரண்டாவது கட்டமாக 15 ரூபாயும், இன்று 20 ரூபாயும் தினக் கூலியாக வழங்கப்படுகிறது. இந்தத் தினக்கூலித் தொகை அரசு மானியத் தொகையிலிருந்தோ, மும்பை காதி கமிஷன் வழங்குகின்ற மானியத் தொகையிலிருந்தோ, வழங்கப்படுவதில்லை. வாரியத்தினுடைய வணிகச் செலவினங்களிலிருந்து வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் இவர்களுக்கு தினக்கூலியை உயர்த்துவது பற்றி கண்டிப்பாகப் பரிசீலித்து தினக்கூலி உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய அளவில் குறைந்தபட்சக் கூலி என்பது 35 ரூபாய்க்குக் கீழ் தீர்மானிக்கக் கூடாது என்று மத்திய அரசு வழிகாட்டிநெறி அறிவித்திருக்கும் நிலையில் 20 ரூபாயை மறுபரிசீலனை செய்வதில்லை என்று சொல்லுவது முரண்பாடாக இருக்கிறது. தேசிய அளவில் அறிவித்த 35 ரூபாயைக்கூட தொழிற்சங்க இயக்கங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும், அறிவித்த அந்த 35 ரூபாய்க்குக் கீழ் இருக்கின்ற இந்த நிலை என்பது நல்லதல்ல. எனவே அவற்றை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு வழங்குகின்ற தினக்கூலியானது நான் ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரி அரசு மானியத்திலிருந்தோ அல்லது மும்பைக் காதி கமிஷன் வழங்குகிற நிதியிலிருந்தோ வழங்கப்படுவதில்லை. வாரியத்தினுடைய வணிகச் செலவினங்களிலிருந்து வழங்கப்படுகிறது. அவர்களுக்கு வழங்குகின்ற தினக்கூலியை உயர்த்துவது சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்தாலோசித்து, அரசு மானியத் தொகை வழங்கப்பட்டால் கண்டிப்பாக தினக்கூலி உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 மே 26

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பதினோராவது பட்டியல்) @

1—

### அரசு ஆரம்பப் பள்ளி அமைத்தல்

**வினா 6736—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கோட்டைவிளையூரில் அரசு ஆரம்பப் பள்ளி அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :**

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்தைச் சார்ந்த கோட்டைவிளையூர் கிராமத்திற்கு மேற்கே 200 மீட்டர் தூரத்தில் சின்ன நாடானூர் இந்து நடுநிலைப் பள்ளியும், கிழக்கே 200 மீட்டர் தூரத்தில் கரிசலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியும் இருப்பதால் புதிய ஆரம்பப் பள்ளி அமைக்கத் தேவை எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2—

### விளையாட்டு மைதானம் அமைத்தல்

**வினா 8184—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



1998 மே 26]

(அ) தென்காசி தொகுதி, செங்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, செங்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் முன்பகுதியில் 100x70 அடி அளவில் மைதானம் உள்ளது. பின்பகுதியில் 60x50 அடி அளவில் மைதானம் உள்ளது. இந்த மைதானத்தில் கைப்பந்து, பூப்பந்து, இறகுப்பந்து, கபடி, வளையப்பந்து, தட்டெறி விளையாட்டு ஆடுதளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

3—

### பகுதி நேர நூலகத்தை கிளை நூலகமாக்குதல்

**வினா 9472—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பகுதியில் உள்ள பகுதிநேர நூலகத்தை கிளை நூலகமாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் 15-10-1961 முதல் கிளை நூலகம் ஒன்று இயங்கி வருகிறது. இக்கிளை நூலகத்துடன் இணைந்து பகுதிநேர நூலகமொன்று தென்காசி வீட்டுவசதி குடியிருப்புப் பகுதியில் 1-7-1995 முதல் இயங்கி வருகிறது.

எனவே, தற்போதுள்ள நிலையில் தென்காசி வீட்டுவசதி குடியிருப்பு பகுதியிலுள்ள பகுதிநேர நூலகத்தை கிளை நூலகமாக உயர்த்துவதற்கு வழி வகையில்லை.

4—

## சுயநிதிக் கல்லூரிகள் சங்கக் கோரிக்கை

**வினா 11221—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுயநிதிக் கல்லூரிகள் மீது கட்டுப்பாடுகளை அரசு அதிகரித்தால் மாணவர் சேர்க்கையை நிறுத்திவிடுவோம் என்று சுயநிதிக் கல்லூரிகளின் சங்கம் எச்சரித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதியுதவி பெறாத கல்லூரிகள் சங்கத்திடமிருந்து இவ்வாறான எச்சரிக்கை குறித்து அரசுக்கு தீர்மானமோ அல்லது கோரிக்கையோ ஏதும் பெறப்படவில்லை.

5—

## பொறியியற் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம்

**வினா 14559—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் உள்ள தந்தை பெரியார் அரசு பொறியியற் கல்லூரிக்கு நிரந்தர கட்டடங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வேலூரில் உள்ள தந்தை பெரியார் அரசு பொறியியற் கல்லூரிக்கு தேவையான கட்டடங்கள் ரூ.540 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகளில் முதற்கட்டமாக ரூ.218 இலட்சத்திற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிர்வாகக் கட்டடப் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. மற்றப் பணிகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டன. இயந்திரவியல் மற்றும் மின்னணு மற்றும் தொலைத் தொடர்பு கல்விக்குரிய கட்டடங்கள் இரண்டாம் பகுதித் திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

6—

## ஆய்வுக்கூடங்கள் அமைத்தல்

**வினா 14601—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அரசு பொறியியற் கல்லூரியில் மாணவர்களுக்கு தேவையான ஆய்வுக்கூடங்கள் (Laboratory) இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் அரசுப் பொறியியற் கல்லூரியில் இயந்திரவியல், கணிப்பொறியியல் மற்றும் மின்சாரத் தொலைத் தொடர்பு இயல் ஆகிய மூன்று இயல் கல்வி மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றில் கணிப் பொறியியலுக்கான கணிப்பொறி மையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மற்ற கல்வியியல்களுக்குத் தேவையான ஆய்வுக்கூடங்கள் அமைக்கும் பணிகள் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ளன.

[1998 மே 26

7—

### 220 கிலோ வாட் மின் நிலையமாக மாற்றுதல்

**வினா 9991—திரு. கே. ரவி அருணன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை மின் நிலையத்தை 220 கிலோ வாட் மின் நிலையமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

8—

### மின் அழுத்தக் குறையைப் போக்குதல்

**வினா 9992—திரு. கே. ரவி அருணன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், புதூர் பேரூராட்சி தவணை, இரவியதர்மபுரம் பகுதிகளில் மின் அழுத்தக் குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



1998 மே 26]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தவணை கிராமத்தில் மின்கடத்திகள் மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. இப்பணி மூன்று மாதத்தில் முடிக்கப்பட்டு மின் அழுத்தம் சீர் செய்யப்படும். இரவியதர்மபுரம் கிராமத்தில் மின்கடத்திகள் மாற்றப்பட்டு மின் அழுத்தம் சீர் செய்யப்பட்டு உள்ளது.

9—

### எடப்பாடி வட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம்

**வினா 14936—திரு. ஐ. கணேசன்:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

10—

### இணைப்பு சாலை அமைத்தல்

**வினா 2101—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, கீழமணக்குடி-தச்சக்காடு இடையே இணைப்புச் சாலை அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புவனகிரி தொகுதி, கீழமணக்குடி-தச்சக்காடு இணைப்புச் சாலை சுமார் 2.8 கி.மீ. நீளம் உடையது. இது ஊராட்சிக்கு சொந்தமான சாலையாகும். இதனை சீரமைக்க ரூ.5,76,000/- செலவு ஆகும். எனவே, நிதி நிலைமைக்கு ஏற்ப இந்தப் பணி குறித்து நடவடிக்கை எடுக்க இந்த நிதியாண்டில் பரிசீலிக்கப்படும்.

11—

## சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல்

**வினா 4177—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதி, தானிப்பாடி, தண்டராம்பட்டு, சாத்தனூர், கீழ்சிறுபாக்கம், ராதாபுரம், வாணாபுரம், பெருந்துறைப்பட்டு, வாழவச்சனூர், தச்சம்பட்டு, வெறையூர் ஆகிய ஊர்களில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிகளில் வரும் வருவாய், மின் கட்டணம் மற்றும் நிர்வாகச் செலவிற்குப் போதுமானதாக இல்லை. இந்நிலையில் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தால், 194 தெரு விளக்குகளுக்கு ரூ 19.40 இலட்சங்கள் செலவிட வேண்டியுள்ளது. இச்செலவினத்தை ஏற்கக்கூடிய அளவில் ஊராட்சிகளின் நிதி நிலை இல்லை. இந்நிலையில் சோடியம் ஆவி விளக்குகள் ஊராட்சி நிதியில் அமைக்க இயலாது.



12—

## பாதை வசதி செய்தல்

**வினா 6106—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சிப் பகுதியில், சுந்தரபாண்டியபுரத்திலிருந்து மருகால் மற்றும் சந்தைப் பாதை வழியாக சுரண்டைக்கு பாதை வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுந்தரபாண்டியபுரத்திலிருந்து மருகால் மற்றும் சந்தைப் பாதை வழியாகச் சுரண்டைக்கு சாலை அமைக்க வேண்டுமானால் நன்செய் நிலங்களைத்தான் கையகப்படுத்த வேண்டும். இதற்கு தேவையான நிதி வசதி தற்போது பேரூராட்சிக்கு இல்லை என்பதால், மேற்படி இடத்திற்கு பாதை வசதி செய்து தர தற்போது சாத்தியமில்லை.

13—

## மின்சார விளக்கு பொருத்த நடவடிக்கை

**வினா 6946—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், உளுந்தூர் கிராமம், இந்திரா நகரில் உள்ள தெருக்களுக்கு உரிய பணம் செலுத்தியும் இதுவரை மின்சார விளக்கு பொருத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, உளுந்தூர் கிராமம், இந்திரா நகருக்கு நலிவுற்ற, ஊராட்சிகளில் தெரு மின்விளக்கு அமைக்கும் திட்டத்தின் கீழ் ஒரு மின்விளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**14—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா 7968—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி பேரூராட்சி, தென்னிமலைபட்டபிள்ளை புதூர், துளாசேரி, பண்ணைச்சேரி ஆகிய ஊர்களுக்கு பட்டபிள்ளை புதூரில் மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு தற்போது செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நாங்குநேரி திசையன்விளை கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்படவுள்ளது.



**15—**

**விளையாட்டு மைதானம் ஏற்படுத்துதல்**

**வினா 10150—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், தோட்டப்பாளையம் நகராட்சி, பெண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்திற்கு பக்கத்தில் இருக்கும் காலியிடத்தை கையகப்படுத்தி விளையாட்டு மைதானம் ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் அரசினர் நகராட்சிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அரசின் நிர்வாகத்தில் உள்ளது. ஆனால், பள்ளிக் கட்டடங்கள் நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. இப்பள்ளியின் மேற்குப் பக்கம், நகரளவு எண் 825/1-இல் தனி நபருக்குச், சொந்தமான இடத்தில் மொத்தம் 12,070 சதுர அடி பரப்பில் கட்டடங்கள், கழிவறைகள் மற்றும் கட்டடப் பகுதிகள் போக, மீதமுள்ள சுமார் 6,000 சதுர அடி பரப்பளவுள்ள இடம் மட்டுமே காலியாக உள்ளது. அந்தக் காலியிடம் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானம் அமைக்க போதுமானதா என்பது குறித்து கல்வித் துறையுடன் கலந்து ஆலோசித்தபின் நகராட்சியால் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**16—**

**கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டம்**

**வினா 11857—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 26

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள திப்பனம்பட்டி, ஆவுடையானூர், கல்லூரணி, குணராமநல்லூர், புல்லுக்கட்டு வலசை ஆகிய ஊராட்சிகளுக்கும், கடையம் ஒன்றியத்திலுள்ள, வெங்கடாம்பட்டி, கடையம் பெரும்பத்து சேர்வைக்காரன்பட்டி, கீழக்கடையம் தெற்கு மடத்தூர், மடத்தூர் ஐந்தாங்கட்டளை, ஏ.பி. நாடானூர், துப்பாக்குடி ஆகிய ஊராட்சிகளுக்கும் தாமிரபரணி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இப்பகுதிகளுக்கு தாமிரபரணியை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. ஆய்வுப் பணிகள் முடிவடைந்தபின் திட்ட முன்வடிவுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்புதல் பெற்று நிறைவேற்றப்படும்.

**17—**

**துப்புரவுத் தொழிலாளர்களுக்கு புதிய குடியிருப்புகள்**

**வினா 12607—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகராட்சி, துப்புரவுத் தொழிலாளர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?



1998 மே 26]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் நகராட்சியில் துப்புரவு தொழிலாளர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

**18—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா 12708—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சி செண்பகாதேவி அருவி மற்றும் கோவிலுக்குச் செல்லும் பாதையில் தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குற்றாலத்திலிருந்து செண்பகாதேவி அருவி மற்றும் கோவிலுக்குச் செல்லும் 2 கி.மீ. சாலை ஒற்றையடிப் பாதையாக உள்ளது. போக்குவரத்துப் பாதை எதுவும் கிடையாது. தடை செய்யப்பட்ட வனத்துறை பகுதியாதலால், பேரூராட்சி மூலம் அச்சாலையில் தெரு விளக்கு அமைக்க இயலாத நிலை உள்ளது.

**19—**

**உடை மாற்றும் அறைகளை ஏலத்துக்கு விடுதல்**

**வினா 12709—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 26

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சி, பிரதான அருவி மற்றும் ஐந்தருவியிலுள்ள உடை மாற்றும் அறைகளை வருடக் குத்தகைக்கு ஏலம் விட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 13.8.1997 முதல் குற்றாலம் பேரூராட்சியாக செயல்பட்டு வருகிறது. இப்பேரூராட்சிக்கான தேர்தல் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மன்றம் பொறுப்பேற்றவுடன், குற்றாலம் அருவிகளிலுள்ள உடை மாற்றும் அறைகளை இலவசப் பயன்பாட்டிற்கு விடுவது அல்லது அவற்றிற்கான கட்டணம் வசூல் செய்யும் குத்தகைக்கான ஏலம் விடுவது குறித்து முடிவு செய்யப்படும்.

20—

## ஓய்வூதியப் பயன்கள் கிடைக்கச் செய்தல்

**வினா 13037—திரு. எஸ்.எஸ். பொன்முடி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணி ஓய்வு பெற்று ஓய்வூதியப் பயன்கள் பெறாத பொறியாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 9 பேர்.

(ஆ) நேர்வுக்கேற்ப அவர்கள்மீது நடைபெற்று வரும் விசாரணைகள் அல்லது தொடரப்பட்ட ஒழுங்குமுறை நடவடிக்கைகள் அல்லது குற்றவியல் வழக்கு முடிவு செய்யப்பட்டதும் அல்லது



1998 மே 26]

பெறப்பட வேண்டிய அறிக்கைகள் பெறப்பட்டதும் அவர்களது தகுதிக்கேற்ப ஓய்வூதியப் பயன்கள் வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆவன செய்யப்படும்.

21—

## குடிநீர் விநியோகம் செய்தல்

**வினா 13927—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, பாச்சாலியூர், மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. புதூர் ஊராட்சி, பண்டதசாரனூர் என்ற ஊரிலும் குடிநீர்ப் பற்றாக்குறை கடுமையாக உள்ளது, அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு நீர் ஆதாரம் உள்ள பகுதியில் ஆழ்துளைக்கிணறு அமைத்து மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, பாச்சாலியூர், மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. புதூர் ஊராட்சி, பண்டதசாரனூர் கிராமங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒரு புதிய ஆழ்துளைக் கிணறு போடப்பட்டுள்ளது. மேல்நிலை நீர்த்தொட்டி கட்டும் பணியும் நடந்து வருகிறது. இப்பணி முடிவுற்றதும் போதிய அளவு குடிநீர் வசதி கிடைக்கும்.

22—

## சாலை வசதி ஏற்படுத்துதல்

**வினா 13938— டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 26

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், சொக்கப்பலம் முதல் மேல்காரனி வரை சாலை 2 கி.மீ. தாதங்குப்பம் முதல் ஆலம்புரவடை 2 கி.மீ. பெருவளூர் காலனி முதல் சூர்ப்பந்தாங்கல் வரை 1.60 கி.மீ. ஆரியபுரவடை முதல் பட்டி வரை 1 கி.மீ. சாலை ஆகிய இடங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், சொக்கப்பலம் முதல் மேல்காரனி வரை சாலை 2 கி.மீ. தாதங்குப்பம் முதல் ஆலம்புரவடை 2 கி.மீ. பெருவளூர் காலனி முதல் சூர்ப்பந்தாங்கல் வரை 1.60 கி.மீ. சாலை, ஆரியபுரவடை முதல் பட்டி வரை 1 கி.மீ. சாலை ஆகிய இடங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்தித்தர தோராயமாக ரூ. 7.40 இலட்சம் செலவாகும். நிதிநிலை வசதிக்கு ஏற்ப 1998-99 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் செய்து தர இயலுமா என்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

**23—**

**சாலை வசதி செய்தல்**

**வினா 13939—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், சாத்தாம்பாடி முதல் சின்ன சாத்தாம்பாடி வரை 1 கி.மீ. மோட்டூர்மானந்தல் முதல் செல்லந்தாங்கல் வரை 2 கி.மீ. சிந்திப்பட்டு முதல் ஆலம்புரவடை வரை 2 கி.மீ. மேல்மலையனூர் முதல் சிந்திப்பட்டு வரை 3 கி.மீ. ஆகிய இடங்களுக்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?



1998 மே 26]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், சாத்தாம்பாடி முதல் சின்னசாத்தாம்பாடி வரை 1 கி.மீ. மோட்டூர்மானந்தல் முதல் செல்லந்தாங்கல் வரை 2 கி.மீ. சிந்திப்பட்டு முதல் ஆலம்புரவடை வரை 2 கி.மீ. மேல்மலையனூர் முதல் சிந்திப்பட்டு வரை 3 கி.மீ. ஆகிய இடங்களுக்கு சாலை வசதி செய்து தருவதற்கு சில இடங்களில் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியுள்ளதாலும், தோராயமாக ரூ. 6.00 இலட்சம் செலவாகும் என்பதாலும், நிதிநிலை வசதிக்கு ஏற்ப 1998-99 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் செய்து தர இயலுமா என்பது பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கப்படும்.

**24—**

**சாலை வசதி ஏற்படுத்தித் தருதல்**

**வினா 13940—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், சூர்பபந்தாங்கல் முதல் உடையந்தாங்கல் வரை 2 கி.மீ. அவலூர்பேட்டை முதல் கிளாகுப்பம் வரை 3 கி.மீ. மரக்கோனம் முதல் பெருவலூர் வரை 3 கி.மீ. பெருவலூர் முதல் புது மரக்கோனம் வரை 1 கி.மீ. ஆகிய இடங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேல்மலையனூர் ஒன்றியம், சூர்ப்பந்தாங்கல் முதல் உடையந்தாங்கல் வரை 2 கி.மீ. அவலூர்பேட்டை முதல் கிளாகுப்பம் வரை 3 கி.மீ. மரக்கோனம் முதல் பெருவலூர் வரை 3 கி.மீ. பெருவலூர் முதல் புது மரக்கோனம் வரை 1 கி.மீ. ஆகிய இடங்களுக்கு சாலை வசதி செய்துதர தோராயமாக ரூ. 4.80 இலட்சம் செலவாகும்.

[1998 மே 26

நிதிநிலை வசதிக் கேற்ப 1998-99 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், இப்பணியை செய்து தர இயலுமா என்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

**25—**

**இளநீரைப் பதப்படுத்த தொழிற்சாலை**

**வினா 12031—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியில் இளநீரைப் பதப்படுத்தி பாக்கெட்டில் அடைத்து விற்கும் தொழில் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தென்காசியில் இளநீரைப் பதப்படுத்தி பாக்கெட்டில் அடைத்து விற்கும் தொழில் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**26—**

**தடுப்புச் சுவர் கட்டுதல்**

**வினா 7351—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வடகால் பாசன குளமான பேய்க்குளத்தின் கரைகளை பலப்படுத்தி அலைகற்கள் சரிந்து கிடப்பதால், அதனை சரிசெய்து தடுப்புச் சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

திருவைகுண்டம் வடகால் மூலம் பாசனம் பெறும் தூத்துக்குடி மாவட்டம் பேய்க்குளம் கரை முழுவதும் தார்ச் சாலையாக பயன்பட்டு



1998 மே 26]

வருகிறது. அலைகற்கள் பிரிந்து கிடப்பதையும், தடுப்புச் சுவர் கட்டும் பணியும் இவ்வாண்டு (1997-98) நிதி ஒதுக்கீட்டில் போதிய நிதியில்லாததால் வரும் நிதியாண்டில் கால்வாய் அடைப்புக் காலத்தில் இப்பணிக்கு முன்னுரிமை அளித்து பராமரிப்புப் பணியின்கீழ் மேற்கொள்ளப்படும்.

**27—**

**கரையோரங்களில் தடுப்புச் சுவர் அமைத்தல்**

**வினா 7352—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதியிலுள்ள சிறுத்தொண்டநல்லூர் வாய்க்காலில் படர்ந்துள்ள அமலை செடியினை அகற்றி, கரையோரங்களில் தடுப்புச் சுவர் அமைத்து, படித்துறை கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதியிலுள்ள சிறுத்தொண்டநல்லூர் வாய்க்காலில் படர்ந்துள்ள அமலை செடியினை அகற்றி, கரையோரங்களில் தடுப்புச் சுவர் அமைத்து, படித்துறை கட்டும் பணி இவ்வாண்டு போதிய நிதி இல்லாததால் வரும் நிதியாண்டில் (1998-99) கால்வாய் அடைப்பு காலத்தில் பராமரிப்பு பணியின்கீழ் இப்பணிக்கு முன்னுரிமை அளித்து பணி மேற்கொள்ளப்படும்.

**28—**

**குளம் தூர் எடுத்தல்**

**வினா 10548—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள ராதாபுரம் வட்டத்திலுள்ள பொதுப்பணித் துறையைச் சார்ந்த குளங்களில் தூர் எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முதலமைச்சரின் 200 குளங்களை தூர் வாரும் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்தில் உள்ள பிரிவிரிசூரியன் குளம் தூர் வாரி மேம்படுத்துதல் வேலைக்கு மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு தூர் எடுக்கும் பணி 11.3.1998 இல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அரசின் நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாக மீதமுள்ள குளங்களிலும் தூர் வார நடவடிக்கை எடுக்கப்படும்.

**29—**

### குளக்கரையை பலப்படுத்துதல்

**வினா 13802—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை குளத்தின் கரை மிகவும் பலவீனமாக இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், கரையை பலப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1997 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பெய்த மழையினால் ஏற்பட்ட அரிப்புகள் தற்காலிகமாக அடைக்கப்பட்டுள்ளது. இக்குளத்தின் இரண்டு மதகுகள் மட்டும் செப்பனிட நீர்வள ஆதார அமைப்பின் உலக வங்கி நிதி உதவியின்



1998 மே 26]

கீழ் குண்டாறு அணை பாசன வாய்க்கால் மேம்படுத்தும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**30—**

### காருவள்ளியில் விரைவு இரயில் வண்டி நின்று செல்லுதல்

**வினா 13209— திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்-பெங்களூர் இரயில் பாதையில் ஓமலூரிலுள்ள காருவள்ளி இரயில்வே நிலையத்தில் விரைவு இரயில் வண்டிகள் நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது காருவள்ளி இரயில் நிலையத்தைவிட பெரிய இரயில் நிலையங்களில் விரைவு இரயில் வண்டிகள் நின்று செல்ல வேண்டும் என்ற கோரிக்கை உள்ளது. ஆனால் அவைகளையே ஏற்கவில்லை. எனவே, விரைவு இரயில்களை காருவள்ளி இரயில் நிலையத்தில் நிறுத்த வேண்டும் எனக் கருத இடமில்லை.

**31—**

### தார்ச்சாலை அமைத்தல்

**வினா 7368—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், வாடிப்பட்டி, பழனியாண்டவர் முருகன் கோவில் முதல் சிறுமலை புதூர் வரை தார்ச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது பழனி ஆண்டவர் கோயில் வாடிப்பட்டி பேரூராட்சி எல்லைக்குள் உள்ளது. தேசிய நெடுஞ்சாலை 7-ல் கி.மீ.411/0 இல் பிரிந்து செல்லும் சாலையில் 2.6 கி.மீ. தூரத்தில் பழனி ஆண்டவர் கோயில் உள்ளது. இந்தச் சாலை கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தார்ச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. பழனி ஆண்டவர் கோயில் முதல் சிறுமலை அடிவாரம் வரை 1.4 கி.மீ. தூரம் கற்சாலையாக உள்ளது. இந்தச் சாலை வகைப்படுத்தப்படாத சாலையாகும். பழனி ஆண்டவர் முருகன் கோயில் முதல் சிறுமலையில் உள்ள புதூர் வரை காட்டுப்பாதையாக சுமார் 25 கி.மீ. தூரம் இருப்பதாகத் தெரிகிறது. இந்த 25 கி.மீ. தூரத்தில் உள்ள காடுகள் முழுவதும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள் ஆகும். இவை மதுரை கோட்ட வன அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

பழனி ஆண்டவர் கோயிலையும் சிறுமலை புதூரையும் இணைப்பதற்கு சுமார் 25 கி.மீ. தூரத்திற்கு மலைச்சாலை அமைக்கப்பட வேண்டும். இதற்கு தற்போதைய விலை விகிதப்படி தோராயமாக ரூ.5 கோடி தேவைப்படும். மேலும், புதியதாக அமைக்கப்பட வேண்டிய சாலை முழுவதும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியினூடே அமைக்கப்பட வேண்டும். 1982 ஆம் வருட வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்குள் புதிய சாலைகள் அமைக்க வனத்துறையினரின் அனுமதி வழங்கப்படுவதில்லை எனத் தெரிய வருவதால், இச்சாலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**32—**

### இணைப்புச் சாலை அமைத்தல்

**வினா 11308—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



மதுரை மாவட்டம், மேலூர் - மதுரை சாலையிலிருந்து சிலைமான் வரை (வழி) சிவகங்கை சாலை, கருப்பாயூரணி, சத்தியமங்கலம் வைகை ஆறு - இணைப்புச்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள இணைப்புச்சாலை அமைக்கும் பணிக்குத் தோராயமாக ரூ.600 இலட்சங்கள் தேவைப்படும். மேற்படி பணி அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. பெருந்தொகை தேவைப்படும் இப்பணியினை அண்மைக்காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**33—**

### திருப்பூர் சுற்றுச்சாலை விவரம்

**வினா 11956—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் திருப்பூர் சுற்றுச்சாலை அமைக்க மைய அரசு தனது பங்கான தொகையை அளித்துவிட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் சுற்றுச்சாலை பணி பொருளாதார மற்றும் மாநிலங்களுக்கிடையே முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் (E & I Scheme) பணியின்கீழ் எடுத்துச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசாணை எண் 250, நெடுஞ்சாலைத் துறை, நாள்: 19.12.1996-இல் இப்பணிக்கான ரூ. 1,500 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல்

[1998 மே 26

அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான செலவினத்தில் 50 விழுக்காடு மத்திய அரசிடமிருந்து மாநில அரசு கணக்கில் ஈடு செய்யப்படும். இப்பணிகள் 14.10.1997 அன்று தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

34—

### வேகத்தடை அமைத்தல்

**வினா 12902—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி-குற்றாலம் சாலையில் சிந்தாமணி ஆனந்தர் தொடக்கப்பள்ளி அருகில் வேகத்தடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி-குற்றாலம் சாலையில் சிந்தாமணி ஆனந்தர் தொடக்கப்பள்ளி அருகில் வேகத்தடை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

35—

### பச்சை ஆற்றில் பாலம் அமைத்தல்

**வினா 13004—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பானான்குளம் - செவல் செல்லும் சாலையில் சிங்கிகுளம் குறுக்கே பச்சை ஆற்றில் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



1998 மே 26]

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள குழாய்த் தாம்போகிப் பாலம் நல்ல நிலையில் உள்ளதால் இவ்விடத்தில் புதிய பாலம் பெரும் பொருட்செலவில் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

36—

### சாலை செப்பனிடல்

**வினா 13005—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காட்டிலிருந்து செங்கல்தேரி பங்களாவிற்கு சாலை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் பெரும்பகுதி வனத் துறையின் பராமரிப்பில் உள்ளது. இதில் களக்காடு-சிதம்பரபுரம் சாலையில் கி.மீ.0/0—1/0 வரை நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனைப் பழுது பார்க்க மதிப்பீடு ரூ.3.80 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. தற்சமயம் இப்பகுதியில் உள்ள நொடிகள் சீர் செய்யப்படும்.

[1998 மே 26

37—

### கடல் எல்லை பாதுகாப்பு நடவடிக்கை

**வினா 13255—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுக் கடல் எல்லைப் பகுதிகளில் அன்னிய நாட்டு விசைப் படகுகளோ, கப்பல்களோ உலாவுவதாகச் சொல்லப்படுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அன்னிய நாட்டு விசைப் படகுகளோ அல்லது கப்பல்களோ தகுந்த காரணமின்றி தமிழ்நாட்டுக் கடல் எல்லைப் பகுதிகளில் உலாவினால் மத்திய அரசின் கடலோரக் காவல்படை/கப்பற்படை ஆகியவற்றின் ரோந்துப் பணிகளின்போது கண்டறியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

38—

### கிழக்குக் கடற்கரைச் சாலை பணி விவரம்

**வினா 13514—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கிழக்குக் கடற்கரைச் சாலையிலிருந்து கடலூர் செல்லும் சாலையின் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது திறக்கப்படும்?



1998 மே 26]

விடை—

**மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து கடலூர் வரை கிழக்குக் கடற்கரைச் சாலைப் பகுதிப் பணி முழுவதும் முடிவடைந்து 14.1.1998 அன்று பொதுமக்கள் உபயோகத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது.

39—

### தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் விவரம்

**வினா 12100—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன?

(ஆ) அதில் எத்தனை கூட்டுறவு வங்கிகளுக்கு இரும்புப் பெட்டகம், பாதுகாப்பு அறை மற்றும் இரும்புக் கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி விவகார எல்லையின்கீழ் 379 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன.

(ஆ) சேலம் மாவட்டத்திலுள்ள சேலம் மத்திய கூட்டுறவு வங்கி விவகார எல்லையின்கீழ் 379 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்படுகின்றன. இதில் 208 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் இரும்புப் பெட்டகம் தனியாகவும், 86 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் இரும்புப் பெட்டகம், பாதுகாப்பு அறை மற்றும் இரும்புக் கதவுகளுடனும், 78 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் இரும்புப் பெட்டகம், இரும்புக் கதவு இல்லாத பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட 78 தொடக்க

[1998 மே 26

வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 48 வங்கிகளுக்கு இரும்புக் கதவுகள் அமைக்க முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எஞ்சிய வங்கிகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால் இவைகளைப் பொறுத்தவரை தனியே முடிவு எடுக்கப்படும்.

40—

**கொள்முதல் செய்துகொள்ளும் முறை**

**வினா 13252—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிந்தாமணியில் கூட்டுக் கொள்முதல் முறைக்குப் பதிலாக சங்கமே கொள்முதல் செய்துகொள்ளும் முறை அமலாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1.3.1998 முதல் கூட்டுக் கொள்முதல் குழு நீக்கப்பட்டுவிட்டது.

41—

**பெண் பீடித் தொழிலாளர்களின் பணி விவரம்**

**வினா 10721—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண் பீடித் தொழிலாளர்களின் பாஸ் புத்தகம் மற்றும் சேவைப் புத்தகம் ஆகியவற்றை பெரும்பாலான பீடி நிறுவனங்கள் போலியான பெயரில் (குடும்பத்திலுள்ள ஆண்கள் பெயரில்) வைத்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?



1998 மே 26]

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில், பீடித் தொழிலாளர்கள் அதிகம் செறிந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் உண்மையிலேயே பீடி சுற்றும் பெண் தொழிலாளர்கள் பெயரில் பாஸ் புத்தகம் (லாக் புத்தகம்) மற்றும் சேவைப் புத்தகம் (சர்வீஸ் புத்தகம்) வழங்குவதற்குப் பதிலாக குடும்பத்திலுள்ள ஆண்கள் பெயரில் வழங்கியுள்ளது. இத்துறையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இத்துறை அமலாக்க அலுவலர்கள் இதுவரை மொத்தம் 15 வழக்குகள் தொடர்ந்துள்ளனர். இவற்றில் 6 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றுள்ளது. எஞ்சிய 9 வழக்குகளில் சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறியதால் அவ்வழக்குகள் விடுதலையில் முடிவுற்றுள்ளது. மேலும் இத்துறை அலுவலர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் மூலமாக ஏறத்தாழ 24,000 சர்வீஸ் புத்தகங்கள் பெண் தொழிலாளர்களின் பெயரில் மாற்றி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பிரச்சினையில் இத்துறை மிகுந்த கவனம் செலுத்தி, சார்நிலை அலுவலர்களுக்கு தேவையான அறிவுரைகள் வழங்கி வருகிறது. கடந்த 2-9-1997 அன்று திருநெல்வேலி, தொழிலாளர் துணை ஆணையரால் தொழிலாளர் உதவி ஆய்வர்களின் சிறப்புக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டு, ஆண்கள் பெயரில் சேவைப் புத்தகம் வழங்கியுள்ள நிறுவனங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

42—

**பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம்**

**வினா 14123—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, தானிப்பாடி, வாணாபுரம் ஊர்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளுக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தண்டராம்பட்டு தொகுதி, தானிப்பாடி, வாணாபுரம் ஊர்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளுக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**43—**

**பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

**வினா 14163—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு அரசு கட்டடம் கட்ட ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஏதும் இயங்கவில்லை. அங்கு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி மட்டும் இயங்கி வருகிறது. அவ்விடுதிக்கு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.



**44—**

**நலிவடைந்தோருக்கு தன்னிறைவுத் திட்டம் மூலம் குடியிருப்பு**

**வினா 4374—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிவடைந்தோருக்கு குடியிருப்பு வசதி அளிக்கும் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டத்தை அதே முறையில் தொடர்ந்து நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தற்போது நடைபெற்று வரும் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டங்கள், நிறைவேற்றப்பட்டபின் உலக வங்கியின் கடனுதவிக் காலம் முடிவடைந்து விட்ட நிலையில் புதிதாக திட்டங்கள் செயல்படுத்த செயல் திட்டம் இல்லை.

இருப்பினும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் "அட்கோ" நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்திவரும் பல்வேறு வீட்டு வசதி புறநகர் திட்டம் பகுதிகளில், வீடு இல்லாத ஏழைகளுக்காக "நில வங்கி மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் திட்டங்களை நிறைவேற்ற அரசாணை பிறப்பித்துள்ளது.

**45—**

**சத்துணவு மையம் அமைத்தல்**

**வினா 7021அ—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம், 4 ஆவது வார்டு மோட்டூரிலுள்ள முண்டாச்சியூர் காட்டுவளவில், சத்துணவுக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகரத்தைச் சேர்ந்த 4 ஆவது வார்டு மோட்டூரிலுள்ள முண்டாச்சியூர் காட்டுவளவில், 60 பள்ளி செல்லும் குழந்தைகள், 50 பாலர் பள்ளிக் குழந்தைகளும் இருப்பதால் அங்குப் போதிய இடவசதி கிடைத்தால் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் சத்துணவு மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

46—

### சத்துணவுக் கூடத்திற்குக் கட்டடம்

**வினா 8332—திரு ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், தின்டமங்கலம் ஊராட்சி, கலர்பட்டியில் மதிய உணவு, சத்துணவுக் கூடத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், தின்டமங்கலம் ஊராட்சி, கலர்பட்டியில் 1997-98 ஆம் ஆண்டில் வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் சத்துணவுக் கூடத்திற்கு சமையல் கூடம் கட்டி முடிக்கப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.





47—

### சத்துணவுக் கூடத்தைப் புதுப்பித்தல்

**வினா 14285—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், திப்பணாம்பட்டி ஊராட்சி மன்ற கட்டடத்தருகிலுள்ள சத்துணவுக் கூடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திப்பணாம்பட்டி ஊராட்சி மன்றக் கட்டடத்திற்கருகில் அமைந்துள்ள மீனாட்சிபுரம் குழந்தைகள் நல மையக் கட்டடம் ரூ.27,000 (ரூபாய் இருபத்தேழாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் ஒன்றியப் பொது நிதியிலிருந்து பழுதுபார்க்க மாவட்ட ஆட்சியாளர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

48—

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா 12592—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், புக்கம்பட்டியில் கால்நடை மருத்துவமனை செயல்பட அரசு ஆவன செய்யுமா?

[1998 மே 26

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இது குறித்து செயற்குறிப்பு ஏதும் இல்லை.

49—

**மகப்பேறு உதவித் திட்ட விவரம்**

**வினா 5605—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் எத்தனை பேருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது?

(ஆ) எடப்பாடி தொகுதியில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் பயன்பெற்ற நபர்களின் விவரம் வருமாறு:

| வருடம் | சேலம் மாவட்டம் | எடப்பாடி தொகுதி |
|---|---|---|
| 1995-96 | 14,580 | 829 |
| 1996-97 | 12.395 | 728 |
| 1997-98 | 15,205 | 739 |



1998 மே 26]

50—

**இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் விவரம்**

**வினா 7536—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 1995-97 ஆம் ஆண்டுகளில் எத்தனை பேருக்கு, எவ்வளவு திருமண உதவித் தொகையாக வழங்கப்பட்டது?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை பேருக்கு, எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

(இ) எடப்பாடி தொகுதியில் எத்தனை பேருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1995-96, 1996-97 மற்றும் 1997-98 (28-2-1998) முடிய மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவி திட்டத்தின்கீழ் பயன் பெற்றவர்கள் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1995-96 | 10,000 |
| 1996-97 | 10,000 |
| 1997-98<br>(28-2-1998 முடிய)<br>1996-97 (நிலுவை விண்ணப்பங்கள் உட்பட) | 47,379 |

[1998 மே 26

(ஆ) சேலம் மாவட்டத்தில் பயன் பெற்றவர்களின் விவரம் பின்வருமாறு :

| வருடம் | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1995-96 | 620 |
| 1996-97 | 1,861 |
| 1997-98 (28-2-1998 முடிய) | 1,779 |

(இ) எடப்பாடி தொகுதியில் பயன் பெற்றவர்களின் விவரம் பின்வருமாறு:

| வருடம் | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1995-96 | 58 |
| 1996-97 | 115 |
| 1997-98 | 202 |

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### ஸ்ரீவைகுண்டம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஆறு மாதங்களாக அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இயங்காமல் இருப்பது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலே கடந்த 6 மாதங்களாக அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இயங்காதது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். டேவிட் செல்வின் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்.



1998 மே 26]

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தொகுதிக்கு உட்பட்ட மணக்கரை, ஆறாம்பண்ணை, கொங்குராயர்குறிச்சி மற்றும் கலியாவூர் ஆகிய பகுதிகளில் கடந்த 6 மாதங்களாக அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இயங்காததால் அப்பகுதி பொதுமக்கள் படுகின்ற துயர்களை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 14-12-1997 முதல் அங்கே ஏற்பட்ட இனக் கலவரத்தின் காரணமாக பேருந்துகள் நிறுத்தப்பட்டன என்பது உண்மைதான். ஆனால், தொடர்ந்து ஜனவரி மாதத்திலே 19-1-1998 இல் அதற்கு முன்பாக அங்கே பேருந்துகள் இயக்கப்பட்டபோது மீண்டும் ஒரு பேருந்து அங்கே தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. சாதிக் கலவரங்கள் எப்போது ஏற்பட்டாலும் முதலில் மனிதர்கள் இரையாவதோடு பேருந்துகள் தொடர்ந்து கொளுத்தப்படுவது வாடிக்கையாக இருக்கிற பகுதி அந்த பகுதி. ஆகவே, அப்பகுதியில் பாதுகாப்போடு பேருந்துகளை இயக்க வேண்டும் என்று அவ்வப்போது பேருந்துகள் விடப்பட்டாலும் தொடர்ந்து அந்தப் பகுதிகளில் ஏற்பட்டு வருகிற இனக் கலவரங்களை முன்னிட்டு பேருந்துகள் அவ்வப்போது நிறுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இப்போது ஓரளவிற்கு அமைதி அங்கே இருக்கின்ற காரணத்தால் 19-5-1998 முதல் பகல் நேரத்திலே காவல் துறையினுடைய பாதுகாப்போடு பேருந்துகளை இயக்குவதற்கு அங்கே உத்தரவிடப்பட்டு பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதி மக்களும் தொடர்ந்து அங்கே அமைதியைக் காப்பாற்றிக் கொடுப்பார்களேயானால் பேருந்துகள் அங்கே முழுமையாக இயக்கப்படுவதற்கு முழு முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 6 மாதங்களாக அந்தப் பகுதியிலுள்ள மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நடைபெற்ற அரையாண்டுத் தேர்வு, முழு ஆண்டுத் தேர்வு போன்ற தேர்வுகளில் மாணவர்கள் பங்குபெற முடியவில்லை. நோயாளிகள் மருத்துவமனைக்குச் செல்வதில்கூட எவ்வளவோ இடர்ப்பாடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆறாம்பண்ணை, கொங்குராயர்குறிச்சி போன்ற பகுதிகளில் உள்ள பீடிக் கம்பெனிகள் எல்லாம் இந்தப்

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக மூடப்படக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இவற்றை எல்லாம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தவனத்தில் கொண்டு, தனியார் பேருந்துகளுக்கும் காவல் துறையினுடைய பாதுகாப்பைப் பெற்றுத் தந்து, அந்தப் பகுதிகளிலே பேருந்துகளை இயக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மேலும், அந்தப் பகுதியிலே 14-12-1997 அன்று கலவரம் தொடங்கியது. அது முதற்கொண்டு அரசியல் கட்சிகளினுடைய தலைவர்கள் எல்லாம் அந்தப் பகுதிகளுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், கலவரம் நடந்தப் பகுதியில் இரு தரப்பினர் இருப்பதால், ஒரு பகுதிக்குச் சென்றால் மற்றொரு தரப்பினர் கோபித்துக்கொள்வார்களோ என்ற எண்ணத்தை அரசியல் கட்சித் தலைவர்கள் மனதில் கொண்டுள்ள காரணத்தால் அங்கே செல்லுவதில்லை. அதன் காரணமாக, சாதித் தலைவர்கள் அந்த இடங்களிலே இருந்துகொண்டு, இரு தரப்பிலும் உள்ள அந்த சமுதாயத் தலைவர்கள்தான் இப்போது தொகுதி மக்களை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசு, தமிழகத்திலுள்ள எல்லா தரப்பு முன்னணி அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து—அந்தப் பகுதி மக்களுடைய உள்ளத்திலே சில எண்ணங்களும், கோரிக்கைகளும் இருப்பதாக அறிகிறேன்—அவை என்ன என்று தெரிந்து, அவற்றை நிறைவேற்ற முழு முயற்சி செய்து, அங்கே முழு சமாதானம் ஏற்படுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் அடிப்படையில் எல்லா மாவட்டங்களிலும், இதுபோன்ற கலவரப் பகுதிகளிலே அனைத்துக் கட்சி குழுவையும், அனைத்து சமுதாயத் தலைவர்களுடைய குழுவையும் அமைத்து அமைதி நிலையை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தப் பகுதியிலும் ஒரு நிரந்தரமான அமைதியை ஏற்படுத்துவதற்காக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும், அந்தப் பகுதியைச் சார்ந்த





பல்வேறு சமுதாயங்களினுடைய தலைவர்களும் முன்வந்து, அவர்கள் அந்த முயற்சியை மேற்கொள்வதற்கு உரிய வாய்ப்பை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகச் செய்து கொடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. இதுகுறித்து போக்குவரத்துத் துறை நிர்வாக இயக்குநரும் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும் இதிலே முழுமையாகக் கவனம் செலுத்தி, அந்தப் பகுதியிலே மீண்டும் சாதிக் கலவரங்கள் தொடராமல் இருப்பதற்கும், அப்படி கலவரங்கள் ஏதேனும் ஏற்பட்டால் முதலிலே தாக்கப்படுவது பேருந்துகளாக இருக்கிற காரணத்தால், அதையும் தடுத்து நிறுத்துவதற்கும் ஏற்றவகையில் அனைத்து சமுதாயத் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் முன்வந்து அமைதியை நிலைநிறுத்த வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்வதற்கும், நோயாளிகள் மருத்துவமனைக்குச் செல்வதற்கும் அது உதவியாக இருக்கும். பொது மக்களும் இதை உணர்ந்து அரசுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன். தனியார் பேருந்துகளை இயக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்களிலே நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று அரசு துணிச்சலாக பேருந்துகளை இயக்க முன்வருகிறது. தனியார்களும் அறிவுறுத்தப்பட்டு, காவல் துறையினுடைய உதவியோடு அங்கே பேருந்துகள் இயக்கப்படுவதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### அரியலூர் பேரூராட்சிக்குச் சொந்தமான சாலைகளில் ஆக்கிரமிப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. அமரமூர்த்தி அவர்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[திரு. டி. அமரமூர்த்தி] [1998 மே 26

'அரியலூர் பேரூராட்சிக்குச் சொந்தமான சாலைகளைத் தனியார் ஆக்கிரமிப்பு செய்வதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

**அறிக்கை**

அரியலூர் பேரூராட்சியில் ஆக்கிரமிப்புகள் பலமுறை நிர்வாகத்தால் அகற்றப்பட்டுள்ளன. கடைசியாக 17-9-1997 அன்று அனைத்து ஆக்கிரமிப்புகளும் பேரூராட்சிப் பணியாளர்களைக் கொண்டு காவல் துறை உதவியுடன் அகற்றப்பட்டன. மேலும், அரியலூர் பேரூராட்சி மன்றத்தின் 2-4-1998 தேதிய அவசரக் கூட்ட தீர்மானம் எண் 60 இல், அத்துமீறிய ஆக்கிரமிப்புகளை காவல் துறை உதவியுடன் அகற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அரியலூர் கோட்ட ஆட்சித் தலைவரை ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொண்டுள்ளார். 24-4-1998 இரவு போடப்பட்ட மூன்று கொட்டகைகள் பேரூராட்சிப் பணியாளர்களைக் கொண்டு 27-4-1998 அன்று அகற்றப்பட்டுவிட்டன.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அரியலூர் பேரூராட்சியில் அடிக்கடி இதுபோன்ற ஆக்கிரமிப்புகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. நாங்கள் அவ்வப்போது இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கும், அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுவந்துதான் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டி இருக்கிறது. எனவே, யாரும் நிரந்தரமாக ஆக்கிரமிப்பு செய்யாத வகையில், அந்தச் சாலைகளைப் பராமரிக்கின்ற வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் உதவியுடனும், நெடுஞ்சாலைத் துறை உதவியுடனும், பொதுமக்கள் யாரும் இந்தச் சாலை ஆக்கிரமிப்புக்களில் ஈடுபடாமல் இருக்க தக்க நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு கவனம் செலுத்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்.



1998 மே 26]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் பல இடங்களில் இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அவ்வப்போது தகவல்கள் தெரிவிக்கப்பட்டால், நிச்சயமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் தனக்குக்கீழ் இருக்கிற ரெவின்யூ அதிகாரிகள், அங்கே இருக்கின்ற உள்ளாட்சி நிர்வாகத்தைச் சார்ந்த அதிகாரிகளை வைத்து நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

## 4. அறிக்கை அளித்தல்

### சட்ட விதிகள் ஆய்வுக்குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1997-98 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினோராவது (பதினோராவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன் வடிவுகள் அறிமுகம் செய்தல், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் நுழையும் இயக்கூர்திகள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் நுழையும் இயக்கூர்திகள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் நுழையும் இயக்கூர்திகள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அறிமுகம் செய்ய இருக்கின்ற அமைப்பு முறை அல்லது அணுகுமுறை அல்லது அனைத்துத் துறை......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தீர்மானத்தை மட்டும் படித்தால் போதும்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** இதிலே விஷயம் இருக்கிறது. சட்டமுன்வடிவை வருவாய்த் துறை அமைச்சர் அறிமுகம் செய்வார் என்று குறிப்பிட்டுவிட்டு 'க. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்' என்று போட்டு இருக்கிறார்கள். நான் முதலமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புவது, 'க. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சரா அல்லது நானா?'

**மண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** 'கா' என்றால் 'காப்பாற்று' என்று அர்த்தம் (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** 'கா.' அல்ல 'க. மனோகரன்' என்று போட்டு இருக்கிறார்கள்.

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம்......

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** வருவாய்த் துறை அமைச்சர் சுட்டிக்காட்டிய பிழை வருவாய்த் துறையிலேயே செய்யப்பட்ட பிழை. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** பிழை எங்கே இருந்தாலும் சரி, பிழை புரிந்தவர்களைத் தண்டிக்க வேண்டிய பொறுப்பு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் என்னைப் பாராட்டுவார் என்று நம்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1988-89, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1988-89 ஆம் ஆண்டிற்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அளித்தல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1988-89 ஆம் ஆண்டில் சில மானியக்



கோரிக்கைகளின்கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது என தெரிய வந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. பொதுக் கணக்குக் குழு 1988-89 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது.

(முற்பகல் 11-00)

இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு 1988-89 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டப் பேரவைமுன் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாமென்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அதற்கேற்ப, 1988-89 ஆம் ஆண்டு மிகைச் செலவுகளை சரிகட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள், தற்போது தாக்கல் செய்யப்படுகின்றன. இம் மிகைச் செலவு, மொத்தம் ரூபாய் 15 கோடியே 30 இலட்சமாகும். மேற்சொன்ன ஆண்டில் "கல்வி", "மருத்துவம்", "பொதுச் சுகாதாரம்" மற்றும் "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்" என்பவையின் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

3. அனுமதி வழங்கப்படாத பதவிகளில் நியமிக்கப்பட்ட சிறுபான்மையினர் பள்ளி ஆசிரியர்களுக்கு நீதிமன்ற ஆணைகளையொட்டி சம்பளம் வழங்கியதும், மூன்றாவது சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் விடுபட்ட ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு சம்பள மறுநிர்ணயம் செய்யப்பட்டதற்கான நிலுவைத் தொகை வழங்கியதும் "கல்வி" என்ற தலைப்பின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளதற்குக் காரணங்களாகும்.

4. பணியாளர்களுக்கு அகவிலைப்படி தவணைத் தொகை மற்றும் உயர்த்தப்பட்ட அன்பளிப்புத் தொகை ஆகியவற்றுக்கு அனுமதி வழங்கியதால் மிகைச் செலவு ஏற்பட்டது. மருந்துகள், எக்ஸ்ரே-படங்கள், உலை எண்ணெய், மின் கட்டணம் ஆகியவற்றிற்கான செலவுகள் "மருத்துவம்" என்ற தலைப்பின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளதற்குக் காரணங்களாகும்.

5. பணியாளர்களுக்கு அகவிலைப்படி தவணைத் தொகை, உயர்த்தப்பட்ட அன்பளிப்புத் தொகை, சம்பள நிலுவைத் தொகை மற்றும் பயணப்படி ஆகியவற்றுக்கு அனுமதி வழங்கியதால் மிகைச் செலவு ஏற்பட்டது. பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர்களுக்கு முன்தேதியிட்டு சம்பளம் நிர்ணயம் செய்ததும் "பொதுச் சுகாதாரம்" என்ற தலைப்பின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளதற்குக் காரணங்களாகும்.

6. ஓய்வூதியம் பெறுபவர்களுக்குரிய ஓய்வூதியம் திருத்தியமைக்கப்பட்டதும் உயர்வீத அகவிலைப்படி வழங்கியதும் "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்" என்ற தலைப்பின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளதற்குக் காரணங்களாகும்.

7. 1988-89 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டுகிறேன்.

வணக்கம்.

முற்பகல் 11-00

## 7. அறிவிப்பு

### மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1988-89, விவாதமின்றி ஆய்வு செய்து நிறைவேற்றல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற 1988-89 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 27-5-1998 அன்று வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றிய பின்னர், உரிய நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு பேரவையில் அறிமுகம் செய்யப்படும். பின்னர், இச்சட்டமுன்வடிவு 28-5-1998 ஆம் நாளன்று விவாதமின்றி ஆய்வு செய்யப்பட்டு, நிறைவேற்றப்படும்.



## 8. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்

(ஆ) கோரிக்கை எண் 42—பல்வகை

(இ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு

(ஈ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

(உ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்

(ஊ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்

### (அ) கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு. கால நன்மைகளும், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1951,83,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2646, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் தங்களது ஓய்வூதியத்தை கருவூலத்தில் பெறுவதில் ஏற்படும் காலதாமதம் குறித்து ஆராய குழு நியமிக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1951,83,17,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2047, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1951,83,17,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2817, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''அரசுப் பணியாளர்கள் இயற்கை எய்தினால் அவர்களுக்கு ஈமச்சடங்கு செய்ய ரூ.2,000 வழங்குவதுபோல, ஓய்வூதியம் பெறுபவர்கள் இயற்கை எய்தினால் அவர்கள் குடும்பத்திற்கும் ரூ. 2,000 வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1951,83,17,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3065, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2487, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



''ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1951,83,17,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2369, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1951,83,17,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3308 திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''அரசுப் பணியிலிருக்கும்போது மரணமடையும் அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு அதே துறையில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1951,83,17,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 623, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''வடவெல்லைப் போராட்டத் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1951,83,17,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3423, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1951,83,17,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1070, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1951,83,17,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3605, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

முற்பகல் 11-05

## (ஆ) கோரிக்கை எண் 42—பல்வகை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42-பல்வகை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1251,58,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்", எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 203, திரு. கே. சுப்பராயன்.



**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1251,58,98,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3846, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1251,58,98,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3055, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2486, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1251,58,98,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3309, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "அழகுமிகு பிச்சாவர வனப் பகுதியினை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து", விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்க பெறுகின்ற ரூ.1251,58,98,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1707, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கைபற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1251,58,98,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1071, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கொள்கைபற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1251,58,98,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**(இ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.338,11,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 178, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கைபற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.338,11,96,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3876, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கொள்கைபற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.338,11,96,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3743, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2131, திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2372, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கைபற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.338,11,96,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்''.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1726, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கொள்கைபற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.338,11,96,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

53-119—9

[1998 மே 26

**(ஈ) கோரிக்கை எண் 61 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.487,45,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 177, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கைபற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.487,45,40,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3856, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கைபற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.487,45,40,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3728, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1858, திரு. பி. வெங்கடசாமி.



1998 மே 26]

**Thiru B. Venkatasamy:** Hon. Deputy Speaker, Sir, 'To discuss policy', I move—

"That the allocation of Rs.487,45,40,000/- under Demand No.61—Loans and Advances by the State Government, be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3323, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பட்டு நெசவு தொழில் புவனகிரியில் புகழ்பெறச் செய்யும் வகையில் பட்டு நெசவாளர்களுக்கு வழங்கப்படும் முன்பணத்தை பத்து மடங்காக அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.487,45,40,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2368, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கைபற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.487,45,40,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 275, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதியில் வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்கள் சுயமாகத் தொழில் தொடங்க கடன் வழங்க வேண்டியது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.487,45,40,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

## (உ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 9,44,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1386, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மிசோராமில் மாதச் சம்பளம் ரூ. 14,000 என்று வழங்கப்படுவதைப்போல தமிழகத்திலும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,44,75,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 159, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,44,75,000-ல் ரூ.100-குறைக்க வேண்டும்".





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1161, திரு. ஐ. கணேசன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1706, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பெறுகின்ற ஓய்வூதியம் மறைவிற்கு பின் அவர்களின் துணைவியர்க்கும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,44,75,000-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1795, திரு. பி. வெங்கடசாமி.

***Thiru B. Venkatasamy :** Hon. Deputy Speaker, Sir, 'To discuss the need to celebrate Legislators' Day every year in Tamil Nadu Assembly', I move—

"That the allocation of Rs. 9,44,75,000 under Demand No.7—State Legislature, be reduced by Rs.100".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2449, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் இரயில் பயணப் படியினை ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,44,75,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 967, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வருடம் இரயில்வே கட்டணமாக ரூபாய் பத்தாயிரம் கொடுப்பதை நிறுத்திவிட்டு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளதுபோல் இலவசமாகப் பயணம் செய்ய சட்டமன்ற உறுப்பினருக்கும், அவரது உதவியாளருக்கும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,44,75,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1747, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,44,75,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3528, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கென அரசின் மூலம் உதவியாளர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,44,75,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2195, திரு. டி. மணி.



**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்கு அனுப்பும் கடிதங்களுக்கு உடன் பதில் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,44,75,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 3623, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 646, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**Dr. E.S.S. Raman:** Hon. Deputy Speaker, Sir, 'To discuss the need to construct an annexe to the present Assembly Hall like Parliament annexe at New Delhi', I move—

"That the allocation of Rs.9,44,75,000 under Demand No.7—State Legislature, be reduced by Rs.100".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 279, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவரவர் தொகுதியில் வீடு மற்றும் அலுவலகம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,44,75,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1454, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,44,75,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண்.1892, திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2364, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மாநிலச் சட்டமன்றத்திற்கெனத் தனியாக பிரம்மாண்டமாக ஒரு கட்டடம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,44,75,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3324, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர்களை இவ்வாண்டே நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,44,75,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2629, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர்கள் அரசு நியமித்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9.44,75,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஊ) கோரிக்கை எண் 8 — தேர்தல்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8, தேர்தல்கள்—மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 29,32,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1382, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வாக்காளர் அடையாள அட்டை வழங்காதவர்களுக்கு மீண்டும் புகைப்படம் எடுக்க ஆணையிட்டு அட்டை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,32,10,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 158, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,32,10,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1180, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1665, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை உடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,32,10,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1797, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Deputy Speaker, Sir, 'To discuss the need to issue photo identity cards immediately to all voters in Tamil Nadu' I move —

"That the allocation of Rs.29,32,10,000/-under Demand No.8 - Elections be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2455, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகளை விரைவாக வழங்கி அடுத்த தேர்தல்களில் இதைச் செயல்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,32,10,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 970, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.



**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,32,10,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1748, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,32,10,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2198, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "1 கிமீ தூரத்திற்குள் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,32,10,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1468, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரத்தை மாற்றி டி.வி.-யில் வேட்பாளர்கள் பிரச்சாரம் செய்தால் போதும் என்ற அளவில் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களையும், செலவினத்தையும் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,32,10,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 2357, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு.ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு குறைந்தபட்ச கல்வித் தகுதி நிர்ணயிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,32,10,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3335, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தின் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் எண்ணிக்கையை முன்னூற்று பதினேழாக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,32,10,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பல்வகை, பல்வகை மூலதனச் செலவு, மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும்



அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதேபோல் பொதுத் தேர்தல்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையை அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளிலே பேசுகிற ஒரு நல்ல வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல் நலிவுற்ற நிலையில் இருந்த காரணத்தினாலே, இன்றைக்கு காலையிலே அவைக்கு வருவாரா என்று ஏங்கிக் கொண்டு இருந்த பலதரப்பட்ட மக்களும்—அவருக்கு இறை நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, பலதரப்பட்ட மக்களும்—அவர் உடல் நலம் பெற்று இந்த அவைக்கு வரவேண்டும்; சில சலுகைகளைத் தியாகிகளுக்கு, பென்ஷனர்களுக்கு எல்லாம் அறிவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தினமும் வருகிறார்கள்; நேற்றைய நிலையை வைத்து நான் சொல்கிறேன்; அவருடைய உடல் நலம் நிச்சயமாக முன்னேறி இருக்கிறது. நம்முடைய அவை முன்னவர் அவர்கள் கல்வியை நமக்குக் கொடுப்பார்; இன்னும் கொஞ்சம் போனால் கூடுதலாக அறிவுரையைக் கொடுப்பார். ஆனால் கருணையும் நிதியும் அவரிடம் இருக்கும் என்று நம்மால் எதிர்பார்க்க முடியாது. ஆகவே கருணையும் நிதியும் ஒருங்கே பெற்றிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இருந்தால்தான் சில சலுகைகளை நாம் பெற முடியும் என்ற அளவிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே வரவேண்டுமென்று நினைத்தோம். வந்திருக்கிறார்கள்.

@ 203 முதல் 262 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I-VII ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

முற்பகல் 11-15

சுதந்திரப் பொன் விழா ஆண்டை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தியாகிகள் மத்திய அரசிலிருந்து ஏற்கெனவே மாதம் ஒன்றுக்கு ரூ.3,000/- பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலம் அவர்களுக்கு 500 ரூபாய் மட்டுமே தந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) பக்கத்தில் இருக்கிற கேரள மாநிலத்தில் 1,500 ரூபாய்—சென்ட்ரல் கவர்ன்மெண்டிலிருந்து ரூ.3,000 அவர்கள் பெற்றாலும்கூட, கேரளாவில் 1,500 ரூபாயை உயர்த்திக் கொடுப்பதற்கான ஜி.ஓ.வை அவர்கள் பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தியாகிகளுக்காக நாம் தருகிற தொகை 3,000 ரூபாய். மத்திய அரசின் தொகையைப் பெறுகிறவர்களுக்கு மேலும் மாநில அரசு தருகிற தொகை ரூ.500. அந்த வேறுபாட்டை மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துகொள்ள வேண்டும். மாநில அரசேத் தருகிறபோது ரூ.3,000 தருகிறது. மத்திய அரசு தருவதுடன் நாமும் அவர்களுக்குத் தருகிறபோது, மேலும் ரூ. 500 தருகிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** பக்கத்தில் இருக்கக்கூடிய கேரளாவில் ரூ.1,500 சேர்த்துக் தருகிற காரணத்தால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கேயும் அதைச் சேர்த்து அறிவிக்க வேண்டுமென்று இந்தச் சுதந்திரப் பொன்விழா கொண்டாடுகிற நேரத்தில் நான் அவர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், தியாகிகளுக்கு வீட்டுமனைகள் வேண்டும். காரணம் அவர்கள் இந்த நாட்டுக்காக உழைத்தவர்கள். நாம் சுவாசித்துக் கொண்டிருக்கிற சுதந்திரக் காற்றுக்கு அவர்கள்தான் அடித்தளம் அமைத்து நமக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்தவர்கள். ஆகவே, அவர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்கேயே அந்தப் பகுதிகளிலேயே புறம்போக்கு இடங்கள் இருந்தால் அங்கேயே அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனைகளை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, அவர்கள் பேருந்துகளில் பயணம் செய்வதற்கு அவர் ஒருவருக்கு மட்டும் பஸ் பாஸ் கொடுத்திருக்கிறீர்கள். வயது கடந்த இந்தக் காலகட்டத்தில், அவருடன் செல்கின்ற உதவியாளருக்கும்



அதுபோன்ற பஸ் பாஸ் தர வேண்டும். தியாகிகளின் வாரிசுகளுக்கு அரசு வேலைகளில் முன்னுரிமை கொடுத்து அவர்களைப் பணியில் அமர்த்தவேண்டுமென்று அவர்கள் சார்பாக வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுடைய பிரச்சினை. நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நிதிச் சுமையை வைக்க நிச்சயமாக நான் தயாராக இல்லை. அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் என்மீது கோபப்பட்டாலும் சரி, எங்களுக்குச் சம்பளமே வேண்டாம்.

அரியானாவிலும், கேரளாவிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளமே வழங்கப்படுவதில்லை. ஆகவே, நமக்கும் சம்பளம் வேண்டாம் என்று நாம் எல்லோரும் ஒட்டுமொத்தமாகச் சொல்லிவிடலாம். நாம் தொண்டு செய்ய வந்திருக்கிறோம். மக்கள் பிரதிநிதிகள் என்று வந்திருக்கிறோம். ஆகவே அரியானாவைப் போலவே, கேரளாவைப் போலவே நாம் முன்னுதாரணமாக அவைகளை எடுத்துக் கொண்டு, நமக்குச் சம்பளமே வேண்டாம் என்று சொல்லிவிடலாம். சம்பளம் என்று சொன்னால், பத்திரிகைகளில் செய்தி வெளிவரும்போது, ஏதோ சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்காக சம்பளம் நிறைய கேட்கிறார்கள் என்று நினைக்கக்கூடிய நிலை உருவாகிவிடுகிறது. எனவே நமக்கு அது வேண்டவே வேண்டாம். ஒரு பைசா கூட மாண்புமிகு முதலமைச்சரோ அவை முன்னவரோ தர வேண்டாம். ஆனால் மற்ற மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னென்ன செலவுகளை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். கடந்த காலத்தில் பிரச்சினைகள் மிகக் குறைவாக இருந்தன. அப்போது பயணம் செய்வது என்பதும் குறைவு. மக்களுடைய பிரச்சினைகளும் குறைவு. வளர்ந்து வருகின்ற இந்த விஞ்ஞான யுகத்தில் மக்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்புக்கு ஈடுகொடுத்து சட்டமன்ற உறுப்பினர்கள் 24 மணி நேரமும் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றினாலும்கூட அவர்களைத் திருப்திப்படுத்த முடியாத நிலை. அப்படிப்பட்ட நிலை இருக்கிறபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுக்கு உதவ வேண்டும். தொலைபேசி இல்லாத காலமெல்லாம் உண்டு. ஆனால்—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) சம்பளம்தான் வேண்டாம் என்கிறீர்களே, அப்புறம் என்ன?

**திரு. சி. ஞானசேகரன்:** இப்போதுதான் ஆரம்பித்தேன். சம்பளமே வேண்டாம் என்று சொன்னேன். ஆனால் இருக்கக்கூடிய செலவினங்களை யார் ஏற்றுக்கொள்வது? துணைத் தலைவர் அவர்களே, இன்று நான் கேட்பதெல்லாம் உங்களுக்கும் சேர்த்துதானே? எனக்கு மட்டும் வாதாடவில்லையே? தொலைபேசியில் எஸ்.டி.டி போன்ற வசதிகள் எல்லாம் வந்துவிட்டன. ஆகவே, தொலைபேசிப் படியைப் பொறுத்தவரையிலும், பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்தில் உள்ளச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுப்பதைப்போல மாதம் ரூ. 4,000 தாருங்கள் என்றுதான் கேட்கிறேன். அதேபோல ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தொகுதிப் படியாக ரூ. 5,000 ஒரு மாதத்திற்கு அங்குளளச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தருகிறார்கள். மத்தியப் பிரதேசத்தில் தபால் படி என்று அங்குள்ளச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 2,000 தருகிறார்கள். காரணம் நிறைய மனுக்கள் வருகின்றன. எமர்ஜென்சி காலத்திற்குப் பிறகு பார்த்தால், மக்களுக்கு நிறைய விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எதற்கெடுத்தாலும் பேப்பரை எடுத்து மனு தயாரித்துக் கொடுத்து விடுகிறார்கள். அவர்களுக்கும் நாங்கள் பதில் சொல்ல வேண்டும். அதுபோல அமைச்சரிடமிருந்து ஒரு கோரிக்கைக்கான பதில் வெற்றியாக எங்களுக்குக் கிடைத்துவிட்டால் அந்தச் செய்தியையும் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். நிறைவேறவில்லை என்றாலும் மக்களுக்குத் தபால் மூலம் தெரிவிக்க வேண்டும். ஆகவே மக்களோடு அன்றாடம் தொடர்புகொள்ள வேண்டிய பொறுப்பு, கடமை எங்களுக்கு இருக்கிறது. ஆகவே தபால் படி வழங்க வேண்டும். அடுத்து, தண்ணீர்க் கட்டணம். நீங்கள் தண்ணீர் கொடுக்காவிட்டாலும், எல்லா இடங்களிலும் இப்போது மினரல் வாட்டர் பாட்டில் வந்து விட்டது. மிசோரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தண்ணீர்க் கட்டணம் ரூ.75 என்று கொடுக்கிறார்கள். அதே ரூ.75 எங்களுக்கும் போதும் (குறுக்கீடு) ஒரு நாளைக்கு அல்ல. மாதத்திற்குதான் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். மின் கட்டணத்திற்கு, மாதம் ஒன்றுக்கு மிசோரத்தில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் 452 ரூபாய் தருகிறார்கள். வீட்டு வாடகைப்படி மாதம் ரூ.3,000 என்று அதே மிசோரத்தில் தருகிறார்கள். அதேபோல தொகுதிப் படி என்று கர்நாடகாவிலே 2,500 ரூபாய் தருகிறார்கள். அதேபோல உதவியாளர் படி என்று மகாராஷ்டிராவிலே 2,500 ரூபாய் தருகிறார்கள்.



முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு மாநிலத்தை எடுத்துக் கொண்டு அந்த மாநிலத்திலே என்னென்ன கொடுக்கிறார்கள் என்று சொன்னால் அரசு பரிசீலிக்கலாம். ஏதோ ** என்று இது போன்று கலந்து சொல்வது சரியாக இருக்காது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்பதை வேண்டுமென்றால் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிடுங்கள். ஒவ்வொரு மாநிலத்திலிருந்து ஒவ்வொன்றை எடுத்துக் கொண்டால் சரியாக வராது. ஏதாவது ஒரு மாநிலத்தைச் சுட்டிக்காட்டி அந்த மாநிலத்தில் இருப்பதைப்போலக் கொடுங்கள் என்று சொன்னால் அரசு பரிசீலிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் ஒரு மாநிலத்தை மட்டும் முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நம்முடைய தமிழகத்து சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லா மாநிலங்களைப் பற்றியும் நன்றாகத் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறவர். அவர்கள் அமைதியாக இருந்தாலும்கூட எங்களுக்கெல்லாம் எப்போதுமே உறுதுணையாக இருந்து எங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகிற அருமை அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் ஏன் இன்று ஒரு மாநிலம் என்று தன்னை சுருக்கிக்கொள்ள வேண்டுமென்று விழைகிறார்கள் என்பது எங்களுக்குப் புரியவில்லை. (சிரிப்பு) இதிலே எல்லா மாநிலங்களிலும் இருப்பனவற்றில் எங்களுக்கு நல்லதாகப்படுவதை நாங்கள் எடுத்து கொள்வோம். (சிரிப்பு) உதவியாளர் படி என்று மகாராஷ்டிராவிலே 2,500 ரூபாய்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஸ்வீட் கடையிலே நுழைந்த குழந்தை மாதிரி இருக்கிறீர்கள். ஏதாவது ஒரு ஸ்வீட்டை எடுத்தால் பரவாயில்லை. இதை எடுங்கள், அதை எடுங்கள் என்று எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். அதைத்தான் அமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்னார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் எல்லாம் இனிமையான வாழ்க்கை வாழ வேண்டும் என்று முதல்வர் அவர்களும் மற்றவர்களும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ குழந்தைக்கு ஒரு ஸ்வீட்டை மட்டும் கொடுத்துவிட்டு வாயை மூடு என்று நீங்கள் வாயை அடைக்க முனைந்தால் அது நல்லது அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிகம் ஸ்வீட் சாப்பிட்டால் சர்க்கரை வியாதி வரும்.

**திரு. சி. ஞானசேகரன்:** சர்க்கரை வியாதியே எனக்கு இல்லை. அதேபோல, போக்குவரத்துப் படி என்று ஆந்திரப் பிரதேசத்தில் மாதத்திற்கு 2,000 ரூபாய் கொடுக்கிறார்கள். உதவியாளர் படி என்று ஆந்திரப் பிரதேசத்தில் 1,500 ரூபாய் தருகிறார்கள். இட வசதிப்படி என்று ஆந்திரப் பிரதேசத்திலே 2,000 ரூபாய் மாதத்திற்குத் தருகிறார்கள். மருத்துவப் படி என்று மத்தியப் பிரதேசத்திலே 1,500 ரூபாய் தருகிறார்கள். அதேபோல, விருந்தினரை உபசரிப்பதற்குக்கூட ஒரு படியைக் கொடுக்கிறார்கள். மணிப்பூரிலே, 500 ரூபாய் கொடுக்கிறார்கள். வருபவர்களுக்கு காபி, டீ, கொடுக்க வேண்டியுள்ளது. காரணம் விருந்தோம்பல் என்பது தமிழர் பண்பாடுதான். அதனால் நீங்கள் கொஞ்சம் கூடவே அதிகரித்துக் கொடுக்கலாம். பத்திரிகைப் படி என்று நாகாலாந்திலே 250 ரூபாய் தருகிறார்கள். ஓட்டுநர் படி என்று ஓரிசாவிலே 2,000 ரூபாய் தருகிறார்கள். எதிர்பாராத செலவினப்படி என்று அசாமிலும், மணிப்பூரிலும் 1,500 ரூபாய் தருகிறார்கள். இதையெல்லாம், மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், அண்ணன் ஆற்காட்டார் அவர்களும் கணக்கைக் கூட்டிப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இவை எல்லாவற்றையும் கணக்குப் போட்டுப் பார்த்தாலும்கூட 30,777 ரூபாய்தான் வருகிறது (மேசையைத் தட்டும் ஒலி)



எங்களுக்குச் சம்பளமே வேண்டாம் என்று சொல்லிவிட்டோம் என்பதையும் நான் இந்த அவையில் சொன்னேன். அதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நெஞ்சத்திலும் பதிந்து கொள்ளலாம். அதேபோல எங்களுக்குச் சம்பளமே வேண்டாம், இந்தச் செலவினங்களை மட்டும் ஏற்றுக் கொண்டால் போதும். காரணம் இந்தச் செலவுகள்தான் ஆளைக் கொன்று கொண்டிருக்கின்றன. எஸ்.டி.டி. போட்டால் சில நேரங்களில் 17,000 ரூபாய், 18,000 ரூபாய் என்று பில் வந்துவிட்டால் டெலிபோன் பில் கட்ட முடியாமல் போய் அவர்களே disconnect செய்துவிடுகிறார்கள்.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர்கள் இல்லாமல் அவர்கள், பாவம், எப்படியெல்லாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இப்போது ஒரு பேரூராட்சியிலேயோ அல்லது ஒரு நகராட்சியிலேயோ அல்லது மாநகராட்சியிலேயோ சென்று பார்த்தால் அங்கு இருக்கக்கூடிய (மணியடிக்கப்பெற்றது) தலைவர்களுக்கு எல்லாம் உதவியாளர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள். உதவியாளர்கள், ஆபீஸ் அசிஸ்டன்ட்ஸ் என்றெல்லாம் இருக்கிறார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு யாரும் இல்லாமல் நாங்களெல்லாம் அனாதைகளாக நின்று கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுக்கு ஓட்டுநர் படி, அதேபோல உதவியாளர் படி கொடுங்கள், அல்லது நீங்களே ஓட்டுநரை நியமனம் செய்து கொடுத்துவிடுங்கள். எங்களுக்குப் படி கொடுக்க வேண்டாம். ஒரு ஓட்டுநரை எங்களுக்குக் கொடுங்கள். அதேபோல், ஒரு ஆஃபீஸ் அசிஸ்டன்ட், ஒரு அசிஸ்டன்ட், ஒரு ஸ்டெனோகிராபரையும் போட்டால்தான் நல்லது. அல்லது, இது கம்ப்யூட்டர் யுகம். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கம்ப்யூட்டரைக் கொடுத்து கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர் ஒருவரையும் வழங்க வேண்டும்.

இரயில்வே படியைப் பார்த்தோம் என்று சொன்னால், டி.ஆர்.ஏ. என்று ஹரியானாவிலே— அதாவது டி.ஏ. என்று எடுத்துக் கொண்டால் கர்நாடகாவிலே டெய்லி அலவன்ஸ் 400 ரூபாய் தருகிறார்கள், அதைவிட ஹரியானா, பஞ்சாப், ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலே இன்று 50,000 ரூபாய் டி.ஆர்.ஏ. என்று கொடுக்கிறார்கள். ஆந்திரப் பிரதேசத்தில் 65,000 ரூபாய் டி.ஆர்.ஏ. என்று கொடுக்கிறார்கள். இவ்வளவு வசதிகளையும் செய்து கொடுத்தால்தான்......

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாப் மாநிலத்தில் சம்பளம் உள்ளிட்ட எல்லாப் படிகளையும் சேர்த்து மொத்தமே 4,500 ரூபாய்தான். பஞ்சாபைப் பின்பற்றலாமா? (சிரிப்பு)

முற்பகல் 11-25

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'பஞ்சாப்' தமிழகத்தைப்போல பரந்து விரிந்த ஒன்றல்ல. அங்கு இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் தீவிரவாதம் போன்றவற்றால் வெளியேகூடப் போவதில்லை. (சிரிப்பு) ஆனால், தமிழகத்தில், இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் சுதந்திரப் பறவைகளாக எல்லாத் தெருக்களுக்கும், வீடுகளுக்கும், எல்லா பகுதிகளுக்கும் ஓடோடிச் சென்று பணியாற்றிக் கொண்டிருக்கின்ற காரணத்தாலே, புயல் வேகத்தில் செயல்படக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாங்கள் எல்லாம் இன்புற்றிருக்க, மற்ற மாநிலங்களில் என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்கிறார்களோ அதையெல்லாம் செய்து கொடுத்தால்தான் தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியத் திருநாட்டிலே முன்னோடியாக இருக்கக்கூடிய முதலமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்களை எந்தவித குறைபாடும் இல்லாமல் வைத்திருக்கின்ற முதலமைச்சர் என்ற பெயர் உங்களுக்குக் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், எங்களுக்குச் சம்பளமே வேண்டாம், எங்களுக்கு ஒரு பைசா சம்பளமும் வேண்டாம் என்றுதான் திரும்ப திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். ஆகவே ஏதோ நாங்கள் சம்பளம் கேட்பதைப்போல நினைத்துக் கொள்ளாமல், நீங்கள் இந்த வசதிகளை எல்லாம் செய்து கொடுத்தால் எங்களுடைய பணியை மக்கள் எதிர்பார்க்கிற அளவுக்கு, அவர்கள் திருப்திபடக்கூடிய அளவுக்கு எங்களாலே செய்து கொடுக்க முடியும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, பென்ஷன்தாரர்கள்; ஐந்தாவது ஊதியக் குழு இதில் இப்போது வந்து இருக்கக்கூடிய அரியர்ஸ்-ஐ எல்லாம் கொடுக்கின்றபோது பென்ஷன்தாரர்களுக்கு உடனடியாக அந்தத் தொகையைக் கொடுக்காமல், ஐந்து ஆண்டுகள் கழித்து 60 சதவிகிதப் பணம் கொடுக்கப்படும் என்று நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள்.



பென்ஷன்தாரர்கள் பாவம், அவர்கள் அதுவரை வாழ்வார்களா என்பதே சந்தேகம்—5 ஆண்டுக்காலம் வரை. ஆகவே, இரண்டு ஆண்டுகளுக்குள் எல்லாத் தொகைகளையும், பென்ஷன்தாரர்களுக்கு வழங்க நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றத்தைப் பொறுத்தவரை, இப்போது இருக்கின்ற சட்டமன்றம் மிகவும் சிறியதாக இருக்கின்ற காரணத்தால், இன்னொரு அழகிய சட்டமன்றத்தை உங்களுடைய காலகட்டத்தில் நிச்சயமாகக் கட்ட வேண்டும். மகாராஷ்டிராவில் மிகப் பிரமாதமாகக் கட்டியிருக்கிறார்கள். இப்போது இங்கே ஹாஸ்டலைக்கூட நீங்கள் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள் எங்களுக்காக. 'மனோரா' என்ற ஒரு ஹாஸ்டல் மகாராஷ்டிராவிலே, மும்பையிலே கட்டியிருக்கிறார்கள். அந்தவகையில் நீங்கள் வடிவமைத்துக் கட்டிக் கொண்டு இருக்கிறீர்கள். சட்டமன்ற வளாகத்தையும், நீங்கள் ஒரு பெரிய வளாகமாக, மிக அருமையான வேலைப்பாடுகளோடு அமைத்துத்தர வேண்டும். இதில் பாராளுமன்றத்தில் இருப்பதைப்போல 'சென்ட்ரல் ஹால்' இருக்க வேண்டும். இப்போது எல்லாம் நாங்கள் சாப்பாட்டிற்குப் பெரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். இங்கு மட்டுமல்ல, எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலும்கூட எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் சிலபேருக்கு அங்கே சாப்பிடுவதால், வயிற்றுப் போக்குகூட வந்துவிடுகிறது. இப்படியெல்லாம் இருந்து கொண்டிருக்கிற காரணத்தால், ஒரு தரமான உணவு கொடுக்க வேண்டுமென்று சொன்னால், 'சென்ட்ரல் ஹாலில்' எப்படி — பாராளுமன்றத்தில் பேசுகிறார்களோ இல்லையோ, சென்ட்ரல் ஹாலில் போய் சாப்பிட்டுவிட்டு வரலாம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு சிலபேர் போய் வரக்கூடிய அளவுக்கு மிகத் தரமான உணவு அங்கு இருக்கும். இங்கே எங்களுக்குத் தரமான உணவு கிடைக்காததால், காலையிலே, வயிற்றுப்போக்கு வந்து நாங்கள் எங்காவது படுத்துவிட்டால், பேசுவதற்குக் கூட ஆள் கிடைக்காது. ஆகவே, அங்கே 'சென்ட்ரல் ஹால்' இருப்பதைப்போல, இங்கேயும் ஒரு சென்ட்ரல் ஹாலை வைத்து, ஒரு தரமான உணவு விடுதியைச் சட்டமன்றத்திலும் சரி, எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலும் சரி, வைப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன். (குறுக்கீடு) 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் பணியாற்றக்கூடிய அலுவலர்களுக்கு எல்லாம்கூட நீங்கள் பென்ஷன் திட்டத்தைப் புகுத்தி அவர்களுக்குப் பென்ஷன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்றப் பேரவையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பணியாளர்களுக்கு, அதைப்போல அலுவலர்களுக்கு எல்லாம்— பாராளுமன்றத்தில் ஏற்கெனவே அவர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்கிறபோதே, இரண்டு இன்கிரிமெண்ட் வைத்து, அதற்கு மேலேதான் ஊதிய நிர்ணயம் செய்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய லோக்சபா ஸ்பீக்கர் தலைமையிலே ஒரு கமிட்டியைப் போட்டு, இரண்டு இன்கிரிமெண்டைக் கொடுத்துவிட்டுத்தான், அவர்களுடைய 'சம்பள விகிதத்தை' ஆரம்பிக்கிறார்கள். அதேபோல நம்முடைய சட்டமன்றப் பேரவையில் பணியாற்றும் பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பல்வகை மானியங்கள் வந்திருந்தாலும் போன ஆண்டு அவைக் குழுவினுடைய தலைவராக இருந்தபடியால், சட்டமன்ற நிகழ்ச்சிகளில் அந்த மானியத்தில் மட்டும் பேசுவதற்கு அனுமதியைக் கோருகின்றேன். இந்த மாமன்றம் எத்தனையோ பேர்களை, எத்தனையோ பெரிய அறிஞர்களைக் கொண்ட மாமன்றம். இன்றைக்கு இந்த அவையிலே இருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள், உடல் நலக் குறைவு ஏற்பட்டபோதிலும், இந்த மாமன்றத்திலே கலந்துகொள்ள வேண்டுமென்ற அவாவின் காரணமாக இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்கிற ஒரு சிறந்த முதலமைச்சரை இந்த நாடு பெற்றிருக்கிறது.

முற்பகல் 11-30

அவர் இந்த மக்களுக்காக உழைத்த ஆண்டுகள் 60 ஆண்டுகளுக்கு மேல். ஆனால், அவருக்குக் கிடைத்திருக்கிற பதவி, முதலமைச்சர் பதவி என்றாலும் கூட, அவருக்குக் கிடைத்திருக்கிற பதவி குறைவுதான் என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட ஓர் ஒப்பற்ற தலைவர், பவள விழா காணுகிற இந்தப் பெருமகனார் இருக்கும் இந்த அவையில் நாங்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருக்கிறோமே



என்கிற பெருமை எங்களுக்கு எல்லாம் உண்டு. அப்படிப்பட்ட சட்டமன்றத்திலே இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறபோது, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், எங்களுக்குச் சம்பளமே வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால், அப்படி எல்லாம் சொல்லி, நம்முடைய அவை முன்னவர் அவர்களை நாங்கள் ஏமாற்றத் தயாராக இல்லை. எங்களுக்குச் சம்பளம் வேண்டும். காரணம், நியாயமாக உழைக்கிற ஒரு முறையை நாட்டு மக்கள் இன்றைக்குப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றத்திலே ஒரு ரூபாய் சம்பளம் வாங்கியவர்கள் எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களுக்கு அதிபதிகளாக இருக்கிறார்கள் என்பதை இந்த நாடு அறியும். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கிற சம்பளம் போதுமானதாக இல்லை. எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தால், 8 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறீர்கள். ஆனால் அத்தனை ரூபாயும், ஒரு நாளைக்கு ஒரு பகுதி என்று, பெரிய அளவிலே இருக்கும் எங்கள் தொகுதியிலே நாங்கள் சுற்றி வருவதற்கே அது போதுமானதாக இல்லை. மேலும் அவை நடக்கிறபோது, சம்பளப்படியாக நாங்கள் எல்லாம் 150 ரூபாயைப் பெறுகிறோம். ஆனால் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலைகளிலே இந்த 150 ரூபாய் என்பது போதுமானதாக இல்லை. அதனையும் அதிகரித்துக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

அதுமட்டுமல்ல, இரயில் பயணத்திற்காக 10 ஆயிரம் ரூபாய் தருகிறீர்கள். இன்றைக்கு இரயில்களில் அதிகமாகப் பயணம் செய்கிற சட்டமன்ற உறுப்பினர்களை நாம் பெற்றிருக்கிறோம். ஓர் ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் என்பது எந்தவகையிலும் போதுமானதாக இல்லை. எனவே, எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும், இதை அதிகப்படுத்தவேண்டும் என்று விரும்புகிறார்கள். எனவே, இதனையும் உயர்த்தித் தரவேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, போன ஆண்டு இருந்த அவைக்குழுவிலே ஒரு தீர்மானத்தைப் போட்டார்கள். அதற்கு முன்பு, நான் தலைவராக இருந்தபோது ஒரு தீர்மானத்தைப் போட்டோம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் வட்டியில்லாமல் கார் வாங்குவதற்குக் கடன் தர வேண்டுமென்று கேட்டோம். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆனால், அந்தப் பரிந்துரையைச் செய்த பின்னாலே, சட்டமன்றத்தினுடைய செயலகம்

அதை ஏனோ தேக்கத்திலே வைத்திருக்கிறது. காரணம் இந்தச் சம்பளவிகிதச் சட்டத்தை மாறுதல் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் அரியானாவிலே அந்த மாமன்றத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் கடன்களைத் தருகிறார்கள், கார் வாங்குவதற்கு. அது மட்டும் இல்லாமல் வீடு கட்டுவதற்குக்கூடத் தருகிறார்கள். வட்டியில்லாத கடன்களைக் கொடுத்து, கார்களை வாங்கிய பிறகு, கடனை எப்படி வசூலிப்பது என்று நடைமுறையிலே ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். ஆனால், hypothecation என்று சொல்கிறபோது ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், காரைக் கொடுத்து, அதை hypothecation-னிலே அடமானம் வைத்துவிட்டுதான் நாங்கள் கார்களை வாங்குவோம். அதைக் கட்ட முடியாத நிலை சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற ஒருவருக்கு வருகிறது என்று சொன்னால், அந்தக் காரைத் திருப்பி எடுத்துக்கொள்கிற சூழ்நிலை இவர்களுக்கு இருக்கிறது. அதனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கார் அவசியம் வழங்க வேண்டும் என்பதிலே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். எனவே, இதைப்பற்றி, நம்முடைய அவை முன்னவர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று நாங்கள் மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். காரணம் இது மிக முக்கியமானது.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. மனோகரன் தலைமை)**

அதுமட்டுமல்ல, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு உதவியாளரைக் கொடுக்க வேண்டும். உதவியாளர்களைக்கூட நாங்களாகப் போட்டுக் கொள்வதை விடுத்து, நம்முடைய உள்ளாட்சித் துறையிலே வேலை செய்கிறவர்களில் யாரையாவது பார்த்துக்கூட எங்களுக்கு உதவியாளராகப் பணிபுரிகிற ஒரு நிலையை உருவாக்கித் தந்தால் நாங்கள் அவர்களை வைத்து, வேலைகளைச் செய்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். ஏன் என்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்கள், சமயங்களில் வெளி விவகாரங்களுக்குச் செல்கிறபோது, வீட்டிலேயிருந்து அலுவலகத்தைப் பார்த்துக்கொள்வதற்கு ஒரு ஆள் தேவை; மனுக்கள் கொடுப்பதை வாங்கி வைக்க, அவர்களுக்குக் காரியங்கள் செய்து கொடுப்பதற்கு ஒரு ஆள் தேவை. ஆகையினாலே, ஒரு உதவியாளரை வைத்துக் கொள்வதற்கான அனுமதியை நம்முடைய அவை முன்னவர் அவர்கள் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



முற்பகல் 11-35

அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்னென்ன வேலை செய்கிறார்; என்னென்ன பணிகள் அவரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது; யார், யார், என்னென்ன மனுக்களைத் தருகிறார்கள் என்று இவைகளை எல்லாம் பரிசீலித்து, ஒரு Entry போட்டு வைப்பதற்கு, புத்தகங்களை வாங்கி வைத்துக்கொள்வதற்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. நானே போன ஆண்டு 10, 12 ஆயிரத்திற்கு மேல் மனுக்களை நம்முடைய முதலமைச்சர் செல்லிலே கொடுத்திருக்கிறேன். அவ்வளவையும் எழுதவேண்டுமென்று சொன்னால், மிகவும் சிரமமாக இருக்கிறது. அதற்காகச் சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு கம்ப்யூட்டரை ஏற்பாடு செய்து கொள்ளச்சொல்லி நம்முடைய அரசு அனுமதிப்பது நல்லது. இவைகளெல்லாம் தேவை என்று சொல்லி ஒரு கம்ப்யூட்டர் நமக்கு அமைத்துத் தருவதற்குப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில், மகாராஷ்டிராவிலே பார்த்தால் அவைக் குழுவின் தலைவர் யார் என்று சொன்னால் பொதுப் பணித் துறையினுடைய அமைச்சர்தான். அதற்குக் காரணம சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற விடுதிக் கட்டடம் பொதுப்பணித் துறையில் இருக்கிற காரணத்தால் பொதுப் பணித் துறை அமைச்சரையே அதற்குத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அத்தனை குறைபாடுகளையும் நீக்குவதற்கு— ஒரு காரியத்தைச் சட்டமன்ற உறுப்பினர் சொல்கிறார் என்று சொன்னால், அதற்கு ஒரு டெண்டர் வைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். டெண்டர் வைத்துவிட்டு அதற்கு நாட்கள் கடத்தப்படுகின்றன. ஆகையினால் நாமினேஷன் முறையில் அவைகளை உடனே செய்வதற்கு, இத்தனை ரூபாய்க்குள் செய்து கொள்ளலாம் என்ற நடைமுறையைப் பின்பற்றினால் நன்றாக இருக்கும். அதே நடைமுறை இந்த அசெம்பிளியிலே இருக்கிறபோது தலைமைச் செயலகத்தில் அந்த நடைமுறையைப் பின்பற்றுவது இல்லை. ஆனால் சட்டமன்ற விடுதியில் மட்டும் அந்த டெண்டர் சிஸ்டம் பின்பற்றப்படுகிறது. பேரவைத் தலைவர் தலைமையில்தான் இந்த இரண்டுமே இயங்குகின்றன. ஆகையினாலே இங்கே என்ன நடைமுறையோ அதையே

சட்டமன்றத்தினுடைய விடுதிகளுக்கும் பின்பற்றவேண்டும். அந்தப் பணிகளை மேற்கொள்கிறபோது இதே நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

நம்முடைய 'கவர்ன்மெண்ட் எஸ்டேட்' இருக்கின்ற இடத்தைச் சுற்றியிருக்கிற சூழ்நிலைகள் அவ்வளவு நன்றாக இல்லை. அதைச் செப்பனிட்டுத் தர வேண்டுமென பொதுப் பணித் துறையை நாம் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். மேடு பள்ளங்களும், பெரிய படுகுழிகளும் இருக்கிற பகுதியாக அது இருக்கின்றது. நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் அங்கே சுற்றியிருக்கிற பகுதிகளைச் சீரமைத்து சுத்தமாக இருக்கிற நிலைமையை உருவாக்கித் தரவேண்டும்.

இன்றைக்கு 240 வீடுகளைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்காகக் கட்டிக் கொண்டிருக்கிறோம். அந்த வீட்டு வசதி வாரியக் கட்டடத்தை மத்திய அரசினுடைய ஒரு கான்டிராக்ட் நிறுவனம் இன்றைக்கு கட்டிக் கொண்டிருக்கிறது. 240 வீடுகள், ரூ.40 கோடிக்குமேல் நம்முடைய அரசாங்கம் தந்து 240 வீடுகளை ஒவ்வொரு பகுதியும் 11 அடுக்கு மாடிகளைக் கொண்டதாக, ஒவ்வொன்றிலும் 60, 60 வீடுகள் என்கின்ற வகையில் நான்கு 11 அடுக்கு மாடிகளைக் கட்டி, வருகின்ற 1999 நவம்பருக்குள் கொடுத்து விடுகின்றோம் என்ற உறுதிப்பாட்டின் பேரில் இன்றைக்கு வேகமாக அந்தக் கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதை மிக வேகமாக முடித்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த வீடுகளைத் தந்துவிட வேண்டுமென்றும், அதைச் சிறப்பாகச் செயல்படுத்திட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம்.

அதேசமயத்திலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இந்த இரயில்வே பயணப்படியைக் கூட்டி, சேர்த்துத் தரவேண்டும். சட்டமன்றத்திற்கு வருகின்றபோது அந்தத் தினப்படியை, அதையும் கூட்டித் தரவேண்டும், கூடுதலாக சேர்த்துத் தரவேண்டும்.

அதுமட்டுமல்ல, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு உதவியாளர் இருக்க வேண்டும்.



அடுத்து தொலைபேசி, திரு. ஞானசேகரன் சொன்னதுபோல தொலைபேசிக் கட்டணத்திற்கு அதிகமாகச் செலவாகிறது. பலவிதமான நேர்வுகளில் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறபோது எங்களுக்கு செலவுகள் கூடிவிடுகின்றன. அந்தத் தொலைபேசிக் கட்டணத்தை உயர்த்தித் தரவேண்டும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மகாராஷ்டிராவில் கிட்டத்தட்ட ரூ.50,000 சம்பளமாக வாங்குகிறார்கள் அதையெல்லாம் நாங்கள் கேட்கவில்லை. (மணியடிக்கப்பெற்றது) ஆனால் கார் வாங்க வேண்டுமென்பது சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெரிய ஆசை. காருக்கு வட்டியில்லாத கடனை அளிக்க முதலமைச்சரே அனுமதி அளித்திருக்கிறார்கள். அது ஏன் நிலுவையில் இருக்கிறது என்று தெரியவில்லை. இங்கே இருக்கின்ற அதிகாரிகளே, அதைப்போட்டு என்னமோ செய்து விட்டார்கள். மற்ற மாநிலங்களிலே எல்லாம் கொடுக்கிறார்கள். எப்படிக் கொடுக்கிறார்கள்? ஹிமாசலப் பிரதேசத்தில் கொடுக்கிறார்கள். ஹரியானாவில் கொடுக்கிறார்கள். ஏன், எப்படிக் கொடுக்கிறார்கள்? அவர்களுக்கு ஒரு சட்டமா? ஏன் நாமும் ஒரு முன்மாதிரியாக இருக்கக் கூடாதா? அந்த மாநிலத்தைப் பார், அதைப்பார் என்று பேச வேண்டிய அவசியம் இல்லை. நாமே நம்பர் கொடுக்கலாம். (குறுக்கீடு) சட்டமன்ற உறுப்பினர் நம்பர் தருகிறேன் என்கிறார். எதை வைத்துக் கொடுப்பது? சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கார் இல்லாமல் நம்பரை எங்கே வைப்பது? இன்றைக்கு வாகனங்கள் மிகவும் அவசியமானது. ஆகையினால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வட்டி இல்லாத கடனிலே கார் வாங்கிக் கொடுப்பதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் சேர்ந்து முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு விஷயம் சொல்கிறேன். என்னுடைய தொகுதியிலே ஆயிரம் ஏக்கர் இருக்கிறது. நடுவூர் கிராமத்திலே ஓரத்தநாட்டிலே இருக்கிறது. அந்த ஆயிரம் ஏக்கர் நிலத்திலே ஏதாவது ஒரு தொழிற்சாலையை அமைத்து — என்னுடைய பகுதியான தஞ்சை மாவட்டமானது விவசாயத்திலே இருக்கிற பகுதி, தொழிற்சாலையே கிடையாது. ஆகவே, ஒரு தொழிற்சாலையை அங்கு உருவாக்கித் தந்து என்னுடைய தொகுதி உள்ள தஞ்சை மாவட்டத்தை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகின்றேன், வணக்கம்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

* **திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வகை மூலதனச் செலவுகள், ஓய்வூதியங்கள், மாநில அரசு வழங்கும் கடன்கள், மாநில சட்டமன்றங்கள், தேர்தல்கள் குறித்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். தமிழக அரசானது இலங்கைத் தமிழ் அகதிகளுக்காகப் பல நன்மைகளைச் செய்திருக்கிற அரசாக இருந்து கொண்டிருப்பதை உலகத்திலுள்ள தமிழர்கள் எல்லாம் இன்றைக்கு மிகவும் பாராட்டி வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள். 1996-லே முதலாவதாக நாங்கள் சட்டமன்றத்திலே வந்தபோது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்வைத்த கோரிக்கையை ஏற்று கடந்த ஆட்சிக்காலத்திலே பறிக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழர்களுக்கான அந்தக் கல்வி வாய்ப்பைத் தாய் உள்ளத்தோடு பரிசிலித்து தமிழக முதல்வர் அவர்கள், பள்ளி, மேல்நிலைப் பள்ளிகள் மட்டும் அல்லாமல் உயர் கல்விகளில் எல்லாம் குறிப்பாக தொழில்சார் கல்வியில் அந்தப் பரிசிலிக்கப்பட்டிருகின்ற தமிழ் அகதிகளுக்கு உரிய இட ஒதுக்கீட்டினை வழங்கியமைக்காக உலகத்திலுள்ள தமிழர்கள் எல்லாம், இன்றைக்குத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை, உலகத் தமிழர்களில் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்று மனதாரப் பாராட்டி வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே இன்றைக்கு 133 அகதி முகாம்களிலே ஏறத்தாழ 63 ஆயிரத்து 559 பேர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும்கூட, மின்சாரம், சுகாதாரம் போன்றவைகள் எல்லாம் இலவசமாக வழங்கப்பட்டும் கூட அரிசி போன்றவைகள் எல்லாம் மானிய விலையிலே வழங்கப்பட்டும்கூட, சலுகை விலையிலே வழங்கப்பட்டும்கூட, அவர்களுடைய வாழ்நாளைக் கழிப்பது என்பது இன்றைக்கு மிக மிகக் கடினமாக, கொடுமையாக இருந்துகொண்டு வருகிறது. அவர்களுக்குத் தமிழக முதல்வர் அவர்கள் 150 ரூபாயாக இருந்த பணக் கொடையை 200 ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதைத் தயவுசெய்து இந்திய



அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, ஐ.நா.வில் அகதிகள் ஆணையம் என்ற ஒன்று இருக்கிறது, ஒருசில நேரங்களிலே, நிதி நெருக்கடியினாலே நம்மாலே கவனிக்க முடியவில்லை என்று சொன்னால், அவர்களிடம் தெரிவித்தால் அவர்கள்கூட நிதி உதவி வழங்குவதற்குத் தயாராக முன்வருவார்கள். இதிலே இந்திய அரசாங்கம்கூட ஏன் ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்கிறது? ஆப்கான் அகதிகளுக்கு இதைவிட அதிகமாக நிதியுதவி வழங்கப்படுகிறது. அதைப்போலவே, நேபாளத்திலிருந்து வரக்கூடியவர்களுக்கு இந்தியாவிலே 90-க்கும் மேற்பட்ட கல்வி நிலையங்களை நடத்துவதற்கு அனுமதிக்கிறார்கள். ஆனால், தமிழ் அகதிகளுக்கு மட்டும் நாம் கேட்டிருந்த 150 ரூபாயை 180 ரூபாயாகக் கொடுத்தார்களே தவிர, தமிழக அரசு வழங்கக்கூடிய இன்னும் 20 ரூபாயைக் குறைவாக அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தக் குறைபாடுகளை எல்லாம் சுட்டிக்காட்டி, மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்தியாவில் இருக்கக்கூடிய ஏனைய வெளிநாட்டு அகதிகளுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் அத்தனையும் இந்த ஈழத் தமிழ் அகதிகளுக்கும் வழங்க வேண்டுமென்று நம்முடைய மாநில அரசு வலியுறுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அவர்களுக்கு வழங்குகிற அந்தப் பணக் கொடையை ரூபாய் 200-லிருந்து ரூபாய் 500-ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். சுமார் 3,000 புதிய குடிசைகள் அவர்களுக்காகக் கட்டித்தரப்பட மத்திய அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருக்கிறீர்கள். ஒரு குடிசைக்குச் சராசரியாகக் கணக்கிட்டுப் பார்த்தால், 1 கோடியே 80 இலட்சத்திலே, ஒரு குடிசைக்கு என்று பார்க்கிறபோது சுமார் 6,000 ரூபாய்தான் வருகிறது. ஆக இது போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால் குறைந்த அளவு 10 ஆயிரம் ரூபாய்க்காவது அவர்களுக்கான வீடுகளைக் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அதேபோல் தாயகம் திரும்பியவர்கள், பர்மாவிலிருந்து, இலங்கையிலிருந்து, வியட்நாமிலிருந்து எல்லாம் தாயகம் திரும்பியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினை என்று வருகிறபோது, ஏதோ, அவர்கள் வெளி நாட்டைச் சேர்ந்தவர்கள்

போல் கருதிக் கொண்டு பல இடங்களில் அரசாங்கமும், காவல் துறையும் அணுகுகிறார்கள் என்று சொல்கிற குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியிலே தாயகம் திரும்பியவர்களுடைய பிரச்சினைகளிலே அங்கே இருக்கின்றவர்கள் ஒரு மாற்று நிலையோடு அவர்களை வெளிநாட்டுக்காரர்கள் போலவே கருதிப் பார்க்கிற, ஒரு சூழ்நிலை எல்லாம் இருந்து கொண்டிருப்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே, அவர்களும் இந்த மண்ணின் மைந்தர்கள், பிழைப்புக்காக வெளிநாட்டுக்குச் சென்று விட்டுத் திரும்பி வந்தவர்கள் என்பதை மனதில் கொண்டு அவர்களுடைய பிரச்சினைகளை ஆய்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக்கூட பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. மத்திய அரசாங்கமானது ஒற்றை எண் பரிசுச் சீட்டுகளை எல்லாம் தடை செய்து ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனாலும்கூட தமிழகத்திலே பல்வேறு பகுதிகளிலே இந்தச் சின்னஞ் சிறுவர்கள் வைத்திருக்கின்ற அந்தத் தொகைகளைச் சுரண்டக்கூடிய வகையில் திரைப்பட நடிகர்கள், நடிகைகளுடைய படங்களை வைத்து ஒரு சுரண்டல் லாட்டரியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதிலே பலபேர் இன்றைக்குக் கொழுத்துத் திரிந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு நாளேடுகூட இதனுடைய கொடுமையை விவரித்து இன்றைக்கு செய்தி வெளியிட்டு இருக்கிறது. சிறுவர்களை இந்த அளவுக்கு நாம் பழக்கினால், எதிர்காலத்தில் அவர்கள் உழைப்பின்மீது நம்பிக்கையற்று, கடைசியில் அவர்கள் இதுமாதிரியான குறுகிய வழியில் முன்னுக்கு வரவேண்டும் என்ற நோக்கில் அவர்கள் சென்றுவிட வேண்டிய ஆபத்தான சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இந்தச் சிறுவர்களைச் சுரண்டிக் கெடுக்கின்ற அத்தகைய லாட்டரிகளை உடனடியாக அரசு கண்காணித்து ஒழித்திட ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். லாட்டரியே ஒரு சுரண்டல்தான். இருந்தாலும், அந்தச் சுரண்டலுக்கு மேல் இன்றைக்கு பல்வேறுவிதமான போலி லாட்டரிகள் விற்பனையாகி மக்களை அழித்துக் கொண்டிருக்கிறது. எனவே, சுரண்டலுக்கு மேல் நடைபெறுகின்ற அந்தச் சுரண்டலை எல்லாம் அரசாங்கம் கண்காணித்துத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எல்லையை மீட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இந்தச் சுதந்திரதினப் பொன் விழா





கொண்டாடுகின்ற நேரத்தில் அந்த எல்லையை மீட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிட அரசு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஓய்வூதியம் பெறுகிறவர்கள் இறந்தால், அவர்களுடைய குடும்பத்தில் இருப்பவர்கள், அவர்களுடைய வாரிசுதாரர்கள், ஓய்வு ஊதியம் பெறுகிறபோது அவர்கள் இறந்தால் அவர்களுடைய மனைவியோ அல்லது யாரோ இருந்தால் அவர்களுக்கும் அத்தகைய இரண்டாயிரம் ரூபாயை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் இறந்தால் கருணை அடிப்படையில் வழங்கப்படுகின்ற பணி வாய்ப்புகள் பல்வேறு துறைகளில் இன்றைக்குக் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன. நிறைய பேர்கள் காத்திருப்போர் பட்டியலில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, புதிய புதிய வேலைவாய்ப்புகள் தொடங்கப்படுகின்றபோது கருணை அடிப்படையில் வழங்குகின்ற அந்த வேலைவாய்ப்புகளுக்கு முன்னுரிமை தந்து அவர்களைத் தேர்வு செய்திட வேண்டும் என்று நான் அரசாங்கத்தை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு இளைஞர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்ற பல்வேறு சூழ்நிலைகள் இருந்து கொண்டிருக்கின்றன. என்னுடைய ஆண்டிமடம் தொகுதியில் இன்றைக்குத் தீவிரவாதம் மிக அதிகமாகத் தலையெடுத்து இருப்பதற்குக் காரணமே படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இருக்கின்ற காரணத்தால்தான். அவர்கள் வங்கிகளுக்குச் சென்று கடன் உதவி கேட்டால் அவர்கள் வைக்கின்ற அந்த விதிமுறைகளைப் பார்க்கின்றபோது கனவில்கூட கடன் வாங்க நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குக் கெடுபிடிகள் ஏராளமாக இருந்து கொண்டிருக்கின்றன. இதிலே பிற்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் என்று சொல்லி நாம் பல்வேறு நல உதவித் திட்டங்களைச் செய்கிறோம்; கடன் உதவித் திட்டங்கள் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம், என்றாலும்கூட வங்கிகள் அவைகளுக்கு ஒரு தடைக் கல்லாக இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, அந்த விதிமுறைகளை எல்லாம் தளர்த்தி, படித்த இளைஞர்களுக்காவது அவர்களுடைய படிப்புச் சான்றிதழை ஒரு மூலதனமாக வைத்துகூட அவர்கள் தகுதியானவர்களாக,

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1998 மே 26

உண்மையிலேயே அவர்கள் தொழில் செய்பவர்களாக இருந்தால் அவர்களுக்கு எல்லாவகைகளிலும் உதவி செய்திட அரசு முன்வரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு அது உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் போவதற்கு வாய்ப்பு இல்லை. அவர்கள் அங்கே சென்று தொகுதிப் பணிகளைக் கவனிப்பதற்குச் சரியான முறையில் இட வசதி இல்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இட வசதியும், அவர்களுக்கு வட்டியில்லாக் கடனில் கார் வாங்கி வழங்கவும் அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே, உறுப்பினர்களைப் பார்க்க வருகின்ற பொதுமக்களுக்கு கழிப்பிட வசதியை நிறைவேற்றக்கூட வாய்ப்பு வசதிகள் இல்லாமல் இருக்கிறது. எனவே, ஒரு பொதுக் கழிப்பிடத்தைக் கட்டி உதவினால் பல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அது உதவிகரமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

சென்னை மாநகரை ஏ1 நகரமாக மத்திய அரசு அறிவித்தது. அதிலே அந்த வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறபொழுது 30 சதவீதம் வழங்க வேண்டுமென்று சொல்லி அறிவித்திருந்தார்கள். ஆனால், இப்பொழுது நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் இரட்டிப்பாக்கி வழங்கப்பட வேண்டுமென்று சொல்லியும்கூட அதிலே 10 சதவீதத்திலிருந்து 11 சதவீதம்தான் இப்பொழுது அவர்களுக்கு வீட்டு வாடகைப்படி கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே, குறைந்தது 15 சதவீதமாவது அவர்களுக்குக் கிடைக்கிறமாதிரி வீட்டு வாடகைப் படியை உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையிலே தமிழக அரசு வழங்கிய ஊதிய உயர்வினுடைய நிலுவைத் தொகையை பி.எஃப்.-லே போடுவதற்குப் பதிலாக, ஐந்தாண்டு



1998 மே 26] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

காலம் கழித்து அவர்களுக்குத் தரப்படுவதற்குப் பதிலாக, ஓய்வு பெற்றவர்களுக்கும், இந்த ஐந்தாண்டுக் காலத்திலே ஓய்வு பெற இருப்பவர்களுக்கும் உடனடியாக வழங்குவதுதான் அவர்களுக்குக் காலத்தே செய்கின்ற ஒரு நன்மையாக இருக்கும் என்பதைக் கவனத்திலே கொண்டு அதனைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலச் சட்டப் பேரவை அலுவலர்களை, பணியாளர்களை இலண்டன் பாராளுமன்றத்திலே பயிற்சி பெறுவதற்கு அனுப்பி வைக்க வேண்டும். அதாவது பக்கத்தில் உள்ள ஆந்திர மாநிலத்திலே வழங்கப்படுவதைப்போல நம்முடைய தமிழகச் சட்டமன்றத்திலே உள்ளவர்களுக்கும் அத்தகைய வாய்ப்புக்களை வழங்கி ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

• **திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஓய்வூதியம் மற்றும் பல்வகை மூலதனச் செலவுகள் பற்றிய இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த அவையிலே பங்கு பெறுகின்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை முன்வைப்பதற்குப் பல்வேறு உறுப்பினர்கள் இருக்கின்ற காரணத்தினால், இந்த அவையிலே இடம் பெறாது, இந்த அரசினுடைய கருணையை எதிர்நோக்கி இருக்கின்ற வெளியிலே இருக்கின்றவர்களுடைய ஓய்வூதியங்களைப் பற்றி நான் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலாவதாக, கடந்த கால ஆட்சியிலே கிராமங்களிலே பணியாற்றுகின்ற கிராம அதிகாரிகள் ஒரு நேரத்திலே ஒட்டுமொத்தமாக நீக்கப்பட்டு அவர்கள் வேலையிழந்த நிலையிலே அவர்களுடைய வேலைகளுக்கெல்லாம் புதிதாக ஆட்களைத் தேர்ந்தெடுத்து அந்த வேலையிழந்த கிராம அதிகாரிகள் நீண்ட நாட்களாகத் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி, தங்களுக்கு அரசு உரிய சலுகைகளை, உதவிகளைத் தர வேண்டுமென்று சொல்லி வழக்காடு மன்றத்திலெல்லாம் வாதாடி, வழக்காடு மன்றங்கள்கூட அவர்களுக்குச் சாதகமான தீர்ப்பளித்திருந்த நிலையிலே கடந்த கால அரசு அவர்களுக்குக் கருணை காட்டாது மேல் முறையீடு செய்கின்ற நிலை

இருந்த நிலையில், நமது அரசு பொறுப்பேற்ற பின்பு அவர்களுடைய கோரிக்கையையெல்லாம் கருணையோடு பரிசீலித்து அந்த முன்னாள் கிராம அதிகாரிகளிலே தகுதி உள்ளவர்களுக்குச் சிலபேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

அதுபோல அவர்களுக்கு ஓய்வூதியங்களும் இந்த அரசு அறிவித்து வழங்கி வந்த நிலையிலே கடந்த 1-1-1996-லிருந்து ஓய்வூதிய விகிதத்தை ரூ.375 ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கு ரூ.1,275-ஆக உயர்த்திக் கொடுத்த இந்த அரசு, அந்த வேலையிழந்த முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு மட்டும் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஓய்வூதியம் ''சிறப்பு ஓய்வூதியம்'' என்கின்ற நிலையிலே, ''ஸ்பெஷல் பென்ஷன்'' என்று குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தினாலே, அவர்கள் 370 ரூபாய் ஓய்வூதியம் பெறுகின்ற நிலை இருந்தாலும்கூட அவர்களுக்கு அதிகபட்சமான ஓய்வூதியம் ரூ.1,275 கிடைக்கப் பெறவில்லை என்கின்ற நிலையை அவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். அந்த ஓய்வூதியம் பெறுகின்றவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளவர்கள்தான் இன்றைக்கு இருக்கிறார்கள். எத்தனையோ பேர் இன்றைக்கு இல்லை; அவர்கள் இறந்து விட்டார்கள் என்கின்ற நிலையிலே மிகக் குறைந்த எண்ணிக்கையிலேதான் அந்தக் கிராம அதிகாரிகள் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் தயவுசெய்து அந்த ''ஸ்பெஷல் பென்ஷன்'' - சிறப்பு ஓய்வூதியம் என்கின்ற நிலையை மாற்றி, அவர்களுக்கும் இந்த அதிகபட்ச ஓய்வூதியமாக 1,275 ரூபாயை நமது அரசு வழங்குவதற்கு முன் வர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அதுபோல தியாகிகளுக்கு, இந்த நாட்டிற்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் மாநில அரசின் சார்பில் வழங்கப்பட்டிருந்தாலும்கூட, மத்திய அரசு ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கு மத்திய அரசு 3 ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும், நமது மாநில அரசினுடைய பங்காக 500 ரூபாய் வழங்குகிறார்கள். ஆனால், மற்ற மாநிலங்களில் எல்லாம் மத்திய அரசு ஓய்வூதியத்தோடு அவர்களுடைய மாநில அரசு வழங்குகின்ற ஓய்வூதியத்தையும் முழுமையாக 1,500 ரூபாய் வழங்குகின்ற நிலையிருக்கிறது. இந்தத் தியாகிகள் பட்டியலிலே பெரும்பாலும் எங்களது தலைவர் நேதாஜி



சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் ஆரம்பித்த ஐ.என்.ஏ. படை வீரர்கள் தமிழகத்திலே மிக அதிகமாக இருக்கிறார்கள். இந்தியாவிலே ஒட்டுமொத்தமாகக் கணக்கெடுத்துக்கொண்டாலும்கூட, ஐ.என்.ஏ. வீரர்கள் தமிழகத்தில்தான் மிக அதிக அளவிலே இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் மத்திய அரசு ஓய்வூதியமாக 3 ஆயிரத்தைப் பெற்றாலும்கூட, மாநில அரசு ஓய்வூதியம் 500 ரூபாய் என்பது மிகக் குறைவாக இருக்கிறது. ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களிலேயெல்லாம் சற்று அதிகமாகத் தருகிறார்கள் என்கிற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். எனவே, இந்த மாநில அரசு வழங்குகின்ற அந்த ஓய்வூதியத்தை 500 ரூபாய் என்பதை ஆயிரமாக அவர்களுக்குத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, நமது சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் பணிபுரிகின்றவர்களுக்கு, மற்ற அரசுத் துறைகளிலே பணிபுரிகின்றவர்களுக்கு எல்லாம் இந்த அரசு கருணை உள்ளத்தோடு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளத்தை வழங்கியிருக்கிறது, ஆனால் இங்கு சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலே அலுவலர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கும், பணியாளர்களுக்கும், நாடாளுமன்றத்திலே பணியாற்றுகின்றவர்களுக்கு ஒத்த விகிதாச்சாரமான சம்பளம் வழங்கப்படவில்லையென்றும், எங்களையும் இந்த அரசு மனதிலே கொண்டு எங்களுக்கு நாடாளுமன்றத்திலே வழங்கப்படுகின்ற அளவிற்கு எங்களுடைய சம்பளத்தை சற்று கூட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக் கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) அதையும் அரசு பரிசீலிக்க வேண்டும்.

அதோடு இந்தச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைப் பொறுத்தளவிலே அவர்களுடைய தேவைகளைப் பல்வேறு உறுப்பினர்கள் இங்கே வலியுறுத்தியிருக்கிறார்கள். உறுப்பினர் திரு. ஞானசேகரன் பேசும்போது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு ஓட்டுநர்களுக்கு என்று தனிப் படி கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், காரே இல்லாத சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் இங்கே எத்தனையோ பேர் இருக்கிறார்கள். திருமணமே ஆகவில்லையென்கிற நிலையிலே எத்தனைக் குழந்தைகள் என்று கேட்டால் எப்படியிருக்குமோ அதுபோலத்தான் இருக்கிறது,

இன்றைக்குக் காரே இல்லாதவர்களுக்கு ஓட்டுநர் படி வேண்டுமென்று கேட்பது. எனவே, அப்படிப்பட்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்குத் தயவுசெய்து, இந்த அரசு வட்டியில்லாத கடன் வழங்க வேண்டும். பல்வேறு மாநிலங்களிலே நாங்கள் சென்று பார்க்கின்றபோது, வட்டியில்லாத கடன்களை அந்த அரசுகள் வழங்கி, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு வாகன வசதி செய்து கொடுத்திருக்கிறது. இன்றைக்கு அது மிக அத்தியாவசியத் தேவையாக இருக்கிறது.

இன்றைக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு என்று தனியாக நிதி ஒதுக்கி அதன்மூலம் வளர்ச்சிப் பணிகளையெல்லாம் செய்கின்ற திட்டம் இருக்கின்ற காரணத்தினால் (மணியடிக்கப்பெற்றது) நமது உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டாரே, அதுபோல, ஒன்றியத்திலேகூட உட்காருகின்ற நிலை இன்றைக்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு இல்லை. முன்பு எல்லாம் ஒன்றியத்திலே அவர்களுக்கு என்று தனி அறைகளை ஒதுக்கி அங்கு சென்று மக்களுடைய குறைகளைக் கேட்கின்ற நிலையிருந்தது. அது இன்றைக்கு இல்லையென்கிற நிலையிலே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் தனியாக அலுவலகங்களை வைத்துக்கொண்டு, செய்கின்ற வேலைகளையெல்லாம் சென்று பார்க்கின்ற நிலை இருக்கிற காரணத்தினால் மக்களோடு தொடர்பு கொள்ள வேண்டும், மக்கள் எந்தக் குறையாக இருந்தாலும் அங்கேயிருக்கின்ற ஊராட்சி மன்றத் தலைவர், ஒன்றியத் தலைவர்களைக் காட்டிலும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களிடத்திலேதான் அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்துகொள்ள முடியும் என்ற மனப் பக்குவம் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அவற்றையெல்லாம் சென்று பார்ப்பதற்கு, கிராமப்புற மக்களோடு தொடர்பு கொள்வதற்கு வாகன வசதி என்பது மிக அவசியம் என்கிற காரணத்தினால் அதை வட்டியில்லாக் கடனாக அளித்தாவது எங்களுக்கு வாகனத்தைப்பெற்றுத் தருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர் சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான பல்வகை, பல்வகை மூலதனச் செலவு, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும், மாநில



அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும், மாநிலச் சட்டமன்றம், தேர்தல்கள் தொடர்பான மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசு பரிசுச் சீட்டு நடத்தி அதிலே கிடைக்கும் ஆதாயத்தை, ஆதிதிராவிடர் வீட்டுமனைகளுக்கும், கிராமப்புறங்களிலே குடிநீர் வசதி, சுகாதார வசதி போன்ற பல்வேறு வசதிகளுக்கும் செலவிட்டு வருகிறது. ஆனால், வெளி மாநில அரசுகள் அவர்களுடைய கவர்ச்சிகரமான விளம்பரங்களினால் இங்கே சுரண்டல் லாட்டரி, உடனடி லாட்டரி, ஒரு நம்பர் லாட்டரி என்று பல்வேறு விதமான லாட்டரிச் சீட்டுகளை நடத்தி ஏழை எளிய மக்களைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். மாநில அரசு இதற்குத் தடை விதித்தும்கூட, அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று அதற்குத் தடையாணை பெற்று, தொடர்ந்து அந்தத் தொழிலை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதனாலே எத்தனை ஏழைக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது கணக்கில் அடங்காது. சேலம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் பல்வேறு தொழிலாளர்கள் தங்களது மனைவி மக்களை விட்டுவிட்டு, இந்தக் கடன் தொல்லைக்குப் பயந்து தற்கொலை செய்து கொள்ள வேண்டிய ஓர் அபாயகரமான சூழ்நிலை கடந்த காலங்களிலே இருந்து வந்தது. ஆகவே, அரசு அதில் முனைப்போடு கவனம் செலுத்தி, அந்தத் தடையாணையை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம், 'தினமலர்' பத்திரிகையிலேகூட சிறுவர்களைக் கெடுக்கும்விதமாக, சுரண்டல் என்ற பெயரிலே சிறுவர்களையும் அந்த லாட்டரி மோகத்திற்கு அடிமையாக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துவருகிறது என்று செய்தி வந்தது. வளரும் குழந்தைகள் சிறுவயதிலேயே தீய பழக்கங்களுக்கு ஆளானால் இந்த நாட்டினுடைய எதிர்காலம் என்னவாகும் என்பதை நாம் எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நண்பகல் 12-00

அதைப்போலவே, நாம் இப்போது சுதந்திர தினப் பொன்விழா ஆண்டைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு, இன்னும் பலபேர் தியாகிகள் பென்ஷன் பெறாமல் போராடிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் சேலம் மாவட்டத்திலே

[திரு. ஆர். ஆர். சேகரன்] [1998 மே 26

எடுத்துக்கொண்டால்கூட, சுமார் 20 பேர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயிருந்து பரிந்துரை செயயப்பட்டும்கூட இன்னும் அந்தப் பென்ஷன் பெறுவதற்கு வழியில்லாமல் அவர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்திலே, குறிப்பாக திரு. சுப்பிரமணியம், திரு. கந்தசாமி, திரு. அருணகிரி, திரு. கருப்பசாமி, திரு. குப்புசாமி, திரு. ராமதாஸ் ஆகிய 6 பேர்கள், இவர்கள் அனைவரும் சுமார் 80 வயதிற்கு மேற்பட்டவர்கள், அவர்கள் வாழப்போவதோ இன்னும் சில ஆண்டுகள்தான், இந்த இறுதிக் காலத்திலே, அவர்கள் இந்த நாட்டினுடைய சுதந்திரத்திற்காகப் பாடுபட்டதற்காக ஏதாவது ஒரு பலனை அடையவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அது தொடர்பான மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரைக் கடிதமும், எண் 113807/96, இங்கே வந்திருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு அந்த உதவி கிடைப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இங்கே, வாக்காளர் அடையாள அட்டை கொடுக்கப்படும் என்று சென்ற ஆண்டு நாம் அறிவித்து, அதற்கான முயற்சிகளிலே எல்லாம் இறங்கினோம். அதற்குப் பிறகுகூட இரண்டு தேர்தல்கள் வந்துவிட்டன. இன்னும் நாம் வாக்காளர் அடையாள அட்டை வழங்கும் பணியை முழுமையாகப் பூர்த்தி செய்யவில்லை என்று இந்த நேரத்திலே நினைவுபடுத்தி, அந்த வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கும் பணியினை விரைவுபடுத்த வேண்டும் என்று நான் மாநில அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளினுடைய வேட்பாளரினுடைய தேர்தல் செலவை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் நான் இந்த நேரத்திலே உங்களிடத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை ரூபாய் 5,000-ஆக உயர்த்த வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்படும் மருத்துவப்படியை ரூபாய் 5,000-ஆக உயர்த்தி, நேரிடையாகவே அந்தக் காசோலையை அவர்களுக்கு அனுப்புவதற்கான வழிவகையைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



1998 மே 26] [திரு. ஆர்.ஆர். சேகரன்]

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றிய பல்வேறு கோரிக்கைகளையும் இங்கே வைத்தார்கள். தொலைபேசிப் படி, தபால் கட்டணப் படி ஆகியவற்றை உயர்த்தித் தர வேண்டும் என்றும், உதவியாளர் படியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மருத்துவப் படி என்பது, நாம் மருத்துவச் செலவைச் செய்துவிட்டு reimbursement என்ற பெயரிலே மீண்டும் திரும்பப் பெறுவதற்காகப் பல்வேறுவிதமான இன்னல்களுக்கு உறுப்பினர்கள் ஆளாகின்றார்கள். பல சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த பில்களைச் சமர்ப்பித்துவிட்டு, அந்தத் தொகைகள் கிடைக்காமல் இருக்கின்றார்கள். ஆகவே, அதை மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையாக நிர்ணயித்து அந்த மருத்துவப் படியை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே சென்ற ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது, அப்போது இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் ஒரு கணிப்பொறி-கம்ப்யூட்டர் என்று சொல்லப்படுகின்ற அந்த இயந்திரங்களைச் சலுகை விலைக்கு வழங்கினார்கள். அவர்கள் பொதுமக்களிடமிருந்து வருகின்ற மனுக்களையெல்லாம் அதிலே பதிவு செய்துகொண்டு, அவற்றினுடைய நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்க அதிகாரிகளையெல்லாம் ஒருங்கிணைப்பு செய்வதற்கு மிகவும் வசதியாக இருந்தது. அதேபோலவே, இங்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சலுகை விலையிலே கணிப்பொறி இயந்திரம் வழங்கி, அதில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்துடனும் தலைமைச் செயலகத்துடனும் தொடர்பு ஏற்படுத்தித் தருமாறு இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இங்கே, வாகன வசதிகள் வேண்டும் என்றுகூட பல்வேறு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த ஆண்டுகூட இந்த மாமன்றத்திலே பல்வேறு உறுப்பினர்கள் அந்தக் கோரிக்கையை வைத்தார்கள். ஆகவே, அவர்களுக்கு தொகுதியிலே சுற்றுப்பயணம் செய்வதற்கும், மக்கள் நலப் பணிகளைக் கவனிப்பதற்கும் அரசாங்கம் வட்டியில்லாக் கடனாக ஒரு வாகனக் கடன் வசதியை அவர்களுக்கு

ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதைப்போலவே இரயில்வே பயணப்படி ரூபாய் 10,000 என்று இருக்கிறது. பல மாவட்டங்களிலேயிருந்து வருகின்றவர்கள் எல்லாம் இரயில்வே பயண வசதியைத்தான் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். 25,000 ரூபாயாக உயர்த்தி அவர்களுக்குத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

பேரவைச் செயலகத்திலே பணிபுரியும் அலுவலர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பேரவை கூடும் நாட்களில் காலை 8.00 மணிக்கே பணிக்கு வருகிறார்கள். எனவே, அதற்குண்டான படியை வழங்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அவர்களுக்கு வீட்டுமனைகள் மற்றும் இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அந்த வசதியைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று சட்டமன்றச் செயலகத்தில் பணியாற்றும் தற்காலிக அலுவலக உதவியாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குச் சென்ற ஆண்டு, தினக்கூலியுடன் ரூ. 10 சேர்த்து வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அவர்களுக்கு அது இன்னும் கிடைக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகையை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் வாரத்தில் தொடர்ந்து ஏழு நாட்கள் கலந்துகொண்டால்தான் அவர்களுக்குப் பயணப்படி வழங்கப்படுகிறது. அதை திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரையுள்ள 5 நாட்கள் அவர்கள் சட்டமன்றத்திலே கலந்துகொண்டாலே அந்தப் பயணப்படியை அவர்கள் பெற்றுக் கொள்ளலாம் என்று ஆணையிட வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இம்மாமன்றத்தில் நான் உரையாற்ற வாய்ப்பளித்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், சென்னை மாநகர மேயர் தளபதி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையைத் துவக்குகின்றேன்.

''ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும், பல்வகை மூலதனச் செலவு, மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும், மாநிலச் சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்'' பற்றிய மானியக் கோரிக்கைகளின்மீது ஒருசில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி இன்றைக்கு நல்லமுறையில் செயல்பட்டு, ஒரு ஆட்சி எப்படி இருக்க வேண்டும், ஒரு ஆட்சி எப்படிப் பணியாற்ற வேண்டும் என்பதற்கு உதாரணமாக இன்றைக்கு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியை நடத்திச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு ஆட்சி எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு உதாரணமாக கடந்தகால ஆட்சி இருந்தது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

இன்றைக்கு பல்வகை மூலதனச் செலவு என்பது பற்றி நாமெல்லாம் விவாதித்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், அரசாங்கத்தின் மூலதனமே காலியாகின்ற அளவுக்கு ஊதாரித்தனமான ஒரு ஆட்சியை நடத்தி, அன்றைக்கு முதல்வர் எங்கெல்லாம் செல்கின்றாரோ அங்கெல்லாம் ஆயிரம் கார் பவனி, அடிக்கொரு கட்-அவுட், கட்-அவுட்டுக்கு ஒரு போலீஸ் காவல், முதல்வர் சென்னை மாநகரத்திலே பயணம் செய்கிறார் என்று சொன்னால், ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே போக்குவரத்தை நிறுத்தி, ஆங்காங்கே 'செக்-போஸ்ட்' என்ற அளவிலே ஒரு ஆட்சி இருந்துவிட்டுப் போனது. ஆனால், இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமைகளெல்லாம் மாறிவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன், உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரமே மிகவும் குறைவு. எனவே, மானியக் கோரிக்கையில் நீங்கள் பேசுங்கள்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேட்டதைச் சிறப்பாகச் செய்யக்கூடிய ஆட்சியிலேதான், நாங்கள் வைக்கின்ற கோரிக்கைகள் நிறைவேறும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல, சட்டமன்றத்தைப் பற்றி நம்முடைய துணை சபாநாயகர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தால், அதைப்பற்றி நான் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஒரு சட்டமன்றம் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு இன்றைக்கு இந்தச் சட்டமன்றம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. ஆனால் ஒரு சட்டமன்றம் எப்படி இருக்கக்கூடாது என்பதற்குக் கடந்தகாலச் சட்டமன்றம்தான் சாட்சி. இதே அவையில் அவர்கள் அமர்ந்திருக்கின்ற இருக்கையில் இந்த மன்றத்திற்குச் சம்பந்தம் இல்லாத, உறுப்பினரல்லாத உடன்பிறவா சகோதரி அந்த ஆசனத்தில் அமர்ந்து சட்டமன்றத்தைக் களங்கப்படுத்தினார்கள். இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு நாமெல்லாம் பார்க்கிறோம். பேரவைத் தலைவர் அவர்கள் வருகின்றபோது, நம்முடைய முதல்வர் அவர்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்துகிறார்கள். ஆனால் அன்றைக்கு சட்டமன்றத்திலே முதல்வர் காலிலே விழுகின்ற அவல நிலையை நாம் பார்த்தோம். ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைகள் இல்லை. ஒரு சட்டமன்ற உறுப்பினர் இன்னொரு சட்டமன்ற உறுப்பினரை தாக்கிவிட்டு, கேட்டால், 'ஓங்கித் தட்டினார்' என்று சொல்லக்கூடிய நிலை அன்றைக்கு இருந்தது. ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட நிலை இல்லை. காரணம், ஆட்சி மாறி காட்சியும் மாறியிருக்கிறது என்பதை நான் செல்லக்குமார் போன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அப்படிப்பட்ட ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றிருக்கின்ற நாமெல்லாம் கேட்கின்ற கோரிக்கைகள் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற அந்த அடிப்படையிலே ஒருசில கோரிக்கைகளை நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-10

நம்முடைய திரு. சி. ஞானசேகரன் அவர்கள் சில கோரிக்கைகளை வைத்தார்கள். சம்பளம் ஒரு பைசா கூடத் தேவையில்லை என்று சொன்னார்கள். அவர் அதைச் சொன்னபோது எனக்குப் பயமாக இருந்தது. காரணம், அன்றைக்கு முதலமைச்சராக இருந்தவர் எனக்கு



ஒரு ரூபாய் சம்பளம் போதும் என்று சொன்னார்கள். ஒரு ரூபாய் சம்பளம் என்று சொன்னவர், எப்படியெல்லாம் ஆண்டுவிட்டுப் போனார் என்பதைப் பார்த்த மக்கள், இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சம்பளம் ஒரு பைசாகூடத் தேவையில்லை என்று சொல்லி, ஒரு வேளை அன்றைக்கு நடந்த அந்த பாணியிலே இவர்களும் நடப்பார்களோ என்று சந்தேகிக்கக்கூடிய நிலை இருக்கிறது. எங்களுக்குச் சம்பளம் வேண்டும். அவர் சொன்ன அளவு சம்பளம் கொடுக்கவில்லை என்று சொன்னாலும்கூட, அவர் வைத்த பட்டியலில் பாதி அளவு இருக்கும்படியாகவாவது உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர், தட்டச்சர், ஓட்டுநர் வேண்டுமென்று ஒவ்வொரு நேரத்திலும் நாங்கள் கேட்டு வருகிறோம். இன்றைக்குப் பேரவை முன்னவர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, இந்தக் கோரிக்கையை நீங்கள் எளிதாக நிறைவேற்றலாம். நம்முடைய சட்டமன்றத்திற்கோ ஆட்சிக்கோ ஒரு பைசாகூடச் செலவில்லாமல், எங்கள் கோரிக்கையை நீங்கள் ஏற்று, இந்தப் பேரவையிலே இன்றைக்கே அறிவிக்கலாம். ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நகராட்சி அலுவலகத்தில் பணியாளர்களாகப் பணிபுரிகிற தட்டச்சர், உதவியாளர், ஓட்டுநர் ஆகியோர்களை Deputation அடிப்படையில் நீங்கள் தந்தால் எங்களுக்கு உதவியாக இருக்கும். அரசுக்கு ஒரு பைசாகூடச் செலவாகாத வகையிலே இது இருக்கும் என்ற கருத்தை முன்வைத்து அந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பலரும் குறிப்பிட்டதைப் போல சட்டமன்ற உறுப்பினர்கள் கார் வாங்குவதற்கு வட்டியில்லாக் கடன் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாலுகா தலைநகரங்களிலே பார்த்தால் தாசில்தார், ஆர்.டி.ஓ. போன்றவர்களுக்கெல்லாம் Quarters இருக்கிறது. அதைப்போல சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியின் தலைநகரிலே ஒரு குடியிருப்பைக் கட்டித் தந்து, அந்த நேரத்தில் யார் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார்களோ அவர்கள் குடியிருக்கின்ற வகையில் ஏற்படுத்தித் தர வேண்டும். இதனால் வீடில்லாத சட்டமன்ற உறுப்பினர்கள் பயன் பெறுவார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது அரசினுடைய கோபுரச் சின்னத்திற்கு மரியாதை இல்லை. உள்ளாட்சித் தலைவர்கள் எல்லாம்கூடக் கோபுரச் சின்னத்தைப்

பயன்படுத்திக்கொண்டு, சுழல் விளக்கைப் பயன்படுத்திக்கொண்டு, காரில் போய் வரக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் அப்படிச் செய்வதில்லை. எங்களுக்கும் சுழல் விளக்கைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி தர வேண்டும். ஆனால் எங்களுக்குப் பச்சை விளக்கு இருந்தால் போதும். சிவப்பு விளக்குத் தேவையில்லை. அதற்கு நீங்கள் அனுமதி வழங்க வேண்டும். காரணம் நாங்கள் வெளியிலே செல்கிறபோது, போக்குவரத்து நெரிசலிலேயிருந்து பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் கோருகின்ற தொலைபேசி இணைப்பு, கேஸ் இணைப்பு மனுக்களுக்கு முன்னுரிமை தருகிறார்கள்; கேட்டவுடனே தருகிறார்கள். ஆனால் நம்முடைய கையில் இருக்கக்கூடிய முனிசிபாலிட்டி, குழாய் இணைப்பைக்கூடச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தர மறுக்கிறது. உதாரணமாக என்னுடைய வீட்டிற்கு நான் குழாய் இணைப்புக் கேட்டு செய்யாறு நகராட்சிக்கு மனு செய்து 4, 5 மாதங்கள் ஆகின்றன. சீனியாரிட்டியில்தான் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் இதைக்கூடச் செய்யவில்லை என்று சொன்னால் தொகுதியில் எங்களுக்கு என்ன மரியாதை இருக்கும் என்பதை நினைத்துப் பார்த்து, குழாய் இணைப்பு தருவதற்கு முன்னுரிமை தரவேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. அந்த ஊதியம் பற்றாக்குறையாக இருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதை உயர்த்தி வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது? என்ன பற்றாக்குறை என்று விளக்கமாகச் சொன்னால் நலமாக இருக்கும்.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப் போல 500 ரூபாய், 3,000 ரூபாய் என்று சொன்னார்கள். அந்தத் தொகை இன்னும் கூடுதலாக வழங்கப்பட வேண்டுமென்று அவர்கள் சங்கத்தின் வாயிலாக மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவர்களுக்கு ரூ. 500 தான் வழங்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் 125 ரூபாய் என்று இருந்தது 250 ரூபாயாக உயர்ந்து, பிறகு 500 ரூபாயாக உயர்ந்தது. கடந்த ஆண்டு 3,000 ரூபாய் என்று சுதந்திரதினத் திருவிழாவையொட்டி உயர்த்தப்பட்டு இருக்கிறது. முதன்முதலில் இந்தியாவிலேயே உயர்த்திய மாநிலம் தமிழ்நாடு என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள வேண்டும். அது மாத்திரமல்ல. அந்தத் தியாகி மறைந்து விடுவாரேயானால், அவர்களுடைய வாரிசுகளுக்கு 1,500 ரூபாய் மாதந்தோறும் தரப்படவும் ஆணையிடப்பட்டிருக்கிறது. இதைவிட என்ன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. எல்லைப் போராட்டத் தியாகிகள், மொழிவாரி மாநிலமாக பிரிக்கப்பட்ட நேரத்திலே குறிப்பாக திருப்பதியைத் தமிழ் நாட்டோடு சேர்க்க வேண்டுமென்று சொல்லி, போராடி பல்வேறு சோதனைகளை அனுபவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்டச் சோதனைகளை அனுபவித்த அந்த எல்லைப் போராட்டத் தியாகிகளுக்கும் அந்த உதவித் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து இந்த அவையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். பலமுறை இந்த அவையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. தலைவர், கலைஞர் அவர்கள் ஏற்கெனவே 250 ரூபாயாக இருந்ததை 350 ரூபாயாக்கி, 350 ரூபாயை 400 ரூபாயாக்கி, 400 ரூபாயை 500 ரூபாயாக்கி, 500 ரூபாயை 1,500 ரூபாயாக்கி, 1,500 ரூபாயை 3,015

ரூபாயாக்கியிருக்கிறார்கள். இது சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு, எல்லைப் போராட்டத் தியாகிகளுக்கு, மொழிப்போர்க் காவலர்களுக்கு, அத்தனைபேருக்கும் பொருந்தும். அவர்களுக்கு வழங்கப்பட்டு ஓராண்டுக்கு மேலாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓராண்டைப் பின்னோக்கி பார்க்க வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தணி வட்டத்திலே இருக்கின்ற எல்லைப் போராட்டத் தியாகிகளுக்கு அந்த உதவித் தொகை கிடைக்கவில்லை என்று, அவர்களெல்லாம் மனு செய்திருக்கிறார்கள். ஆகவே, அவற்றைப் பரிசீலனை செய்து, அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. ஆனாலும், வடஎல்லைப் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள், ஏறக்குறைய 120 பேர்தான் இருக்கிறார்கள். ஏறக்குறைய, 1960 ஆம் ஆண்டு அந்த வடஎல்லைப் போர் வெற்றி பெற்றது ஏறக்குறைய 38 ஆண்டுகளாக அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசியது, அவர்களுக்குரிய ஓய்வூதியத்தை உயர்த்தித் தர வேண்டும் என்று, அது ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் உறுதிப்படுத்தியிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், எல்லைப் போராட்டத் தியாகிகள் தொடர்பாக, மொழிப்போர்க் காவலர்கள் தொடர்பாக பல விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கின்றன. அவை ஆய்வில் உள்ளதோடுமட்டுமல்ல, அதிலும் சில வரையறைகள் இருக்கின்றன. அந்த வரையறைகளுக்குட்பட்டு நிச்சயமாக அவர்களுக்கு வழங்கப்படும். அந்த வரையறைகளுக்குக் குறைவாக வருகின்றபோது, அந்த வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன என்பதையும் உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது. எனவே, எத்தனை நாட்கள் அவர்கள்



சிறைச்சாலையில் இருந்தார்கள்; அதற்கு முறையான சிறைச்சான்றுகள் இருக்கின்றனவா என்பதையெல்லாம் ஆய்வு செய்த பிறகு, வெகுவிரைவில் அதற்கான முடிவுகள் அறிவிக்கப்படும் என்று ஏற்கெனவே மானியக் கோரிக்கையின்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அது நிறைவேற்றப்படும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு, மொழிப் போர்த் தியாகிகளுக்கு, எல்லைப் போராட்டத் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றன. அதேபோல, இட ஒதுக்கீட்டிற்காக சமூக நீதிப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உதவி செய்திருக்கிறார்கள். மிக்க நன்றி. ஆனால், அதே நேரத்தில் அந்தப் போராட்டத்திலே கலந்துகொண்ட பல்லாயிரக்கணக்கானவர்கள், காவல் துறையிடம் அடிபட்டு, உதைபட்டு, உடலுறுப்புகளை இழந்து, வீடுகளிலுள்ள பாத்திரப் பண்டங்களை இழந்து பல நாட்கள் சிறைச்சாலையிலே வாடி வதங்கி, சித்திரவதையெல்லாம் அனுபவித்திருக்கிறார்கள். ஆகவே, இட ஒதுக்கீட்டிற்காக, சமூக நீதிக்காகப் போராடிய அப்படிப்பட்டவர்களை இட ஒதுக்கீட்டுப் போராட்டத் தியாகிகள் என்று அறிவித்து, அவர்களுக்கும் அந்த உதவித் தொகை வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுக்கு வழங்கக்கூடிய ஓய்வூதியம் குறைவாக இருக்கிறது என்று குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய ஓய்வூதியத்தையும் கூடுதலாக வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அவர்கள். ஐயாயிரம் ரூபாய் என்று கேட்கிறார்கள். ஆகவே, ஐயாயிரம் ரூபாயாக அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில். அவர்கள் இறந்த பிறகு அவர்களது குடும்பத்திற்கும் அந்தத் தொகை கிடைக்கக்கூடிய வகையிலே வாய்ப்பினை அளிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, சட்டப் பேரவை உறுப்பினர்களைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். நம்மைப் பொறுத்தவரையில், நாம் மக்களுக்குச் சேவை செய்வதற்காக வந்திருக்கிறோம். அதிலே மாறுபட்ட கருத்து கிடையாது. இதற்கு முன்னாலே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்,

மரியாதைக்குரிய கக்கன் அவர்கள், அன்பிற்குரிய அமரர் கோவிந்தசாமி அவர்கள் போன்றவர்களெல்லாம் இந்தச் சட்டமன்றத்திலே பணியாற்றி இருக்கிறார்கள். இவர்கள், தூய்மையாகவும், எளிமையாகவும், நேர்மையாகவும் பணியாற்றியதையெல்லாம் நாம் படித்திருக்கிறோம். ஆகவே, அவர்களைப்போல நாமும் பணியாற்ற வேண்டும். ஒரு தொழிலாளியாக இருந்து வந்த சட்டமன்ற உறுப்பினர், பணிக்காலத்தை முடித்துவிட்டு, மீண்டும் அதே தொழிலாளியாகச் செல்லக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். அப்படி உருவாகக்கூடிய அந்த நிலையிலே, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆர்.டி.ஓ., பி.டி.ஓ. போன்றவர்களுக்கெல்லாம் அலுவலகங்கள் இருக்கின்றன. அதற்கான வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. உதவியாளர்கள் இருக்கிறார்கள். எல்லா சவுகரியங்களும் இருக்கின்றன. குறிப்பாக, ஒரு வருவாய் ஆய்வாளருக்குக்கூட அலுவலகம் இருக்கின்றது. அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய தொகுதியிலே ஒரு அலுவலகம், தட்டச்சர், வாகன வசதி, உதவியாளர் போன்ற எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஜனநாயகத்தினுடைய முக்கிய அம்சமாக இருக்கக்கூடியது தேர்தல். அந்தத் தேர்தலை நாம் முழுமையாக மாற்றியமைக்க வேண்டுமென்று நான் திறந்த மனதோடு இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊழலுக்கு வழிவகுப்பதற்கு, இலஞ்சத்திற்கு அடிபோடுவதற்குத் தேர்தலே முக்கியக் காரணம் என்றுகூட நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஊழல், இலஞ்சம் என்பது, முக்கோண வடிவிலே பரவியிருக்கிறது. பொதுமக்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் என்று எல்லோரையும் நான் குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. தேர்தல் நேரத்திலே தேர்தல் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு வேட்பாளர் போட்டியிடுவதாக வைத்துக் கொண்டால், ஒரு குறிப்பிட்ட தொகையை, அவரிடத்திலேயிருந்து 'டெப்பாசிட்'-ஆகப் பெறவேண்டும். 'வால் போஸ்டர்', துண்டுப் பிரசுரம் போன்றவற்றைத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலோடு வெளியிட வேண்டும்...



(மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன். பிரச்சாரக் கூட்டங்களைக்கூட, நகரங்களிலோ, கிராமப்புறங்களிலோ மேடை அமைத்து, எல்லாக் கட்சிகளினுடைய வேட்பாளர்களும் ஒரே மேடையிலே பேசவேண்டும். கொள்கைகளைத் துண்டுப் பிரசுரங்கள் மூலமாக, தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலோடு வெளியிட வேண்டும்.

பிற்பகல் 12-20

தேர்தல் செலவைக் குறைக்க வேண்டுமென்று பொது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். தேர்தல் செலவுகள் குறையும்போது, தேர்தலிலே போட்டியிடக்கூடியவர்கள் நேர்மையாகப் பணியாற்றுவார்கள். செலவு இல்லாமலே வெற்றி பெறுவார்கள். வந்த பிறகு அந்தச் செலவை ஈடுகட்ட வேண்டும்; மீண்டும் தேர்தலிலே போட்டியிட்டு வெற்றிபெற வேண்டும்; அதற்கு செலவுத் தொகை தேவை என்ற நிர்பந்தம் ஏற்படாது. இப்படித் தூய்மையான, பொதுமக்கள் பிரதிநிதிகள் வருகின்ற நேரத்திலே, அதிகாரிகளைத் தங்களுடைய கட்டுப்பாட்டிலே வைத்து, இலஞ்ச லாவண்யத்திற்கு அப்பாற்பட்டு செயல்பட நினைக்கக்கூடிய எண்ணம் இருக்கின்ற காரணத்தினால், அந்த வகையிலே தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, சட்டமன்றத்திலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. ஜி.கே. மணி:** இன்னும் ஒரே நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் நான்கைந்து பேர் பேச வேண்டும். நீங்கள் பேசியது போதும். திரு. இரா. தாமரைக்கனி. திரு. தாமரைக்கனி பேசவில்லை என்றால், நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டி வரும்.

**திரு. ஜி.கே. மணி:** நீங்கள் எனக்குப் போதிய நேரம் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் எவ்வளவு நேரம் யார் யாருக்குத் தருகிறேன் என்பது எல்லோருக்கும் தெரியும். திரு. தாமரைக்கனி, நீங்கள் பேசவில்லை என்றால் நான் அடுத்த உறுப்பினரை அழைப்பேன்.

**திரு. ஜி.கே. மணி:** காலையில்கூடக் கேள்வி நேரத்தில் எனக்குப் பேச வாய்ப்புக் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. அப்துல் லத்திப். நான் திரு. தாமரைக்கனியைப் பேசச் சொன்னால், அவர் பேசவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில், நான் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டசபை கூடும்போது — மாணவர்கள் எப்படிச் சீருடை அணிந்து வருகிறார்களோ, இராணுவ வீரர்கள் எப்படி அணிந்து வருகிறார்களோ, அதேமாதிரி — சீருடையோடு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல், அமைச்சர்கள் அசெம்பிளிக்கு வரும்போது அவர்களுக்கென்று ஓர் உடை இருக்க வேண்டும். அதேபோல், முதலமைச்சர் வரும்போது அவர்களுக்கு என்று ஓர் உடை இருக்க வேண்டும். (சிரிப்பு) சபாநாயகர், துணைச் சபாநாயகர் ஆகியோருக்கென்றும் ஓர் சீருடை இருக்க வேண்டும். அப்படி எல்லோரும் அணிந்து வந்தால், 'இவர்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள்; அசெம்பிளிக்குப் போகிறார்கள்' என்ற ஓர் எண்ணம் ஏற்படும்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில், 'டிஸிப்ளின்' இருந்தால்தான் நன்றாக இருக்கும். யார் யார் வருகிறார்கள், யார் யார் போகிறார்கள் என்பதே தெரியவில்லை. பூராவும் ஒரு சத்திரம் மாதிரி, அந்தந்தத் தொகுதியிலே சண்டைச் சச்சரவுகளைப் போட்டுக்கொண்டு வந்தவர்கள், பல கேஸ்களில் சம்பந்தப்பட்டவர்கள், பல தீவிரவாதிகள், மோசமான ஆட்கள் எல்லாம் சில நேரங்களிலே அங்கே வந்துவிடுகிறார்கள். இதனால், எம்.எல்.ஏ.-க்கள், மானியக் கோரிக்கை புத்தகங்கள், பட்ஜெட் கூட்டத் தொடரில் என்னென்ன விவாதிக்கப்பட வேண்டும் என்பனவற்றைப் படிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, யார் யார் வருகிறார்கள், போகிறார்கள் என்பதைக் கவனிக்க 'மினிட் புக்' போட்டு, எம்.எல்.ஏ.-க்கள் அனுமதி இல்லாமல் யாரும் அங்கு வரமுடியாத அளவுக்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.



முன்பெல்லாம், சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் எம்.எல்.ஏ.-க்கள் பங்குபெறும் விளையாட்டுப் போட்டி, மாறுவேடப் போட்டி எல்லாம் நடந்தன. விளையாடுவதற்கு மைதானமும் இருந்தது. ஆனால், இப்போது விளையாட்டு மைதானத்தில் புல் எல்லாம் முளைத்திருக்கிறது. ஆகவே, அத்தகைய மாறுவேடப் போட்டி, விளையாட்டுப் போட்டி ஆகியவற்றை நடத்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, மொழிப்போர்த் தியாகிகளுக்குப் பென்ஷன். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நா. காமராஜன், பெ. சீனிவாசன், கவிஞர் முத்துராமலிங்கம், நாவளவன் போன்றவர்களுக்கு எல்லாம், மொழிப்போர்த் தியாகிகளுக்கான ரூபாய் கிடைக்கவில்லை. அவர்கள் எல்லாம் எந்தெந்த ஜெயிலிலே இருந்தார்கள்; எப்படி எரித்தார்கள் என்பதெல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்கேத் தெரியும். அவர்களிடம், அந்த ஜெயிலிலே இருந்து சர்டிபிகேட் வாங்க வேண்டும்; இந்த ஜெயிலிலே இருந்து சர்டிபிகேட் வாங்க வேண்டும் என்று அரசாங்கம் காலதாமதம் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, மொழிப்போர்த் தியாகிகளுக்குத் தியாகி பென்ஷன் கொடுப்பதற்கு உடனே நடவடிக்கை எடுத்து வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கமா காலதாமதம் செய்தது? நடந்தது 1965-இல். கடந்த ஐந்தாண்டு காலத்திலே இருந்த அரசாங்கத்திடம் முறையீடு செய்திருக்கலாமே? அப்படிச் செய்திருந்தீர்கள் என்றால் பாராட்டியிருக்கலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் எந்த அரசாங்கமாக இருந்தாலும், அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள்தான் செய்ய வேண்டும். உங்களுக்கும் எண்ணம் இருக்கிறது. முன்னாலே இருந்த அரசாங்கத்திற்கும் எண்ணம் இருக்கிறது. அதிகாரிகள்தான் அந்த சர்டிபிகேட் கொண்டு வா, இந்த சர்டிபிகேட் கொண்டு வா என்று காலதாமதம் செய்கிறார்கள். ஆகையினால், எந்த அரசாங்கமாக இருந்தாலும், நீங்கள் செய்யுங்கள் என்று சொன்னால், இப்படி எங்களைக் குறை சொல்வதே உங்களுக்கு வேலையாகப் போய்விட்டது. இரண்டு வருடமாக இதையேத்தான்

சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். எங்களுக்கு இதைக் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய்விட்டது. (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-25

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளைக் காரணம் காட்டி நல்லவைகளை இந்த அரசு தள்ளிப்போடாது. அதைப்போலவே, இப்பொழுதும் உறுதியளிக்கிறேன். அதிகாரிகள் யாரையும் காரணம் காட்டி திரு. தாமரைக்கனி அவர்கள் இங்கே குறிப்பிட்ட அந்த நண்பர்களை எல்லாம் இந்த அரசு புறக்கணிக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களுக்கெல்லாம் தரப்போகிறோம் என்பதை முன்கூட்டியே திரு. தாமரைக்கனி அவர்கள் தெரிந்துகொண்டு இருக்கிறார் என்பது இரண்டு முறை அவர் இந்த அவையிலே பேசியதிலிருந்து எனக்கு நன்றாகப் புரிகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை, அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், அருமை அண்ணன் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், நீயாகத் தன்னிச்சையாகப் பேசினாய். ஆனால் நான் சொல்லித்தான் பேசிவிட்டாய் என்று நினைத்துவிட்டால் எனக்கு வருவதும் கெட்டுவிடுமே என்று சொன்னார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் என்னிடம் முகம் கொடுத்தே பேசமாட்டேன் என்கிறார், எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.-வை வைத்து இந்த விஷயத்தைப் பேச வைத்துவிட்டேன் என்று நினைத்து வருத்தப்படுகிறார் என்றுதான் சொன்னார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி எல்லாம் சொல்லி திரு. சீனிவாசன்மீது வெறுப்பு ஏற்படுத்திவிட முடியாது. திரு. சீனிவாசன் தான் 1964-65 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி அதிக்க எதிர்ப்புப் புரட்சிக்கு மாணவர்களுடைய தலைவராக, அந்தப் போராட்டத்திற்கு தளகர்த்தராக இருந்தார் என்பது எங்களுக்கு எல்லாம் மிக நன்றாகத் தெரியும். எனவே எந்தத் தியாகியையும் மதிக்கின்ற இந்த அரசு அந்தத் தியாகியையும் மதிக்கத் தவறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா அவர்களே, நாவளவன் என்ற ஒரு மொழிப்போர்த் தியாகி. அவர் இதற்காக மனு எல்லாம் போட்டிருந்தார். அவர் இறந்துபோய்விட்டார். அதனால் உயிரோடு இருக்கும்போதே இந்த நிதியைக் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள். (குறுக்கீடு) உங்களுடைய நண்பர் இறந்து ஒரு மாதம், இரண்டு மாதம் இருக்கும். உங்களுக்குத் தகவலே தெரிவிக்கவில்லையா? ** உங்களுக்குத தெரியப்படுத்தாமல் இருக்கிறார்கள் பாருங்கள்.

அதுபோல, இன்னொன்று. தென் மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள நடக்கின்றன. ஓட்டுரிமை என்பது எல்லோருக்கும் இருக்க வேண்டும். சில கிராமங்களில் மெஜாரிட்டி சாதிக்காரர்கள் அந்த ஊரைக் கைக்குள்ளே வைத்துக்கொள்கிறார்கள். அதனால் மைனாரிட்டி கம்யூனிட்டிக்காரர்கள் ஓட்டுரிமையை இழந்துவிடுகிறார்கள். ஓட்டு போடமுடியாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத் தனி வாக்குச்சாவடி வைக்க வேண்டுமென்றால் எண்ணிக்கை இல்லை என்று சொல்கிறார்கள். எண்ணிக்கை இல்லாவிட்டாலும் அவர்களுக்கு பக்கத்து வாக்குச் சாவடியில் வாக்களிக்க வசதி செய்து தரவேண்டும். காமராசர் மாவட்டம், வ.உ.சி. மாவட்டம், நெல்லை மாவட்டம் போன்ற மாவட்டங்களில் எல்லா மக்களுக்கும் வாக்குரிமை கொடுக்கிற அளவில் தனி வாக்குச் சாவடி அமைத்தோ அல்லது பக்கத்து வாக்குச் சாவடியில் அவர்கள் வாக்களிக்க ஏதுவாக வசதிகள் செய்தோ தரவேண்டும்.

அடுத்து காட்பாடியில் உள்ள வெடி மருந்துத் தொழிற்சாலையில் எந்த நோக்கத்திற்காக அந்த வெடி மருந்துப் பொருட்களை வாங்குகிறார்களோ அந்த நோக்கத்திற்கு அதைப் பயன்படுத்தாமல் சிலர் தவறான காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். எனவே அதற்கு ஒரு தனி ஐ.பி.எஸ். ஆபிஸர் போட வேண்டும். இரண்டு வருடத்தில் என்னென்ன பொருட்கள் யார் யாருக்கு சப்ளை செய்யப்பட்டிருக்கின்றன என்ற நீதி விசாரணையை செய்யச் சொல்லி நான் ஏற்கெனவே காவல் துறை மானியத்திலே பேசினேன். முதலமைச்சர் அவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்ட

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

காரணத்தினாலோ, நிறைய வேலைகள் இருந்த காரணத்தினாலோ என்னவோ அவர் பதில் சொல்லவில்லை. ஆகவே தனி ஐ.பி.எஸ். ஆபீஸர் போட்டால் இந்த வெடிமருந்துப் பொருட்கள் தவறான முறையில் விநியோகிக்கப்படுவதைத் தடுக்கமுடியும். எனவே அதற்கு ஆவன செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

அதுபோலத் தொகுதி எம்.எல்.ஏ.-க்களுக்கு ஒரு அலுவலகம் வேண்டும். டைப்பிஸ்ட் வேண்டும். கிளார்க் வேண்டும். அதுபோல, எம்.எல்.ஏ.-க்களுக்கு அரசாங்க பிளஷரையே கொடுத்துவிடுங்கள். எதற்கு அவர்கள் 3 இலட்சம் ரூபாய் லோன் வாங்க வேண்டும். மந்திரிகளுக்கு பிளஷர் கொடுக்கின்ற மாதிரி எம்.எல்.ஏ.-க்களுக்கும் கொடுத்துவிடுங்கள். எம்.எல்.ஏ.-க்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் தான். எனவே அவர்களுக்குக் கொடுக்கின்ற மாதிரி எங்களுக்கும் பிளஷர் கொடுத்துவிட்டால் நாங்களும் அங்கும் இங்கும் போய் வருவதற்கு வசதியாக இருக்கும். அதனால் அரசாங்க செலவிலே ஆளுக்கு ஒரு பிளஷர் கொடுக்க வேண்டும். பெட்ரோலும் அரசாங்கம் தான் போட வேண்டும்.

நாங்கள் எல்லாம் முழுநேர ஊழியர்கள். பொது மக்கள் வேலை, கட்சி வேலைகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். காவல் துறை அதிகாரிகளை எப்படி எழுப்புகிறார்களோ அதைப்போல மக்கள் இரவு பகல் என்று இல்லாமல் எங்களையும் தட்டி எழுப்புகிறார்கள். நாங்கள் எழுந்திருக்கவில்லை என்றால், எம்.எல்.ஏ. வந்து எங்கள் குறைகளைக் கேட்க மாட்டேன் என்கிறார், எங்களை மதிக்கவில்லை என்று காரணம் இல்லாமல் போர்க்கொடி தூக்குகிறார்கள். சாராய வியாபாரத்திற்கும் எழுப்புகிறார்கள். அடிதடி கலாட்டாவிற்கும் எழுப்புகிறார்கள். கட்சி கேசுக்கும் எழுப்புகிறார்கள். வெட்டு குத்துக்கும் எழுப்புகிறார்கள். பக்கத்து வீட்டுத் தகராறுக்கும் எழுப்புகிறார்கள். புறம்போக்கு நிலத் தகராறுக்கும் எழுப்புகிறார்கள். எதற்கெடுத்தாலும் கட்சி, பொதுமக்கள் என்று சொல்கிறார்கள். என்னைப் போன்றவர்களுக்கு வேறு தொழிலும் கிடையாது. எனவே இரவு பகலாக பாடுபட்டுக் கொண்டிருக்கிற எம்.எல்.ஏ.-க்களுக்குச் சம்பளத்தை உயர்த்தித் தரவேண்டும்.



திரு. சி. ஞானசேகரன் அவர்கள் ' 30,777 ரூபாய் என்று ஒரு கணக்குச் சொன்னார். அந்த 30,777 என்பது என்ன பெரிய கணக்கு? மொத்தமாக 50 ஆயிரம் ரூபாய் என்று போட்டு எம்.எல்.ஏ.-க்களுக்கு சம்பள உயர்வு கொடுத்தால் நன்றாக இருக்கும். சத்துணவு ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறீர்கள், அரசு ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறீர்கள். எங்களையும் அரசு ஊழியர்கள்போல் கருதி சம்பள உயர்வு கொடுக்க வேண்டும். நாங்கள் அரசு முத்திரை போட்ட லெட்டர்பேட் உபயோகப்படுத்துகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது செய்தால்தான் முடியும். பிறகு எதுவும் செய்ய முடியாது. (சிரிப்பு) ஏனென்றால், திடீரென்று சட்டமன்றம் கலைப்பு, அது, இது என்று சொல்லுகிறார்கள்.

பிற்பகல் 12-30

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க.-வினுடைய சட்டமன்ற உறுப்பினர் இந்தச் சட்டமன்றத்திலே ஒரு உண்மையைப் பேசியிருக்கிறார். சரியான உண்மையைப் பேசியிருக்கிறார்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவ்வாறு இல்லை. ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொன்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். வருகின்றவர்கள் எப்படி சிரமப்பட்டாலும் பரவாயில்லை என்று அரசு ஊழியர்களுக்கும், மற்றவர்களுக்கும் எப்படிச் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்களோ, அதுபோல் எங்களுக்கும் நீங்கள் செய்துகொடுத்து விடுங்கள். வருகின்றவர்கள் சிரமப்படட்டும் என்று செய்கிறீர்கள். நல்லமனதோடு செய்கிறீர்கள். இதையும் செய்துவிடுங்கள்.

அடுத்து, பாராளுமன்றத்தில் குறிப்பு எழுதுகின்ற நிருபர்களுக்கெல்லாம் நல்ல சம்பளம் கொடுக்கிறார்கள். அதேபோல நம்முடைய சட்டமன்றத்தில் குறிப்பு எழுதுகின்ற நிருபர்களுக்கெல்லாம் சம்பள விகிதத்தை ரூ. 10,000/- என்று உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன்.

## 9. பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை

### பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு பிரதிநிதித்துவம் தமிழ்நாடு அரசுப் பணிகளில் உள்ள நிலைமையை ஆராய்ந்து கீழ்மட்டத்தில் அப்பணிகளுக்கு நேரடி நியமனம் செய்வது குறித்து ஆராய குழு அமைத்தல் பற்றி மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110-ன்கீழ் இந்த அறிக்கையைத் தங்கள் அனுமதியோடு அவையில் வைக்கிறேன்.*

*தமிழ்நாடு அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களின் பிரதிநிதித்துவம் பற்றி ஆராய்ந்து தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு அளிப்பது போன்று அரசுப் பணிகளில் எ, பி, சி மற்றும் டி பிரிவுகளில் எங்கெங்கு தக்க பிரதிநிதித்துவம் இல்லையோ அந்தப் பிரிவுகளில் கீழ் மட்டத்தில் நேரடி நியமனம் மூலம் பதவிகளை நிரப்ப ஆய்வு நடத்திட பிற்படுத்தப்பட்டோா மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவினை அமைக்க 16-5-1998 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.*

*இந்த முடிவினையொட்டி பின்வருமாறு குழு அமைக்கப்படுகிறது.*

*குழுவின் தலைவர், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.*

*உறுப்பினர்கள், திரு. வ. வேலுசாமி, திரு. மீ.அ. வைதியலிங்கம், திருமதி வாசுகி முருகேசன், திரு. ஆர்.ஆர். சேகரன், திரு. பா. வேல்துரை, திரு. நா. பெரியசாமி, திரு. அ.வ. அப்துல் நாசர், திரு. இரா. தாமரைக்கனி, திரு. ஜி.கே. மணி, திரு. லா. சந்தானம், திரு. டி. மணி, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் ஆகியோர். அமைப்பாளர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைச் செயலாளர்.*





## 8. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்**

**(ஆ) கோரிக்கை எண் 42 - பல்வகை**

**(இ) கோரிக்கை எண் 60 - பல்வகை மூலதனச் செலவு**

**(ஈ) கோரிக்கை எம் 61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்**

**(உ) கோரிக்கை எண் 7 - மாநிலச் சட்டமன்றம்**

**(ஊ) கோரிக்கை எண் 8 - தேர்தல்கள்—தொடர்ச்சி**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *1998-99ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. திரு. ம. அப்துல் லத்திப்.*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 6 மானியக் கோரிக்கைகள் இன்றைக்கு விவாதத்திற்கு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், இதிலே ஒரு மானியம்தான் இந்த அவையினுடைய முழுக் கவனத்தையும் பெற்றிருக்கிறது என்பது இங்கே பேசிய உறுப்பினர்களுடைய பேச்சுக்களிலிருந்து நமக்குத் தெளிவாகத் தெரிகிறது.*

*இந்த மானியத்தைப் பொறுத்தவரையில், நான் பல காலமாக பேசி வருகிறேன். அப்போதெல்லாம் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை உன்னிப்பாகப் பார்ப்பேன். எங்களுக்கெல்லாம் நினைவு இருக்கிறது. அவர்கள் பொறுப்பேற்றபோது 150 ரூபாய் சம்பளம். நாங்கள் எல்லாம் நுழைந்தபோது 250 ரூபாய் சம்பளம். தினப்படி 25 ரூபாய். இதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லிச் சொல்லி இவ்வளவு உயர்வுகளைப் பெற்றிருக்கிறோம். இவ்வளவு உயர்வுகளைப் பெற்றதெல்லாம் இந்த முதலமைச்சர் வாயிலாக என்பதை நாம் மறந்துவிடவில்லை. அப்போது சம்பள உயர்வு கேட்கும் போதெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர்*

அவர்களை நாங்கள் உற்றுப் பார்ப்போம். உயர்வு தருவதற்கு எந்த முகபாவனையோடு அன்றைக்கு அவர்கள் இருப்பார்களோ அதே முகபாவனையை இன்றைக்கு நான் அவர்களிடத்திலே பார்க்கிறேன். எனவே, இன்றைக்கும், நிச்சயமாக, வைக்கப்பட்ட கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிவோடு கவனித்துத் தீர்மானம் எடுத்துவிட்டார்கள்; இனி அறிவிக்கப் போகிறார்கள் என்ற ஒரு நம்பிக்கையோடுதான் நான் இந்த மானியத்தில் பேசுகிறேன்.

பிற்பகல் 12-35

இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னதான் அதிகாரம், ஒரு பஞ்சாயத்து தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது, எக்சிகியூட்டிவ் பவர்ஸ் இருக்கின்றது. ஒரு யூனியன் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. மாவட்ட பஞ்சாயத்துத் தலைவருக்கு இருக்கிறது. பஞ்சாயத்து உறுப்பினர்களெல்லாம்கூட சில அதிகாரங்களைப் பெற்று இருக்கின்றார்கள். இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனிப்பட்ட முறையில் என்ன அதிகாரம் இருக்கின்றது என்பதை இன்று வரையில், இவ்வளவு காலம் சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய என்னால்கூட புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்று சொன்னால் அமைச்சர்களிடத்திலே அருள்கூர்ந்து அமைச்சர் அவர்களே என்று கேட்க வேண்டும், கலெக்டரிடம் போனால் அருள்கூர்ந்து கலெக்டர் அவர்களே என்று கேட்கவேண்டும், தாசில்தாரிடமும் போய் அப்படித்தான் கேட்கவேண்டும், தன்னிச்சையாக தன்னுடைய தொகுதிக்கு, தன்னுடைய தொகுதி மக்களுக்குத் தானாக ஒரு முடிவு எடுத்து, ஒரு பஞ்சாயத்து தலைவர், பேரூராட்சித் தலைவர் செய்வதைப்போல அல்லது ஒரு நகராட்சித் தலைவர் செய்வதைப்போல ஒரு எக்சிகியூட்டிவ் ஆர்டர் போடுகிற, ஒரு தீர்மானம் எடுக்கிற ஓர் அதிகாரம் இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறதா? நான்கூட 25 ஆண்டுகளாகத் தேடித் தேடிப் பார்க்கின்றேன். அப்படி இருப்பதாக இன்று வரையிலே தெரியவில்லை. அரசுதான் அதைப்பற்றிச் சொல்ல வேண்டும். தயவுசெய்து, தன்னிச்சையாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றவர்களைப்போலத் தானாகவே ஒரு முடிவெடுத்து, தொகுதி மக்களுக்குச் சேவை செய்கின்ற அளவிற்கு அதிகாரம் என்னவென்று வரையறுக்கப்பட்டு குறிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இந்தச் சட்டமன்றத்திலே நாம் செயல்படும் விதம்கூட கொஞ்சம் ஆய்வு செய்யப்பட வேண்டும். உதாரணமாக இந்தச்



சட்டமன்றம் சட்டத்தை நிறைவேற்றுகின்ற ஒரு மன்றம். ஆனால், என்னுடைய அனுபவத்தில் சட்டத்தை இங்கு அனுமதித்து, அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது முறையான நேரத்தையும் கவனத்தையும் நாம் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு எடுத்துக் கொள்கிறோமா என்பது இன்று வரையிலே கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. இதுவரையிலே உறுப்பினர்களுக்கு First reading, second reading, third reading என்றால் என்ன என்பதும் சட்ட நுணுக்கங்களை எப்படி ஆய்வு செய்து அதுபற்றி விவாதம் நடத்த வேண்டுமென்பதே தெரியாமல் இருக்கும்போது இந்தச் சட்டமன்றம் எப்படித் தன்னுடைய அடிப்படை கடமைகளை நிறைவேற்றும் என்பது எனக்குத் தெரியவில்லை. சட்டங்கள் அவசரம் அவசரமாக நிறைவேற்றப்படுகின்றன என்பதைச் சிறிது காலமாக நான் வேதனையோடு பார்க்கிறேன். கடைசி நேரத்தில் வயிறு பசித்துக் கொண்டிருக்கும்போது சட்டமன்றத்தில் சட்டங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. எல்லோரும் அவசரக் கோலமாகச் சென்று விடுகிறார்கள். சட்டங்கள் குறித்து விவாதங்கள் இல்லை; சட்டத்தைக் குறித்து விமர்சனம் இல்லை; திருத்தங்கள் இல்லை. சட்டத்தில் இருக்கக்கூடிய ஊனம் என்ன, அதனுடைய விளைவுகள் என்ன என்பதைப் பற்றிக்கூடச் சிந்திக்காமல் அவசரக் கோலத்திலே சட்டமுன்வடிவுகள் 'ஏற்போர் ஆம் என்க, மறுப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம், சட்டம் நிறைவேறியது, நெடுந்தலைப்போடு நிறைவேறியது' என்றெல்லாம் சட்டத்தை நிறைவேற்றுவது அவ்வளவு ஏற்புடையதாக இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

தற்போதுள்ள இன்றைய சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றிக் குறிப்பிடுவதற்குமுன்பு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றிப் பேசுவது முறையாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். ஏனென்றால், நான் இந்நாளாகவும் இருப்பவன், முன்னாளாகவும் இருந்தவன். முன்னாளிலிருந்து இந்நாளாகவும் மாறியவன், பிறகு முன்னாளாக மாறி இன்றைக்கு இந்நாளாகவும் இருப்பவன். எனவே, இரண்டு தரப்பிலும் என்னென்ன தொந்தரவுகள் இருக்கின்றன என்பதை நான் நன்கு அறிந்தவன். குறிப்பாக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிலை மிகவும் பரிதாபத்திற்குரிய நிலை என்பதை என்னைவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் மிக நன்றாக அறிவார்கள். ஒரு சமுதாயத்திலே ஒரு Dignatory என்ற அளவிற்கு அவர்கள் நடமாடிவிட்டுப் பிறகு

சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் என்று ஆகும்போது அவர்களுக்கு இருக்கின்ற இன்னல்கள், அவர்களுக்கு இருக்கின்ற தர்மசங்கடங்கள் இவைகளை எல்லாம் எண்ணிப்பார்க்கும்போது முன்னாள் உறுப்பினர்களைப் பற்றி இந்நாள் உறுப்பினர்கள் அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்நாள் என்பது முன்னாளாக மாறுவது என்பது எப்போது என்று எங்களால்கூட சொல்ல முடியவில்லை. சர்க்காரிலே பணி செய்கிற ஒரு சாதாரணக் கடைநிலை ஊழியர்களாக இருந்தாலும் அவர் எவ்வளவு நாள் பணி செய்வார் என்பது குறிக்கப்படுகிறது. ஒருவர் 58 வயது வரை அவர் பணியிலே இருப்பார் என்பது குறிக்கப்படுகிறது. எல்லோருக்கும் அந்த நிலை இருக்கின்றது. ஆனால், ஒரு சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் நாளைக்கு அவர் என்னவாக இருப்பார் என்று சொல்ல முடியாத அளவிற்கு — மரணம் என்பது எப்போது வரும் எனச் சொல்ல முடியாது. அந்த நிலை மாதிரி — நாளைக்கு நம்முடைய கதி என்ன, நாம் இருப்போமா, இல்லையா என்ற ஒரு நிச்சயமற்ற நிலைமை நீடிக்கின்ற காரணத்தினால், முன்னாள் எம்.எல்.ஏ.-க்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஓய்வூதியத்தை 3000 ரூபாயாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) எனவே, அதை தயவுசெய்து, 3,000 ரூபாயாகவோ அல்லது தற்போது இருக்கிற சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கோ, whichever is higher, இதில் எது அதிகமாக இருந்தாலும், 3,000 ரூபாய் கொடுங்கள், one third of the salary என்பதைச் சொல்லுங்கள். தயவுசெய்து மூன்றில் ஒரு பங்காவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அதைத்தான் இங்கே நண்பர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

பிற்பகல் 12.40

ஆந்திராவிலே, 18,000 ரூபாய். அதற்கான சட்டமுன்வடிவு இப்போது தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டது. அவர்கள் நிறைவேற்றப் போகிறார்கள். ஆந்திராவிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 18,000 கொடுப்பதற்கு, சட்டமுன்வடிவு , சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. இப்போதும் அவர்கள் ரூ. 12,500 பெறுகிறார்கள். அதை ரூ. 18,000 ஆக உயர்த்திக் கொடுப்பதற்கு அங்கே சட்டமுன்வடிவு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.



மகாராஷ்டிராவிலே 12,000 ரூபாய் கொடுக்கிறார்கள்.

ஜம்மு-காஷ்மீரிலே 12,000 ரூபாய் கொடுக்கிறார்கள். ஜம்மு-காஷ்மீர் சிறிய மாநிலம். அங்கே, 12,000 ரூபாய் கொடுக்கிறார்கள்.

மிசோரம் மிக மிகச் சிறிய மாநிலம். அங்கே 11,750 ரூபாய் கொடுக்கிறார்கள்.

அரியானாவிலே 11,500 ரூபாய் கொடுக்கிறார்கள். அது என்னவோ தெரியவில்லை. மகாராஷ்டிரா - பழைய பம்பாய் - மாநிலம், சென்னை மாநிலம், கல்கத்தா மாநிலம், இந்த மாநிலங்களில்தான் இவை எல்லாம் சீக்கிரம் நகர்வதில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், one of the most dignified Chief Minister. ஆகையினால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வது, எங்களைக் கேவலப்படுத்தாதீர்கள். மிசோரமிலே அவர்கள் அவ்வளவு ரூபாய் வாங்கும்போது, பக்கத்திலே, ஆந்திராவிலே, சந்திரபாபு நாயுடு கொடுக்கும்போது—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டமன்றத்திற்கும் ஒவ்வொரு வரலாறு உண்டு. அந்தச் சட்டமன்றம், எந்தச் சூழ்நிலையில் உருவாயிற்றோ அதைப் பொறுத்துத்தான் — அது கல்கத்தாவோ, மும்பையோ, சென்னையோ, — அந்தச் சட்டமன்றத்தில், 20 ஆண்டுகளுக்கு முன்னர், 30 ஆண்டுகளுக்கு முன்னர், சட்டமன்ற உறுப்பினர்கள் என்ன ஊதியம் அல்லது என்ன மாத அலவன்ஸ் பெற்றார்கள் என்ற அடிப்படையிலே வைத்துப் பார்த்தால்தான், இன்றைக்கு நாம் எவ்வளவு பெறுகிறோம் என்பது தெரியுமே தவிர, இன்னொரு சட்டமன்றம், மிசோரம், திரிபுரா அங்கேயெல்லாம் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அங்கே உயிரோடு இருப்பதே எவ்வளவு பிரச்சினையாக இருக்கிறது என்பது அந்தப் பகுதிகளிலே உள்ளவர்களுக்குத்தான் தெரியும். எனவே, அதையெல்லாம் ஒப்பிடுவதைவிட, நாம் எங்கிருந்து, எதுவரையில் வளர்ந்து வந்திருக்கிறோம் என்ற அடிப்படையிலே மாண்புமிகு லத்தீப் அவர்கள் — ஏனென்றால், அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் இருந்தவர் என்ற காரணத்தால் அந்த அடிப்படையில் அவர்கள் — கருத வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்—

**திருமதி எ.என். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்போது எங்களுக்கெல்லாம் ஒரு நாளைக்கு,

படி 12½ ரூபாய். ஒரு மாதச் சம்பளம் 150 ரூபாய். தினப்படி 12½ ரூபாயிலும்கூட, ரூம் வாடகைக்கு என்று 2½ ரூபாய் பிடித்துக் கொள்வார்கள். அதற்கு நாங்கள் எல்லாம் எழுதிக்கொடுப்போம். அந்தப் பிடித்தம் போக, 10 ரூபாய் வாங்கினோம். நாம் இன்றைக்கு ஓரளவு வசதியைப் பெற்றிருக்கிறோம். இருந்தாலும்கூட, இன்னும் உயர்த்துவது என்று சொல்லும்போது, அது மிகப் பெரிய போட்டியை உண்டாக்கும். நாமும் சட்டமன்றத்திற்குப் போனால், நமக்கும் 20,000 ரூபாய் வரும், 18,000 ரூபாய் வரும் என்கிற அளவுக்கு மிகப் பெரிய போட்டி உண்டாகுமோ என்று நான் அஞ்சுகிறேன். அவ்வளவுதான்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் நுழையும்போது மாதச் சம்பளம் 150 ரூபாய் என்றார்கள். இதை, நானும் முன்கூட்டியே தெரிவித்தேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அதைத்தான் வாங்கினார்கள். மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும் தெரியும். 12½ ரூபாய் தினப்படி அன்றைக்கு இருந்தது. அன்றைக்கு இட்லி என்ன விலை? மற்ற பொருட்கள் எல்லாம் என்ன விலைக்கு விற்றன? அன்றைக்கு இருந்த நிம்மதி இன்றைக்கு இருக்கிறதா என்பதை, என்னைவிட, பெண் குலத்தைச் சேர்ந்த நம்முடைய அக்காள் பொன்னம்மாள் அவர்களுக்கே தெரியும்.

இன்றைக்குப் பத்திரிகை செய்தி என்ன தெரியுமா? ரூபாயின் மதிப்பு அதள பாதாளத்தில், இதுவரையில் இல்லாத அளவுக்குக் கீழே போயிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள், மற்றவற்றை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று. அவர்கள் எனக்கு ஆசிரியர். ஆகவே, ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அன்றைக்கு இருந்த விலை; இன்றைக்கு இருக்கிற விலை; அன்றைக்கு இருந்த பண மதிப்பு; இன்றைக்கு இருக்கிற பண மதிப்பு; இவற்றை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

நான் என்ன சொல்லுகிறேன் என்றால், இது இல்லாவிட்டாலும் எங்களால் வாழமுடியும். ஆனால், ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே எப்படி வாழ வேண்டுமோ, அப்படி வாழ வேண்டாமா? வேறுவிதமான சில கட்டாயங்களுக்கு நாம் ஆளாக வேண்டுமா? இதிலே குறைவு ஏற்பட்டால்தான், சிலர் சில கட்டாயங்களுக்கு ஆட்பட நேரிடுகிறது என்பதைத்தான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இதைப் பெற்றுக்கொண்டும், ஏதாவது ஊழல் நடைபெற்றால் ஒழுங்கீனம் நடைபெற்றால், தெருவிலே அவர்களை நிற்க வைத்து எப்படி அவர்கள் நடத்தப்பட வேண்டுமோ அப்படி நடத்தப்படுகின்ற நிலை வரும். ஆகையினால் அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். எங்களைப் பற்றி, - 365 நாட்களில், ஒரே ஒரு நாள் - எங்களுக்காக நாங்கள் பேசுகிறோம். மற்ற நாட்களில் எல்லாம் மக்களுக்காகப் பேசுகிறோம். எனவே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள், கொஞ்சம் அருள்கூர்ந்து இடமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று 'கில்லட்டின்', நாம்கூட அந்த கில்லட்டின் நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறோம், எந்த நேரத்தில் எது வருமோ என்று.



பிற்பகல் 12-45

தினப்படி இருக்கின்றதே, இரண்டு தடவை ஆட்டோவில் போய் வந்தால், அல்லது தொகுதியிலிருந்து ஊருக்கு வந்தால் 150 ரூபாய் ஒரே நேரத்தில் காலியாகிவிடும். ஊரிலிருந்து வருபவர்களுக்கு காபி கொடுக்க வேண்டும், சாப்பாடு கொடுக்க வேண்டும். நாங்கள்தான் சாப்பிடுகிறோம் என்றால், ஊரிலிருந்து வருபவர்களுக்கும் சாப்பாடு கொடுக்க வேண்டும், இந்த நிலைகள் எல்லாம் இருக்கின்றன.

கர்நாடகாவில், பெங்களூரில் இருந்தால் ரூ. 400 தினப்படி; வெளியூர் டூர் போகிறோம் என்று சொன்னால் 500 ரூபாய் கொடுக்கிறார்கள். குழுக்களெல்லாம் வெளியே போகின்றன. அப்போது 500 ரூபாய் கொடுக்கிறார்கள். ஹரியானாவிலே 250 ரூபாய், பஞ்சாபிலே 200 ரூபாய், பீகார், வெஸ்ட் பெங்கால், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் 200 ரூபாய் கொடுக்கிறார்கள். எனவே, அதைப்பற்றி சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரயில்வே கட்டணம் 10,000 ரூபாய் கொடுக்கிறார்கள். டி.ஆர்.ஏ. 10,000 ரூபாய் கொடுக்கிறார்கள், அதை இரண்டு பகுதிகளாகக் கொடுக்கிறார்கள். மிசோரம் மாநிலத்தில் 40,000 கிலோ மீட்டர் என்று கணக்குப்போட்டு ஒரு கிலோ மீட்டருக்கு 400 ரூபாய் என்று கணக்குப்போட்டு மொத்தமாக 1,60,000 ரூபாய் வருடத்திற்குக் கொடுக்கிறார்கள். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மிசோரமில் 1,60,000 ரூபாய் கொடுக்கிறார்கள்; பஞ்சாபில் 50,000 ரூபாய் கொடுக்கிறார்கள்; உ.பி.-யில் 65,000 ரூபாய் கொடுக்கிறார்கள்; அஸ்ஸாமில் 30,000 ரூபாய்

கொடுக்கிறார்கள், பீகாரில் 30,000 ரூபாய் கொடுக்கிறார்கள்; ஹரியானாவில் 50,000 ரூபாய் கொடுக்கிறார்கள், பக்கத்திலே இருக்கிற கேரளா 35,000 ரூபாய் கொடுக்கிறார்கள். கேரளாவைவிட நாம் குறைந்திருக்கிறோம் என்பதை சிந்தித்துப் பார்த்து, அதை உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, முன்னாள் எம்.எல்.ஏ.-க்கள் ஓய்வூதியம், சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கு கொடுக்க வேண்டும், அவர் இறந்துவிட்டால் அவருடைய துணைவியாருக்கு அந்த ஓய்வூதியம் தொடர வேண்டும், குடும்பத்திற்குத் தொடர வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி).

அதோடு கார் பற்றி சொன்னார்கள். (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் இரண்டையும் கவனிப்பார். எனக்குத் தெரியும். படித்துக்கொண்டே இருப்பார், அதேநேரத்தில் பேச்சையும் கவனிப்பார். நான் கேட்டுக்கொள்வது, கார் கொடுப்பதாக இருந்தால் கொடுங்கள். தயவுசெய்து, எல்லோருக்கும் கார் கொடுக்க முடியவில்லை என்றால் - மற்ற மாநிலங்களில் கார் கொடுத்திருக்கிறார்கள், அரசே கார் கொடுத்திருக்கிறது, அரசே செலவை ஏற்றுக்கொள்கிறது, அதைச் செய்வதாக இருந்தால் செய்யுங்கள் - இல்லையென்றால் கடன் இல்லாத — (சிரிப்பு) வட்டி இல்லாத கடன் கொடுக்க வேண்டும். பேசும்போது தானாகவே வந்துவிட்டது, கடன் கொடுக்காதீர்கள், சும்மா, மானியமாகக் கொடுங்கள் என்று இருப்பதற்காகவே, அப்படி சொல்லிவிட்டேன். எனவே தயவுசெய்து நீங்கள் அதைச் செய்துத் தரவேண்டும்.

அடுத்து, தொகுதியிலே நிச்சயமாக ஒரு அலுவலகம் வேண்டும். எவ்வளவு பெட்டிஷன்ஸ் வருகின்றன, எனவே, அவைகளை 'புராசஸ்' செய்து உரியவர்களுக்கு! கலெக்டருக்கு, தாசில்தார்களுக்கு, அமைச்சர்களுக்கு, அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டுமானால், நிச்சயமாக அலுவலகம் வேண்டும். எனவே, அதை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதல்வர் அவர்கள் எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல வேண்டும். இன்றைக்கு கில்லட்டின் என்று சொல்லுகிறார்கள். எனவே, தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி (குறுக்கீடு) நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். நீங்கள் சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இன்று கில்லட்டின் இல்லை என்று சொல்லாமல் இருந்தேன். (சிரிப்பு). திரு. சி.டி. தண்டபாணி.



பிற்பகல் 12-50

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு மானியக் கோரிக்கைகள் அடங்கிய இந்த விவாதத்திலே கலந்துகொள்வதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். முதலிலே கோவை மாநகரத்தைப் பொறுத்தவரையில் நூறு ஆண்டுகளாக ஒரே ஒரு மருத்துவமனை இருந்து கொண்டிருக்கிறது; அது அரசு மருத்துவமனை. மீண்டும் ஒரு மருத்துவமனை வேண்டுமென்று நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே வேண்டுகோள் விடுத்து இருக்கின்றோம்; அவர்களும் கவனிப்பதாகக் கூறி இருக்கின்றார்கள். அதை இந்த ஆண்டிலாவது நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கோவை மருத்துவமனையில் என்.ஆர்.ஐ., எக்கோ-கார்டியா, சி.டி. ஸ்கேன் போன்றவைகளைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாநகரம் வளர்ந்து இருந்தாலும்கூட 2,000-க்கும் மேற்பட்டவர்கள் குடிசைகளிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டித்தருவதற்கான ஏற்பாட்டைச் செய்துதர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சிறுவர் கலையரங்கம் ஒன்றைக் கட்டுவதாக ஏற்கெனவே சொல்லப்பட்டது. அதையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நஞ்சுண்டாபுரம் ரோட்டிலிருந்து போத்தனூர் செல்ல ஒரு ரோடு போட்டால் அங்கு போக்குவரத்து நெரிசல் குறையும். அதையும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூரில் ஒரு ரிங் ரோடு போட்டதைப் போலவே, கோவை மாநகரத்திலேயும் சுற்றி ஒரு ரிங் ரோடு போட்டால் போக்குவரத்து நெரிசல் இருக்காது.

சென்னை நகரத்தை கிரேடு 1-ஏ-1 நகரமாக ஆக்கித் தருவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சி எடுத்து, இப்போது மத்திய அரசு அதை ஏ-1 நகரமாக அறிவித்து இருக்கிறது. அதேபோல, கோவை மாநகரமும் விலைவாசி அதிகமாக உள்ள நகரமாகும்; எனவே, அதையும் கிரேடு-1 நகரமாக ஆக்கித் தருவதற்கு மத்திய சர்க்காரிடத்திலே வாதாட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு கருத்துக்களை நம்முடைய நண்பர்கள் குறிப்பிட்டார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தரப்பட வேண்டிய சலுகைகளைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். ஆனால், இதே சட்டமன்றத்தில் பார்த்தோம்; 10 ஆயிரம் அல்ல, 15 ஆயிரம் அல்ல, ஒரே ஒரு ரூபாய் மட்டுமே சம்பளம் வாங்கிக்கொண்டு ஒருவர் முதலமைச்சராக இங்கே காலம் தள்ளினார் என்பதையும் நம்மாலே பார்க்க முடிந்தது. ஆனால், எப்படி இருந்தாலும்கூட, இங்கு சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய நூல் நிலையத்தில் சென்று படிப்பதற்குரிய வசதியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தந்து இருப்பதற்காக நான் உள்ளபடியே நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால், இன்னும் அதற்குரிய அலமாரிகள் வாங்கப்படவில்லை. அதனால் இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடரில் புத்தகங்களை எல்லாம் முறையாக எடுத்துப் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. எனவே, அந்த வசதிகளை உடனடியாகச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, சட்டமன்ற உறுப்பினர்களுடைய கடமை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிர்வாகத்திலே என்ன பங்கு இருக்கிறது என்பதைத் தயவுசெய்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். சட்டமன்றத்திற்கு வெளியேதான் நம்முடைய பணி இருக்கிறது. சட்டமன்றத்தை விட்டு வெளியே போனால் அதாவது சட்டமன்றக் கூட்டங்கள் முடிந்ததற்குப் பின்னால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நிர்வாகத்திற்கும் சம்பந்தம் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. நாடாளுமன்றத்தில் இரண்டு வகையான குழுக்கள் இருக்கின்றன. ஒன்று ஆலோசனைக் குழு—கன்சல்டேட்டிவ் கமிட்டி—என்றும். இன்னொன்று நிலைக் குழு—ஸ்டேண்டிங் கமிட்டி—என்றும் இருக்கின்றன. ஆலோசனைக் குழுவிற்கு அங்கே தலைமை வகிக்கக்கூடியவர் சம்பந்தப்பட்ட அமைச்சர். அதில் 10 அல்லது 15 உறுப்பினர்கள் இருக்கக்கூடும். அது 2 மாதங்களுக்கு ஒரு முறை கூடும். எந்தெந்த இலாகாவிலே எந்தெந்த உறுப்பினர்களுக்கு விருப்பம் இருக்கின்றதோ, அவர்கள் அதிலே உறுப்பினர்களாகி, அந்த இலாகாவிலே நடக்கக்கூடிய காரியங்களை நேரடியாக அமைச்சர் மூலமாக, அதிகாரிகள் மூலமாக நேரடியாக விவாதிப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. எனவே, ஒவ்வொரு முறையும் அங்கே நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளை, நிர்வாகத்திலே நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளை சட்டமன்ற உறுப்பினர்கள் நேரடியாகத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இருக்கின்றது இங்கு அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லை. பெரும்பாலான



சட்டமன்ற உறுப்பினர்கள் கடிதங்கள் எழுதினாலும்கூட, அதற்குப் பதில் வராத சூழ்நிலையை நம்மாலே பார்க்க முடிகிறது. எனவே, அப்படிப்பட்ட ஒரு குழுவை இங்கே ஆரம்பித்தால், 26 அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், ஒரு குழுவிற்கு 10 உறுப்பினர்கள் என்று வைத்து, 2 மாதங்களுக்கு ஒரு முறை அந்தக் குழுவின் கூட்டம் கூட்டப்பட்டால், நிச்சயமாக அரசாங்கத்தினுடைய நேரடியான நடவடிக்கைகளை சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள முடியும் என்பதை இந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல ஸ்டேண்டிங் கமிட்டி என்பது இன்றைக்கு உலகம் பூராவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1945-லே அமெரிக்காவிலேயும், 1965-லே யு.கே.-விலேயும், 1985-லே நம்முடைய இந்தியத் திருநாட்டிலேயும் அது கொண்டுவரப்பட்டது. நம்முடைய சட்டமன்றத்திலேயும் ஸ்டேண்டிங் கமிட்டியில் விவரம் தெரிந்த 5 அல்லது 6 பேர் அந்தக் குழுவிலே இருப்பார்களேயானால், அது ஒரு இலாகாவினுடைய வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கக்கூடியதாக இருந்தால், அது அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் உறுதுணையாக இருக்க முடியும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-55

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படுவது ஒரு கம்ப்யூட்டர். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்துதரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். நான் இங்கே சில கருத்துக்களை, சில வசதிகளைப் பற்றிச் சொல்வதற்குத் தவறிவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் கோபித்துக் கொள்வார்கள். தினப்படி என்பது ரூ. 150-லிருந்து ரூ. 300 ஆக உயர்த்த வேண்டும். அது நம்முடைய உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, அமைச்சர்களுக்கும் தினப்படி கொடுக்கப்படவேண்டும். அவர்களும் எம்.எல்.ஏ-க்கள்தான். ஆகவே அமைச்சர்களுக்கும் தினப்படியைக் கொடுக்க முயற்சி எடுக்க வேண்டும்.

பாரதீய ஜனதா கட்சி ஆளுகின்ற டில்லி மாநகரம் ஒரு யூனியன் பிரதேசம். அந்த யூனியன் பிரதேசத்தில் ஒரு எம்.எல்.ஏ.-வுக்கு 15,000 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆகவே நம்முடைய தலைவர் அவர்கள் யோசித்து உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்

கொள்கிறேன். கடைசியாக ஒன்று, இப்படிப்பட்ட பிரச்சினைகள் பற்றி தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும்போது, அவர்கள் தரக்கூடிய கோரிக்கைகள் குறித்து நிரந்தரமாகக் கவனிப்பதற்காக ஒரு கமிட்டி தேவை. நாடாளுமன்றத்தில், 'ஜெனரல் பர்ப்பஸ் கமிட்டி' என்று இருக்கிறது. அந்தக் குழுவிலே அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். எனவே, உறுப்பினர்களின் தேவைகளை அப்போதைக்கப்போது உணர்ந்து, அவர்களுடைய கருத்துக்களையும் அறிந்து, அந்தக் குழுவே அரசாங்கத்திடம் சொல்லி, அந்தப் பணத்தை உறுப்பினர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். சம்பளத்தைத் தவிர பாக்கிப் பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிரந்தரமான குழுவையும் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது சுதந்திரப் போராட்டம் என்று நாம் தொடங்கியது 1975 அவசர நிலைக் காலத்திற்குப் பிறகு. அப்போது மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட தோழர்களுக்கும், சிறைச்சாலைகளில் இருந்தவர்களுக்கும் ஓய்வூதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, மொழிப் போர்த் தியாகிகளுக்கும் 1986 இல் கைதானவர்கள் உட்பட அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக திரு. டி. அமரமூர்த்தி.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில சட்டமன்றம், ஓய்வூதியங்கள், தேர்தல்கள் பற்றிய மானியக் கோரிக்கைகளில் தமிழ மாநில காங்கிரஸ் சார்பாக நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நிர்வாகத்திற்கும் என்ன சம்பந்தம் என்று பேசினார்கள். அதுதான் உண்மையான நிலையாக இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்திற்கு நாங்கள் சென்றால் உங்களுக்கு இங்கே என்ன வேலை என்று கேட்கிறார்கள். பேரூராட்சி அலுவலகங்களுக்குச் சென்றால் உங்களுக்கு என்ன வேலை என்று கேட்கிறார்கள். தாலுகா அலுவலகம் சென்றால் உங்களுக்கு இங்கே என்ன வேலை என்றுதான் கேட்கிறார்கள். நாங்கள் ரோட்டில் அனாதைகளாக நிற்க வேண்டிய





நிலைதான் இருக்கிறது. நான் இதைக் குறிப்பிட வேண்டியதற்குக் காரணம், 1996-97 தொகுதி வளர்ச்சி நிதி பற்றி கலெக்டருக்கு சிபாரிசு செய்து, நான் கொடுத்து கிட்டத்தட்ட 6 மாதங்கள் ஆகிவிட்டன. இன்றுவரை டெண்டர்கூட கோரவில்லை. அதைப்போல அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலும் எந்தப் பணியும் மேற்கொள்ளப்படவில்லை.

இப்படி பல்வேறு சூழ்நிலைகளில் உரிமையாக யாரிடமும் எந்தப் பணி என்ன ஆயிற்று, ஏன் அந்தப் பணி மேற்கொள்ளப்படவில்லை என்று கேட்பதற்கு நாங்கள் சென்றால், உங்களுக்கு என்ன வேலை என்று கேட்டு, ஏதாவது பேசவேண்டுமானால் சட்டமன்றத்தில் சென்று பேசுங்கள் என்று அதிகாரிகள் குறிப்பிடுகிறார்கள். ஆகவே, நிருவாகத்தில் எங்களுக்கு முழுமையான பங்கை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இங்கே பேசிய பல உறுப்பினர்கள் கேட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையிடத்திலே இருப்பிடத்துடன் கூடிய அலுவலகம் தரவேண்டுமென்று கேட்டார்கள். கார் இல்லாத உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடன் மூலம் கார் வாங்க உதவி செய்யவேண்டுமென்றும் கேட்டார்கள். அதை நானும் வலியுறுத்துகிறேன். அத்துடன் ஒவ்வொரு உறுப்பினருக்கும் உதவியாளரும், டைப்பிஸ்டும், அலுவலகமும் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையிடத்திலே தங்கிப் பணியாற்ற வீடு கட்ட கடன் வசதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு பேரூராட்சித் தலைவரோ, ஒன்றியப் பெருந்தலைவரோ எங்கு வேண்டுமானாலும் தொலைபேசியில் பேசிக் கொள்ளலாம். ஆனால் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் உள்ள தொலைபேசியில் உள்ளூர் கால் போட்டாலும், கால் ஒன்றுக்கு ரூ. 1-50 வீதம் நாங்கள் செலுத்தவேண்டும். ஆகவே தொலைபேசிக் கட்டணத்தையும் இந்த அரசே கட்ட வேண்டும். அதோடு எஸ்.டி.டி. இணைப்பும் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூபாய் 42 கோடி செலவில் புதிய வளாகம் கட்டப்பட்டு வருகிறது. அதிலே 2 அறைகள் கொண்ட வளாகம் கட்டப்படுவதாக அறிகிறோம். அதிலே ஒருசில

வளாகங்கள் 3 அறைகளுடைய வளாகங்களாக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் மிகவும் குறைவாக இருக்கின்றது. அவர்களுக்கு 5,000 ரூபாய் ஓய்வூதியம் வழங்கி, அவர்கள் இறந்துவிட்டால் அவர்கள் குடும்பத்தார்கள் அதைப் பெற்றுக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவப் படிக்கான பில்லைக் கொடுத்துவிட்டு அலைய வேண்டியிருக்கிறது. ஆகவே, மாதந்தோறும் 5,000 ரூபாய் மருத்துவப்படி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, சட்டமன்றக் கூட்டத் தொடர் நாட்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 150 ரூபாய்தான் படி வழங்குகிறார்கள். இதிலே நண்பர்களுடன் சேர்ந்து காலை டிபன் சாப்பிட்டாலே சரியாகி விடுகிறது. 2 இட்லி 30 ரூபாய் என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஒரு தோசை 40 ரூபாய் என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்தத் தினப்படியையும் உயர்த்தித் தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதோடு...

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 5-ஸ்டார் ஓட்டலிலே சாப்பிடுகிறாரா அல்லது 3-ஸ்டார் ஓட்டலிலே சாப்பிடுகிறாரா? இந்த விலை எங்கே இருக்கிறது?

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்களெல்லாம் கடந்த கால ஆட்சியிலே எம்.எல்.ஏ. ஆகி இருந்தால், 5-ஸ்டார் ஓட்டலிலே சாப்பிடலாம். (மேசையைத் தட்டும் ஒலி). நாங்களெல்லாம் சாதாரண விவசாயக் குடும்பத்தைத் தேர்ந்தவர்கள்தான். அவர்கள்தான் கோடி கோடியாகப் பார்த்தார்கள் நாங்கள் இன்னும் தெருக்கோடி [illegible] பார்க்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே....

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த ஓட்டலிலே இந்த விலை இருக்கிறது என்பதைச் சொல்லச் சொல்லுங்கள்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் மகிழ்ச்சியோடு உரையாற்ற வேண்டிய நாள். இதிலே யாருடைய மனதையும் புண்படுத்தக்கூடிய அளவுக்கு யாரும் பேச வேண்டாம்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலுள்ள கேண்டீனில் காப்பிகூட சாப்பிட முடியவில்லை. அந்த அளவுக்கு மிகவும் தரம் குறைந்த உணவு தருகிறார்கள். ஆகவே, வெளியில் சென்றுதான் நாங்கள் வாங்க வேண்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இதற்கு உதவியாளரைக் கூப்பிட்டால் மணிக் கணக்கிலே காத்திருக்க வேண்டும். காலையிலே 6-00 மணிக்கு கூப்பிட்டு ஒரு ஓ.ஏ.வை வரச் சொல்லுங்கள் என்று சொன்னால் அவர் 9-00 மணிக்குத்தான் வருவார். அவருக்கு வேண்டிய வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு 9-00 மணிக்கு வந்து காப்பி வேண்டுமா என்று கேட்டால், எப்படி நாங்கள் 9-30 மணிக்கு சட்டமன்றத்திற்கு வந்து கலந்து கொள்கின்ற சூழ்நிலை ஏற்படும்? ஆகவே, சட்டமன்ற விடுதியிலே நல்ல தரமான உணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல கூப்பிட்ட குரலுக்கு உடனடியாக உதவியாளர் வந்து சட்டமன்ற உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அடுத்து, வாரத்திலே 7 நாட்கள் கலந்து கொண்டால்தான் ஊருக்குச் சென்றுவர பயணப்படி அளிக்கிறார்கள். 5 நாட்கள் கலந்து கொண்டால்கூட, அந்தப் பயணப்படி கொடுப்பதில்லை. நாங்களெல்லாம் கிராமத்திற்கு 2 நாட்களில் போகவில்லையென்றால் எம்.எல்.ஏ.வைக் காணோம் என்று போஸ்டர் அடித்து ஒட்டிவிடுகிறார்கள். பழைய மாதிரி இல்லை. உடனுக்குடன், தினசரி சென்று மக்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால் வாரத்திற்கு 5 நாட்கள் கலந்து கொண்டாலும் பயணப்படி வழங்கலாம் என்று அனுமதி அளிக்க வேண்டும்.

அதேபோல, மற்ற மாநிலங்களில் வழங்குவதைப்போல மணியடிக்க [illegible] சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரயில் பயணப்படியை அதிகரித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் உரையாற்றுகின்றபோது, மொழிப் போர்

தியாகி ஒருவர் இறந்தது குறித்து தகவல் தெரிவிக்கவில்லை என்பதற்கு ** என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். ** என்ற அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத் தியாகிகள், மொழிப் போர் தியாகிகள், இட ஒதுக்கீட்டுத் தியாகிகளுக்கெல்லாம் நமது அரசாங்கம் ஓய்வூதியம் வழங்கி வருகிறது. ஆனால், தந்தை பெரியார் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, 26-11-1957-லே ஜாதி ஒழிப்புப் போராட்டம் நடத்தி ஒரு பக்க நகலை எரித்த பல நூறு தியாகிகள் இன்றைக்கும் எந்தவிதமான உதவிப் பணமும் பெறாமல் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மானியக் கோரிக்கைகளில் வைக்கப்பட்ட இந்த மானியங்கள் பல்வேறு பிரச்சினைகளை, அரசினுடைய வெவ்வேறு வகையான கடமைகளை உள்ளடக்கி அமைந்தவையாக இருந்தாலும்கூட, இந்த அவையில் இந்த மானியங்கள்மீது உரையாற்றிய பெரும்பான்மையான சட்டப் பேரவை உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் அத்தனை பேரும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய இன்றைய பணிக்கான தேவைகளைத்தான் மிக அதிகமாக வலியுறுத்தி எடுத்துச் சொன்னார்கள்.

குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசுகிறபோது, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, நேரடியாக வெளியிலே நிர்வாகம் என்ற முறையில், நேரடியாக எப்படிப்பட்ட அதிகாரம் அமைந்திருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை என்றும் மற்ற துறைகளிலே உள்ளவர்களுக்கு, உள்ளாட்சி மன்றத் தலைவருக்கோ,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மற்றவர்களுக்கோ இருக்கிற அப்படிப்பட்ட அதிகாரம்கூட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை" என்பதை ஒரு குறையாக எடுத்துச் சொன்னார்கள். சட்டமன்றம், நாடாளுமன்றம் என்பதற்கும், உள்ளாட்சி மன்றம் என்பதற்கும் ஒரு அடிப்படை வேறுபாடு உண்டு. உள்ளாட்சி மன்றங்கள் நிர்வாக அடிப்படையில் உருவாக்கப்படுபவை. நிர்வாக இயந்திரத்தை மேற்பார்வை செய்கின்ற முறையிலே உருவாவதுதான் சட்டமன்றம், நாடாளுமன்றம். Legislative power என்று சொல்லப்படுகிற, இந்தச் சட்டமியற்றும் உரிமையையும், தகுதியையும் உடையவர்கள் நிருவாகத்தை ஒழுங்குபடுத்துகிற கடமையை மேற்கொண்டிருக்கிற காரணத்தால் நேரடி நிர்வாகத்தில் ஈடுபடுவது என்பது பெரும்பாலும் சட்டமும் நிர்வாகமும், இரண்டும் கைகோர்த்துவிட்ட ஒரு நிலையை ஏற்படுத்தும் என்ற காரணத்தால் அது ஒரு வகையிலே தவிர்க்கப்பட்டிருக்கிறது. நாட்டினுடைய ஜனநாயக அமைப்பே ஒரு பக்கம் நீதின்றம், இன்னொரு பக்கம் சட்டமன்றம், இன்னொரு பக்கம் நிர்வாக அமைப்பு என்ற இந்த மூன்றுக்கும் இடையிலே அமைந்திருக்கிறது. அதிலே குறிப்பாக, சட்டமன்றம் சார்பாகத்தான் அமைச்சர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்கிறார்கள். அந்த அமைச்சர்களுடைய நிர்வாகப் பொறுப்புங்கூட கட்டுப்பாட்டுக்கு உரியது. அமைச்சர்களே நேரடியாக நிர்வாகம் நடத்த முடியாது. முதலமைச்சர் கையொப்பம் இட்டு, நிதி அமைச்சர் என்ற முறையில் வரவு-செலவு இன்னின்ன துறைக்கு, இன்னின்ன பகுதிக்கு இந்த அளவில் வழங்கலாம் என்பதற்காக கையொப்பம் போட முடியுமே தவிர, அந்த நிதி எடுத்து வழங்குகிற, அந்த அதிகாரம் முதலமைச்சருக்கே நேரடியாகக் கிடையாது. எனவே, ஒருவகையில் இதுவும் நல்லது என்பதை மாண்புமிகு திரு. லத்தீப் அவர்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். நேரடியாக நாமே நிர்வாகத்திற்குப் போனால், இன்னும் எவ்வளவு இடைஞ்சல்கள் நமக்கு வரும் என்பதையும் திரு. லத்தீப் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அடுத்து, இந்தச் சட்டமன்றத்தினுடைய செயலகம், பாராளுமன்ற செயலகத்தைப்போல, முழுத் தனித்தன்மை உடையதாக, உரிமை உடையதாக இருக்க வேண்டுமென்ற ஒரு கருத்தை, மாண்புமிகு சுயேட்சை உறுப்பினர் அவர்கள் வெட்டுத் தீர்மானத்தின் மூலமாக எடுத்து வைத்தார்கள். கடந்த 6, 7 ஆண்டு காலத்திற்குள்ளாக சட்டமன்றத்தினுடைய செயலகம், ஏற்கெனவே அது அரசாங்க செயலகத்தினுடைய ஒரு துறையாக இருந்த நிலை மாறி, தனிச்

செயலகமாக உருவாகிவிட்டது. It is a separate Secretariat. எனவே, இந்தச் செயலகத்தை, இந்தச் செயலகத்தினுடைய நடைமுறையை பேரவைத் தலைவர் மூலமாகத்தான் கட்டுப்படுத்த முடியுமே தவிர, வேறு எந்த அதிகாரியும் கட்டுப்படுத்த முடியாது. இன்றைக்குக்கூட சட்டமன்றத்திற்காக ஒரு நிதி ஒதுக்கப்பட்டு, அந்தக் கோரிக்கை இங்கே நிறைவேறுகிறது என்று சொன்னால், இந்தச் சட்டமன்றச் செலவுகளுக்காக நிதி இங்கே வழங்கப்பட்டதற்குப் பின்னர், அந்த நிதியில் வேறு எந்தவொரு துறையும், அல்லது நிதித் துறையும்கூட கை வைக்க முடியாது. ஆகவே, ஒரு சுதந்திரமான தகுதி, பாராளுமன்றச் செயலகத்தைப்போல, நம்முடைய சட்டமன்றச் செயலகத்திற்கும் வாய்த்து இருக்கிறது. மேலும் ஏதேனும் சில வகையில் மேம்படுத்த மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசுகிறபோது அங்கேயுள்ள அலுவலர்களுக்கு தரப்படுகிற அதே சம்பளம் இங்கேயும் தரப்படவேண்டும் என்றார்.

உள்ளபடியே அந்த அவையினுடைய பொறுப்புகளும் இந்த அவையினுடைய பொறுப்புகளும் 'சிம்மெட்ரிக்கலாக' இருக்கலாமே தவிர, ஒரேமாதிரியாக இருக்கலாமே தவிர ஒன்றே ஆகிவிடாது. ஒரேமாதிரி என்பது வேறு. ஒன்று என்பது வேறு. இது ஒரு மாநில அளவிற்கு வரையறுக்கப்பட்ட சில சட்டங்களுக்கு. அது அகில இந்திய அளவிற்கு; இன்னும் சொல்லப்போனால், பல்வேறு மாநிலப் பிரச்சினைகளையும் சேர்த்து கவனிக்க வேண்டிய ஒரு பெரிய அவை. எனவே, சில வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். இருந்தாலும் சட்டமன்றச் செயலகம் சுதந்திரமாகச் செயல்படுவது எல்லா வகையிலேயும் பேணிக் காப்பாற்றப்படும். அதற்குரிய கடமையை இந்த அரசு கருத்தில் கொள்ளும் என்றும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

மற்றொன்று, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமையை ஆற்றுவதற்கு உடனடியாக ஒரு சீருந்து தேவை அல்லது கார் தேவை, கடன் பெற்றும் நாங்கள் வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்றெல்லாம் பல கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டு, அரசேகூட வாங்கித் தரலாம் என்ற அந்தக் கருத்தும் தெரிவிக்கப்பட்டது. இதிலே எனக்கு ஒன்றும் அதிகக் கருத்து வேறுபாடு இல்லை. ஏதாவது உடனடியாகச் செய்வதாக இருந்தால்தான் நான் ஆழ்ந்து யோசித்துப்





பழக்கமே தவிர, (சிரிப்பு) எனக்கு உடனடிச் செயல்பாடு என்ற முறையில் நான் இதைக் கருதவில்லை; இருந்தாலும் அரசு ஆலோசிக்கும். அதற்கு ஏற்பட்ட தடை, அரசியல் சட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் வாங்குகின்ற ஊதியத்திலேயிருந்து அவர்களுக்காக கடன் அடிப்படையில் கார் போன்றவை வாங்கி வழங்கப்படுமானால், அதைத் திரும்பப் பெறுவதற்கு சரியான விதிமுறைகள் இல்லை என்ற காரணத்தால், ஏற்கெனவே அரசியல் சட்ட அடிப்படையில், அதிலே உள்ள விதி அடிப்படையில் நம்முடைய சட்டமன்றத்தால் கார் வாங்க கடன் வழங்குவதற்கு வாய்ப்பில்லை, வழியில்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டு, அந்தக் கருத்தை மறுபரிசீலனை செய்கிற முறையில், வேறு சில மாநிலங்களில் வாங்கி வழங்கியிருப்பதாகவோ அல்லது கடன் வழங்கி, கடனுக்கு அனுமதி வழங்கி இருப்பதாகவோ, தெரிவித்திருக்கிற காரணத்தால், அதைக் குறித்துக் கேட்டபோது, அவர்களும் எங்களுக்கு சட்டப்படி செய்தோமா என்பது தெரியவில்லை என்ற கருத்தை அவர்களும் தெரிவித்து, இன்னொரு மாநில அரசைக் கேட்டபோது, சட்டப்படி வாங்கி வழங்குவதற்கு நமக்கு உரிமையில்லை என்ற கருத்தையும் தெரிவித்து, அந்த விவரங்கள் எல்லாம் கிடைத்து இருக்கின்றன. வேண்டுமானால் சட்டமன்றப் பேரவையினுடைய சில குழுக்கள் இருக்கின்றன. அந்தக் குழுக்களில், நம்முடைய அவைக் குழுவும் இருக்கிறது. அந்த அவைக் குழுவிலே இதைப்போன்ற பிரச்சினைகளை, பிரச்சினைகளை ஆராய்ந்து...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே தெரிவிக்கிறபோது, இதிலே சட்டச் சிக்கல்கள் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் கடன் அளித்து, பிறகு அவர்களிடமிருந்து, பதவிக் காலத்திலேயிருந்து அந்தத் தொகையை மீண்டும் பெறுவது என்பது எப்படி என்கிற விவாதம் ஒருபுறம் இருந்தாலும்கூட, நமக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்போதுமே தயாராக இருக்கிறார்கள். நீங்கள் எப்படி எல்லாப் பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களுக்காக, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்காக ஜீப்புகளை எல்லாம் வாங்கிக் கொடுத்தீர்களோ, அதேபோல் 234 உறுப்பினர்கள், பிளஸ் நாமினேட்டட் நபர் ஒருவர், ஆக மொத்தம் 235 உறுப்பினர்கள்; இந்த 235 எம்.எல்.-ஏக்களுக்கு 235 கார்களை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாங்கித் தர முடியாதா என்பதைத்தான் நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீங்கள் வாங்கி கலெக்டரிடமே கொடுத்து விடுங்கள். கலெக்டரிடம் கொடுத்த பிறகு, எங்கள் பதவி, எவ்வளவு நாட்கள் இருக்கிறதோ, அவ்வளவு நாட்கள் எங்களுக்குக் கொடுங்கள். எங்களுடைய பதவி போனபிறகு, நீங்கள் வேண்டுமானால் திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள். We don`t want that car again திருப்பிக் கொடுத்து விடுகிறோம். ஆகவே, இந்த முறைப்படி நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முதல்வர் அவர்களோடு கலந்து ஆலோசித்து, உடனடியாக இப்போது அறிவிப்பை மகிழ்ச்சியோடு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கார் வாங்கியிருக்கிறார்கள் என்கிற ஒரு பெருமையைப் பெறவேண்டும் என்று நான் விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எல்லாமே முதலமைச்சருக்குப் பெருமையாக இருக்கட்டும், அவர்களே கார் வாங்கித் தரட்டும், நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இல்லை என்றால், திரும்ப எடுத்துக் கொள்ளட்டும், பிறகு வேண்டுமானால் அந்தக் காரை அரசாங்க அலுவல்களுக்கு பயன்படுத்தட்டும் என்பதுபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இந்த அவையிலே நீண்ட நேரமாகச் சொல்லப்பட்ட கருத்து, எங்களுக்கு ஒரு கார்கூட சொந்தமாக இருக்கக் கூடாதா என்றுதான் பலரும் கேட்டார்கள். இருந்தாலும் இதுபற்றி சட்டச் சிக்கல் இருக்குமானாலும், வேறு விதத்திலே அரசு ஏதேனும் செய்யக்கூடுமானாலும், அதுபற்றிப் பரிசீலிக்க அரசு தயாராக இருக்கிறது; பரிசீலித்துத்தான் நான் சொல்ல முடியுமே தவிர, வேறு வகையிலே நான் எதையும் தெரிவிக்க முடியாது. மற்றொன்று, அதிக நேரம் இல்லாத காரணத்தால்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி

பிற்பகல் 1-15

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவைச் செயலகம் மூலமாக கார் வாங்கிக் கொடுப்பதில் சட்டச் சிக்கல்கள் இருக்குமேயானால், அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற நிதி நிறுவனங்கள் மூலமாக கார்கள் கொடுக்கலாம். டிஐஐசி. இருக்கிறது. வேறு பல





நிறுவனங்கள் இருக்கின்றன. ரிப்பேர் செலவைக்கூட நாமே பார்த்துக்கொள்ளலாம். எனவே அதன்மூலமாக நீங்கள் கார் வாங்கிக் கொடுப்பீர்களேயானால், அது உறுப்பினர்களுக்கு வசதியாக இருக்கும். அதிலே எந்தவிதமான சட்டச் சிக்கலும் இருக்காது. எனவே, மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பதனை நான் அவை முன்னவருக்குக் கூறி அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவரவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசியபோது, வேண்டுமென்றால் அவைக் குழு அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு அவைக் குழுவிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானத்தினை அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அது முதலமைச்சருடைய பார்வையிலே இருக்கிறது என்று நம்முடைய தலைவர் அவர்கள் ஏற்கெனவே கருத்து கூறியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே இருக்கிற பிரச்சினை எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் நம்பி கடன் கொடுப்பதற்கு (சிரிப்பு)...(குறுக்கீடு) நானும் சட்டமன்ற உறுப்பினர்தான், அரசியல் சட்ட விதி அந்தமாதிரி கொடுப்பதற்கு அனுமதிக்கவில்லை என்கிற ஒரு கருத்து இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் பரிசீலிக்க வேண்டுமே தவிர, மற்ற வகையிலே அரசு என்ன செய்யமுடியும் என்பதைப் பரிசீலித்துத்தான் பார்க்கமுடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, சட்டம் அனுமதிக்காத காரணத்தால்தான் இப்போது தடைப்பட்டு நிற்கிறது. அதைப் பரிசீலித்து, அதற்குப் பின்னர் தகுந்த ஏற்பாடு செய்வது பற்றி கருதலாம்.

அதற்குப்பின்னர் இங்கே இலங்கை அகதிகளைப்பற்றி பேராசிரியர் தீரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே மாதப் படியாக ரூ. 150 வழங்கப்பட்டபோது, அதை முதலமைச்சர் அவர்கள்தான்

ரூ.200ஆக அதிகப்படுத்தி வழங்கினார்கள். மத்திய அரசு அந்தச் செலவை ஏற்றுக்கொள்வதிலேகூட ஏற்கெனவே உள்ள ரூ. 150-ஐ ரூ.180 வரையிலேதான் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ரூ.20-ஐ இப்போதுகூட மாநில அரசினுடைய தனிப் பொறுப்பிலேதான் நாம் வழங்குகிறோம். அதுதவிர, அகதிகள் பிள்ளைகளுக்கு இலவசமான படிப்பு, அரிசி இலவசமாக வழங்குவது, இவைகளை வழங்குவதோடு, இலங்கை அகதிகளாக உள்ள அந்தக் குடும்பங்கள் வாழ்வதற்காக ஏற்கெனவே கட்டப்பட்ட வீடுகள் எல்லாம், குடிசைகள் எல்லாம் ஏறத்தாழ பெரும்பாலும் இப்போது பழுதுபார்க்கப்படவேண்டிய அல்லது முழுவதுமே மாற்றி, புதிதாகவே கட்டப்படவேண்டிய ஒரு நிலைமைக்கு ஆளாகியிருக்கிறது. அதற்கு ஏறத்தாழ ரூ.5, 6 கோடி அளவிற்கு, ஆயிரக்கணக்கான அந்தக் குடிசைகள் கட்டப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே இலங்கை அகதிகளைப் பற்றி தொடர்ந்து இந்த அரசு கவனித்து வருகிறது. அவர்களுடைய பிள்ளைகளை பொறியியல் கல்லூரியிலோ அல்லது மருத்துவக் கல்லூரியிலோ அல்லது பாலிடெக்னிக்கிலோ படிப்பதற்கு அவர்கள் விண்ணப்பிப் பார்களேயானால், இடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டு, உரிய அளவிற்கு அவர்களுடைய பிள்ளைகளுடைய கல்வி பாதுகாக்கப்படுகிறது. இலவசக் கல்வியும் வழங்கப்படுகிறது. எனவே இலங்கை அகதிகளுக்காக அவர்களுடைய துயரமான சூழ்நிலையைக் கருதி, இந்த அரசு முழு அளவிற்கு, இயன்ற வகையிலே எல்லாம் உதவுகிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல கருணை அடிப்படை வேலை எல்லாம் பெரும்பாலும் வழங்கப்படவில்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதிலே ஒவ்வொரு துறையிலேயும் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கானவர்கள் இறந்து போகிறபோது அவர்களுடைய பிள்ளைகளில் யாரேனும் ஒருவருக்கு கருணை அடிப்படையிலே வேலை தரவேண்டுமென்று விண்ணப்பிக்கிறபோது, அந்தத் துறையிலே போதுமான காலியிடங்கள் இல்லாத காரணத்தினால் வழங்கக்கூடிய நிலை இல்லை. கல்வித் துறையிலே மட்டும் ஏறத்தாழ 1989-90-க்குப் பின்னர் இந்த 6, 7 ஆண்டுகளாக புதியதாக அந்த நிலைமைக்கு ஆளாகிற பிள்ளைகளுக்கு இடம் தரக்கூடிய வாய்ப்பு இல்லை. ஒருவேளை அவர்கள் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்களேயானால் ஆண்டுக்கு 50 பேர், 100 பேருக்கு அந்த வேலை தர முடிகிறதே தவிர, கருணை அடிப்படையில் அனைவருக்கும் வழங்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது.



அந்த நிலையில், உடனடியாக அதற்கு ஒரு பரிகாரம் காணக்கூடிய வாய்ப்பும் இல்லை. இருந்தாலும் அரசு தொடர்ந்து முயற்சிக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல முன்னாள் கிராம நல அலுவலர்களுடைய ஓய்வூதியம் பற்றி குறிப்பிடப்பட்டது. நம்முடைய அரசு முன்னாள் கிராம நல அலுவலர்களுடைய ஓய்வூதியத்தையும்கூட உயர்த்தித்தான் வழங்குகிறது. ஏற்கெனவே அவர்கள் அடியோடு புறக்கணிக்கப்பட்டார்கள். நம்முடைய அரசு அவர்களைப் புறக்கணிக்கவில்லை. அவர்களுடைய குடும்பத்தையும் காப்பாற்றுகிற அளவிற்கு அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி அவர்களைக் காப்பாற்றுகிறது.

பிற்பகல் 1-20

அடுத்து ஒரு பொதுவான, ஆனால், இந்த அவை தெரிந்துகொள்ள வேண்டிய மிக முக்கியமான செய்தி. லாட்டரி சீட்டை ஒரு முறையான அதிர்ஷ்ட சீட்டு என்று கருதி மக்கள் வாங்கி ஏமாறுவதோ அல்லது மக்கள் மகிழ்வதோ அது ஒரு பக்கம். இன்னொன்று, உடனுக்குடன் ஏமாற்றுகிற லாட்டரி இன்னொரு பக்கம். உடனுக்குடன், அவ்வப்போது ஏமாற்றுகிற அது நம்பர் லாட்டரி என்றும், ஏதோ ஒரு விரல் அழிக்கும் லாட்டரி என்றும், இந்த லாட்டரிகளைத் தடுப்பதற்கான உரிமை மாநில அரசுக்கு உண்டு என்ற அளவுக்கு மத்திய அரசு ஒரு ஆணை—ஆர்டினன்ஸ் பிறப்பித்தும்கூட, மாநில அரசு அதற்கான நடவடிக்கை எடுத்து நமது மாநில அரசு ஆணை பிறப்பித்தும்கூட, நீதிமன்றத்திற்குச் சென்று நம்முடைய மாநில அரசினுடைய தடை ஆணையை செல்லாமல் நிறுத்தி தடுக்கிறார்கள். ஆகவே, பொது நலனுக்காக நம்முடைய மாநிலத்தை, வேறு மாநிலத்தைச் சேர்ந்த சில அமைப்புகள் இப்படிப்பட்ட லாட்டரி சீட்டுகள் மூலமாக சுரண்டுவதற்கு நாம் இடம் தரக்கூடாது. தனி மனிதனும் சுரண்டப்படுகிறான். மாநிலமும் சுரண்டப்படுகிறது. இதிலே ஒரு ஏமாற்றம் வளர்கிறது. இந்தமுறை தடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடு அரசு ஆணை பிறப்பித்தும்கூட, நீதிமன்றம் நம்முடைய மாநில அரசினுடைய தனி உரிமை என்ற முறையில் இப்படித் தடுப்பதை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால், இப்போது செயல்படுத்த முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. அது குறித்து தொடர்ந்து பரிசீலிக்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசு மேலும் என்ன செய்யலாம் என்பதைத் தொடர்ந்து ஆலோசிக்கும், தகுந்த நடவடிக்கை வாய்ப்புள்ளபோது எடுக்கும்.

அதேபோல, இங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பெரிய Flats, ஏறத்தாழ 240 பேருக்கு Flats, கிடைக்கக்கூடிய அளவிற்கு கட்டடங்கள் எழுப்புவதற்கான அடிப்படைப் பணிகள் எல்லாம் அடித்தளம் அமைக்கிற அளவுக்கு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் இதுவரை வேறு எந்தச் சட்டமன்றத்திலேயும் 11 அடுக்குமாடிக் கட்டடம் இப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியிலே அமைத்துத் தந்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்தியாவிலேயே இது முதல் நிலையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு) அது நிச்சயமாக அடுத்த ஆண்டு ஏறத்தாழ 1999 இறுதிக்குள்ளாக உருவாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல, தேர்தலைப் பற்றியும் குறிப்பேடுகள் இங்கே வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தேர்தல் இனி சட்டமன்றத் தொகுதியினுடைய அளவு, நாடாளுமன்றத் தொகுதியினுடைய அளவு, இதனுடைய சீரமைப்பு, அதேபோல் ஒதுக்கி வைக்கப்படுகிற, ரிசர்வ் செய்யப்படுகிற அந்தத் தொகுதிகள் எவையாக இருக்க வேண்டும் என்று தீர்மானிப்பது ஆகியவை எல்லாம் தற்காலிகமாகத் தடைபட்டு கி.பி. 2000-த்திற்குப் பின்னர் 2001 ஆவது ஆண்டினுடைய தொடக்கத்தில் மக்கள் தொகை புள்ளிவிவரங்கள் சேர்க்கப்பட்டு, வாக்காளருடைய புள்ளி விவரங்களும் சேர்க்கப்பட்டு, அதற்குப் பின்னர் 6 மாத காலத்தில்தான் தொகுதி சீரமைக்கப்படுகிற, அதாவது மறுமுறை தொகுதிகளைச் சீர்பிரித்து அமைக்கிற அந்த நிலைமை ஏற்படும். அப்போதுதான் மறுபடியும் நாம் அந்த ரிசர்வேஷன் போன்ற, இட ஒதுக்கீடு போன்ற, அந்த அடிப்படையில் எந்தத் தொகுதி தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்படுகிறது. ஒருவேளை மகளிருக்கு ஒதுக்கப்படுகிற நிலைமை வருமானால், மகளிருக்கு எது ஒதுக்கப்படுகிறது என்பனவெல்லாம் அப்போதுதான் நமக்குத் தெரியும். இடையிலே நாம் எதுவும் செய்வதற்கு சட்டத்தில் இடம் இல்லை. எனவே, அப்படி வருகிறபோது, சட்டமன்றத் தேர்தலேகூட, அதற்குப் பின்னர் வருவதுதான் இயற்கையான, நியாயமானதாக இருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலும் அதற்குப் பிறகு இரண்டாண்டு



கழித்துத்தான் வரவிருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களும் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களும் நடைபெற்றுள்ளன. சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலைவிட ஏறத்தாழ 3, 4 மடங்கு விரிவான அடிப்படையில் நடைபெற வேண்டிய அந்தத் தேர்தல், தமிழ்நாட்டில் நடைபெற்று ஏறத்தாழ இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பல்வேறு பொறுப்புகளிலே இன்றையதினம் அமர்ந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு நினைவூட்ட விரும்புகிறேன். எனவே, இந்தத் தேர்தல்கள் முறையாக நடைபெறுவதற்கான நல்ல வாய்ப்பு இருந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் முறையாக இயங்குகின்ற இந்த தேர்தல் ஆணையம் நிர்வாக அமைப்பு நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருப்பதை நான் பாராட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

அடுத்து இங்கே பேசிய திரு. தாமரைக்கனி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சீருடை அணிந்து வரவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் சிலபேரைப் பார்த்தால் என்னதான் சீருடை போட்டாலும் அவர்களுடைய தோற்றம் தனியாகத் தெரியும். ஆக சீருடை போட்டாலும் வித்தியாசமாகத் தெரியும் என்பதை நினைத்துப் பாருங்கள். அது ஆளுடைய தோற்றம், பருமன் அதைப் பொறுத்தது. ஆகவே சீருடையால் மட்டும் சீர்செய்ய முடியாது. சீராக நடந்து கொள்ளுகிற முறையில்தான் இதைச் சீர்செய்ய முடியுமே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் இந்த 2 ஆண்டுகளை நான் உள்ளபடியே பெருமையாக, மகிழ்ச்சியாகக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்தகால ஏடுகளிலே சட்டமன்றத்தைப் பற்றி வந்த செய்திகள் எல்லாம் பெருமளவுக்கு இன்றைக்கு வரமுடியாத அளவுக்கு ஒரு முறை ஏற்பட்டிருக்கிறது. சட்டமன்ற நேரத்தில் பெரும் பகுதி விவாதிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. உறுப்பினர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. எதிர்க்கட்சியினுடைய குரல்கள் மிக அதிக அளவுக்கு ஒலித்து, நியாயங்கள் பெறப்படுகின்றன. எனவே அந்தவகையில் எல்லாம் சட்டமன்றம் சீர்பெற்று இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் இன்னும் ஒரு கருத்து. வாக்குரிமைகள் எல்லாம்கூட கிராமங்களில் தடைபடுகிறது என்று ஒரு கருத்தைச் சொல்லி அதனால் அவர்களுக்குத் தனியாக வாக்குச் சாவடிகள் அமைக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதை நிரந்தரமான ஒரு கருத்தாக நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. 1998 இல் ஒரு இடத்திலே ஏற்பட்டு இருக்கக்கூடிய மாறுபாடு, மறுபடியும் 1999-லோ அல்லது 2000-லோ அதே இடத்திலே மறுபடியும் தேர்தல் வருகிறபோது அதே நிலை அங்கே இருக்காது.

இரண்டாவது, வாக்குச் சாவடிகளை ஜாதிக்கு ஒரு சாவடியாகவோ, சமூகத்திற்கு ஒரு சாவடியாகவோ பிரித்து அமைக்க முடியாது. சில இடங்களில் அந்தப் பிரச்சினை வருமானால் அங்கே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், அந்த நோக்கில் அந்தப் பிரச்சினை இருக்குமானால் அதைச் சமாளிப்பதற்காக, வாக்குச் சாவடியில் என்ன சீர்திருத்தம் செய்வது என்பதைத்தான் அவர் கண்டு, அவருடைய கருத்துக்கு ஏற்ப அமைக்க முடியுமே தவிர, நிலையாகவே சமூகங்களைப் பிரித்து வைப்பதற்கு வாக்குச் சாவடியை ஒரு சாதனமாக ஆக்க முடியாது அல்லது அதை காரணமாக ஆக்கிவிட மற்றவர்களுக்கு நாம் இடம் தர முடியாது.

1,200 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச் சாவடி அதிகமானால், 1500 பேருக்கு ஒரு வாக்குச் சாவடி என்ற முறையில்தான் வாக்குச் சாவடிகள் அமைய முடியும். குறிப்பாக 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ளாக வாக்குச் சாவடி இருக்கவேண்டும் என்பது தேர்தல் கமிஷனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் சில இடங்களில் எதிர்பாராத சூழ்நிலைகளில் அது 3 கிலோ மீட்டர் தூரமாக இருக்க நேரிடும். சில பகுதிகளில் போக்குவரத்து இடையூறுகள் இருக்கக்கூடிய இடங்களில்கூட வாக்குச் சாவடி அமைய நேரிடும். அவைகளை எல்லாம் அவ்வப்போது, அந்தத் தேர்தலுக்கு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அவரோடுள்ள அலுவலர்கள் பரிசீலித்து முறைப்படுத்துவார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் சில ஜாதிப் பிரச்சினைகள் வந்து, அந்தந்த ஜாதிக்காரர்கள், மெஜாரிட்டி ஜாதிக்காரர்கள் ஊரை கண்ட்ரோலில் எடுத்துக் கொள்கிறார்கள். மைனாரிட்டி



கம்யூனிட்டிகாரர்கள் வந்து ஓட்டுப் போட முடியவில்லை. அவர்கள் ஓட்டையும் சேர்த்து இவர்கள் போட்டுவிடுகிறார்கள். ஓட்டு உரிமையை இழந்து விடுகிறார்கள். இதனால் புதிய சாவடி வைக்க முடியவில்லை என்றாலும் பக்கத்துச் சாவடிகளில் அந்த ஆட்கள் ஓட்டுப் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாக்களிப்பது என்பது அவர்களுடைய அடிப்படை உரிமை. அவ்வாறு வாக்களிப்பதற்கு இடையூறாக இந்த நிலைமை இருக்கிறது என்று யாரேனும் விண்ணப்பிப்பார்களானால் ஒரு கிராமத்தில் உள்ள ஒரு சமூகத்தார் மட்டும் அல்ல, யாராவது விண்ணப்பிப்பார்களானால் மாவட்ட ஆட்சித் தலைவர் அதுபற்றி ஆலோசித்து, மேலே உள்ள தேர்தல் அதிகாரிக்குத் தெரிவித்து அவர்களுடைய இசைவைப் பெற்று, அந்த வாக்கை இந்த இடத்தில் அளிக்கலாம் என்று அவர்கள் வேண்டுமானால் ஏற்பாடு செய்யலாம். அது ஒரு வாக்காளருடைய Privilege-ஆகவும், அதேநேரத்தில் அதிகாரிகளுடைய தீர்மானமாகவும்தான் இருக்க முடியுமே தவிர பொது நியதியாக அமைய முடியாது.

அடுத்து, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது. இங்கே விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, முன்னாள் இந்திய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கு எல்லாம் இந்த அரசு பல்வேறு வகையில் தேசிய அரசு வழங்கக்கூடிய அந்த அளவைவிட அதிகமாகவும் குறையாமலும், ஓய்வு ஊதியங்கள் வழங்கியிருப்பதை நீங்கள் காணலாம். அந்த வகையில் எல்லாம் பல்வேறு நல்ல பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள் சம்பளமே வேண்டாம் என்று சொன்னார்கள். அப்படி யார் எழுதிக் கொடுத்தாலும் அது சட்டமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படும். (சிரிப்பு) அதிலே ஒன்றும் தடை இல்லை. ஆனால், ஒன்று கேட்டுவிட்டு இரண்டு வாங்கக் கூடாது. அவ்வளவுதானே தவிர, வேண்டாம் என்றால் ஏற்றுக்கொள்ளப்படும். இருந்தாலும்கூட சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதியத்தை மொத்தமாக...

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் பேரவை அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பெரிய அளவிலே உயர்த்த வாய்ப்பு இல்லை என்று சொன்னாலும்கூட, தொலைபேசிப்படி இப்பொழுது 1250 வழங்கப்படுகிறது. தொலைபேசியில் அதிகமாகப் பேசுவதாகச் சில நண்பர்கள் சொன்னார்கள். ஆகவே, அதை 500 ரூபாய் சேர்த்து 1,750 ரூபாய் ஆகவும்., தபால் படி ஏற்கெனவே வழங்கப்படுகிற 625-ரூபாயோடு 250 ரூபாய் சேர்த்து 875 ரூபாய் ஆகவும், தொகுதிக்காக வழங்கப்படுகிற படி ஏற்கெனவே உள்ள 625 உடன் 250 ரூபாய் சேர்த்து 875 ரூபாய் ஆகவும், அப்படி ஏற்கெனவே வழங்கப்படுகிற 8,000 ரூபாய் மொத்தமாக வழங்கப்படுவது 9,000 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. 1-6-1998 முதல் இது நடைமுறைப் படுத்தப்படும் என்று சட்டமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து டெய்லி அலவன்ஸ் என்று வழங்கப்படுகிற 150 ரூபாயை, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் அன்றாடச் செலவு அதிகமாவதை எடுத்துச் சொன்னதன் காரணமாக, 150 ரூபாய் என்பதை 250 ரூபாயாக இந்த நாள் படி 1-6-1998 முதல் உயர்த்தப்படுகிறது.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் தப்பித்தவறி இறக்க நேரிடுமானால், அவர்களுக்கு ஏற்கெனவே கலைஞர் அவர்கள்தான் 50 ஆயிரம் ரூபாய் மொத்தமாக ஒரு நிதி வழங்கி அந்தக் குடும்பத்திற்கு அந்த கால கட்டம் முடிகிற வரையில், அந்தச் சட்டமன்ற உறுப்பினர் உறுப்பினராக இருந்தால் எந்த ஆண்டு வரை இருப்பாரோ அது வரையில், குடும்பப் படியாக 250 ரூபாய் ஏற்கெனவே வழங்கப்பட்டது. இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர் தவறி மறைய நேரிடுமானால் அவருடைய குடும்பத்திற்கு மொத்த நிதியாக 1 இலட்சம் ரூபாய் வழங்குவது என்றும், குடும்பப் படி 250-க்குப் பதிலாக 500 ரூபாய் வழங்குவது என்றும், இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அதையும் நான் அறிவிக்கிறேன்.

அதேபோல, ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதியம் உயர்கிறபொழுது அதைவிட 1,000 ரூபாய் அளவு கூடுதலாக



இருக்கிற அமைச்சர், பேரவைத் தலைவர், முதல் அமைச்சர் ஆகியவர்களுடைய அந்த ஊதியத்தை உயர்த்த வேண்டிய ஒரு முறை இருக்கிறது அந்த அடிப்படையில் ஏற்கெனவே வழங்கப்பட்ட ஈட்டுப்படி முதலமைச்சர், அமைச்சர், பேரவைத் தலைவர். துணைத் தலைவர், எதிர்க் கட்சித் தலைவர், அரசுக் கொறடா ஆகியோருக்கு ஈட்டுப்படி, 2 ஆயிரம் ரூபாய் என்று இருப்பதை 3 ஆயிரம் ரூபாயாக வழங்கத் தீர்மானிக்கப்படுகிறது.

அதேபோல, சட்டமன்ற முன்னாள் உறுப்பினருடைய நிலை வருந்தத் தக்கதாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதுகாறும் குறைந்தபட்ச ஓய்வூதியம் 1,250 ஆகவும், 5 ஆண்டுகளுக்கு மேற்படுகிற ஆண்டுகளுக்கு ஒரு ஆண்டுக்கு ரூபாய் 100 என்ற வீதத்தில் உயர்த்தி அதிகபட்சம் ரூபாய் 2,500-ம் 1-4-1997 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இனி ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்றத்திலே வந்து அமர்வாரேயானால், அதாவது பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வாரேயானால், பதவி ஏற்ற அப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினருக்கு ஓய்வூதியம் மாதம் ரூபாய் 2,000-மும், 5 ஆண்டு உறுப்பினராக இருந்தவருக்கு மாதம் ரூபாய் 3,000-மும், அதற்கு மேற்பட்ட ஆண்டுகட்கு ஆண்டுக்கு 100 ரூபாய் வீதம் அதிகபட்சமாக 5,000 ரூபாயும், 1-6-1998 முதல் வழங்கப்படும். ஏற்கெனவே உள்ளது அதிகபட்சம் ரூ.2,500. இப்பொழுது அது ரூபாய் 5,000 ஆக உயர்கிறது.

சட்டமன்றத்திலே உறுப்பினராக 2, 3 மாதம் இருந்துகூட சில நேரத்திலே அந்தப் பொறுப்பை இழக்க நேரிடுகிறது. அப்படிப் பட்டவர்களுக்கும்கூட குறைந்தது 2,000 ரூபாய் என்று அந்த ஓய்வு ஊதியம் வழங்கப்படும். ஒரு 'டெர்ம்' 5 ஆண்டு இருந்தால் அவர்களுக்கு 3,000 ரூபாய் வழங்கப்படும். அதற்கு மேலாக எத்தனை ஆண்டுகள் இருந்தாலும் ஆண்டுக்கு 100 ரூபாய் வீதம் அதிகபட்சமாக 5,000 ரூபாய் வரையில் அந்த ஓய்வூதியம் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அதை நான் அறிவிக்கிறேன்.

அடுத்து, பணியாற்றுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு தனி அலுவலகம் - ஆபீஸ் தேவை என்பதை வெவ்வேறு கோணத்திலே தெரிவித்தனர். சிலர் பஞ்சாயத்து ஒன்றிய அலுவலகத்திலே எங்களுக்கு

[பேராசிரியர் க. அன்பழகன்] [1998 மே 26

இடமில்லை என்று தெரிவித்தார்கள். சிலர் தொகுதியிலே இடம் வேண்டும் என்று கேட்டார்கள். சிலபேர் சென்னையிலேயே இடம் வேண்டும் என்று கூடக் கேட்டார்கள். அது அவரவர்களுடைய வசதியைப் பொறுத்தது.

பிற்பகல் 1-35

இருந்தாலும்கூட, அவரவர் தொகுதியில் பணியாற்றுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுகக்கு ஒரு அலுவலகம் தனித் தன்மை உடையதாக இருக்க வேண்டுமென்ற காரணத்தால், பஞ்சாயத்து ஒன்றியத்திலேயே, நீங்களும் ஒரு அறை வைத்துக்கொள்ள வேண்டுமென்றெல்லாம் சொல்கிறபொழுது சில சிக்கல் வருகிறது; சில குறைபாடுகள் வரலாம். அந்த நிலைமை இல்லாமல் இருப்பதற்கு ஒரு ஆலோசனையாகச் சொல்லப்பட்ட கருத்து தொகுதியினுடைய மைய இடத்தில் அல்லது தாலுகா தலைநகரத்தில் அல்லது ஒரு ஒன்றியத்தினுடைய தலை நகரத்தில், ஏனென்றால் ஒரு 'அட்மாஸ்பியர்' இருக்க வேண்டும், தொகுதியில் அலுவலகம் என்று அவர்கள் ஊர் கிராமம், பலருக்கும் தெரியாத ஒரு கிராமத்தில் அவர்களுடைய அலுவலகத்தை வைத்துக்கொண்டால் பொது மக்களுக்குப் பயன்படாது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு மைய இடம், எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய ஒரு இடம், மாவட்ட ஆட்சித் தலைவர் சம்மதத்தோடு அல்லது ஒரு கலந்தாலோசனையோடு தெரிவு செய்யப்பட்ட அந்த இடத்திலே, சட்டமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கியிருக்கின்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கி, அந்த அளவில் ஒரு அலுவலகம் கட்டிக் கொள்ளலாம் என்பது ஏற்கப்படுகிறது. அந்தக் கருத்து ஏற்கெனவே இங்கு தெரிவிக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்களுக்காக... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து செய்யாமல் அரசே கட்டிக் கொடுக்க வேண்டுமென்பது சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி)



1998 மே 26]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளபடியே சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்களே திட்டமிட்டு கட்டிக்கொள்ளக்கூடிய வாய்ப்பாகும். ஏற்கெனவே, 35 இலட்சம் ரூபாயில் பள்ளிக் கூடங்களுக்கு, கல்லூரிகளுக்கு நாங்கள் அதை முன்பணமாகத் தர முடியாதா என்று எல்லாம்கூட சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் கேட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து வந்த ஆலோசனைதான் இந்தக் கருத்து. அரசுதான் கட்ட வேண்டுமென்றாலும் அரசு நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் உறுப்பினர்களின் தொகுதியிலே ஒரு அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தகுந்த இடத்தைத் தெரிந்தெடுத்து கட்டுவதற்குச் சொல்லப்பட்ட அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

பல்வேறு கருத்துககள் இந்த அவையிலே எடுத்துச் சொல்லப்பட்டிருந்தாலும்கூட, எல்லா கருத்துக்களுக்கும் விடையளிப்பது என்பது என்னால் இயலக்கூடிய ஒன்றாக இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களெல்லாம் உள்ளபடியே சட்டமன்ற உறுப்பினர்களுடைய பணிகள் சீராக, செம்மையாக நடைபெறுவதற்கு எந்தெந்த வகையிலே கவனிக்கப்பட வேண்டுமோ அந்த வகையிலே கவனிக்கப்படும். அண்மையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்ன ஆலோசனையின் அடிப்படையிலேதான் விடுதியிலே அவர்களுக்குத் தேவையான கேன்டீன் எல்லாம் தகுந்த முறையிலே அமைக்கப்பட்டது. இருந்தாலும்கூட, அந்தக் கேன்டீன் பற்றி சில பேர் குறைபாடுகள் சொன்னார்கள். அவ்வப்போது, நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் மூலமாக அந்தக் குறைகளைப் போக்குவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு என் உரையை நான் நிறைவு செய்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகிவிட்டது. ஒருவருக்கு அனுமதி கொடுத்தால் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று ஆயிரம் ரூபாய் மட்டுமே இங்கே அதிகரித்துக் கொடுத்து ஓர் அறிவிப்பைத் தந்தார்கள். நான் ஏற்கெனவே, பல மாநிலங்களை ஒப்பிட்டுக்காட்டி 30,777 ரூபாய் என்று கணக்குக் காட்டினேன். அப்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு மாநிலத்தைக் காட்டுங்கள் என்றுகூட எனக்குச் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்திலிருந்து பிரிந்து சென்ற, பக்கத்திலே இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்திலே இன்று 18 ஆயிரம் ரூபாய் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்காக ஒரு சட்டமுன்வடிவையே கொண்டு வந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இதற்கான பதிலை ஏற்கெனவே பேரவை முன்னவர் அவர்கள் பேசும்போதே சொல்லிவிட்டார்கள், எந்தெந்தச் சூழ்நிலையில் அப்படி உயர்த்தப்பட்டது என்று. (குறுக்கீடு) கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கோருவதெல்லாம் பக்கத்திலே இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்தைப் பார்த்தாலேகூட, அவர்கள் 750 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். அந்த 750 ரூபாயை நீங்கள் கழித்துக்கொண்டு அந்த 18 ஆயிரம் ரூபாயில், ஏனென்றால் சம்பளம் வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம் நாங்கள்; எனவே, அந்த 750 ரூபாயை மட்டும் கழித்துக்கொண்டு ஆந்திராவில் கொடுப்பதைப்போல மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுக்க வேண்டும். அவை முன்னவர் அவர்கள் அவர்களுடைய பங்குக்குச் சொல்லிவிட்டார்கள், எங்களுக்குத் திருப்தியில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயவுசெய்து கருணையோடு நிதியைச் சேர்த்துக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பஸ் கட்டணம், பால் விலை இதற்கு மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுக் காட்டக்கூடாது என்று சொல்கின்ற



திரு. ஞானசேகரன் அவர்கள் இதற்கும் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுக் காட்டக் கூடாது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை என் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை என் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

பிற்பகல் 1.40

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1951,83,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும்



மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 42—பல்வகை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கை எண் 42—பல்வகை வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ. வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1251,58,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (இ) கோரிக்கை எண் 60 — பல்வகை மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 338,11,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஈ) கோரிக்கை எண் 61 — மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 61 — மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடையு வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.487,45,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (உ) கோரிக்கை எண் 7 — மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7 — மாநிலச் சட்டமன்றம்., வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு.பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன். அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.9,44,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஊ) கோரிக்கை எண் 8 — தேர்தல்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8 — தேர்தல்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.



**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு.ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.29,32,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27-5-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[1998 மே 26

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்.

160. மனிதனால் செய்யப்படும் செயற்கை நெட்டிழை, செயற்கையிழை, நூல் பஞ்சிழை நூல் மற்றும் அவற்றின் யாதொரு கழிவுப் பொருள்கள் ஆகியவற்றின் விற்பனை மீது செலுத்தத்தக்க வரித்தொகையைக் குறைப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 7-4-1998 ஆம் நாளிட்ட 108ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

161. தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில், சுத்திகரிக்கப்பட்ட பருத்திக்கொட்டை எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட தவிட்டு எண்ணெய் உட்பட அனைத்து வகையைச் சேர்ந்த சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது மற்றும் வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 27-03-1998 ஆம் நாளிட்ட II/(1)/வ.வ.அ.நி./41 (கி.-2)/98ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 7-4-1998 ஆம் நாளிட்ட 109 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

162. காஞ்சிபுரம் மாவட்டம், M/s. ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு பதிவு செய்யப்பட்ட விற்பனையாளர் ஒருவரால் விற்பனை செய்யப்பட்ட நுகர்பொருள்கள், சிப்பப் பொருள்கள், பெயர்ச் சீட்டுகள் மற்றும் மூலதனப் பொருட்கள் ஆகியவற்றிற்காகச் செலுத்த வேண்டிய விற்பனை வரி மற்றும் கூடுதல் விற்பனை வரி ஆகியவற்றிற்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறையின் 12-01-1998 ஆம் நாளிட்ட 16 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவு மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)



163. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. (1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1970) 4(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)

163. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. (1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

228. மானியக் கோரிக்கை எண் 41 — ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99 (தமிழ், ஆங்கிலம்)

229. மானியக் கோரிக்கை எண் 41 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் வழங்கப்படும் ஓய்வூதியங்களும், ஏனைய சலுகைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99 (தமிழ், ஆங்கிலம்).

230. மானியக் கோரிக்கை எண் 42—பல்வகை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99 (தமிழ், ஆங்கிலம்).

231. மானியக் கோரிக்கை எண் 60 — பல்வகை மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99 (தமிழ், ஆங்கிலம்).

232. மானியக் கோரிக்கை எண் 61 — மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99 (தமிழ், ஆங்கிலம்)

233. மானியக் கோரிக்கை எண் 8 — பொதுத் தேர்தல்கள் பற்றிய வரைவு உரை மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99 (தமிழ், ஆங்கிலம்)

234. மானியக் கோரிக்கை எண் 8 — உள்ளாட்சித் தேர்தல்களுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99 (தமிழ், ஆங்கிலம்)

235. நிதித் துறையின் மக்கள் சாசனம் என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

236. சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் பதினோராவது அறிக்கை, 1997-98.

237. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினோராவது பட்டியல், வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).





# இணைப்பு-I

(113 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண்—41

## ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு—1998-99

இக்கோரிக்கையில் அரசு பணியாளர்கள், மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் ஆகியோரைப் பொறுத்தமட்டிலான ஓய்வூதியங்கள், குடும்ப ஓய்வூதியம், பணிக்கொடை வழங்குதல், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்கி வழங்குதல், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியின் கீழ் அரசு அளிக்கும் பங்குத் தொகைகள் முதலான வகையில் ஏற்படும் செலவினங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மாநிலத்தில் 31-12-1997 ஆம் நாள் நிலவரப்படி 3,82,642 பேர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர். அதன் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. | மாநில அரசு ஓய்வூதியம் பெறும் பணியாளர்கள் | 1,66,759 |
| 2. | ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் | 51,388 |
| 3. | அரசுப் பணியாளர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 83,037 |
| 4. | ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 26,304 |
| 5. | ஏனைய வகையில் ஓய்வூதியம் பெறுபவர்கள்* | 55,154 |
| | மொத்தம் | 3,82,642 |

(* இதில் சுதந்திரப் போராட்ட ஓய்வூதியர்களும் அடங்குவர்)

2. ஓய்வு கால நன்மைகளைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு, அதன் பணியாளர்களுக்குப் பின்பற்றும் அதே நடைமுறைகளையே மாநில அரசும் பின்பற்றுகிறது. ஓய்வூதியம், ஆற்றிய பணிக்கான பணிக்கொடை, இறப்பு பணிக்கொடை, பணிக்கொடைக்கான உச்ச வரம்பை உயர்த்துதல் ஆகியவற்றைக் கணக்கிடும் நடைமுறை போன்று பல்வேறு ஓய்வுகால நன்மைகளை மாநில அரசு மத்திய அரசைப் பின்பற்றி திருத்தியமைத்துள்ளது.

[1998 மே 26

3. இக்கோரிக்கையில் பின்வரும் இரு பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன:-

| | | |
|---|---|---|
| | | (ரூபாய்) |
| 2071. | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் (அனுமதித்தது) | 19,38,63,76,000 |
| 2235. | சமூக பாதுகாப்பும் நலனும் - | |
| 60. | ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் (அனுமதித்தது) | 13,19,41,000 |
| | மொத்தம் | **1951,83,17,000** |

## 4. ஓய்வூதியம்

அரசுப் பணியாளர் ஒருவர், குறைந்தது 10 ஆண்டுகள் தகுதிப் பணிபுரிந்திருந்தால், அவர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர். ஓய்வுபெறும் பொழுது கடைசியாக பெற்ற மாத ஊதியத்தில் 50 விழுக்காடு அல்லது ஓய்வு பெற்ற நாளுக்கு முன்னர் கடைசி 10 மாத கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 விழுக்காடு இதில் எது அதிகமோ அந்தத் தொகையே ஓய்வூதியமாக நிர்ணயிக்கப்படுகிறது. உயரளவாக 30 ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. 30 ஆண்டுகளுக்கு குறைவான தகுதிப் பணி உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம் குறைக்கப்படும். மத்திய அரசு ஓய்வூதியர்களுக்கு/ குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டது. போன்று மாநில அரசு 1-1-1996 முதல் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத்தை மாற்றி ஆணையிட்டுள்ளது. குறைந்த அளவு ஓய்வூதியத்தை மாதமொன்றிற்கு ரூ.375-லிருந்து ரூ.1,275 ஆக 1-1-1996 முதல் உயர்த்தி இவ்வரசு ஆணையிட்டுள்ளது.

### (i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை:

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு, ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவு பெற்ற ஒவ்வொரு ஆறுமாதப் பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை கணக்கிடப் படுகிறது. இது ஆற்றிய பணிக்கான ஒரே நேரத்தில் வழங்குகிற ஒட்டு



1998 மே 26]

மொத்தத் தொகையாகும். அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடைக்கும் கூடுதலாக இத்தொகை வழங்கப்படுகிறது. இதற்குக் குறைந்த அளவு அல்லது உயரளவு வரம்பு ஏதுமில்லை.

### (ii) இறப்புப் பணிக்கொடை:

பணியில் இருக்கும்போது மரணமடைகின்றவர்கள் நேர்வில் பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:-

| | பணிக்காலம். | பணிக்கொடையின் அளவு. |
|---|---|---|
| 1. | ஓராண்டுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் இரு மடங்கு |
| 2. | ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் ஆறு மடங்கு |
| 3. | ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு |
| 4. | இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சம் 33 மடங்கு மாத ஊதியத்திற்குட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாத தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்பு பணிக்கொடை எந்த இனத்திலும் ரூ.3.50 இலட்சத்திற்கு மேற்படக்கூடாது. |

### (iii) ஓய்வு காலப் பணிக்கொடை:

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் ஓய்வு ஊதியத் தகுதி பெறும் பணியை முடித்திருந்தால் அவர் ஓய்வு பெறும்போது மாத ஊதியத்தில், 16½ மடங்கு என்ற அதிக அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் ஊதியத்தில் நான்கில் ஒரு பங்குத் தொகை ஓய்வு காலப்

பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. உயரளவு ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்பு ரூ.2.50 இலட்சமாக இருந்தது. ஓய்வுக் கால பணிக்கொடையின் உச்சவரம்பை ரூ. 2.50 இலட்சத்திலிருந்து ரூ. 3.50 இலட்சமாக 1.1.1996 முதல் முன் தேதியிட்டு உயர்த்தி இவ்வரசு ஆணையிட்டுள்ளது. மேலும் 1-4-1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு பணிக்கொடையைக் கணக்கிடும்பொழுது கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியைச் சேர்த்து கணக்கிடப்பட வேண்டும் என்றும் இவ்வரசு ஆணையிட்டுள்ளது.

## 5. குடும்ப ஓய்வூதியம்:

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ, ஓய்வு பெற்ற பின்னரோ இறந்து விட்டால் அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்தால் அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டுக்காலம் பணியாற்றி இருக்க வேண்டும். மேலும், அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும் போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும், குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால் அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற, அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், ஓராண்டு பணியாற்றியிருந்து ஆனால் 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றியிருந்து ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் இறந்து விட்டால், அவர்கள் குடும்பங்களுக்கு ஒரே வீதத்தில் அதாவது அவ்வப்போது அனுமதிக்கப்படும் குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.375/-லிருந்து ரூ.1,275/- ஆக 1-1-1996 முதல் உயர்த்தியும் உயர்ந்தபட்ச





குடும்ப ஓய்வூதியம் உயர்ந்தபட்ச சம்பள விகிதத்தின் உயரளவில் 30 விழுக்காடாக நிர்ணயம் செய்தும் இவ்வரசு ஆணையிட்டுள்ளது.

குடும்ப ஓய்வூதியம், விதவைக்கு/மனைவியை இழந்த கணவனுக்கு, அவர்கள் மறுமணம் செய்து கொள்ளும் வரை அல்லது இறக்கும்வரை இதில் எது முந்தியதோ அதுவரை வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு இந்த குடும்ப ஓய்வூதியம் அவர்களுடைய குழந்தைகளுக்கு 25 வயது வரை அளிக்கப்படுகிறது. ஆனால், அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மன நலக்குறைவு அல்லது மனநலமின்மையுடையவராக இருந்தாலோ உடல் ஊனமுற்றவராக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்பட வேண்டும்.

## 6. கருணைத் தொகை வழங்குதல்:

1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வு பெற்ற/பணியிலிருக்கும்போது இறந்துவிட்ட உதவித் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய/ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச் சேர்ந்த மாநில அரசுப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்ட கழகப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு (இவர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்) வழங்கப்படும் கருணைத் தொகையை மாதம் ரூ.150-லிருந்து ரூ.605 எனவும் அகவிலைப்படி ரூ.31 எனவும் 1-11-1997 முதல் உயர்த்தி இவ்வரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவர்கள் 1-1-1998 மற்றும் அதன் பிறகு வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வையும் பெறத் தகுதியுடையவர்கள்.

## 7. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக அளித்தல்:

ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை ஒட்டு மொத்தமாகப் பெற ஓய்வூதியம் பெறுபவர்கள் தகுதியுடையவர் ஆவர். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் விண்ணப்பிக்கப்படுமாயின், மருத்துவப் பரிசோதனை இல்லாமல் ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக்

[1998 மே 26

கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெறும் நாளும், ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக் கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதமோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு முழுப் பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் வழங்கிட அரசு அனுமதியளித்துள்ளது. 1-4-1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் அரசு ஊழியர்கள் ஓய்வூதியத்தில் மூன்றில் ஒரு பகுதி என்பதற்குப் பதிலாக 40 விழுக்காடு வரை மொத்தமாகப் பெறுவதற்கு அனுமதி அளித்து இவ்வரசு ஆணையிட்டுள்ளது.

## 8. ஏனைய ஓய்வு கால நன்மைகள்:

(i) மத்திய அரசு பின்பற்றும் நடைமுறைக்கேற்ப ஆண்டிற்கு இருமுறை (அதாவது ஜனவரி 1, ஜூலை 1 ஆகிய நாட்களிலிருந்து) அகவிலைப்படி வழங்கப்படுகிறது. பணிபுரியும் பணியாளர்கள் பெறுவது போலவே, ஓய்வூதியம் பெறுபவர்களும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி தவணைத் தொகை பெறுகிறார்கள்.

(ii) ஓய்வூதியம் பெறுவோருக்கு/குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு திங்களொன்றுக்கு ரூ.50/- மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

(iii) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பிற்குப் பதிலாக அதிகப்பட்சமாக 240 நாட்கள் ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து விடுப்புக் காலச் சம்பளம் அனுமதிக்கப்படுகிறது. மேலும் அரைச் சம்பளத்துடன் கூடிய விடுப்பில் (Half Pay Leave on Private Affairs) 90 நாட்களுக்கு மிகைப்படாமல், 50 விழுக்காடு விடுப்பினை ஒப்படைப்பு செய்து விடுப்பு காலச் சம்பளம் பெறவும் அனுமதிக்கப்படுகிறது. ஈட்டிய விடுப்பின் முழு அளவிற்கும் அரைச்



1998 மே 26]

சம்பளத்துடன் கூடிய 90 நாட்கள் விடுப்பிற்கும் முழு விடுப்புக் காலச் சம்பளம் வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு ஓய்வு பெற்ற பின்னர் தங்களுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விழையும் ஊருக்குச் செல்வதற்கான பணிமாற்ற பயணப்படி வழங்கப்படுகிறது.

(v) அனைத்து ஓய்வூதியம் பெறுபவர்களும் ஒரு திங்களுக்கான ஓய்வூதியத் தொகை அல்லது ரூ.500/- இவற்றுள் எது குறைவானதோ அத்தொகையை பண்டிகை முன்பணமாகப் பெறத் தகுதியுடையவராவர்.

(vi) மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகை மற்றும் அகவிலைப்படியுடன் மாநில அரசின் அகவிலைப்படியினையும் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(vii) அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் ஏனைய ஓய்வூதியம் பெறுபவர்கள்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவருக்கும் பொங்கல் பரிசாக ரூ.100/- வழங்கப்பட்டு வந்தது. இவ்வரசு பொங்கல் பரிசுத் தொகையை ரூ.100/-லிருந்து ரூ.150/- ஆக 1998 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு உயர்த்தி வழங்கியுள்ளது.

(viii) தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அகவிலைப்படி மற்றும் மருத்துவப்படி பெறவும் அனுமதிக்கப்படுகிறது.

## 9. உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்:

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்குக் கிடைப்பது போன்ற ஓய்வு காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

[1998 மே 26

**10. ஓய்வூதியம் பெறுவோரின் குறை தீர்ப்பு பிரிவு:**

ஓய்வூதியம் பெறுவோரின் குறை தீர்ப்புப் பிரிவு ஒன்று நிதித் துறையில் செயல்பட்டு வருகிறது.

**11. ஓய்வூதிய இயக்ககம்**

ஓய்வூதியம் பெறுவோரின் நலனைக் கவனிக்க, ஓய்வூதிய இயக்ககம் என்னும் துறை ஒன்று 1-9-1994 முதல் செயல்பட்டு வருகிறது.

**12. தமிழ்நாடு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி என்ற ஒரு நிதியை ஏற்படுத்துவதன் மூலம், சிறப்பு மருத்துவச் சிகிச்சை/அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்காக ஓய்வூதியம் பெறுவோருக்கு நிதியுதவி அளிக்கும்பொருட்டு, 1-7-1995 ஆம் நாள் முதற்கொண்டு தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநில அரசில் பணிபுரியும் அனைத்திந்திய பணிகளை (All India Services) சார்ந்த ஓய்வூதியதாரர்களுக்கும் 1-4-1997 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**13. தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம்:**

இவ்வரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை 1-1-1997 முதல் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவோர் இறக்கும் காலம் வரை ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் ஒரே சீராக ரூ.20/- வீதம் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்கு பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த நிதி 1-1-1998-லிருந்து செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு ஓர் ஆண்டு தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின்



1998 மே 26]

குடும்பத்திற்கு ரூ.25,000/- வழங்கப்படும். இத்திட்டம் மாநில அரசில் பணிபுரியும் அனைத்திந்திய பணிகளை (All India Services) சார்ந்த ஓய்வூதியதாரர்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

**14. ஓய்வு காலப் பயன் குறித்த செலவு:**

கடந்த மூன்றாண்டுகளில் இக்கோரிக்கையின்கீழ் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை ஓய்வு காலப் பயன் குறித்த செலவு ஆகியவை பற்றிய விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:-

| ஆண்டு | ஓய்வூதியம் பெறுவோரின் மொத்த எண்ணிக்கை* | ஓய்வூதியம் பெறுவோர் குறித்த மொத்த செலவு | அதிகரிப்பு விழுக்காடு (முந்தைய ஆண்டு ஒப்பிடும்பொழுது) (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1996-97 | 3,62,072 | 1,078.67 | 36.03 |
| 1997-98 | 3,70,218 | 1,263.77 (திருத்த மதிப்பீடு) | 17.16 |
| 1998-99 | 3,82,642 | 1,951.83** (வரவு-செலவு திட்ட மதிப்பீடு) | 54.45 |

* ஏனைய வகையில் ஓய்வூதியம் பெறுபவர்களையும் சேர்த்து.

** மத்திய சம்பளக் குழுவின் பரிந்துரையின் பேரில் ஓய்வூதியத்தைத் திருத்தியமைப்பதற்கான நிதி ஒதுக்கம் மட்டும் இதில் அடங்கும். ஆனால் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் நிலுவைத் தொகை, இதில் அடங்காது.

[1998 மே 26

## இணைப்பு-II

(113 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**மானியக் கோரிக்கை எண் 41**

**விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் உரிய ஓய்வூதியங்களும் ஏனைய சலுகைகளும், 1998-99.**

"2235 சமூகப் பாதுகாப்பு நலன் - 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் - 102 சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம்-I திட்டத்தில் சேராதது - ஏ.எப் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்த குடும்பத்தினருக்கும் ஓய்வூதியம் முதலியவை.

(த.தொ.கு.எண்.2235-60-102 ஏ.எப் 0005)

**கொள்கை விளக்கக் குறிப்பு:**

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் அவர்களைச் சார்ந்த குடும்பத்தினருக்கும், மாநில அரசாலும் மத்திய அரசாலும் ஓய்வூதியங்கள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் பொது (பொது-இ)த் துறையில் 28-9-1966-ஆம் நாளிட்ட 2064-ஆம் அரசாணையில் 1-10-1966 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறையில் அடைக்கப்பட்டவர்களும் அல்லது காவல் கைதியாக இருந்தவர்களும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது மரணமடைந்தவர்கள்,கொடுந் தண்டனை விதிக்கப்பட்டவர்களும், துப்பாக்கிச் சூட்டிலும், காவலர் தடியடியிலும், கை, கால் இழந்து நிரந்தரமாக இயலாமையுற்றவர்களும் அரசியல் ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவர்கள். பிறகு இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களும் 1946 ஆம் ஆண்டு கடற்படைக் கழகத்தில் பங்கு கொண்டவர்களும், மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை பெற்றவர்களும் அரசியல் ஓய்வூதியம் பெறத்



1998 மே 26]

தகுதி உடையவர்கள் என அறிவிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட சிறைத் தண்டனைக் கால அளவான மூன்று மாதம் என்பது (கால அளவு) 1-4-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. அரசியல் ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட வருமான வரம்பு 11-3-1983 முதல் நீக்கப்பட்டது.

அரசியல் ஓய்வூதியம் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் நீதிமன்ற ஆணையின் அல்லது சிறைத் துறை ஆவணத்தின் பகுதி நகல் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். நீதிமன்ற/சிறைத் துறை ஆவண நகல் இல்லாத நிலையில், முன்னாள் நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர் வழங்கும் சக கைதி சான்றிதழ்கள் சிறைத் தண்டனை பெற்றதற்கான ஆதாரமாக 1-4-1980 முதல் ஏற்றுக்கொள்ளப்பட்டன. பின்னர், சக கைதி சான்றிதழ் வழங்கும் முறை திருத்தியமைக்கப்பட்டது.

ஓய்வூதியம் கோரும் மனுதாரர்கள், தற்போதைய ஆணைகளின்படி 15-10-1988 அன்று 70 வயதை நிரம்பியவராகவோ அல்லது அவர் கைது செய்யப்பட்ட நாளில் 18 வயதுக்குக் குறையாதவராகவோ இருத்தல் வேண்டும்; மற்றும் தேசிய விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டு இன்னலுற்றதற்கு ஆதாரமாக சிறைச் சான்றின் பகுதி நகல் அல்லது நீதிமன்றத் தீர்ப்பாணையத்தின் நகல் ஆவண ஆதாரமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்காணும் ஆவணங்கள் இல்லாத சூழ்நிலையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ள இரண்டு சக கைதி சான்று வழங்குபவர்களில், எவரேனும் ஒருவரிடமிருந்து சக கைதி சான்று பெற்று சமர்ப்பித்தல் வேண்டும். மனுதாரர் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். அரசால் வகுக்கப்பட்டுள்ள நெறி முறைகளின்படி மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட சீராய்வுக் குழு மேற்படி விண்ணப்பங்களை ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பும். அவ்வாறு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மீது அவை விதிமுறைகளுக்கு உட்பட்டு இருப்பின் அரசு பரிசீலனை செய்து ஓய்வூதிய ஆணை வெளியிடும்.

அரசியல் ஓய்வூதியதாரர் தனது மரணத்திற்குப் பின் தனது மனைவியை/கணவனை/உரிய வயதடையாத குழந்தைகளைத் தொடர்ந்து ஓய்வூதியம் பெற வாரிசாக நியமனம் செய்யலாம்.

[1998 மே 26

விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் திங்கள் தோறும் வழங்கப்படும் ஓய்வூதியம் அவ்வப்போது பின்வருமாறு உயர்த்தப்பட்டு வந்துள்ளது:

| கால அளவு | | | ஓய்வூதியத் தொகை மாதமொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|
| 1. | 1-10-1966 | முதல் | 50/- |
| 2. | 15-8-1972 | முதல் | 75/- |
| 3. | 1-4-1979 | முதல் | 100/- |
| 4. | 25-1-1981 | முதல் | 150/- |
| 5. | 10-6-1986 | முதல் | 250/- |
| 6. | 1-8-1989 | முதல் | 350/- |
| 7. | 1-1-1991 | முதல் | 400/- |
| 8. | 1-8-1992 | முதல் | 1,000/- |
| 9. | 1-9-1995 | முதல் | 1,500/- |
| 10. | 15-8-1997 | முதல் | 3,000/- |

இதனைத் தவிர மத்திய அரசு ஓய்வூதியம் பெறுவோருக்கும் பின் வருமாறு மாநில அரசின் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 15-8-1972 | முதல் | ரூ. 75/- |
| 25-1-1981 | முதல் | ரூ. 100/- |
| 01-8-1992 | முதல் | ரூ. 250/- |
| 01-4-1997 | முதல் | ரூ. 500/- |

மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப்போராட்ட வீரர்கள் இறந்தால், இந்த ஓய்வூதியத் தொகையானது அவரது மனைவிக்கு/கணவருக்கு/உரிய வயதடையாத குழந்தைகளுக்கு தொடர்ந்து வழங்கப்படுகிறது. அதன் விவரம் வருமாறு:



1998 மே 26]

| கால அளவு | | ஓய்வூதியத் தொகை (மாதமொன்றுக்கு ரூ.) |
|---|---|---|
| 1. | 1-10-1966 ஆம் நாளிலிருந்து | 50/- |
| 2. | 15-8-1972 ஆம் நாளிலிருந்து | 75/- |
| 3. | 1-4-1979 ஆம் நாளிலிருந்து | 100/- |
| 4. | 25-1-1981 ஆம் நாளிலிருந்து | 150/- |
| 5. | 10-6-1986 ஆம் நாளிலிருந்து | 250/- |
| 6. | 1-8-1989 ஆம் நாளிலிருந்து | 350/- |
| 7. | 1-1-1991 ஆம் நாளிலிருந்து | 400/- |
| 8. | 1-8-1992 ஆம் நாளிலிருந்து | 500/- |
| 9. | 1-9-1995 ஆம் நாளிலிருந்து | 750/- |
| 10. | 15-8-1997 ஆம் நாளிலிருந்து | 1,500/- |

நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிய மேலோரின் பணியைப் பாராட்டி, அவர்களுக்கு அல்லது அவர்களது வாரிசுகளுக்குச் சிறப்பு ஒட்டுமொத்த மானியங்களும், ஓய்வூதியங்களும் அரசினால் வழங்கப்படுகின்றன. 29-8-1996 வரை சிவகங்கை மருது பாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.150/- வீதமும் மற்றும் வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுதாரர்களுக்கு ரூ. 300/- வீதமும் மேற்படி ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. 30-8-1996 முதல் சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்கள் சுமார் 202 பேருக்கு ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் ஓய்வூதியமும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான மற்றும் முதுநிலை வாரிசுதாரர்கள் 9 பேருக்கு ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 500/- ரூபாயும் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

**(அ) மருத்துவ வசதிகள் :**

மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது இவ்விரு அரசின் ஓய்வூதியங்களையும் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்/விதவைகளுக்கும்/உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் 1-8-1990 ஆம் நாளிலிருந்து மாதம் ஒன்றிற்கு 15 ரூபாய் வீதம் மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

மத்திய/மாநில அரசு ஓய்வூதியம் பெற்றுவருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்கள் அரசு மருத்துவமனைகளில் 'பி' வகுப்பு வார்டு வசதிகளுடன் இலவச மருத்துவச் சிகிச்சை பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனோ அல்லது மகளோ மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது நிரந்தர உடல் ஊனமுற்றவராகவோ இருக்கும் நேர்வில் அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழக்கமாக அனுமதிக்கப்படுகின்ற இலவச மருத்துவ சிகிச்சை வசதியும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

**(ஆ) கல்விச் சலுகைகள்**

பள்ளிகள், கல்லூரிகள், தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பயின்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன், பேத்திகளுக்கு கல்விக் கட்டணச் சலுகையும் படிப்பு உதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றன.

மேலும், விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/ பேரன், பேத்திகளுக்கு தொழில்/தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

1. குழந்தைகளுக்கு 1980-81 ஆம் ஆண்டிலிருந்து பொறியியல் பட்டப்படிப்பில் (முதலாவது ஆண்டு) ஓரிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. பின்வருமாறு முன்னுரிமை அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளில் 3 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன:

(அ) விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகள்.



(ஆ) விடுதலைப் போராட்ட வீரர்களின் பேரன்/பேத்திகள்.

3. விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு, பேரன், பேத்திகளுக்கு சித்த மருத்துவ இளங்கலை பட்டப்படிப்பில் ஓரிடமும், ஓமியோபதி மருத்துவ இளங்கலை பட்டப்படிப்பில் ஓரிடமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

4. விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன், பேத்திகளுக்கு பல்தொழில்நுட்ப பயிலகத்திலும் (பாலிடெக்னிக்) சிறப்புக் கல்வி நிறுவனங்களிலும் ஓரிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(இ) வீட்டு வசதிகள் :**

தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்த வீடுகளில்/ மனைகளில்/அடுக்குமாடி வீடுகளில் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலும் சலவையாளர்/நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலும் மற்றும் பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலும் ஒவ்வொரு சதவிகிதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஈ) போக்குவரத்து வசதிகள் :**

1996 ஆம் ஆண்டு நவம்பர் திங்களுக்கு முன்னர் மத்திய/மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தைப் பெற்று வந்தவர்களுக்கு மட்டுமே மாநில அரசின் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களையும் சேர்ந்த பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிகள் வழங்கப்பட்டன. இவ்வரசு மேற்குறிப்பிட்ட சலுகையை விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களின் விதவைகளுக்கும் மற்றும் அவர்களுடைய சட்டப்படியான வாரிசுகளுக்கும் போக்குவரத்துத் துறையின் 5-11-1996 ஆம் நாளிட்ட 240 ஆம் எண் அரசாணையில் நீட்டித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**(உ) ஈமச் சடங்குச் செலவுகள் :**

விடுதலைப் போராட்ட வீரர் இறந்துபோவதை அடுத்து ஈமச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு ரூ. 1,000/- (ரூபாய்

ஓராயிரம் மட்டும்) உடனடியாக வழங்கப்படுகிறது. மாநில அரசின்/ மத்திய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தத்தக்கதாகும். இத் தொகை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் மூலமாக ரொக்கமாக வழங்கப்படும். இறந்து போன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் வட்டாட்சியர் அல்லது அவரது பதவித் தரத்திற்குக் குறையாத அலுவலர் ஒருவர் இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரரின் உடல் மீது அரசு சார்பில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது.

## மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டம்

மத்திய அரசு செயல்படுத்தும் இத்திட்டம் 15-8-1972 முதல் செயலில் இருந்தது. மத்திய அரசு பின்வரும் சலுகைககளுடன் இத் திட்டத்தை மாற்றியமைத்தது. 1-8-1980 முதல் 'சுதந்திரத்தா சைனிக் சம்மன் பென்சன் திட்டம்' என்று இத் திட்டம் மறுபெயரிட்டு அழைக்கப்படுகிறது.

(அ) ஓய்வு ஊதியதார்களின் ஆண்டு உச்ச வருமான வரம்பு ரூ.5,000/- என்பது 1-8-1980 முதல் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் பெண் விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப் பொறுத்தமட்டில் ஓய்வூதியம் அனுமதிக்கப்படுவதற்குச் சிறைத் தண்டணை அனுபவித்த காலம் ஆறு மாதத்திலிருந்து மூன்று மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(இ) தலைமறைவாக இருந்தவர்கள், ஆனால் அரசு ஆவணங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர்கள் இருவரிடமிருந்து சான்றிதழ்களைப் பெற்று தக்க ஆதாரமாக சமர்ப்பிக்கலாம். சான்றிதழ் அளிப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

(ஈ) சிறையில் இருந்ததற்கான சான்றிதழ்களை/சிறையில் உடன் இருந்தவர்களின் சான்றிதழ்களை முன்னாள் அல்லது தற்போதைய சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினரிடமிருந்து பெறவேண்டும் என்ற



நிபந்தனை தளர்த்தப்பட்டது. சிறைத் தண்டனை அனுபவித்ததாக உரிமை கோருபவர்களைப் பொறுத்தமட்டில், தளர்த்தப்பட்ட விதிகளின்கீழ் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு ஓராண்டுக் கால அளவிற்கு குறையாமல் சிறைத் தண்டனை அனுபவித்தவர்களும் மற்றும் தாமிரப் பத்திரம் பெற்றவர்களும் மத்திய அரசு வருவாயிலிருந்து ஓய்வூதியம் பெறுபவர்களும் மனுதாரர்களுடன் குறிப்பிடக்கூடிய கால அளவிற்குச் சிறையில் இருந்தவர்களுமான பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர்கள் இருவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழைச் சிறையில் உடனிருந்தவர் சான்றிதழாக அரசு ஏற்றுக்கொள்ளும்.

(உ) 10 சவுக்கடிகள்/கசையடிகள் அல்லது பிரம்படி பட்டு ஒருவர் துன்பப்பட்டிருந்தால் அது ஆறு மாதத்திற்கு குறையாமல் சிறைத் தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும்

(ஊ) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மத்திய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கத்தக்க மாதாந்திர ஓய்வூதியம் பின்வரும் வகையில் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது.

15-8-1972 முதற்கொண்டு ரூ. 200/-

1-8-1980 முதற்கொண்டு ரூ. 300/-

1-6-1985 முதற்கொண்டு ரூ. 500/-

14-11-1988 முதற்கொண்டு ரூ. 750/-

12-8-1992 முதற்கொண்டு ரூ. 1,000-/-

2-10-1994 முதற்கொண்டு ரூ. 1,500/-

15-8-1997 முதற்கொண்டு ரூ.3000/-

31-3-1998 அன்றைய நிலவரப்படி மாநில, மத்திய அரசுகளின் இரு ஓய்வூதியங்களையும் பெறும் தமிழ்நாட்டிலுள்ள பல்வகை விடுதலைப் போராட்ட வீரர்கள் குறித்த விவரம் வருமாறு:

[1998 மே 26

1. விடுதலை போராட்ட வீரர் மாநில ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை. (ரூ.3,000+15 மருத்துவப் படி) 2,852

2. விடுதலைப் போராட்ட வீரர் மாநிலத் தொடர் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களின் (எண்ணிக்கை (ரூ.1,500+15 மருத்துவப் படி) 2,090

3. விடுதலைப் போராட்ட வீரர் மைய அரசு ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை (ரூ.3,000+15 மருத்துவப் படி) 1,592

4. மைய அரசின் விடுதலை போராட்ட வீரர் ஓய்வூதியமும் மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியமும் பெறுவோர்களின் எண்ணிக்கை (ரூ.500+15 மருத்துவப்படி) 3,213

5. மைய அரசின் தொடர் ஓய்வூதியம் பெறும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ. 3,000+15 மருத்துவப் படி) 1,488

6. வீரபாண்டிய கட்டபொம்மன் வழித் தோன்றல்கள் (ரூ.500 மாதம் ஒன்றுக்கு) 9

7. சிவகெங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித் தோன்றல்கள் (ரூ. 500 மாதம் ஒன்றுக்கு) 202

**1987 ஆம் ஆண்டு வன்னியர் சங்கத்தினரால் நடத்தப்பட்ட 20 சதவிகித இட ஒதுக்கீடு போராட்டத்தில் கலந்து கொண்டு உயிர் நீத்தவர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்குதல்.**

மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவிகித இட ஒதுக்கீடு கேட்டு வன்னியர் சங்கத்தினரால் 1987 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சமூகநீதி போராட்டத்தில் கலந்து கொண்டு உயிர் நீத்தோரின் நினைவாக அவர்களது வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ஒன்றிற்கு ரூ.1,500/- வழங்க 9-4-1998 நாளைய பொதுத் (ச.ஒ.பி) துறையின் நிலை ஆணை எண. 595இல் அரசு ஆணையிட்டுள்ளது. 14-5-1998 நாளைய நிலவரப்படி இதனால் பயன் அடைந்தோர் 23 நபர்களாகும்.

இத்திட்டங்களுக்காக 1998-99 ஆம் ஆண்டில் ரூ.13,11,41,000/-நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1998 மே 26]

## இணைப்பு - III

**(113 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

### நிதித் துறை

### மானியக் கோரிக்கை 42

### பல்வகை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99

இது கூட்டு மானியக் கோரிக்கையாகும். இந்த மானியக் கோரிக்கையில் பொதுவாக, முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கப்படும் மானியம், உள்ளாட்சி மன்றங்கள், சிறு நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவி ஆகியவை தொடர்பான செலவு சேர்க்கப்பட்டுள்ளது. இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்பட்டோருக்குப் புது வாழ்வு அளிப்பதற்கான செலவும், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சிறுசேமிப்புத் திட்டம் தொடர்பான செலவும் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. வேறு எந்தக் குறிப்பிட்ட ஒரு மானியக் கோரிக்கையிலும் சேர்க்க இயலாத ஏனைய பல்வகை இனங்களும் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகள், பெருந்தலைப்பு வாரியாக பின்வருமாறு:-

| கணக்குத் தலைப்புகள் | 1997-98 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1997-98 திருத்த மதிப்பீடு | 1998-99 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| (தொகு மொத்த செலவு ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 2047. ஏனைய வரிவிதிப்புப் பணிகள் | 3775 | 3528 | 1625 |
| 2070. ஏனைய நிருவாகப் பணிகள் | 20 | 184 | 184 |
| 2075. பல்வகைப் பொதுவான பணிகள் | 52643 | 2784 | 112753 |
| 2235. சமூகப் பாதுகாப்பும் நலனும் | 8227 | 10462 | 10580 |
| 2250. ஏனைய சமூகப் பணிகள் | 66 | 68 | 19 |

[1998 மே 26

இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியத் திட்டங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

**சிறுசேமிப்பு**

இந்திய அரசு உருவாக்கிய பல்வேறு தேசிய சேமிப்புத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே உருவாக்கி இத்திட்டங்களை மேம்படுத்துவதே சிறுசேமிப்பு இயக்ககத்தின் முக்கிய பணியாகும். அஞ்சல் துறை மற்றும் வங்கிகள் மூலம் செயல்படுத்தப்படும் 15 ஆண்டுகாலப் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் நீங்கலாக, ஏனைய சிறுசேமிப்புத் திட்டங்கள் அஞ்சல் துறை வாயிலாக நிறைவேற்றப்படுகின்றன. ஓய்வுபெறும் அரசுப் பணியாளர்கள்/ ஓய்வுபெறும் பொதுத் துறை நிறுவனப் பணியாளர்களுக்கான வைப்பீட்டுத் தொகைத் திட்டம் அனைத்து மாவட்டத் தலைமை இடங்களில் உள்ள பாரத ஸ்டேட் வங்கி மூலமாக செயல்படுத்தப்படுகின்றது.

வசூலிக்கப்படும் நிகர சிறுசேமிப்புத் தொகையில் 75 சதவீதத் தொகையை மத்திய அரசு, மாநில அரசுக்கு 25 ஆண்டுக்கால நீண்டகாலக் கடனாக வழங்குகிறது. இதில் அசல் தொகைமீது கடன் தவணைகால நீட்டிப்பான 5 ஆண்டுகளும் அடங்கும். கடன் தொகைக்கான வட்டி வீதம் 14.5 சதவீதம் ஆகும்.

**இலக்கும் சாதனையும்**

அனைத்து மாவட்டங்களுக்கும் சிறுசேமிப்பின்கீழ் வசூலிக்க வேண்டிய தொகைக்கான இலக்கினை அரசு ஒவ்வோராண்டும் நிர்ணயிக்கின்றது. அரசு நிர்ணயிக்கும் இலக்கினை எய்துவதற்கு அந்தந்த தலைவரும், சென்னைக்கு மாநகர ஆணையரும் பொறுப்பாவர்.

சிறுசேமிப்பு இயக்ககம் கோட்பாடுகளை வகுத்து வசூலைக் கண்காணித்து வருகிறது. மேலும் இந்த இயக்ககம், வசூல் புள்ளி விவரங்களை ஒவ்வொரு மாதமும் திட்ட வாரியாகவும், மாவட்ட வாரியாகவும் தொகுத்து வருகிறது.



1998 மே 26]

கடந்த ஐந்தாண்டுகளில் சிறுசேமிப்பு வசூலின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, வசூலிக்கப்பட்ட தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:-

| ஆண்டு | நிகர இலக்கு | நிகர வசூல் | மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1993-94 | 590.00 | 621.47 | 331.36 |
| 1994-95 | 800.00 | 791.08 | 569.91 |
| 1995-96 | 700.00 | 490.70 | 291.40 |
| 1996-97 | 625.00 | 495.80 | 390.61 |
| 1997-98 | 775.00 | 539.00 | 396.99 |

1998-99 ஆம் ஆண்டில் ரூ. 1,400 கோடி நிகர இலக்கு எய்துவதெனக் கருதப்பட்டுள்ளது.

**சிறுசேமிப்புத் திட்டங்கள்—ஒரு கண்ணோட்டம்**

அனைத்துப் பிரிவு மக்களும் தங்களால் இயன்ற அளவு பணத்தை சேமிக்க உகந்தவாறு பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**(அ) வரிச்சலுகை உள்ள திட்டங்கள்**

1. பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்
2. தேசிய சேமிப்புப் பத்திரம் (VIII-வது வெளியீடு)
3. தேசிய சேமிப்புத் திட்டம்

**(ஆ) உயர் வருவாய் அளிக்கும் திட்டங்கள்**

1. கிஸான் விகாஸ் பத்திரம்
2. இந்திர விகாஸ் பத்திரம்

(இ) தொடர் வருவாய் அளிக்கும் திட்டங்கள்

1. அஞ்சலக மாதாந்திர வருமானத் திட்டம்

2. ஓய்வுபெறும் அரசு ஊழியருக்கான வைப்புத் திட்டம்

3. ஓய்வுபெறும் பொதுத் துறை நிறுவன ஊழியருக்கான வைப்புத் திட்டம்

(ஈ) பிற திட்டங்கள்

1. அஞ்சலக குறித்தகால வைப்புத் திட்டம்

2. அஞ்சலகத் தொடர் வைப்புத் திட்டம்

3. அஞ்சலக சேமிப்புத் திட்டம்

4. சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டம்

5. சஞ்சாயிகா சேமிப்புத் திட்டம்

**சிறுசேமிப்பு முகவரமைப்பு**

சிறுசேமிப்புத் தொகை வசூலில் சிறுசேமிப்பு முகவர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். தற்போது மூன்று வகையான முகவரமைப்புகள் உள்ளன.

(1) நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்பு

இந்த முகவர்கள் கிஸான் விகாஸ் பத்திரம், தேசிய சேமிப்புத் திட்டம், தேசிய சேமிப்புச் சான்றிதழ் (VIII-வெளியீடு), அஞ்சலக குறித்த கால வைப்பீடு, அஞ்சலக மாதாந்திர வருமானத் திட்டம் போன்ற சிறுசேமிப்புத் திட்டங்களில் வைப்பீடு செய்யுமாறு மக்களிடையே விளம்பரம் செய்கின்றனர். இம்மாநிலத்தில் இந்த முகவரமைப்பின்கீழ் தற்போது 9,099 முகவர்கள் உள்ளனர்.

(2) அங்கீகரிக்கப்பட்ட (பொது வருங்கால வைப்பு நிதி) முகவரமைப்பு

இந்த முகவர்கள் பொது வருங்கால வைப்பு நிதியின்கீழ் மட்டுமே வைப்பீடுகளைத் திரட்டலாம். தற்போது, இந்த முகவரமைப்பின்கீழ் மாநிலத்தில் 1,482 முகவர்கள் உள்ளனர்.



(3) மகளிர் முகவரமைப்பு

இந்த முறையின்கீழ் மகளிர் மட்டுமே முகவர்களாக நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் 5 ஆண்டு அஞ்சலகத் தொடர் வைப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மட்டுமே வைப்பீடுகளைத் திரட்டலாம். இவர்கள் நிலைப்படுத்தப்பட்ட முகவர்களாகக்கூட செயல்படலாம். தற்போது இந்த முகவரமைப்பின்கீழ் மாநிலத்தில் 10,247 முகவர்கள் உள்ளனர்.

(4) முகவர்கள், அவர்கள் வைப்பீடுகளைத் திரட்டும் பணிக்காக பின்வரும் ஊக்கத் தொகையைப் பெறுவர்—

| தொடர் எண் | முகவர்களின் வகை | மத்திய அரசு வழங்கும் கமிசன் | மாநில அரசு வழங்கும் ஊக்கத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்பு | 0.5 சதவீதம் முதல் 2.5 சதவீதம் வரை | 0.5 சதவீதம் முதல் 2.5 சதவீதம் வரை | 1 சதவீதம் முதல் 5 சதவீதம் வரை |
| 2. | அங்கீகரிக்கப்பட்ட பொது வருங்கால வைப்பு நிதி முகவரமைப்பு | 1 சதவீதம் | 1 சதவீதம் | 2 சதவீதம் |
| 3. | மகளிர் முகவரமைப்பு | 4 சதவீதம் முதல் 5 சதவீதம் வரை | 2 சதவீதம் முதல் 2.5 சதவீதம் வரை | 6 சதவீதம் முதல் 7.5 சதவீதம் வரை |

**சிறுசேமிப்பில் முதலீடு செய்பவர்களுக்கு ஊக்கத் தொகை**

அதிக அளவிற்கு வைப்பீடுகளைத் திரட்ட வேண்டுமென்ற நோக்கத்தில் மாநில அரசால் முதலீட்டாளர்களுக்கு ஊக்கத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது.

[1998 மே 26

### (அ) ரொக்க ஊக்கத் தொகை

பின்வரும் திட்டங்களில் செய்யப்படும் முதலீட்டுத் தொகையின்பேரில் 2 சதவீதம் ரொக்க ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

| திட்டம் | குறைந்த அளவு முதலீட்டுத் தொகை |
|---|---|
| அஞ்சலக மாதாந்திர வருமானத் திட்டம் | ரூ.6,000 |
| 5 ஆண்டுகள் அஞ்சலகத் தொடர் வைப்பீட்டுத் திட்டம் | ரூ.3,000 |
| பணியிலிருந்து ஓய்வுபெறும் அரசுப் பணியாளர்களுக்கான வைப்பீட்டுத் திட்டம் | ரூ.1,000 |
| பொதுத் துறை நிறுவனங்களிலிருந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கான வைப்பீட்டுத் திட்டம் | ரூ.1,000 |

கிஸான் விகாஸ் பத்திரத் திட்டத்தின்கீழ் வைப்பீடு செய்யப்படும் ஒவ்வொரு 1000 ரூபாய்க்கும் 1 சதவீத ரொக்க ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

### பரிசு ஊக்கத் தொகை

இத்திட்டத்தின்கீழ் இந்திர விகாஸ் பத்திரம், அஞ்சலக குறித்தகால வைப்பீடு, அஞ்சலக சேமிப்புக் கணக்கு நீங்கலாக அனைத்து சிறுசேமிப்புத் திட்டங்களிலும் குறைந்த அளவு ஒவ்வொரு ரூ.1000 முதலீட்டிற்கும் இலவசமாக பரிசுக் கூப்பன் ஒன்று வழங்கப்படுகிறது. ஒரு இலட்சம் பரிசுக் கூப்பன்களை கொண்ட ஒவ்வொரு வரிசைக்கும் மாவட்ட அளவில் குலுக்கல் நடைபெறுகின்றன. வெற்றி பெற்ற முதலீட்டாளர்களுக்கு மாருதி ஆம்னி வேன் முதல், ரூ.500-க்கான வங்கிக் கணக்கு காசோலை வரையிலான கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படுகின்றன.



1998 மே 26]

### வளமான வாய்ப்பும் வருங்காலத் திட்ட அணுகுமுறையும்

வருமானம் அதிகரிப்பதால் பொது மக்கள் பணத்தைச் சேமிக்கும் வாய்ப்பும் அதிகரிக்கின்றது. நெகிழ்வுத் தன்மை கொண்ட விருப்புரிமைகளுடன் அதிக வருமானம் கிடைக்கின்ற நீண்டகாலப் பலன்களை அளிக்கின்ற சிறுசேமிப்புத் திட்டங்களில் வீட்டு வருமானத்திலிருந்து சேமித்து முதலீடு செய்வது சிறந்த முறை ஆகும். அடுத்துவரும் ஐந்தாண்டுகளில் சிறுசேமிப்புத் திட்டங்கள் மூலம் வீட்டுவருமானம் சேமிப்புகளில் குறைந்தது 20 சதவீதத்தையாவது திரட்டுவது இலக்கை மாநிலம் நிர்ணயிக்க இயலும். இனிமேல், உள்ளாட்சி மன்றங்களை ஈடுபடுத்துவதன் மூலம் நகர்ப் பகுதிகளிலும் ஊரகப் பகுதிகளிலும் வீடுகள் தோறும் சென்று வீட்டு வருமான சேமிப்புகளைத் திரட்டுவது மாநிலத்தின் முயற்சியாக இருக்கும். அதே நேரத்தில், ஒவ்வொரு 500 வீடுகளுக்கும் ஒரு முகவர் பணிபுரியும் வகையில், முகவர்களின் எண்ணிக்கையைத் தற்போதுள்ள 10,000-த்திலிருந்து 20,000- ஆக அதிகரிக்கத் திட்டமிடப்படுகிறது. சேமிப்பவர்களுக்கு அனைத்துத் தகவல்களையும், பணி வசதிகளையும் அளிப்பதன்மூலம் இந்த முகவர்கள், வீட்டு வருமான சேமிப்பிலிருந்து திரட்டும் தொகையை அதிகரிக்க உதவி செய்வர். பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்களின் அனுகூலமான அம்சங்கள் குறித்துப் பொது மக்களுக்கு அறிவு புகட்டவும், தகவல் அளிக்கவும் அரசு அதன் விளம்பர நடவடிக்கைகளை அதிகரிக்கும்.

### பரிசுச்சீட்டு

தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டம் மறைந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களால் 15-8-1968 ஆம் நாளன்று முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம், 1975 செப்டம்பரிலிருந்து 1976 ஆகஸ்ட் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, பின்னர் மீண்டும் செயல்படுத்தப்பட்டது. ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குதல், கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்குதல், கிராமப் பகுதிகளில் சுகாதார வசதிகள் செய்து கொடுத்தல் முதலிய நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக நிதி ஆதாரங்களைத் திரட்டுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

[1998 மே 26

## பரிசுகளின் விவரமும், பரிசுச்சீட்டுக்களை அச்சிடுதலும்

குலுக்கல் ஒன்றிற்கு அச்சிடப்படும் பரிசுச்சீட்டுக்களின் எண்ணிக்கை, அதற்கான விலை, பரிசுகளின் விவரம் ஆகியன பின்வருமாறு:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கால அளவு | அச்சிடப்படும் பரிசுச் சீட்டுக்களின் எண்ணிக்கை | பரிசுச் சீட்டின் முகமதிப்பு (ரூபாய்) | முதல் பரிசுத் தொகை (ரூபாய்) | மொத்த பரிசுகளின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை மற்றும் ஊக்கத் உதவித் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | புதையல் | வாரந் தோறும் | 9,00,000 | 1 | 1,00,000 | 10,892 | 4,30,500 |
| 2. | பொன்மாரி | " | 9,00,000 | 1 | 1,00,000 | 10,895 | 4,29,900 |
| 3. | காவேரி | வாரந் தோறும் | 9,00,000 | 2 | 3,00,000 | 19,900 | 8,81,800 |
| 4. | பொன்னி | " | 12,00,000 | 2 | 4,00,000 | 38,528 | 12,21,000 |
| 5. | வைகை | " | 12,00,000 | 2 | 4,00,000 | 38,530 | 12,23,400 |
| 6. | மகாலெஷ்மி | மாதந் தோறும் | 12,00,000 | 5 | 10,00,000 | 73,351 | 22,12,000 |
| 7. | பம்பர் | " | 15,00,000 | 10 | 50,00,000 | 18,171 | 71,50,000* |
| 8. | சூப்பர் பம்பர் | " | 15,00,000 | 20 | 1,00,00,000 | 31,681 | 1,41,00,000* |

* பரிசுச்சீட்டு முகவர்களுக்கான பரிசுக் கூப்பன் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பரிசுப் பொருட்களின் விலையும் அடங்கும்.

### தள்ளுபடி

தமிழ்நாடு பரிசுச்சீட்டுக்களின் விற்பனையை அதிகரிக்கும் வகையில் முகவர்களுக்கு ஊக்கத் தொகை அளிப்பதைக் கருத்திற்கொண்டு பரிசுச்சீட்டுத் திட்டத்தின் வகையைப் பொறுத்தும், பரிசுச்சீட்டு



1998 மே 26]

விற்பனையின் எண்ணிக்கையைப் பொறுத்தும் முகவர்களின் தள்ளுபடித் தொகை 20 சதவீதம் முதல் 25 சதவீதம் வரை அனுமதிக்கப்பட்டுள்ளது. பரிசுச்சீட்டு முகவர்களும், விற்பனையாளர்களும், பரிசு விழுந்த சீட்டுக்களுக்குரிய அடிக்கட்டைச் சீட்டுகளுக்கு அளிக்கப்படும் ஆதாயத்தொகையைப் பெறவும் தகுதியுடையவர்களாவர்.

பரிசுச்சீட்டு முகவர்கள் தமிழ்நாடு பரிசுச்சீட்டு இயக்குநகரத்திலிருந்து தள்ளுபடித் தொகையைக் கழித்துக் கொண்டு, பரிசுச்சீட்டுகளுக்கான முழுத்தொகையையும் செலுத்துவதன் பேரில் பரிசுச் சீட்டுக்களைப் பெறலாம். பரிசுச்சீட்டு முகவர்கள், பரிசு விழுந்த பரிசுச்சீட்டுக்களை/ ஆதாயத்தொகை பெறுவதற்கான அடிக்கட்டைச் சீட்டுக்களைக் கொடுத்துவிட்டு அவற்றுக்குரிய ரொக்கத் தொகையைப் பெறுவதற்குப் பதிலாக பரிசுச்சீட்டுக்களை வாங்கிக் கொள்வதற்கும் தகுதியுடையோராவர்.

### பரிசுக் கூப்பன் திட்டம்

பரிசுச்சீட்டு முகவர்கள், சிறப்புக் குலுக்கலின்கீழ் வாங்கும் ஒவ்வொரு 250 பரிசுச்சீட்டுகளுக்கும் பரிசுக் கூப்பன் ஒன்றை இலவசமாகப் பெறுவதற்கு உரிமையுடையோராவர். இத்திட்டத்தின்கீழ், பரிசுச்சீட்டு முகவர்களுக்குப் பல்வேறு பரிசுகள் அளிக்கப்படுகின்றன.

### தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டத்தின்கீழ் கிடைக்கப்பெறும் நிகர ஆதாயத்தைப் பயன்படுத்திக் கொள்ளுதல்

பரிசுச்சீட்டுக்கள் விற்பனையின்மூலம் கிடைக்கப்பெறும் நிகர ஆதாயத்தொகை நலத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. டிசம்பர் திங்களில் நடைபெறும் முதல் குலுக்கலின் மூலம் கிடைக்கக்கூடிய ஆதாயத்தொகை முன்னாள் இராணுவத்தினர் நலத்திற்காக ஒதுக்கப்படுகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் நலத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை பற்றிய விவரங்கள் வருமாறு—

[1998 மே 26

| ஆண்டு | நிகர வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) | நலத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1992-93 | 255.00 | 189.00 |
| 1993-94 | 403.00 | 297.00 |
| 1994-95 | 939.00 | 580.00 |
| 1995-96 | 458.00 | 245.00 |
| 1996-97 | 631.00 | 245.00 |

## பரிசுச்சீட்டு விற்பனைக்குத் தடை

இந்தியக் குடியரசுத் தலைவர், பரிசுச் சீட்டுகள் (முறைப்படுத்தல்) அவசரச் சட்டத்தை (20/1997) அதிகார முறையில் அறிவித்துள்ளார். இந்த அவசரச் சட்டம், 2-10-1997 அன்று செயலுக்கு வந்தது. இந்த அவசரச் சட்டம், 30-12-1997 அன்று மீண்டும் அதிகாரமுறையில் அறிவிக்கப்பட்டது.

2. இந்த அவசரச் சட்டத்தின் முக்கிய அம்சங்களாவன—

(அ) இது நாடு முழுவதிலும் ஒரு எண் மற்றும் உடனடி பரிசுச்சீட்டுகளைத் தடை செய்கிறது.

(ஆ) பிற மாநில அரசு ஏற்பாடு செய்யும் அல்லது நடத்தும் அல்லது மேம்படுத்தும் பரிசுச்சீட்டு விற்பனையை இம்மாநிலத்திற்குள் தடை செய்ய மாநில அரசுக்கு இது அதிகாரமளிக்கிறது.

(இ) விற்பனையாளர்கள் அல்லது விற்பனை முகவர்கள் மூலம் பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்ய அவசரச் சட்டம் அனுமதிக்கிறது.

(ஈ) இந்த அவசரச் சட்டத்தின்கீழ் செய்யப்படும் குற்றம், பிடியாணை வேண்டாக் குற்றமாகவும் ஜாமீனில்விட இயலாத குற்றமாகவும் கருதப்படும். குற்றவாளிகள் இரண்டு ஆண்டுகளுக்கு சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இவையிரண்டும் விதித்து தண்டிக்கப்படுவர்.



1998 மே 26]

3. இந்த அவசரச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக்கொண்டு உள் (நீதி மன்றங்கள்-II) துறையின் 24-11-97 ஆம் நாளிட்ட 1703 ஆம் அரசாணையின் மூலம், தமிழ்நாடு அரசு, 1-1-1998 ஆம் நாளன்றும், அந்நாளிலிருந்தும் தமிழ்நாடு மாநிலத்திற்குள் ஏனைய மாநிலங்கள் ஏற்பாடு செய்யும் அல்லது நடத்தும் அல்லது முனைப்படுத்தும் பரிசுச்சீட்டு விற்பனையைத் தடை செய்வதை அறிவித்தது. பரிசுச்சீட்டு விற்பனையாளர்கள் சங்கம், மேற்சொன்ன அரசாணையை எதிர்த்து, உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்து, தமிழ்நாட்டில் ஏனைய மாநில பரிசுச்சீட்டு விற்பனைத் தடையை செயற்படுத்துவதை நிறுத்தி வைப்பதற்கு இடைக்காலத் தடையாணை பெற்றுள்ளது.

## பல்வேறு அயல்நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய இந்தியர்கள் மற்றும் இலங்கை அகதிகள் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர்:

### 1. தாயகம் திரும்பியோர்

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், பர்மா, இலங்கை மற்றும் வியட்நாமிலிருந்து இந்திய வம்சா வழியினர் இந்தியாவிற்குத் திரும்ப ஆரம்பித்தனர். பர்மாவிலிருந்து 1,44,445 நபர்களும், இலங்கையிலிருந்து 4,61,545 நபர்களும், வியட்நாமிலிருந்து 2,055 நபர்களும் இந்தியாவிற்குத் திரும்பியுள்ளனர். தாயகம் திரும்பியோர் இந்தியா வந்தடைந்ததும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கொட்டப்பட்டு ஆகிய இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து தோட்டப்பயிர், வேளாண்மை, கூட்டுறவு நூற்பாலைகள், வியாபாரம், தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கித் திட்டங்கள் மற்றும் சுயவேலை வாய்ப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படும் இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, குடியமர்த்தப்பட்டனர்.

### 2. அகதிகள்

இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மரபுவழி தமிழர்கள் 24-7-1983 முதல் அகதிகளாக இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு குறிப்பாக தமிழ் நாட்டிற்கு வர ஆரம்பித்தனர். 29-7-1987 வரையிலான முதற் கட்டத்தில் 1,34,053 இலங்கை அகதிகள்

[1998 மே 26

இந்தியாவிற்கு வந்தனர். இலங்கையில் நிலைமை சீரடைந்ததால், 24-12-1987 முதல் 31-3-1989 வரையிலான காலத்தில் 25,585 இலங்கை அகதிகள் கப்பல் மூலமாக இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பிச் சென்றனர். மீதமுள்ளோரில், தாமாகவே இலங்கைக்குச் சென்றவர் போக, மற்றவர்கள், அவர்களுடைய உறவினர்களுடன் இந்தியாவில் தங்கிவிட்டனர்.

இலங்கையில் மீண்டும் இனக்கலவரம் ஏற்பட்டதால், 25-8-1989 முதல் இந்தியாவிற்கு மீண்டும் அகதிகள் வரவு தொடங்கி மொத்தம் 1,22,078 இலங்கை அகதிகள் இந்தியாவிற்கு வந்துள்ளனர். இவர்களில் ஆதரவற்ற 1,15,680 அகதிகள் சென்னை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், தேனி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர்த்து, ஏனைய மாவட்டங்களில் அமைக்கப்பட்ட தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். 20-1-1992 முதல் 20-3-1995 வரை, 54,188 அகதிகள் கப்பல், விமானம் மூலமாகவும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இலங்கையில் நடந்துவரும் இனக்கலவரத்தின் காரணமாக, 31-7-1996 முதல் மீண்டும் அகதிகள் வரத் தொடங்கியுள்ளனர். 31-3-1998 நிலவரப்படி 3,968 குடும்பங்களைச் சார்ந்த 12,340 இலங்கை அகதிகள் தமிழகத்திற்கு வந்துள்ளனர். இனிவரும் காலத்தில் அகதிகள் வருகை அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. மீதமுள்ள 73,832 நபர்களில் 63,559 அகதிகள் இம்மாநிலத்திலுள்ள 133 அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதில் மீதமுள்ளோர். தன்னிச்சையாக இலங்கைக்கு திரும்பிச் சென்றனர் அல்லது உறவினர்களுடன் இந்தியாவில் தங்கிவிட்டனர்.

31-3-1998 நிலவரப்படி 133 அகதிகள் முகாம்களில் 63,559 அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அகதிகளுக்கு தங்குமிடம், மருத்துவ மற்றும் சுகாதார வசதிகள், குடிநீர், மின்சாரம் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகிறது. அவர்களுக்கு மைய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோளின்படி பணக்கொடையும், சலுகை விலையில் அரிசியும் வழங்கப்படுகிறது. எனினும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1997 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நடைபெற்ற வரவு-செலவு கூட்டத் தொடரில் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் பணக்கொடை ரூ.150 லிருந்து ரூ.200 ஆக உயர்த்தி அறிவித்துள்ளார்கள். இது



1998 மே 26]

நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதிலுள்ள வித்தியாசத் தொகை மைய அரசிடமிருந்து கோரப்பட்டது. இவ்வரசு அனுப்பிய செயற்குறிப்பின் அடிப்படையில், மைய அரசு, பணக்கொடையை 01-10-1997 முதல் ரூ.150 லிருந்து ரூ.180 ஆக அதிகரிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இருப்பினும் இவ்வரசு தொடர்ந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு மாதமும் ரூ.200ஐ தொடர்ந்து வழங்கி வருகிறது. அகதிகள் பராமரிப்புக்கு ஆகும் செலவினங்கள் முதலில் மாநில அரசால் ஏற்கப்பட்டு பின்னர் மைய அரசிடம் மீளப்பெறப்படுகிறது. அகதிகளின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்த உதவும் வகையில் அகதிகள், முகாமை விட்டு வெளியில் சென்று வேலைப்பார்த்து பொருள் ஈட்ட அரசு அனுமதித்துள்ளது.

## அகதிகளுக்கு இலவச துணிமணிகள் வழங்கும் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும், முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு, அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவில், துணிமணிகள், பாய் போன்றவை இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, ஒவ்வொரு ஆண்டும் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ், முகாம்களில் தங்கியுள்ள வயது வந்த எல்லா இலங்கை அகதிகளுக்கும், இலவச வேட்டி, சேலை, பொங்கல் பண்டிகையின்போது வழங்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

## அகதிகளுக்கானக் குடியிருப்பு வசதிகள்

பல்வேறு மாவட்டங்களில் அகதிகள் தற்காலிகமாக தங்குவதற்காக 1990 இல் கட்டப்பெற்ற குடியிருப்புகள் நீண்ட காலம் ஆகிவிட்டமையால் பழுதடைந்து, மீண்டும் புதுப்பித்து கட்டப்பட வேண்டிய நிலையில் உள்ளன. மாநில அரசின் கோரிக்கையினை ஏற்று 7,500 குடிசைகளை 1997-98 மற்றும் 1998-99 ஆகிய இரண்டு நிதி ஆண்டுகளுக்குள் புதுப்பித்திடவும், சுகாதார வசதி, குடிநீர் வசதி மற்றும் மின்சார வசதி செய்திடவும் ரூ.4,96,25,000/- செலவு மேற்கொள்ள மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பல்வேறு மாவட்டங்களில் உள்ள 4,000 குடிசைகளை புதுப்பிப்பதற்காகவும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும் குடிசைக்கு ரூ.5,750/- வீதம் ரூ.2,82,50,000/-ஐ 1997-98 ஆம் ஆண்டில்

[1998 மே 26

மைய அரசு நிர்ணயித்துள்ளது. இப்பணிகள் மாநில பொதுப் பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு விரைவில் முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 31-7-96-க்குப் பின் அகதிகள் வருகை அதிகரித்துள்ளபடியாலும் அவர்களை தங்க வைக்க தற்போதுள்ள முகாம்களில் போதிய இடம் இல்லாமையாலும் புதிதாக 3,000 குடிசைகளை ரூபாய் 1.80 கோடி செலவில் கட்டுவதற்கு, மாநில அரசு, மைய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பியுள்ளது. இதில் மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

## அகதிகளுக்கு வழங்கப்படும் கல்விச் சலுகைகள்

இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்கு பிளஸ் 2 வரை இலவசக் கல்வி, சீருடை, புத்தகங்கள் மற்றும் மதிய உணவு வழங்கப்படுகின்றது. இலங்கைத் தமிழ் அகதி மாணவர்கள் மற்றும் இலங்கைத் தமிழ் மாணவர்களை பிளஸ்-2 அளவிற்கு மேலான படிப்புகளில் அனுமதித்து, அவர்களின் கல்வியினை 1996-97 ஆம் கல்வியாண்டு முதல் கலைக் கல்லூரிகள் மற்றும் தொழில் முறைக் கல்லூரிகளில் தொடர்ந்து பயிலவும், அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த இட ஒதுக்கீடு முறையினை மீண்டும் வழங்கியும் அரசு ஜூன் 1996இல் ஆணை பிறப்பித்துள்ளதுளை.

## கணிப்பொறி தகவல் மையம் ஏற்படுத்துதல்

இலங்கை அகதிகள் மற்றும் தாயகம் திரும்பியோர் பற்றிய அனைத்து விவரங்களையும் கணிப்பொறியாக்கம் செய்து முழுமையான தகவல் மையத்தை ஏற்படுத்தும் பொருட்டு மறுவாழ்வுத் துறை ஆணையர் அலுவலகம், தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியிடமிருந்து ஒரு கணிப்பொறியினை இலவசமாகப் பெற்றுள்ளது. இதற்குத் தேவையான மென்பொருள் அபிவிருத்து மற்றும் கணிப்பொறியாக்கம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள மத்திய அரசு ரூ.2.26 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது. இதன் தொடர்பாக தேவைப்படும் தாயகம் திரும்பியோர் மற்றும் அகதிகள் பற்றிய விவரங்களை குறிப்பிட்ட படிவத்தில் அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இத்துறையில் பணியாற்றும் ஆறு அலுவலர்களுக்கு, கணிப்பொறி பயிற்சி கொடுக்கப்பட்டு புதியதாக பெறப்பட்ட கணிப்பொறியின் மூலம் மாநில அரசுக்கு, அகதிகளின் தினசரி வருகைப் பட்டியல், மொத்த அகதிகளின் பட்டியல், குடிசை



1998 மே 26]

கட்டும் பணி தொடர்பான முன்னேற்ற அறிக்கை அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் முக்கியமான விவரங்கள் தற்போது கணிப்பொறியில் சேமிக்கப்பட்டு வருகிறது. இன்னும் ஆறு மாத காலத்தில் இவ்வேலை முடிவு பெற்று தாயகம் திரும்பியோர் மற்றும் அகதிகள் தொடர்பான அனைத்து விவரங்களும் இத்துறையில் அமைக்கப்பட்டுள்ள கணிப்பொறி மையத்திலேயே முழுமையாக கிடைக்கப் பெறும்.

## ஏனைய பொதுவான பணிகளும், நிருவாகப் பணிகளும்

இந்திய குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர், அமைச்சர் பெருமக்கள், ஏனைய சீர்மக்கள் போன்ற மிக முக்கியமான பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தரும்போது ஆகும் செலவு, இந்த மானியக் கோரிக்கையில் காட்டப்படுகிறது. ஆளுநர், அமைச்சர்கள் ஆகியோரின் பதவியேற்பு விழா தொடர்பான செலவும், அரசின் ஏனைய விழாக்கள் தொடர்பான செலவும், இந்த மானியக் கோரிக்கையில் பற்று எழுதப்படுகிறது. தேசிய அளவிலும், உலக அளவிலுமான விழா கொண்டாட்டங்கள், சிறப்பு நாட்களில் கொண்டாட்டங்கள் தொடர்பான செலவும், இந்த மானியக் கோரிக்கையில் காட்டப்படுகிறது.

## சமூகப் பாதுகாப்பும் நலனும்

இத் தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ள முக்கிய செலவினங்கள் வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | முன்னாள் படை வீரர் நல இயக்ககத்திற்கு நிதி உதவி | 81.58 |
| 2. | மாவட்ட முப்படை வீரர் நலவாரியம் | 262.51 |
| 3. | போர்க்களத்தில் பாராட்டத்தக்க வீரச் செயல்கள் புரிந்த வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மானியம் | 3.84 |
| 4. | முன்னாள் படைவீரர்கள் நலநிதி | 4.00 |
| 5. | இறந்துவிட்ட அரசு பணியாளர்களின் குடும்பங்களுக்கு கருணைத் தொகை | 3500.00 |
| 6. | தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி—பணிக்கொடைத் திட்டம் | 900.00 |

[1998 மே 26

| | | |
|---|---|---|
| 7. | மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கான சிறப்பு வருங்கால வைப்பு நிதி-பணிக்கொடைத் திட்டம் | 60.00 |
| 8. | கிராம அலுவலர்கள் சிறப்பு வருங்கால வைப்பு நிதி | 9.50 |
| 9. | ஏழைத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம் | 190.00 |
| 10. | தொகுதிக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்திற்கு பிரிமியத் தொகைச் செலுத்துதல் | 2665.00 |
| 11. | தமிழ்நாடு அரசுப் பணியாளர் சுகாதார நல நிதி | 40.00 |
| 12. | தாயகம் திரும்பியோர் துயர் தணிப்பு நடவடிக்கைக்கான மானியம் | 2600.00 |
| 13. | விபத்தில் பலியானவர்கள் குடும்பத்தினருக்கு நிதியுதவி | 100.00 |



1998 மே 26]

# இணைப்பு IV

*(113 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**நிதித் துறை**

**மானியக் கோரிக்கை எண் 60**

**பல்வகை மூலதனச் செலவு கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99**

எழுதுபொருள்-அச்சுத் துறை, கல்வி, விளையாட்டுகள், கலை, பண்பாடு, வீட்டுவசதி, நகர்ப் பகுதி வளர்ச்சி, செய்தி-விளம்பரம், ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நலன், ஏனைய சமூகப் பணிகள், கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை வளர்ச்சி, மீனளம், உணவுப் பொருள் சேமிப்பு-கிடங்கு வசதி, கூட்டுறவு, மலைப்பகுதிகள், வெள்ளக் கட்டுப்பாட்டு திட்டங்கள், மின்சக்தி, சாலைகள்-பாலங்கள், சுற்றுலா ஆகியவை குறித்த மூலதனச் செலவு இந்த மானியக் கோரிக்கையில் அடங்கும்.

இக்குறிப்பு, இந்த மானியக் கோரிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கியமான நிதி ஒதுக்கங்களில் சிலவற்றை குறிப்பாகக் கோடிட்டுக் காட்டுகிறது.

[1998 மே 26

இந்த நிதி ஒதுக்கங்கள் தொடர்பாக, முக்கியமான பெருந்தலைப்பு வாரியான விவரங்கள் பின்வருமாறு:—

| கணக்குத் தலைப்புகள் | 1997-98 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1997-98 திருத்த-மதிப்பீடு | 1998-99 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | (மொத்தச் செலவு ரூபாய் இலட்சத்தில்) | | |
| 4070. ஏனைய நிருவாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 2000.00 | 18.02 | 630.01 |
| 4216. வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு | 1369.01 | 2022.55 | 2759.96 |
| 4220. செய்தி-விளம்பரம் குறித்த மூலதனச் செலவு | 23.27 | 210.90 | 300.02 |
| 4225. ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் குறித்த மூலதனச் செலவு | 1814.76 | 1627.73 | 1438.21 |
| 4250. ஏனைய சமூகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 671.75 | 1245.58 | 624.91 |
| 4408. உணவு சேமிப்பு கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு | 51.00 | 134.00 | 133.25 |
| 4425. கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | 2058.56 | 2258.98 | 2124.09 |
| 4551. மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 119.51 | 145.51 | 126.01 |
| 4711. வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 62.05 | 220.34 | 128.57 |
| 4801. மின்சக்தித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 25000.00 | 25000.00 | 25000.00 |
| 5452. சுற்றுலா குறித்த மூலதனச் செலவு | 71.55 | 113.03 | 123.06 |
| 5465. பொது நிதி-வர்த்தக நிறுவனங்களில் முதலீடு | 0.01 | 110.39 | 160.01 |

இம்மானியக் கோரிக்கையின்கீழ் வரும் சில முக்கிய திட்டங்களும் அவற்றிற்குச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களும் குறித்த விவரங்கள் பின்வருமாறு:—



1998 மே 26]

## ஏனைய நிருவாகப் பணிகள்

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி நிறுவனம் மூலம் காவலர் சிறப்புப் பயிற்சிக் கழகம் (Police Academy) கட்டடங்கள் கட்ட 1998-99 வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.6.30 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## வீட்டுவசதி

காவல் துறைப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டவும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டவும், வீட்டுவசதி மேம்பாட்டு நிதி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி நிறுவனத்திற்கு ரூ.19.30 கோடியும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு ரூ.8.27 கோடியும், 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## செய்தி விளம்பரம்

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலையை நிறுவுவதற்காக, 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்

## பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்

ஆதி திராவிடர் நல அரசுப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட, 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.144.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## மாணவர் இல்லங்கள் மற்றும் மனையகப் பள்ளிகள் கட்டுதல்

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஆதி திராவிடர் மாணவர் இல்லங்களைக் கட்டுவதற்காக ரூ.101.01 இலட்சமும், பழங்குடியினர் மனையகப் பள்ளிகளையும் மாணவர் இல்லங்களையும் கட்டுவதற்காக ரூ.110.00 இலட்சமும் 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

[1998 மே 26

## தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு பங்கு மூலதன நிதியுதவி

வங்கிகள், ஏனைய நிதியுதவி நிறுவனங்கள் அளிக்கும் கடன் வசதிகளைப் பயன்படுத்தி ஆதி திராவிடர்கள் தங்கள் பொருளாதார நிலைமையை மேம்படுத்திக் கொள்ள உதவும் வகையில், ஆதி திராவிடர்களுக்கு விளிம்புத் தொகை (Margin Money) வழங்கும் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் செயல்படுத்தி வருகிறது. இச்செயல் நோக்கத்திற்காக, 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.331.50 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் மேம்பாட்டிற்காக, புதுடில்லி, தேசிய சிறுபான்மையினர் மேம்பாட்டு நிதி நிறுவனத்திற்கு பங்குமூலதன உதவியாக, 1998-99 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## உலக வங்கியின் நிதி உதவி பெறும் தொழில் திறமை மேம்பாட்டுத் திட்டம்

தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களை நவீனமயமாக்க 1998-99 ஆம் ஆண்டு ரூ.608.81 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## உணவுப் பொருள் சேமிப்பும், கிடங்கு வசதியும்

நேரடிக் கொள்முதல் நிலையங்களையும், கிடங்குகளையும் கட்டுவதற்காகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவித் தொகையாக ரூ.133.25 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## கூட்டுறவு

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகள், கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் ஆகியவற்றின் பங்கு மூலதன உதவிக்காக ரூ.1,657.90 இலட்சமும், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித்



1998 மே 26]

திட்டத்திற்காக ரூ.426.08 இலட்சமும், நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளுக்கு விளிம்புத் தொகையாக (Margin Money) ரூ.20.01 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## மலைப் பகுதிகள்

1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் துப்புரவு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.120.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள்

கடல் அரிப்பைத் தடுக்கும் வண்ணம் பாறாங்கற்களைக் கொண்டு கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்காக 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.107.98 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## மின்சக்தி

தமிழ்நாடு மின் வாரியத்திற்குப் பங்கு மூலதன உதவியாக 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.250 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## சுற்றுலா

முக்கியமான சுற்றுலா மையங்களுக்குச் செல்லும் அணுகுசாலைகளில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க ரூ.20.00 இலட்சமும், சுற்றுலா தகவல் காட்சிக்கூடம், மரபு செல்வப் பூங்கா அமைக்க ரூ.10.00 இலட்சமும், நெடுஞ்சாலைகளுக்கருகே கழிப்பறைகள் கட்ட ரூ.3.00 இலட்சமும் 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுற்றுலா மேம்பாட்டிற்காக 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.85.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

[1998 மே 26

## இணைப்பு V

**(113 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

**நிதித் துறை**

**மானியக் கோரிக்கை எண் 61**

**மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் குறித்தக் கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99**

இந்த மானியக் கோரிக்கையில் மாநில அரசு, பல்வேறு நிறுவனங்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் வழங்கும் கடன்கள், முன்பணங்கள் ஆகியவை குறித்த நிதியொதுக்கங்கள் அடங்கும். இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள முக்கிய நிதியொதுக்கங்கள் பற்றி இக்குறிப்பில் விளக்கப்பட்டுள்ளன. பகுதிவாரியான தனித்தனி விவரங்கள் பின்வருமாறு:-

| வளர்ச்சித் துறை (1) | 1997-98 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (2) | 1997-98 திருத்த மதிப்பீடு (3) | 1998-99 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. பயிர் வளர்ப்பு, மண்வள, நீர்வளப் பாதுகாப்பு, வேளாண்மை நிதியுதவி நிறுவனங்கள், பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், பால்பண்ணை வளர்ச்சி, மீனளம், மலைத்தோட்டங்கள், ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 1979.30 | 2320.51 | 2255.98 |
| 2. மலைப்பகுதி மேம்பாடு | 443.34 | 428.72 | 455.64 |
| 3. வீட்டு வசதி | 2709.59 | 3030.59 | 1048.45 |
| 4. நகர்ப்பகுதி வளர்ச்சி | 6307.06 | 2940.37 | 1944.16 |
| 5. குடிநீர் வழங்கல்-துப்புரவு | 14673.46 | 12492.43 | 31756.90 |
| 6. ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 130.51 | 498.40 | 487.40 |
| 7. அரசுப் பணியாளர்கள் முதலியோருக்குக் கடன்கள் | 9842.26 | 11178.27 | 10623.28 |



1998 மே 26]

### குடிநீர் வழங்கல்—துப்புரவு

2. குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டங்களுக்காக 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.317.57 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. முக்கிய நிதியொதுக்கங்கள் வருமாறு:

| | 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் செயற்படுத்தும் திட்டங்கள்: | |
| (i) குடிநீர் வழங்கு திட்டங்கள் | 4453.10 |
| (ii) வடிகால் திட்டங்கள் | 67.94 |
| 2. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் செயற்படுத்தப்படும் திட்டங்கள்: | |
| (i) குடிநீர் வழங்கல் பணியை நிலை உயர்த்துதல் (சென்னை குடிநீர் வழங்கும் இரண்டாம் திட்டம்) | 10685.80 |
| (ii) சென்னை குடிநீர் வழங்கும் மூன்றாம் திட்டம் | 1500.00 |
| (iii) அயல்நாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் (OECF) கீழ் கழிவு நீரகற்று திட்டங்கள் | 15000.00 |

3. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பெருமளவு மூலதன முதலீடுகள் செய்யப்பட உள்ளன. பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு வழங்கும் வரவு-செலவுத் திட்ட நிதி ஆதாரங்களுடன், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தின் மூலம் செயற்படுத்தப்படும் குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்தும் நிதியுதவி பெறப்படுகிறது.

4. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், அரசிடமிருந்து கடன் தொகையைப் பெற்று பல்வேறு மூலதனத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. சென்னை இரண்டாவது குடிநீர் திட்டத்தின் மூலம் சென்னையில் குடிநீர் அனுப்புகை மற்றும் பங்கீட்டு முறை நிலை உயர்த்துதல், கழிவு நீரைச் சுத்திகரித்தல், சென்னை கழிவு நீரகற்று முறையில் நடைமுறை மேம்பாடுகள் செய்தல்

[1998 மே 26

ஆகியவை வாரியத்தால் செயல்படுத்தப்படுகிற சில முக்கிய திட்டப் பணிகள் ஆகும். இதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## வீட்டு வசதி - நகர்ப் பகுதி வளர்ச்சி

5. வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சிக்கான கடனாக 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.29.93 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் வாடகை வீட்டு வசதி திட்டத்தின்கீழ் அரசுப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு ரூ.1.73 கோடி நிதி ஒதுக்கீடும், தமிழ்நாடு வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 8.76 கோடியும் அடிப்படை வசதி மேம்பாட்டுத் தேவைகளை நிறைவு செய்வதற்கு சென்னை தவிர ஏனைய மாநகராட்சிகளுக்கு ரூ.12.50 கோடியும் மற்றும் சிறிய நடுத்தர நகர வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்திற்குத் தமிழ்நாடு நகர-ஊரமைப்புத் திட்ட வாரியத்திற்கு ரூ.4.16 கோடி நிதி ஒதுக்கீடும் இதில் அடங்கும்.

## அரசுப் பணியாளர்களும், ஏனைய பணியாளர்களும்

6. அரசுப் பணியாளர்களுக்குப் பல்வேறு வகைப்பட்ட முன் பணங்கள் வழங்குவதற்காக 1998-99 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.106.23 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு முன்பணம் வழங்குவதற்காக ரூ.50.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இயக்க ஊர்திகள் வாங்குவதற்காக ரூ.26.75 கோடியும், கைத்தறி மற்றும் கதர் துணிகள் வாங்க முன்பணமாக ரூ.16 கோடியும், கல்லூரிகள், பல்தொழில் பயிற்சி பயிலகங்களில் மேற்படிப்பைத் தொடர ரூ.3.20 கோடியும், திருமணக் கடன் முன்பணமாக ரூ.4.50 கோடியும், டான்சி நிறுவனத்திடமிருந்து பொருள்கள் வாங்குவதற்கு ரூ. 60 இலட்சமும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

7. அரசுப் பணியாளர்கள் கணினிகள் வாங்குவதற்கு முன்பணம் வழங்க ரூ.40 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

8. தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் களப் பணியாளர்களுக்கு இயக்க ஊர்திகள் வாங்குவதற்கு முன்பணமாக ரூ.2.20 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



1998 மே 26]

9. நகராட்சி மன்றங்கள் மற்றும் நகரியக் குழுக்கள் ஆகியவற்றின் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு முன்பணம் அனுமதிப்பதற்காக, 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.60 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏனைய முக்கிய நிதி ஒதுக்கங்கள் வருமாறு:

| | 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| I. வேளாண்மை | |
| மண், நீர் வளப் பாதுகாப்பு | 512.43 |
| II. ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | |
| தொழிற்கல்வி, பட்டப்படிப்பு பயில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்குக் கடன்கள் | 450.40 |
| III. கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் | |
| தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிக்குக் கடன்கள் | 715.00 |
| தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கிகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களுக்குக் கடன் | 6.25 |
| நகர்ப்பகுதி கூட்டுறவு வங்கிகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களுக்குக் கடன் | 5.00 |
| தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கிகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களுக்கு அவ்வங்கிகளில் கடன் வாங்கும் திறனை அதிகரிப்பதற்கான பங்கு மூலதனத்திற்கு வட்டியில்லாத கடன் உதவித் தொகை | 2.00 |
| கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்-சாலைகளுக்குக் கடன்கள் | 1.26 |
| நவீன சில்லறை விற்பனைக் கடைகளை அமைக்கவும் அலுவலக வளாகங்களைக் கட்டவும், கூட்டுறவு பண்டகச் சாலைகளுக்குக் கடன்கள் | 1.21 |

11. முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்டு, 1998-99 ஆம் ஆண்டில் வசூலாகும் கடன் தவணைத் தொகை ரூபாய் 257 கோடியே 53 இலட்சமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

[1998 மே 26

## இணைப்பு - VI

*(113 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண்-8 தேர்தல்கள்**

**பொதுத் தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99**

பேரவைத் தலைவர் அவர்களே,

மானிய கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்பதன்கீழ் 1998-99 ஆம் ஆண்டு நிதியாண்டின் செலவுகளுக்காக ரூபாய் இருபத்து ஒன்பது கோடியே முப்பத்து இரண்டு இலட்சத்து பத்தாயிரம் (ரூ.29,32,10,000) அரசுக்கு வழங்க வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். இம்மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்படும் நிதி ரூ.28,27,45,000/- பெரும்பாலும் முறையான தேர்தல் அமைப்பில் உள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம், பயணப்படி செலவுகளுக்கும், தேர்தல் நிர்வாகத்தில் சீரான நடைமுறைக்காகவும் 1999 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் வாக்காளர் பட்டியல் சுருக்க திருத்தத்திற்கும் மற்றும் தமிழ்நாட்டில் அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளிலும் உள்ள எல்லா வாக்காளர்களுக்கும் புகைப்படத்துடன்கூடிய அடையாள அட்டை தயாரித்து வழங்குவதற்கும் மற்றும் ரூ.1,04,65,000 மாநில தேர்தல் ஆணையத்தின் ஏனைய நிருவாகப் பணிகளுக்கும், ஊராட்சிகளுக்கும், நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் செலவினத்திற்கும் தேவைப்படுகிறது.

2. நாடாளுமன்றத்திற்கும், தமிழக சட்டமன்றப் பேரவைக்குமான பொதுத் தேர்தல் ஒருங்கிணைந்த முறையில் 1996 ஆம் ஆண்டு நடைபெற்றது. மக்களவைக்குத் தனியாக பொது தேர்தல் 1998 பிப்ரவரி திங்களில் நடைபெற்றது. எனவே தமிழக சட்டமன்றத்திற்கு 2001 ஆம் ஆண்டிலும், நாடாளுமன்றத்திற்கு 2003 ஆம் ஆண்டிலும் அடுத்த பொதுத் தேர்தல்கள் நடைபெற வேண்டும்.

3. தற்சமயம் நம் மாநிலத்திலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுப்பதற்கு காலியிடம் ஏதும் இல்லை. அவ்வாறே சட்டமன்றப் பேரவையிலும் காலியிடம் ஏதும் இல்லை.

4. மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1998 மே 26]

**1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம்**

**மானியக் கோரிக்கை எண் 8**

**தேர்தல்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99**

"மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள்" என்பதன்கீழ் 1998-99 ஆம் ஆண்டின் கீழ் குறித்த இனங்களுக்குச் செலவிட தேவைப்படும் தொகை ரூ. 29,32,10,000 (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

**2015. தேர்தல்கள் (திட்டத்தில் சேராதது):**

| | | ரூபாய் |
|---|---|---|
| **102. தேர்தல் அதிகாரிகள் :** | | |
| எஎ. சட்டப்பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் | .. | 3,67,19,000 |
| **103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்:** | | |
| எஎ. சட்டப்பேரவைத் தொகுதிகள் | .. | 2,26,85,000 |
| **104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்:** | | |
| எஎ. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள் | .. | 19,08,000 |
| **105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்:** | | |
| எஎ. இடைத் தேர்தல்கள் (அடையாள ஒதுக்கீடு) | .. | 21,000 |
| எபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல் (அடையாள ஒதுக்கீடு) | .. | 13,000 |
| **106. மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்:** | | |
| எஎ. மாநிலச் சட்டப் பேரவை | .. | 1,40,000 |
| **108. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்:** | | |
| எஎ. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம் | .. | 22,08,54,000 |
| **2070. ஏனைய நிருவாகப் பணிகள்:** | | |
| எபி. மாநிலத் தேர்தல் ஆணையம் | .. | 82,09,000 |

[1998 மே 26

| | |
|---|---|
| **2515.** *ஏனைய ஊரக வளர்ச்சி திட்டங்கள்:* | ரூபாய் |
| *எப். ஊராட்சிகளுக்குத் தேர்தல்* .. | .. 21.69.000 |
| **800.** *ஏனைய செலவு:* | |
| *எசி. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்* | .. 13,000 |
| *கூட்டுக திருப்பி வசூலிப்பவை* | .. 4,79,000 |
| *மொத்தம்* | ..29,32,10,000 |

2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விளக்கமாக கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவு செய்யப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளன:

## 102. தேர்தல் அதிகாரிகள்:

*எஎ. சட்டப்பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள்:*

*மதிப்பீடு* .. ரூ 3,67,19,000

மாநில தலைமையகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரியும் (தேர்தல் நடத்துதல்) மற்றும் ஒரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரியும் (கணிப்பொறிமயமாக்கல்) உதவித் தலைமைத் தேர்தல் அதிகாரியும், சிறப்பு அலுவலர் (அடையாள அட்டை வழங்குதல்) அவர்களும், அலுவலகப் பணியில் உதவி புரிகின்றனர். மேலும் தலைமைச் செயலகத்தில் பொதுத் (தேர்தல்) துறையில் நிலையான ஆறு பிரிவுகள் உள்ளன.

வெளியூர் பகுதிகளில், எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள் (சென்னை நீங்கலாக), வருவாய் கோட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாநகராட்சிகளின் ஆணையர்களின் அலுவலகங்கள் ஆகியவற்றில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனிப்பதற்கென நிலையான அடிப்படையில் ஓர் உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் வட்டாட்சியர் ஒருவர், உதவியாளர் மூவர், இளநிலை உதவியாளர் ஒருவர், தட்டச்சர் ஒருவர், பதிவேடு எழுத்தர் ஒருவர், அலுவலக உதவியாளர் ஒருவர் ஆகியோர் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.



1998 மே 26]

மேலே குறிப்பிட்ட நிலையான அலுவலர்கள், ஊழியர்களின் ஊதியச் செலவுகள் தவிர, தேர்தல் சம்பந்தப்பட்ட பயணச் செலவுகளும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். தேர்தல் தொடர்பு அலுவலகச் செலவுகள், எதிர்பாராத செலவினங்கள் தபால், தந்தி, தொலைபேசிக் கட்டணங்கள் தேர்தல் சார்பாக சிறப்புப் பணிகளுக்காக வழங்கப்படும் ஊதியங்கள் போன்றவையும் இக்கணக்குத் தலைப்பின்கீழ் அடங்கும்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஆணைக்கேற்ப மாநில அரசும், மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலகங்களையும் கணினிமயமாக்கும் பணிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திற்கும் மற்றும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கும் மொத்தமாகக் கணினிமயமாக்கும் உள்கூட்டமைப்பு குறித்தப் பணிகள் தற்போது முன்னேற்றத்தில் உள்ளன. தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தையும் மற்றும் மாவட்ட தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகங்களையும் கணினிமயமாக்கும் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. இது சம்பந்தமான பணிகள் விரைவுபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்கான வேலைகள் அதிவேகமாக நடந்து வருகின்றன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கும் சுற்றோட்டத்தில் ஆணைகள் பெறப்பட்டு கணிப்பொறிகள் மென் பொருட்கள், துணைக் கருவிகள் வாங்குவதற்கு உரிய நிர்வாக அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

இச்செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

## 103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்:

*எஎ. சட்டப்பேரவைத் தொகுதிகள்:*

*மதிப்பீடு:* ரூ. 2,26,85,000

இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும்.

[1998 மே 26

இப்பணிக்காக தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள், பணியாளர்களின் ஊதியம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின் கீழ் அடங்கும்.

சென்னை, ஆவணக் காப்பகத்தின் வாக்காளர் பட்டியல்களைக் காப்பதற்காக நிலையாக நியமிக்கப்பட்டுள்ள ஓர் உதவியாளர், ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோரின் சம்பளச் செலவுக்காகவும் இத்தலைப்பின்கீழ் ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

இந்தியத் தேர்தல் ஆணையம் ஆகஸ்ட் 1997இல், 1-1-1998ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு சுருக்க முறையில் வாக்காளர் பட்டியல், 1998 தயாரிக்க ஆணையிட்டது. அதன் கால அட்டவணையின்படி வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, 5-1-1998 அன்று இறுதியாக வெளியிடப்பட்டது. 1998 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் இந்த வாக்காளர் பட்டியல்தான் பயன்படுத்தப்பட்டது.

5-1-1998 இல் 1998 சுருக்க முறை வாக்காளர் பட்டியல் இறுதி செய்து வெளியிட்டபின், அவற்றைக் கணிப்பொறி தகவல் மையத்தில் பதிவு செய்து வைத்திருப்பது ஒரு சிறப்பு அம்சமாகும். இப்பட்டியல்கள் ஃப்ளாப்பி (Floppy) சிடி. ரோம் (CD ROM) மூலம் வெளியிடப்பட்டு விற்பனைக்கு கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படும். தமிழகத்தில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் முழு பணியையும் எல்காட் (ELCOT) நிறுவனத்திடம் ஓர் அட்டைக்கு ரூ. 15 என நிர்ணயிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1998 சுருக்க முறை திருத்தத்துடன் உள்ளடங்கிய 4.55 கோடி வாக்காளர்களின் அடிப்படை விவர பகுதியை (Data Base) எல்காட் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

1998 சுருக்க முறை திருத்தத்தின்போது இந்தியத் தேர்தல் ஆணையத்தினால் வெளியிடப்பட்ட பின்பற்றத்தக்க வழிமுறைகளின்படி ஒருங்கிணைந்த வாக்காளர் பட்டியல்களை வரைவு வாக்காளர் பட்டியலாக 1999 சுருக்கமுறை வாக்காளர் பட்டியல் தயாரிப்பின்போது



1998 மே 26]

வெளியிடப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் முடிவெடுத்துள்ளது. எனினும், சுருக்க முறைத் திருத்தம் மேற்கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையம் இவ்வாண்டு ஆணையிடின் அதற்கான செலவுகளை மேற்கொள்ள, 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2,26,85,000 (ரூபாய் இரண்டு கோடியே, இருபத்து ஆறு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும்) ஒதுக்கப்பட்டுள்ளது.

இச்செலவினங்களை மாநில அரசும், மைய அரசும் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்கின்றன.

**104. நாடாளுமன்ற மக்களவைக்கும், மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்:**

எஎ. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள்:

மதிப்பீடு: ரூ. 19,08,000

நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இதன்கீழ் அடங்கும். 1996 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவைக்கும் நாடாளுமன்றத்திற்கும் பொது தேர்தல்கள் ஒரே சமயத்தில் நடைபெற்றன. இவை தவிர மாவட்டங்களில் வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள தனியார் கட்டடங்களுக்கான வாடகை, அதற்கான காவலர்களின் சம்பளம், வாக்குப் பெட்டிகளை பராமரிக்கும் செலவுகள் மற்றும் இத்துறையில் உள்ள மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு, பெட்ரோல் செலவுகள் போன்ற ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய செலவினங்களும் இதன்கீழ் அடங்கும். மேற்கூறிய செலவினங்களுக்காக இத்தலைப்பில் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மைய அரசு பகிர்ந்து கொள்கிறது.

[1998 மே 26

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்:**

*எஎ. இடைத் தேர்தல்கள்:*

மதிப்பீடு: ரூ. 21,000 (அடையாள ஒதுக்கீடு)

நாடாளுமன்றத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்துச் செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். இம்மாநிலத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்க காலியிடம் ஏதுமில்லை. எனவே இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

*எபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல்:*

மதிப்பீடு: ரூ. 13,000 (அடையாள ஒதுக்கீடு)

நாடாளுமன்றத்திற்குத் தனியே பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப்பெற்று, பின்னர் மைய அரசினால் திரும்பப் பெறப்படும்.

நாடாளுமன்றத் தேர்தல் 1998 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் நடைபெற்றது. எனவே, நாடாளுமன்றத்திற்கான அடுத்த பொதுத் தேர்தல் 2003 ஆம் ஆண்டுவாக்கில்தான் நடைபெற வேண்டும். எனவே இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்:**

*எஎ. மாநில சட்டப்பேரவை:*

மதிப்பீடு: ரூ. 1,40,000



1998 மே 26]

தனியாக மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குப் பொதுத் தேர்தலோ அல்லது இடைத் தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன்கீழ் அடங்கும்.

நாடாளுமன்றத்திற்கும், தமிழக சட்டமன்றத்திற்கும் பொதுத் தேர்தல் 1996 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்து நடைபெற்றது. எனவே சட்டமன்றப் பேரவைக்கு அடுத்த பொதுத் தேர்தல் 2001 ஆம் ஆண்டுவாக்கில்தான் நடைபெற வேண்டும். பொதுத் (தேர்தல்கள்) துறையில் உள்ள போட்டோ நகல் எடுக்கும் கருவி, மூன்று மின் தட்டச்சுகள் மற்றும் ஒரு மின் படிப்பெருக்கி ஆகியவற்றின் பராமரிப்புக்காகவும், இதர செலவினங்களுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசு மேற்கொள்கிறது.

**108. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்:**

*எஎ. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்:*

மதிப்பீடு: ரூ. 22,08,54,000

தமிழ்நாட்டில் அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளிலும் உள்ள எல்லா வாக்காளர்களுக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை தயாரித்து வழங்குவது என முடிவெடுத்து, இப்பணி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 234 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளிலும் முதற்சுற்று மற்றும் இரண்டாம் சுற்று புகைப்படமெடுக்கும் பணி கடந்த 16-2-1997 மற்றும் 10-8-1997 ஆகிய தேதிகளில் முடிவடைந்தது. 1998 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 28 ஆம் தேதிய நிலவரப்படி தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 4,55,77,323 வாக்காளர்களில், இதுவரை 2,98,44,353 வாக்காளர்கள் இரண்டாம் சுற்றின் முடிவில் புகைப்படமெடுக்கப்பட்டுள்ளனர். மொத்த வாக்காளர்களில் இது 65.48 சதவீதமாகும். இந்த ஆண்டு ஏப்ரல், மே

மற்றும் ஜூன் மாதங்களில் மூன்றாவது சுற்று புகைப்படமெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான கால அட்டவணையைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அதிகாரிகளை/மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்தாய்ந்து முடிவு செய்கிறது. இத்திட்டத்திற்காக ரூ. 22,08,54,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு பகிர்ந்து கொள்கிறது.

**2070. ஏனைய நிருவாகப் பணிகள்:**

ஏபி. மாநிலத் தேர்தல் ஆணையம்:

மதிப்பீடு: ரூ. 82,09,000

மாநிலத் தேர்தல் ஆணையத்தின் நிருவாகப் பணிகளுக்கு இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2515. ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்:**

மதிப்பீடு: ரூ. 21,82,000

ஊராட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுக: திருப்பி வசூலிப்பவை: ரூ. 4,79,000

இத்துறையில் பணிபுரியும் அரசுப் பணியாளர்கட்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணம் போன்ற இனங்களிலிருந்து திரும்பப் பெறப்படும் தொகையை திருப்பி வசூலித்தல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,79,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## இணைப்பு - VII

**(113 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

**ஊரக வளர்ச்சித் துறை**

**மானியக் கோரிக்கை என் 8—தேர்தல்கள்**

**உள்ளாட்சி தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99**

ஊராட்சி அமைப்புகளின் வாயிலாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வலுவான பரவலாக்கப்பட்ட நிர்வாகத்தை நிறுவுவதிலும், பொருளாதார வளர்ச்சியையும் சமூக நீதியையும் உறுதிசெய்யவும், மக்களிடமே நிர்வாகத்தை எடுத்துச் செல்லும் பணியிலும், 73 வது அரசியல் திருத்தச் சட்டம் ஒரு மைல் கல் சாதனை ஆகும். அந்த அரசியல் திருத்தத்தின் சட்டமைப்பிற்கு இணங்க, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் என்ற புதிய சட்டம் மாநில சட்டசபையில் இயற்றப்பட்டது. இச்சட்டம் கீழ்க்கண்ட சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது, அதாவது:

(1) சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி என்ற மூன்றடுக்கு முறையை உருவாக்கி ஆளுதல் குறித்து இச்சட்டத்தில் விரிவாக வரையறுக்கப்படுதல்; (2) தங்கள் பொருளாதார வளர்ச்சிக்காக மக்கள் அதிகமாகப் பங்கேற்பதற்கு ஏதுவாக கிராம சபைகளை நிறுவுதல்; (3) ஊராட்சி அமைப்புகளுக்குத் திட்டக் குழுக்கள் மற்றும் மாவட்ட திட்டக் குழுக்களை நிறுவுதல்; (4) ஊராட்சி அமைப்புகளே மேற்கொள்வதற்கென பணிகளை ஒதுக்குவதை உறுதி செய்தல்; (5) மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் எல்லா பதவிகளிலும் மூன்றில் ஒரு பங்கை சுழற்சி முறையில் பெண்களுக்கு ஒதுக்கிடுதல்; (6) மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளிலும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கென இவ்வின மக்கள் தொகையின் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப இட ஒதுக்கீடுகள் செய்தல்; (7) ஊராட்சி அமைப்புகளில் வார்டு பிரிவினைகள் செய்ய வழி வகுத்தல்; (8) ஊராட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் குறித்த காலங்களில் தொடர்ச்சியாக சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்தல், ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும்

[1998 மே 26

நிலையாகத் தொடர்ந்து செயல்படுதல், ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பின் காலவரையறை ஐந்து வருடங்கள் ஆகும். ஆனால் அரசுக்குள்ள ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விளைவாக இந்த ஐந்தாண்டு காலத்திற்குள்கூட கலைக்கப்படலாம். ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதம் முடிவடைவதற்குள் புதிய உள்ளாட்சி அமைப்பு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எனவே, உள்ளாட்சி அமைப்பின் நிலையான தொடர்ச்சியை உறுதி செய்வதற்கு, புதிய அமைப்புகளை உடனுக்குடன் ஏற்படுத்துவதற்கு தேர்தலை நடத்தி முடிக்க வேண்டியது சட்டக் கடமை ஆகும்; (9) சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் மாவட்ட ஊராட்சியில் பதவி வழி உறுப்பினர்களாக வாக்கு அளிக்கும் உரிமையுடன் பங்குபெறச் செய்தல்; (10) பேரூராட்சிகள், கிராமப்புற உள்ளாட்சி அமைப்பின் ஆட்சி எல்லையில் ஓர் அங்கமாக இருக்காது.

2. 74 ஆவது அரசியல் சட்ட திருத்தத்திற்கேற்ப கீழ் மட்டத்திலிருந்து ஜனநாயகத்துவத்தை உருவாக்கவும், உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் நிர்வாகத்தைப் பரவலாக்கவும், இதற்கு முன்பிருந்த 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1919 ஆம் ஆண்டு சென்னை நகர மாநகராட்சி சட்டம், 1971 ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சி சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகர மாநகராட்சி சட்டம் ஆகியன கீழ்க்கண்டவைகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன:—

(1) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு பிரிவினைகளை செய்தல்; (2) எல்லாப் பதவிகளிலும் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கைச் சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்தல்; (3) எல்லாப் பதவிகளிலும் ஆதி திராவிடர், பழங்குடியினருக்கென அந்தந்த நகர்ப்புற பகுதியில் உள்ள இவ்வின மக்கள் தொகையின் விகிதாச்சாரத்திற்கேற்ப சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்தல்; (4) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தொடர்ச்சியாக குறித்த காலங்களில் சுதந்திரமாகவும், நியாயமாகவும் தேர்தல்கள் நடத்துதல்; (5) ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பும் நிலையாகத் தொடர்ந்து செயல்படுதல், ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் நிலையாகத் தொடர்ந்து



1998 மே 26]

செயல்படுதல், ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பின் காலவரையறை ஐந்து வருடங்கள் ஆகும். ஆனால் அரசுக்குள்ள ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விளைவாக இந்த ஐந்தாண்டு காலத்திற்குள் கூட கலைக்கப்படலாம். ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதம் முடிவடைவதற்குள் புதிய உள்ளாட்சி அமைப்பு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எனவே, உள்ளாட்சி அமைப்பின் நிலையான தொடர்ச்சியை உறுதி செய்வதற்கு புதிய அமைப்புகளை உடனுக்குடன் ஏற்படுத்துவதற்கு தேர்தலை நடத்தி முடிக்க வேண்டியது சட்டக் கடமை ஆகும்; (6) சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் கூட்டங்களில் பதவி வழி உறுப்பினர்களாக வாக்களிக்கும் உரிமை இன்றி பங்குபெறச் செய்தல்; (7) கிராமப்புற உள்ளாட்சி அமைப்பின் ஆட்சி எல்லையிலிருந்து பேரூராட்சிகளை நீக்கி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின்கீழ் கொணர்தல்.

### 3. தேர்தல்கள்:

'சாதாரண தேர்தல்கள்' என்பது ஒரு உறுப்பினருக்கென நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவுறும்போது அதனை நிரப்ப நடத்தப்படும் தேர்தலைக் குறிக்கும். அதாவது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் பொதுத் தேர்தல்களை இது குறிக்கும். 'தற்செயல் தேர்தல்கள்' என்பது கீழ்க்கண்ட காரணங்களின் விளைவாக நடத்தப்படும் இடைத் தேர்தல்களைக் குறிக்கும்:—

ஓர் உறுப்பினரின் மரணம்; உறுப்பினர் தனது பதவியை ராஜினாமா செய்தல்; தேர்தல் மனுவினால் உறுப்பினர் பதவியை இழத்தல்; சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தகுதியின்மைகளுக்கு ஆளாகி பதவியை இழத்தல்.

[1998 மே 26

## 4. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்:

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல்கள் தயாரித்தலையும், ஊராட்சி அமைப்புகளுக்கு அனைத்து தேர்தல்கள் நடத்துவதையும் மேற்பார்வையிட, இயக்க, கட்டுப்படுத்த அரசியலமைப்பின் 234-K பிரிவின்படியும், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 239 பிரிவின்படியும் தோற்றுவிக்கப்பட்டதாகும். எனவே, உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து தேர்தல்களையும் நடத்தும் பொறுப்பு, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையாளரின் தலைமையில் இயங்கும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்கு பதவி வகிக்கலாம். மொத்தத்தில் ஆறு ஆண்டுகளுக்கு மிகைப்படாமல் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் மேற்கொண்டு இருமுறை தொடர்ந்து மறு நியமனம் செய்யப்படலாம். தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டவர் தனது பதவிக் காலத்தில் 62 வயதை நிறைவு செய்தால் பதவியிலிருந்து ஓய்வு பெறுவார். தற்போதைய தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் அரசால் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நியமிக்கப்பட்டார். அவர் 15-7-1994 அன்று தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையருக்கு உதவியாக ஒரு முதுநிலை இந்திய ஆட்சிப் பணி அதிகாரி செயலராகவும் மற்றும் ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், வருவாய், நிதி, சட்டம் முதலிய துறைகளிலிருந்து நியமிக்கப்பட்ட மூத்த அதிகாரிகளும், இதர பணியாளர்களும் செயல்புரிகின்றனர். தேவையான உள் அமைப்புகளுடனும், போதிய வசதிகளுடனும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய அலுவலகம் நிறுவப்பட்டு, தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல்கள் நடத்தும் பணியை மேற்கொள்கிறது.



1998 மே 26]

## 5. 1996 ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்:

ஊராட்சி அமைப்புகளுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு தமிழ்நாட்டுக்கு நெடுங்காலமாகக் கிடைக்காமலே இருந்தது. தற்போதைய அரசு 1996 ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை உடனடியாக நடத்துவதென்று கொள்கை முடிவைத் திட்டவட்டமாக அறிவித்தது. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், அரசு முடிவின் முக்கியத்துவத்தை உணர்ந்து தேர்தல்களை நடத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் விரைந்து மேற்கொண்டது. உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்துவதென்பது எளிதான செயலல்ல. அது பிரம்மாண்டமானதும் பொறுப்பு நிறைந்தது மட்டுமின்றி, சிக்கலானதுமான செயலாகும். சட்டம், விதிகள், அறிவுரைகள், செயல்முறைகள் யாவும் புதியன. மேலும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவதென்பது இந்தியாவில் வேறெந்த மாநிலங்களும் அனுபவித்திராத ஒரு கூடுதல் சுமையாகும். சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற பொதுத் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் உள்ளாட்சி அமைப்பு தேர்தல்கள் அளவிலும், தரத்திலும் மிகப் பிரம்மாண்டமானதும் கடுமையானதுமாகும். வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை, வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கை, தேர்தல் பணியாளர்கள் மற்றும் காவல் துறையினரின் எண்ணிக்கை, வாங்கப்படும் வாக்குப்பதிவு பொருட்களின் அளவு, வாக்களிப்போரின் எண்ணிக்கை, போட்டியின் தீவிரம் முதலியன இக்கூற்றினை நிரூபிக்கும் சான்றாகும். சட்டசபை மற்றும் நாடாளுமன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் 273 பதவிகளுக்கெதிராக (234 + 39 = 273) கிராமப்புற உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில் ஏறக்குறைய 1,16,745 பதவிகளுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சட்டசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்காக அச்சிடப்படும் 273 வகையான வாக்குச் சீட்டுகளுக்குப் பதிலாக ஊராட்சி அமைப்பு தேர்தல்களில் 22,301 வகையான வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டன.

[1998 மே 26

6. தமிழ்நாட்டில் 12,584 சிற்றூராட்சிகளும், 384 ஊராட்சி ஒன்றியங்களும் மற்றும் 28 மாவட்ட ஊராட்சிகளும் உள்ளன. இம்மூன்று வகை அமைப்புகளிலும் உள்ள வார்டுகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| சிற்றூராட்சி வார்டுகள் | .. | 40,714 |
| ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | .. | 6,499 |
| மாவட்ட ஊராட்சி வார்டுகள் | .. | 648 |

நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பதவிகளின் எண்ணிக்கை:

| | | |
|---|---|---|
| சிற்றூராட்சி வார்டு உறுப்பினர் | .. | 97,026 |
| சிற்றூராட்சி தலைவர்கள் | .. | 12,584 |
| ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | .. | 6,499 |
| மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | .. | 648 |

7. நகர உள்ளாட்சி அமைப்புகளில் 6 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள் மற்றும் 636 பேரூராட்சிகள் உள்ளன. மேற்குறித்த மூன்று நகர உள்ளாட்சி அமைப்புகளிலும் நேரிடைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வார்டு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் விவரம் வருமாறு:

| நகர உள்ளாட்சி அமைப்பு | மொத்த எண்ணிக்கை | மொத்த வார்டுகள் | மொத்த வார்டு உறுப்பினர்கள் கவுன்சிலர்கள் | மொத்த மேயர்கள்/ தலைவர்கள் |
|---|---|---|---|---|
| மாநகராட்சிகள் | 6 | 474 | 474 | 6 |
| நகராட்சிகள் | 102 | 3392 | 3392 | 102 |
| பேரூராட்சிகள் | 636 | 10173 | 10173 | 634 |



1998 மே 26]

8. தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் இரண்டு கட்டங்களில் நடைபெற்றன. முதல் கட்டத் தேர்தல்கள் 9-10-1996 அன்றும், இரண்டாம் கட்டத் தேர்தல்கள் 12-10-1996 அன்றும் நடந்தன. நேரடித் தேர்தல்கள் யாவும் 17-10-1996 அன்றுடன் முடிக்கப்பட்டன. நேரடித் தேர்தல்களை நடத்திய பின்னர், மாவட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் மற்றும் சிற்றூராட்சிகளின் துணைத் தலைவர்கள் ஆகிய பதவிகளுக்கான மறைமுகத் தேர்தல்கள் 25-10-1996 அன்று தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் நடத்தி முடிக்கப்பட்டன. உள்ளாட்சித் தேர்தல்கள் நேர்மையிலும், சுதந்திரத்திலும் அனைத்து சாராரும் போற்றும் வண்ணம் நடத்தப்பெற்றன.

9. அக்டோபர் '96 இல் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான பொதுத் தேர்தல்களுக்குப் பின்னர், அந்தந்த காலங்களில் ஏற்பட்ட காலியிடங்களை நிரப்புவதற்காக மூன்று இடைத் தேர்தல்கள் (டிசம்பர் '96, ஜூன் '97 மற்றும் நவம்பர் '97 ஆகிய மாதங்களில்) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. அவ்வப்போது எழக்கூடிய காலியிடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஒவ்வொரு ஆண்டும் இரண்டு அல்லது மூன்று இடைத் தேர்தல்களை தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் நடத்த வேண்டியதாக இருக்கும்.

**இடைத் தேர்தல்கள் நடைபெற்ற விவரம்:**

**ஊராட்சி அமைப்புகள்**

| | தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | சிற்றூராட்சி வார்டு உறுப்பினர்/ தலைவர் | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் |
| டிசம்பர் '96 | 1800/22 | 7 | இல்லை |
| ஜூன் '97 | 242/35 | 13 | 1 |
| நவம்பர் '97 | 289/24 | 9 | 2 |

[1998 மே 26

## நகராட்சி அமைப்புகள்

| | தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | மாநகராட்சி கவுன்சிலர்கள்/ மேயர் | நகராட்சி கவுன்சிலர்கள்/ தலைவர்கள் | பேரூராட்சி கவுன்சிலர்கள்/ தலைவர்கள் |
| டிசம்பர் '96 | இல்லை | 2/இல்லை | 22/இல்லை |
| ஜூன் '97 | 3/இல்லை | 8/1 | 25/இல்லை |
| நவம்பர் '97 | இல்லை | 13/இல்லை | 30/1 |

10. தற்போது கீழ்க்கண்ட காலியாகவுள்ள பதவிகளுக்கு நேர்முகத் தேர்தல்கள் நடத்தப்பெற வேண்டும். இதற்கான அறிவிப்புகள் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் பின்னர் வெளியிடப்படும்.

| உள்ளாட்சி அமைப்புகள் | காலியிடங்களின் தன்மை வேட்புமனு தாக்கல் செய்யப்படாமை | | | |
|---|---|---|---|---|
| | 10/96 முதல் | 11/97 முதல் | ராஜினாமா/ தகுதியின்மை செய்தல் | மொத்தம் |
| மாநகராட்சிகள் | .. | .. | 2 | 2 |
| நகராட்சிகள் | 1 | .. | 6 | 7 |
| பேரூராட்சிகள் | 2 | .. | 46 | 48 |
| மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | .. | .. | 2 | 2 |
| ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | .. | .. | 9 | 9 |
| சிற்றூராட்சி தலைவர்கள் | 6 | .. | 18 | 24 |
| சிற்றூராட்சி வார்டு உறுப்பினர்கள் | 49 | 4 | 218 | 271 |



1998 மே 26]

11. 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு விவரங்கள் பின்வருமாறு:

| | 1996-97 கணக்குகள் | 1997-98 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 1997-98 திருத்த மதிப்பீடு | 1998-99 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
| 2070. ஏனைய நிருவாகப் பணிகள் - 001 நெறிப்படுத்தலும் - I திட்டத்தில் சேராதது AB மாநிலத் தேர்தல் ஆணையம். | 72,19 | 61,08 | 67,55 | 82,09 |
| 2515. ஏனைய ஊரக வளர்ச்சி திட்டங்கள் - 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் - I திட்டத்தில் சேராதது - AF ஊராட்சிகளுக்கு தேர்தல். | 30,33,28 | 17 | 21,71 | 21,69 |
| 2515. ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் - 800 ஏனைய செலவு - I - திட்டத்தில் சேராதது - AC நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் | 7,46,11 | 19 | 19 | 13 |

219399
V211,31 N98
N98.5.1